வருட.75 இல. 07 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2023 பெப்ரவரி 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
February 12 Sunday, 2023

24 பக்கங்கள் 100/-
















## தேசிய பொருளாதாரத்துக்கு மீண்டும் வலுவான பங்களிப்பு

# வடபகுதி அபிவிருத்தியில் அரசாங்கம் தீவிர அக்கறை

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



யுத்தத்துக்கு முன்னர் தேசிய பொருளாதாரத்துக்கு வடமாகாணம் பாரிய பங்களிப்பை பரந்தளவில் வழங்கியதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அந்த வலுவான பொருளாதாரத்தை வடக்கில் மீண்டும் ஏற்படுத்தத் தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

நல்லிணக்கத்தினூடாக மாத்திரம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. பொருளாதார அபிவிருத்தியின் வேகம், மக்களின் மனப்பாங்கு மற்றும் அர்ப்பணிப்பிலேயே அது, தங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி

06



கலாசார, பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக, இந்திய அரசாங்கத்தின் 1,350 கோடி ரூபா நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட யாழ். கலாசார நிலையத்தை நேற்று சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள பெறுமதி வாய்ந்த கலைப் பொக்கிஷங்களை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

### வடக்கு ரயில் பாதை அபிவிருத்திகள்;

## முறைகேடுகளை, உடனடியாக விசாரிக்க அமைச்சர் பந்துல பணிப்பு



வட பகுதிக்கான ரயில் பாதை அபிவிருத்திப் பணிகளில், இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலே, அமைச்சர் இந்தப்பணிப்புரையை விடுத்தார்.

வவுனியா, அநுராதபுரத்துக்கு இடையிலான இந்தப் பாதைகளின் நிர்மாணப்பணிகள் இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டது.

06

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாடு அவசியம்

● தேர்தல் கண்காணிப்புக்கான தேசிய மத்திய நிலையம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு சகல தரப்பினரதும் இணக்கப்பாடு அவசியமென, தேர்தல் கண்காணிப்புக்கான தேசிய மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

06

## உயிராபத்தை ஏற்படுத்தும் பாதுகாப்பற்ற 07 இலட்சம் வாகனங்கள் பயன்பாட்டில்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அதிகமான ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஏழு இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் நாட்டில், பாவனையில் உள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறான வாகனங்களை

06

### வாரமஞ்சரி எங்கள் கருத்து...

## விமர்சனத்தினால் பயனில்லை, தீர்வுகளே நாட்டுக்குத் தேவை!

எந்தவொரு சிக்கல் தொடர்பாகவும் விமர்சனங்களை முன்வைப்பது இலகுவானது. அதற்கென்று பெரும் கூட்டமே காத்திருக்கின்றது. ஆனால் தீர்வுகளை முன்வைப்பதற்கு எவருமே முன்வருவதில்லை. அது இலகுவான காரியமும் அல்ல. தீர்வுகளை முன்வைப்பதற்கு இயலுமை இல்லாதவர்கள்தான் விமர்சனத்தில் மாத்திரம் ஈடுபடுகின்றனர்.

எமது நாட்டின் அரசியல் களத்திலும் சமீப காலமாக இவ்வாறான நிலைமைதான் தொடருகின்றது. இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலவுகின்றதென்பது வெளிப்படையான உண்மை. பொருளாதார நெருக்கடியினால் சாதாரண மக்கள் அனுபவிக்கின்ற அவஸ்தைகளை எமது அரசியல்வாதிகள் பலரும் கூக்குரலிட்டு விமர்சிப்பதைக் காண முடிகின்றது. தங்களது அரசியல் விரோதிகள் மீது சேறு பூசுவதற்கும், அவதூறு கூறுவதற்கும் இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிரணியினர் வாய்ப்பாகப் பயன்படுத்துவது நன்றாகவே தெரிகின்றது.

இவ்வாறான போக்கு மிகவும் தவறானது. இதனை அரசியல் நாகரிகம் என்று கூறவும் முடியாது. மக்களின் விமர்சனத்துக்கு அஞ்சாமல், பிரச்சினைக்குரிய தீர்வை வெளிப்படையாக முன்வைப்பதே அரசியல் நாகரிகமும் பக்குவமும் ஆகும். ஆனால் எதிரணி அரசியல்வாதிகள் அவ்வாறு செய்வதில்லை.

06

## பலாலி விமான நிலையத்தில் Dutyfree கடை நேற்று திறப்பு

யாழ். விசேட நிருபர்




யாழ்.பலாலி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று சனிக்கிழமை தீர்வையற்ற கடை (Dutyfree) திறந்து வைக்கப்பட்டது. தீர்வையற்ற கடையை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி,

06

### துருக்கி-சிரியா நிலநடுக்கம்

## பலியானோர் எண்ணிக்கை 24 ஆயிரமாக அதிகரிப்பு



துருக்கி மற்றும் சிரிய எல்லையில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக பலியானோர் எண்ணிகை 24,000 ஆக அதிகரித்துள்ளதாக

06

### சுமதி விருது விழா 2020/2021

## சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு 33 விருதுகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான 'சுமதி விருது வழங்கும் விழாவில், இம்முறை சுயாதீன தொலைக்காட்சிச் சேவை அதிகளவு விருதுகளைப் பெற்றுள்ளது. அந்நிறுவனம் 33 விருதுகளை இவ்விருது விழாவில் பெற்றுக்கொண்டது. இரண்டு வருடங்களுக்கான

06

## துருக்கிக்கு சிலோன் டீயை அன்பளிப்புச் செய்த இலங்கை



துருக்கியில் ஏற்பட்ட கோர நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "சிலோன் டீ" ஒரு தொகையை

06

### இராகலை, ஹைபொரஸ்ட் பகுதியில்

## வீதியோரத்தில் காய்கறிகள் விற்ற பெண்ணிடம் அடாவடித்தனம்

அமைச்சர் ஜீவனின் பணிப்புக்கமைய தோட் நிர்வாகி உடனடி பணி நீக்கம்



இராகலை, ஹைபொரஸ்ட் பகுதியில் வீதி ஓரத்தில் மரக்கறி விற்பனை செய்து கொண்டிருந்த பெண்ணிடம் அடாவடித்தனமாகவும், அராஜகமாகவும் நடந்து கொண்ட மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகி ஒருவர், அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரையின் கீழ் அதிரடியாக

06

### மஹா சிவராத்திரி தினம்

## உலக சைவப் பேரவையின் கொடிதினம் அனுஷ்டிப்பு



மஹா சிவராத்திரி தினமான எதிர்வரும் (18) சனிக்கிழமையன்று, உலக சைவப் பேரவையின்

06

அதிதுரித
Dialog HOME BROADBAND இடமிருந்து
வீட்டிற்கு Wi-Fi ரீலோட்
வீட்டிற்கு Wi-Fi RELOAD
இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-
புதியது மாதத்திற்கு 20GB ரூ.540/-
2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-
செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.


# யாழ். கலாசார மண்டப திறப்பு விழா

















# தலைகீழாகத் தொங்கும் விஞ்ஞானத்தின் செருக்கு!



அண்ணார்ந்து பார்க்கும் அடுக்கு மாடிகள் அடியோடு வீழ்ந்து பெரும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது துருக்கி, சிரிய பூகம்பம். ஐரோப்பாவையே அதிர வைத்துள்ளது இந்த இயற்கைப் பேரிடி. மனிதனின் உச்சக்கட்ட அறிவியல் வளர்ச்சிக்கு இயற்கை விட்டிருக்கும் சவால் இது. நிலத்துக்கு அடியில் ஆழப்பதிக்கப்பட்ட "கொங்கிரீட்" அத்திவாரங்களைத் தகர்த்து, வானுயர்ந்த கட்டடங்களை தரைமட்டமாக்கியுள்ள இந்தப் பூகம்பம் சிலருக்கு ஆன்மிக ஞாபகங்களையும் உயிரூட்டியுள்ளது. மனிதனின் இயல்பே இப்படித்தான். உச்ச அளவில் முயற்சித்து முடியாவிட்டால் ஆண்டவனின் தலையில் திணித்துவிடுவது.

நித்திரையிலிருந்தவர்கள் இப்படி நிர்க்கதியாகுவர் என யார் நினைத்தது? எல்லாவற்றையும் எதிர்வுகூறும் விஞ்ஞானம் இதையும் எதிர்வுகூறி எச்சரித்திருக்கலாம். இதனால்தான், இன்றைய நவீன உலகு விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா? என்ற ஊசலாட்டத்தில் உள்ளது. இந்த அனர்த்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் உண்மைத் தொகையை எந்தக் கணனியும் கணிக்க இயலாது. தேடும் பணிகள், மீட்புப்பணிகளாலும் இந்த உண்மையைக் கொண்டுவர இயலாது. இந்நிலையே நாளாந்தம் நகர்



கிறது. சடலங்களைத் தேடுவதா? குற்றுயிராகக் கிடப்போரைக் கரையேற்றுவதா? அல்லது அங்கங்களையிழந்து அவதிப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதா? இந்த அவலங்களே அங்கு நீடிக்கின்றன.

ஐந்து மாதங்களுக்கு அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துள்ள துருக்கி அரசாங்கம் சர்வதேசத்திடம் கையேந்துகிறது. சிரியாவிலும் இதுதான் நிலை. உள்நாட்டுப் போருக்கு 2011இலிருந்து முகங்கொடுக்கும் இம்மக்கள், இயற்கையின் நியதியாலும் நிர்க்கதியாகி உள்ளனர். மருத்துவம், உணவு, இருப்பிடம், வாழ்வாதாரம் உள்ளிட்ட உதவிகள் ஒரே நேரத்தில் தேவைப்படுகிறது. விநியோகப்பாதைகள் இடிபாடுகளால் மூடிக்கிடக்கின்றன. வான்மார்க்கங்களால் வருமளவுக்கு காலநிலையும் கை தருவதாக இல்லை. இதனால், அவசரமாக உதவிகள் வந்தும் அடைந்த ஆதாயம் எதுவும் இல்லை. அவல நிலைமைகள் மேலும் மோசமாவதற்கு விநியோக வழிகள் தடைப்பட்டிருப்பது பிரதானமாகியுள்ளது.

ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படுகிறது "துருக்கி". ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் பெறாதுள்ள ஒரே ஐரோப்பிய நாடு என்பதால்தான் துருக்கிக்கு இந்தப் பெயர். ஆயினும், சர்வதேச அளவில் சிறந்த இராஜதந்திர உறவுகளைப் பேணுகிறது. இதனால், நாலாபுறங்களிலும் உதவி, ஒத்தாசைகள் துருக்கிக்கு வருகின்றன.

கட்டட இடிபாடுகளால் எழும்பும் புழுதிகள், திடீரெனப் பற்றிக்கொள்ளும் தீ, பாரிய தீப்பிழம்புகளிலிருந்து வெளியாகும் புகை என்பவற்றால், மீட்புப் பணியாளர்கள் உணர்விழந்து மயங்குவதையும் திடீரெனக் காயப்படுவதையும் கள நிலவரங்கள் காட்டுகின்றன.

இந்த அவலத்தின் கொடூரங்கள் மனங்களிலிருந்து மறையும் வரைக்கும் மானிடவர்க்கத்துக்கு தூக்கம் ஏது? அவ்வாறு தூங்குவதானால், விஞ்ஞானத்தின் உத்தரவு வேண்டும், இல்லாவிடின் மெய்ஞ்ஞானத்தின் பாதுகாப்பு அவசியம். இன்றைய நிலவரங்களால் மக்களின் மனங்களை இந்தப் பீதிகளே பீடிக்கின்றன. ஊழிக்காலம் குறித்து ஆகமங்கள், வேதங்களில் எச்சரிக்கப்பட்ட காட்சிகளையா சிரியாவிலும், துருக்கியிலும் காண்கிறோம். இவ்வாறான அழிவுகள்தான், மதங்களின் இருப்பைப் பாதுகாக்கிறதோ? இவ்வாறு எண்ணுமளவில் மானிடத்தின் பதறல்கள், மனித உணர்வுகளைப் பதப்படுத்துகின்றன. விஞ்ஞானத்தின் செருக்குத்தனத்தை தலைகீழாகத் தொங்கவிடுவதும் இவ்வாறான இயற்கைத் தாண்டவங்களே!

சுஐப் எம்.காசிம்

# கண்முன்னே பிரமாண்டமான கட்டடங்கள் சீட்டு கட்டுகள் போல் சரிந்தன

## மக்கள், உயிர்களை பாதுகாப்பதற்கு அங்கும் இங்கும் அலறியடித்து ஓடினர்



## நிலநடுக்கத்திலிருந்து உயிர்தப்பிய இலங்கையர் கந்தசாமி கோபால் சந்திரன் டேவிட்

அன்று 6ஆம் திகதி, திங்கட்கிழமை. அதிகாலை 4.15 மணியிருக்கும். எல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருந்தோம், நாங்கள் இருந்தது 3 மாடிக் கட்டடம். நிலம் அதிர்ந்து கட்டடங்கள் குலுங்கியது. நான் சட்டென்று கண்விழித்தேன். ஏதோ ஆபத்து நிகழப்போவதை அறிந்து தட்டுத் தடுமாறி மனைவியையும் பிள்ளைகளையும் எழுப்பிக் கொண்டு அங்கிருந்து தப்பித்து ஒருவழியாய் கீழே வந்து தேவாலயத்திற்கு சென்றோம். அங்கு ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருந்தனர். என் கண் முன்னே 10, 15 மாடிகளை கொண்ட கட்டடங்கள் தரைமட்டமாகின. மக்கள் உயிரை கையில் பிடித்து கொண்டு வீடுகளை விட்டு அலறியடித்துக் கொண்டு ஓடினர். நாங்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயமும் நிலநடுக்கத்தால் அதிர்ந்தது. எனினும் கட்டடத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை. எங்களுக்கு நம்பிக்கையை தந்தது. அந்த தேவாலயம் கிட்டத்தட்ட 2000, 3000 வருடங்கள் பழமையான கட்டடமாகவிருந்தமையால் அதன் சுவர்கள் பலமாகவிருந்தது. அங்கு நாங்கள் பாதுகாப்பாக இருப்பதை உணர்ந்தோம்'

இவ்வாறு உலகையே சோகத்தில் ஆழ்த்திய துருக்கி, சிரியா நிலநடுக்கத்திலிருந்து உயிர்தப்பிய இலங்கையைச் சேர்ந்த போதகர் கந்தசாமி கோபால் சந்திரன் டேவிட் தினகரனுக்கு தெரிவித்தார். ஒட்டுமொத்த உலகமும் இன்று உச்சரிக்கும் வார்த்தை என்றால் துருக்கி, சிரியா தான்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுமுறை முடிந்து உறங்கப் போன துருக்கி மக்கள் பலருக்கு அதுதான் கடைசி இரவாகவிருந்தது. மறுநாள் திங்கட்கிழமை (6.02.2023) அதிகாலை உறக்கத்திலேயே பலரின் உயிர்கள் பறிபோயின. இத்துயர சம்பவத்தில் இலங்கையைச் சேர்ந்த பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அந்தவகையில் தற்சமயம் போதகர், நிலநடுக்கத்திலிருந்து தப்பி தனது பிள்ளைகளுடன் பாதுகாப்பான இடமொன்றில் தங்கியுள்ளார். 54 வயதான போதகர் கந்தசாமி கோபால் சந்திரன் டேவிட் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். அவர் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் துருக்கிக்கு சென்றுள்ளார். ஐ.நா. சபையின் சிறுவர் விவகார பிரிவில் கடமையாற்றும் துருக்கி நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரை திருமணம் செய்து துருக்கி சிரிய எல்லையிலுள்ள மாட்டின் நகரில் வசித்து வருகின்றார். நிலநடுக்கத்தை தொடர்ந்து அவர் தனது பிள்ளைகளுடன் தற்சமயம் சிரிய எல்லையிலுள்ள உயரமான இடமொன்றிலுள்ள கட்டடமொன்றில் தங்கியிருக்கின்றார். மனைவி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தற்சமயம் உதவிகளை செய்துவருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் போதகர் மேலும் தெரிவிக்கையில்,

10, 15 மாடிகளை கொண்ட பிரமாண்டமான கட்டடங்கள் சீட்டு கட்டுகள் போல என் கண்முன்னே சரிந்தன. மக்கள் தங்கள் குழந்தைகள், உறவினர்கள், தங்கள் உயிர்களை பாதுகாப்பதற்கு அங்கும் இங்கும் அலறியடித்துக் கொண்டு ஓடினர். சிலர் கஷ்டப்பட்டு சேர்த்த சொத்துகள் அனைத்தும் கண்முன்னே தரைமட்டமாகியதை பார்த்து மனம் நொந்தனர். துருக்கி முன்னரும் இத்தகைய நிலநடுக்கங்களுக்கு முகம்கொடுத்துள்ளமையால் எல்லா வீடுகளிலும் அனர்த்த முன்ஆயத்த பொதியொன்று இருக்கும். எனினும் நீண்டகாலமாக இத்தகைய மிகப்பெரிய அழிவுகள் இடம்பெறவில்லை. அதனால் மக்கள் சற்று அலட்சியமாகவே இருந்துவிட்டனர்.

அன்று அதிகாலை வேளையில் நிலநடுக்கம் ஏற்பட்டமையால் அனைவரும் உறக்கத்திலிருந்தனர். அதனால் தான் உயிரிழப்புகள் அதிகமாகவுள்ளன. மிகப்பெரிய நிலநடுக்கத்தை தொடர்ந்து 120 நிலநடுக்கங்கள் இதுவரை ஏற்பட்டன. இன்னும் அதிர்வுகள் ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றது. எங்கு பார்த்தாலும் மரண ஓலமாக தான் இருக்கின்றது. சுமார் 24,000 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என கூறப்படுகின்றது. இதுவரை 43,000 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர். இன்னும் சிலருக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. அவர்கள் இடிந்து வீழ்ந்த இடிபாடுகளுக்கிடையே சிக்கியிருப்பார்கள் என கூறப்படுகின்றது. அதிகாலை 4.15 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கம் 1 நிமிடமும் 30 செக்கனும் நீடித்தது. கடும் குளிர், பனிப்பொழிவு நிலவியதால் உள்ளிருந்தாலும் மரணம் வெளியில் சென்றாலும் மரணம் என்ற நிலையில் மக்கள் செய்வதறியாது தவித்தனர். நிலநடுக்கத்தால் பிரதான 10 நகரங்கள் முற்றாக தரைமட்டமாகியுள்ளன. இங்குள்ள பழமையான கட்டடங்கள் பெரும்பாலும் நிலநடுக்கத்தால் சேதமடையவில்லை. 20 வருடங்களுக்கு உட்பட்ட புதிய கட்டடங்களே சேதமடைந்துள்ளன. இத்தகைய நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளில் இவ்வாறான அடுக்குமாடி கட்டடங்களை அமைப்பதற்கு யார் அனுமதி வழங்கியது என்று தெரியாது. நாங்கள் வசித்து வந்த மூன்றுமாடி கட்டடமும் தரைமட்டமாகியுள்ளது. எங்களுடைய அனைத்து உடைமைகளையும் இழந்துவிட்டோம். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாது. மின்சாரம், குடிநீர்வசதி அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. மீட்புக் குழுவினர் இப்பகுதிகளுக்குள் வருவதற்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகள் இன்மையால் அம்புலன்ஸ் வண்டிகள் இப்பகுதிக்கு வந்து மருத்துவ உதவிகளை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்தவர்களை

**'இங்குள்ள பழமையான கட்டடங்கள் பெரும்பாலும் நிலநடுக்கத்தால் சேதமடையவில்லை. 20வருடங்களுக்கு உட்பட்ட புதிய கட்டடங்களே சேதமடைந்துள்ளன. இத்தகைய நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளில் இவ்வாறான அடுக்குமாடி கட்டடங்களை அமைப்பதற்கு யார் அனுமதி வழங்கியது என்று தெரியாது'**

மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். எனினும் இங்கு நிலவும் கடும் குளிர், பனிப்பொழிவு காரணமாக மீட்புப்பணி பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே மீட்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மூன்று பிரதான வீதிகளில் பிளவு ஏற்பட்டுள்ளது. மீண்டும் இதேபோன்றதொரு நிலநடுக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகின்றது. இதனால் 3 மாத காலத்துக்கு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எப்படியும் மீண்டும் இந்நகரங்கள் வழமைக்கு திரும்புவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். இலங்கையர்கள் பலரும் இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இன்னும் முழுமையான விபரங்கள் இல்லை என்கிறார் அவர்.

இந்நிலையில் துருக்கியிலுள்ள இலங்கையர் தொடர்பில் உதவுவதற்கு தயாராகவிருப்பதாக இலங்கைக்கான துருக்கி தூதரகம் அறிவித்துள்ளது.

வசந்தா அருள்ரட்ணம்





(படங்கள்: இன்பாஸ் சலாஹுதீன்)

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அறநெறி பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் ஆடற்கலைப் போட்டியின் கேகாலை மாவட்டத்துக்கான முதலாம் சுற்றுப் போட்டி நேற்று தெஹியோவிட்ட காயத்ரி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமருக்கு அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் கலைஞர் விஜே பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்தார். விசேட அதிதியாக கலந்து கொண்ட பிரபல தொழிற்சங்கவாதியும் சமூகசேவையாளருமான அந்தோனிமுத்துவை கௌரவ அதிதியாக கலந்து கொண்ட தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர் பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்தார். இங்கு ஆசிரியை பிரியதர்ஷினியும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# வி.என். மதிஅழகன் சொல்லும் செய்திகள் நூல் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அன்பளிப்பு




கொஸ்மொஸ் ( COSMOS ) சமூக நல அமைப்பின் பிரிட்டிஷ் அங்கத்தவர்கள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கும், தென்கிழக்கிலங்கை நூலகங்களுக்கும் ஊடக கற்கைகளுக்கான நூல் ஒன்றின் பிரதிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என். மதிஅழகன் எழுதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் வானொலி தயாரிப்பும், முன்வைப்பும் என்ற பாட அலகின்வழி உசாத்துணை நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நூலின் 45 பிரதிகள் கடந்த வியாழக்கிழமை 9ஆம் திகதி பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்திடம் நூற்பிரதிகளை கிடைக்கச் செய்ய அனுசரணை வழங்குமாறு கொஸ்மொஸ் அமைப்பின் தலைவர் ஷாகீர் நவாஸிடம் மதிஅழகன் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டதை அடுத்து நூல் கையளிப்பு சாத்தியமாகியுள்ளது.



பல்கலைக்கழக பிரதான நூலகத்தின் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற SERLIN இலங்கை தென்கிழக்கு பிராந்திய நூலக தகவல் வலையமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் கொஸ்மொஸ் சார்பில் சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் எம்.ஏ.எம்.சமீம் நூற்பிரதிகளை கையளித்தார்.

பல்கலைக்கழகத்துக்குரிய பிரதிகளை பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுடீன் சம்பிரதாயபூர்வமாக பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகரும், தென்கிழக்கு பிராந்திய நூலக தகவல் வலையமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி எம்.எம்.மஷ்றூபா தென்கிழக்கிலங்கையில் உள்ள மருதமுனையில் இருந்து வரிப்பத்தான்சேனை வரையிலான உள்ளூராட்சி சபைகளின் கீழ்வரும் 16 நூலகங்களுக்குரிய நூற்பிரதிகளை பெற்றுக்கொண்டார். காலக்கிரமத்தில் அவரால் இந்த நூற்பிரதிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

நூற்பிரதிகளை கையளிக்க உதவி வழங்கிய பிரிட்டன் கொஸ்மொஸ் அமைப்பின் தலைவர் ஷாகீர் நவாஸுக்கும், கொஸ்மொஸ் சார்பில் நூற் பிரதிகளை கையளித்த சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீமுக்கும், நிகழ்வை ஒருங்கிணைத்த கலாநிதி எம்.எம். மஷ்றூபாவுக்கும் ஊடக கற்கையில் ஈடுபடும் இளைஞர், யுவதிகளின் நன்மைகருதி நூற்பிரதிகளை ஏற்றுக் கொண்ட பல்கலைக்கழக கல்வி சமூகத்தினருக்கும் நூலாசிரியர் வி.என். மதிஅழகன் நன்றி தெரிவித்துள்ளார்.






# ஜே.வி.பி தப்புக் கணக்கு போடுகின்றது!

## ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். அமரசிங்க

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனியாகக் கேட்கிறோம் என்று கூறி தனியாகக் கேட்டு இருப்பதையும் இல்லாமல் ஆக்கி விட்டார்கள். நாடு மஹிந்தவுக்கு, கிராமம் ஜே.வி.பிக்கு என்று தனியாகப் போட்டியிட்டார்கள். நாட்டை மஹிந் தவுக்கு கொடுத்து கிராமத்தை ஜே.வி.பிக்கு கொடுக்க மாட்டார்கள் என்று நான் அப்போது சொன்னேன். அவ்வாறே கொடுக்கவில்லை. ஒரு உள்ளூராட்சி மன்றத்தைக் கூட வெற்றி பெற முடியாமல் போனது.**



**ஜே.வி.பியைக் கட்டி எழுப்புதற்காக சில காலம் பாடுபட்டு உழைத்த நீங்கள், 2006ஆம் ஆண்டில் கட்சியிலிருந்து வெளியேறினீர்கள். தற்போதைய ஜே.வி.பி யின் பயணம் தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

நான் 1973ம் ஆண்டு ஜே.வி.பி உடன் இணைந்து கொண்டேன். அன்றிலிருந்து நான் தொடர்ச்சியாக கட்சிக்காகச் செயற்பட்டேன். 1989ம் ஆண்டு நான் வெளிநாட்டுக்குச் சென்றாலும் கட்சிக்காகப் பணியாற்றினேன். 1989ம் ஆண்டின் பின்னர் கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் சந்தர்ப்பத்திலும் நான் முக்கிய பங்காற்றினேன். ஜே.வி.பி கட்சியின் தடை நீக்கப்பட்டதன் பின்னர் தேர்தலில் போட்டியிடும் வரைக்கும் நான் கட்சியோடு இருந்தேன். இன்று ஜே.வி.பியை அதன் ஸ்தாபகக் கொள்கைகளை முற்றாக மறந்துவிட்ட ஒரு கட்சியாகவே நான் பார்க்கிறேன். அதேபோன்று இப்போது ஜே.வி.பி ஒரு லிபரல் ஜனநாயக மற்றும் திருத்தங்களை ஏற்றுக் கொண்ட, திருத்தங்களுக்கு உள்ளான ஒரு சாதாரண அரசியல் கட்சியாகவே நான் பார்க்கின்றேன்.

**இன்று ஜே.வி.பியினுள் இடதுசாரி அரசியல் சித்தாந்தம் இல்லை என்றா கூறுகின்றீர்கள்?**

ஆமாம். அவ்வாறான ஒன்று இப்போது இல்லை. இப்போது இடதுசாரி என்று ஒன்று இல்லை. இன்று இந்த நாட்டில் கூட இடதுசாரிகள் பற்றிய பேச்சு இல்லை. பாட்டாளி வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்திற்கு அரச அதிகாரம் வழங்கப்படும் நிலையில் அவர்கள் இப்போது இல்லை. இன்று, ஜே.வி.பி பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியில் 57, 58 வருடங்கள் கட்சி பயணித்திருக்கின்றதே தவிர, இன்றைய ஜே.வி.பி அதன் ஸ்தாபக கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. எனவே, சித்தாந்த ரீதியாக கட்சி முன்னோக்கி செல்லாமல் பின்னோக்கி சென்றுள்ளது. எப்போதும் குறுகிய கால பிரச்சினைகளுக்கு பதிலைத் தேடிக் கொண்டிருக்கும் அரசாங்கங்களில் நெருக்கடிகளைத் தோற்றுவித்து அடிபட்டு செல்கிறது. பெரிய நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் இல்லை. தற்போது நாட்டு மக்கள் ஜே.வி.பியைச் சுற்றி ஒன்றிணைந்துள்ளார்கள் என்று ஜே.வி.பியே கூறுகின்றது. உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் என்ன நடக்கும் என்று என்னால் கூற முடியும். எனினும் தேர்தல் இடம்பெறும் தினத்தில் மக்களின் விருப்பம் என்ன என்பதை எம்மால் பார்த்துக் கொள்ள முடியும்.

**ஜே.வி.பி முற்போக்கு சக்தியாக பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

அதனை அவர்கள் ஒரு தந்திரமாகவே செய்தார்கள். ஒரு உத்தி என்று சொல்வது தவறு. அதிகாரத்தைப் பெறுவதற்காகவே பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அதை ஒரு தந்திரமாகப் பயன்படுத்தியிருந்தால் ஜே.வி.பியினால் இதனை விடவும் நீண்ட தூரம் பயணித்திருக்க முடியும். பாராளுமன்றத்தை ஏற்றுக் கொண்டது பரவாயில்லை. விரும்பிய அரசியல் இலக்கை அடைந்து கொள்ள, பாராளுமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதே போன்று ஆயுதப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். சர்வதேச ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வது போன்ற பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். அதில் எந்த தவறும் இல்லை. ஆனால் ஜே.வி.பி சர்வதேச அரசியல் சித்தாந்தங்களில் இருந்து விலகிய ஒரு இடதுசாரிக் கட்சி, இன்று அது சித்தாந்த ரீதியாக இடதுசாரி இயக்கம் அல்ல, அது வெறும் வார்த்தைகள் மாத்திரமே.

1971 கிளர்ச்சியின் பின்னர் 1988/1989 மந்தநிலைக்குப் பிறகு, இலங்கையில் நல்ல இடதுசாரி இயக்கம் உருவாக்கப்படவில்லை. எனவே, இலங்கையில் இடதுசாரி கட்சிக்கு நல்ல இடம் உள்ளது. இதற்கு பதிலைக் கண்டுபிடிக்க அவர்கள் ஆர்வமாக இருந்தபோதிலும், அவர்களுக்கு சிறந்த பதில் கிடைக்கவில்லை. ஜே.வி.பி இப்போது துண்டு துண்டாக உடைந்த கட்சி மாத்திரமே. ஜே.வி.பி ஒரு சமூக சக்தி என்ற நிலையில் இருந்து விலகிச் சென்றிருக்கிறது.

**இன்று நாட்டில் இடதுசாரி இயக்கம் இல்லை என்கிறீர்கள். அப்படியானால், ஒரு இடதுசாரி இயக்கத்திற்கு நாட்டில் வெற்றிடம் இருக்கிறது, இல்லையா?**

கண்டிப்பாக இருக்கிறது. ஆனால், நாட்டில் இருக்கும் இடதுசாரி இயக்கத்திற்கான அந்த வெற்றிடத்தை ஜே.வி.பி.யால் நிரப்ப முடியாது. அதை ஒரு தேசிய இயக்கத்தால் மட்டும் செய்ய முடியாது. இடதுசாரி இயக்கத்திற்கு இந்நாட்டில் இன்னமும் வெற்றிடம் இருக்கிறது. அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒருவராலும் முடியாது போயிருக்கிறது. விசேடமாக அதை நிரப்புவதற்கு ஜே.வி.பியால் முடியாது என்பதை தெரிந்து கொண்டவர்கள் கட்சியிலிருந்து விலகிச் சென்றுள்ளார்கள். இடதுசாரியை கட்டி எழுப்புவதற்கு குமார் குணரத்தினம் போன்றவர்களால் முடியும் என்று நினைத்தாலும், அவர்களாலும் அது முடியாது.

**13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்த்த கட்சியான ஜே.வி.பி, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதனை மீண்டும் அமுல்படுத்துவோம் என்று தேர்தல் மேடைகளில் கூறுகிறது. அதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இந்த விடயங்கள் ஜே.வி.பியை புரிந்து கொண்டவர்களால் கூறப்படவில்லை. கட்சியின் கொள்கைகளையோ, வரலாற்றையோ புரிந்து கொண்டவர்கள் இன்று இல்லை. ஜே.வி.பி தொடர்பில் எம்மிடம் உள்ள புரிந்துணர்வு அவர்களிடத்தில் இல்லை. தோழர் விஜேவீர சிறையிலிருந்து விடுதலையாகி வரும் போது இருந்த குழுவில் எஞ்சி இருப்பது நான் மாத்திரமே. இப்போது ஜேவிபியின் உள்ளக கொள்கைகள் மாறிவிட்டது. இது நாட்டின் அழிவுக்கும், கட்சியின் அழிவுக்கும் வழி வகுக்கும். 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது. ஜேவிபிக்கு எந்தக் கொள்கையும் கிடையாது. இப்போதைய ஜே.வி.பியின் நோக்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை மூன்றிலிருந்து நான்காகக் கூட்டிக் கொள்வதுதான். அதேபோன்று வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக சில உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை நியமித்துக் கொள்வதும் கட்சியின் மற்றொரு நோக்கமாகும்.

**அன்று ஜே.வி.பிக்கு ஒரு கொள்கை இருந்தது. இன்று ஜே.வி.பிக்கு கொள்கை இல்லை என்று எவ்வாறு உங்களால் கூற முடியும்?**

ஜே.வி.பிக்கு இன்று நிலையான கொள்கைகள் இல்லை. நிர்வாக வேலைத் திட்டங்கள் இல்லை. கொள்கை விளக்கங்கள் இருந்தாலும் அதற்கான அரசியல் அதிகாரம் அவர்களிடம் இல்லை. 8 லட்சம் வாக்குகள் எடுத்த கட்சியால் 69 இலட்சத்துக்குப் போவது எவ்வளவு கடினமானது? ஜே.வி.பிக்கு கொள்கை இருந்தாலும் தனித்து சுதந்திரமாக செயற்பட முடியாது. உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றாலும் உள்ளூராட்சி சபைகளைக் கட்டி எழுப்புவதற்கு அரச நிதி இருக்க வேண்டும்.

**இன்று ஜே.வி.பியை இடதுசாரி சக்தியாக ஏற்றுக்கொள்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லை!**



**ஒரு உள்ளூராட்சி சபையைக் கூட ஜே.வி.பியால் வெற்றிபெற்று அதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியாது என நீங்கள் குற்றம் சுமத்தினாலும், இத்தேர்தல் நாட்டின் அரசியல் அதிகாரத்தை மாற்றும் தீர்மானத்தை எடுக்கும் தேர்தல் என ஜே.வி.பி.யைச் சேர்ந்த சிலர் கூறுகின்றனர். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

எப்போதுமே தேர்தல் நெருங்கிவிட்டால் இது ஆரம்பம் என்றுதானே சொல்வார்கள். எனினும் அந்த ஆரம்பங்களில் எதுவும் நடப்பதில்லை. எப்போதும் ஆரம்பம் என்று மாத்திரமே கூறுவார்கள். 1971ஆம் ஆண்டு முதல் 1988/ 89 ஆண்டு வரை ஆரம்பம் என்று தான் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் அதையே அவர்கள் கூறுகின்றார்கள். எனினும் அவற்றால் எதுவுமே நடப்பதில்லை. கடந்த ஒன்பதாம் திகதியின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் வரை மாற்றத்திற்கான ஆரம்பம் என்றார்கள். எனினும் நடந்தது என்ன? எதுவும் நடக்கவில்லை. எதிர்வரும் தேர்தலின் பின்னர், உள்ளூராட்சி மன்றங்களைச் செயற்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாக்கும் வகையிலான ரிமோட் கொண்ட்ரோலை ஜே.வி.பி தனது பிடிக்குள் எடுப்பதற்கே தயாராகி வருகின்றது. எந்த சபையிலும் பிரேரணைகளை வெல்ல முடியாது போகும். பட்ஜெட்டை தோற்கடிக்க முயல்வார்கள். ஜே.வி.பி உள்ளூராட்சி மன்றங்களை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். இவர்களால் சபைகளை நடாத்த முடியாது. ஆனால், அதைச் செய்பவர்களுக்கும் அதைச் செய்ய முடியாமல் சிக்கலை உண்டாக்குவார்கள். அவர்களின் அடுத்த நோக்கம் பாராளுமன்றத்தை கலைப்பதாகும். தேர்தலின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதே அதன் நோக்கமாகும். உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களை அதிகரித்துக் கொண்டு அவர்களை பயன்படுத்தி பாராளுமன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களை அதிகரித்துக் கொள்வதற்கே அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

**2006ம் ஆண்டின் பின்னர் ஜே.வி.பி நேர்மையை இழந்துள்ளது என்று ஜே.வி.பியில் இருந்து விலகிச் சென்ற சிலர் கூறுகின்றார்கள். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

2005ஆம் ஆண்டின் பின்னரே நேர்மை இல்லாமல் போனது என நான் கூறுகின்றேன். மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசு அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தலைமைத்துவத்தை வழங்கி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு இணைந்து தேர்தலில் போட்டியிட்டு 41 உறுப்பினர்களை பெற்றது குற்றமல்ல. அப்போது உத்தியை சரியாக தேர்ந்தெடுத்திருந்தால், அதற்கான தந்திரங்களை கண்டுபிடித்திருக்கலாம். 2004 க்குப் பிறகு அவர்களது தந்திரங்கள் பலிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன்.

ஆரம்பத்தில் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்பட்டார்கள். ஜே.வி.பிக்கு 41 எம்.பி.க்கள் கிடைத்த போது அவற்றில் இரண்டினைக் கொடுத்தார்கள். இதிலிருந்து தெரிகிறது கட்சியின் மத்திய குழுவில் உள்ளவர்கள் எவ்வளவு அப்பாவியாக இருக்கிறார்கள் என்று. அதன் பின்னர் உள்ளூராட்சி தேர்தலில் தனியாக போட்டியிடுகிறோம் என்று கூறி தனியாகப் போட்டியிட்டு இருந்ததையும் இல்லாமலாக்கிக் கொண்டார்கள். நாடு மஹிந்தவுக்கு, கிராமம் ஜே.வி.பிக்கு என்று தனியாகப் போட்டியிட்டார்கள். நாட்டை மஹிந்தவுக்கு கொடுத்து கிராமத்தை ஜே.வி.பிக்கு கொடுக்க மாட்டார்கள் என்று நான் அப்போது சொன்னேன். அவ்வாறே கொடுக்கவில்லை. ஒரு உள்ளூராட்சி மன்றத்தைக் கூட வெற்றி பெற முடியாமல் போனது. ஒருவாறு 400 வாக்குகளினால் திஸ்ஸமகாராமவை மாத்திரம் காப்பாற்றிக் கொண்டார்கள். அதிலும் இன்னும் 400 வாக்குகளை பெறாதிருந்தால் அதையும் தோற்றிருப்பார்கள். அதிலிருந்து அவர்களின் தோல்வி ஆரம்பமானது. அப்போதிருந்து, ஜே.வி.பி வெறுப்பு அரசியலை கையிலெடுத்தது.

அதன் பிறகு நான்தான் முதலில் வெளியேறியவன். நாடாளுமன்ற உறுப்புரிமையை கையளித்துவிட்டு வீட்டுக்குச் சென்றேன். எனக்குப் பின்னால் நந்தல குணதிலக, விமல் வீரவன்ச, குமார் குணரத்னம் மற்றும் சோமவன்ச அமரசிங்க ஆகியோர் ஜே.வி.பியிலிருந்து வெளியேறிச் சென்றார்கள். மக்கள் என்ன நோக்கத்திற்காக ஜே.வி.பியின் மீது எதிர்பார்ப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தக் கட்சிக்கு ஏதாவது அடிப்படை இருக்கிறதா என்ற கேள்வி எனக்கு இப்போது உள்ளது. இன்று அங்கு எந்தப் புரட்சியும் இல்லை. இளைஞர்களைத் தூண்டி, வன்முறைச் செயல்களைச் செய்யத் தூண்டும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் இலக்குடன் நகரக்கூடிய சமூக சக்தி அவர்களிடம் இல்லை.

**2006க்குப் பிறகு ஜே.வி.பியுடன் நீங்கள் பயணித்த அரசியல் பாதையை மாற்ற இந்தக் காரணங்கள் அடிப்படையாக அமைந்ததா?**

ஜே.வி.பிக்கு அன்று 41 ஆசனங்கள் கிடைத்தன. 39 உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்கள். அன்றைய 41 இன்று மூன்றாகக் குறைந்துள்ளது. இதற்கு காரணம் அவர்களுடைய தவறான வியூகங்களும், தவறான அரசியல் முடிவுகளுமேயாகும். அவர்கள் தம்மைப்பற்றி உயர்வாக நினைத்து 2005ம் ஆண்டு தவறிழைத்துக் கொண்டார்கள். 2004 தேர்தலில் மக்கள் வாக்களித்தபோது, இலங்கை முழுவதும் ஜே.வி.பி வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். இது அரசியல் வெற்றியல்ல. அன்று பிரதான கட்சிக்கு வாக்களிக்கும் போது ஜே.வி.பிக்கும் ஒரு விருப்பு வாக்கு கிடைத்தது. எனினும் ஜே.வி.பியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விருப்பு வாக்கை வழங்கவில்லை. அதனால்தான் அன்று முழு இலங்கையிலும் அனேக இடங்களில் ஜே.வி.பி முதன்மை பெற்றது. இதனை வைத்து ஜே.வி.பி.யை மக்கள் அதிகம் விரும்புகிறார்கள் என்று அவர்கள் தப்புக்கணக்கு போட்டார்கள்.

பொதுவாக ஒன்றாக இணைந்து கேட்டால் 25 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அப்போது தயாராக இருந்தார். 2005 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பி தனித்தனியாகப் போட்டியிட்டது. கடைசியில் என்ன நடந்தது? துரதிர்ஷ்டவசமாக, இறுதியில் எல்லாவற்றையும் இழந்தது. கடைசியில் அப்போது நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கையில் ஒரே ஒரு சபையை மாத்திரமே ஜே.வி.பி வெற்றி கொண்டது. இம்முறையும் அதுதான் நடக்கப் போகிறது. ஜே.வி.பி தப்புக்கணக்கு போட்டு கடந்த காலத்தில் தவறிழைத்துக் கொண்டதைப் போன்று இப்போதும் தவறிழைத்து மண் கௌவும். அவர்களால் ஒரு சபையைக் கூட வெல்ல முடியும் என நான் நினைக்கவில்லை.

**டை கோட் அணிந்திருக்கும் அடிமைகளுக்கு தொழிலாள வர்க்கத்தைப் பற்றிய விழிப்புணர்வு இல்லை என ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினர்கள் கூறுகிறார்கள். எனவே, ஜே.வி.பி இன்று சரியான திசையில் இல்லை என்பது அவர்களது கருத்தாகும். சரியான தலைமை இல்லாத போராட்டங்களால் அரசியல் மாற்றங்களைச் செய்ய முடியுமா?**

முடியாது. அவ்வாறு செய்ய முடியாது. இதற்கு நல்ல உதாரணம் 2022 ஜுன் 9ம் திகதி அதனை செய்ய முடியாமற் போனமையாகும். இதனால் என்ன நடந்தது என்றால், நாடு மேலும் சரிவடைந்தது. அப்படியானால், இப்போது செய்ய வேண்டியது நாட்டைக் கட்டியெழுப்புவது மாத்திரம்தான்.

**ஜே.வி.பிக்கு இருக்கும் மிகப்பெரிய குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர்களுக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் மற்றும் சர்வதேச உறவுகள் இல்லை என்பதுதான். இதனை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

சர்வதேச உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு நீண்ட காலம் தேவையில்லை. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களை சர்வதேசம் ஏற்றுக் கொண்டது. எனவே ஜனநாயக ரீதியில் அல்லது இராணுவப் புரட்சியின் மூலம் அரசு அதிகாரத்தை பெற்று கொண்டதன் பின்னர் அதனை ஏற்றுக் கொள்வதற்கு எந்த ஒரு நாடும் முனையும். அமெரிக்கா சிரியாவுக்கு எதிராக இருக்கும்போது, ரஷ்யா சிரியாவின் பக்கம் நிற்கிறது. ஆனால் அந்தப் பிரச்சினை எமக்கு வராது. ஜே.வி.பி அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 69 இலட்சம் வாக்குகளை எப்போது எடுப்பது? இந்த நிலைக்கு வருவதற்கு ஜே.விபியால் முடியுமா? ஒரு மாகாண சபையின் அதிகாரத்தைக்கூட ஜே.வி.பியால் தனியாகப் பெற்றுக் கொள்ள முடியாது. கூட்டிணைந்துதான் ஆட்சியமைக்க முடியும்.

**ஜே.வி.பி மீது நீங்கள் வெறுப்படைவதற்கு சமீபத்தைய காரணமாக எதனைக் கருதுகிறீர்கள்?**

அவர்களோடு சேர்ந்து தனிப்பட்ட முறையில் பயணிக்க முடியாது என்று எனக்குத் தோன்றியதால்தான் அங்கிருந்து நான் வெளியேறினேன். அரசியல் கருத்துக்கள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகளில் அவர்களுடன் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால்தான் ஜே.வி.பி உடைந்து சிதைவடைந்து கொண்டிருக்கிறது. இன்று இருப்பவர்களுக்கு கட்சியின் அடிப்படை சித்தாந்தங்கள் தெரியாது. நாம் 1989ம் ஆண்டின் பின்னர் மீண்டும் ஜே.வி.பியைக் கட்டி எழுப்பினாலும் அவர்களது செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கியவர்கள் எவரும் இன்றில்லை. அவர்கள் அனைவரும் வெளியேறிச் சென்று விட்டார்கள். 2006ம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை நான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் செயற்பட்டேன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி நானும் செயற்பட்டேன். ஜே.வி.பி இன்று அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்ட மற்றுமொரு கட்சி மாத்திரமேயாகும். அன்று நந்தன குணதிலக்க, விமல் வீரவன்ச, குமார் குணரத்னம், சோமவன்ச அமரசிங்க போன்றோரும் அரசியல் கருத்து முரண்பாடுகள் காரணமாக அமைப்பிலிருந்து வெளியேறினார்கள். அந்தக் கட்சிகளால் இடதுசாரி அரசியல் சக்தியின் தேவையை நிறைவேற்ற முடியவில்லை.



**அதிகாரத்தை பெறும் நோக்கில் உருவாக்கப்பட்ட மற்றுமொரு அரசியல் கட்சியாகவே ஜே.வி.பி இன்றுள்ளது!**

**ஜே.வி.பி மேடைகளில் கூறப்படும் விடயங்களைக் கேட்கும் மக்கள் ஏன் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை?**

ஜே.வி.பி.யால் அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு ஒருபோதும் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது. திருட்டை நிறுத்துவதாகக் கூறும் ஜே.வி.பியின் கதைகளைக் கேட்க மக்கள் அவர்களின் மேடைகளுக்கு அருகில் செல்கிறார்கள். அழகான கதைகளைக் கேட்பது அனைவருக்கும் பிடிக்கும். ஆனால் அதை நிஜமாக்க முடியும் என்று நம்புபவர்கள் குறைவு. எனினும் அந்தக் கதைகளை நிஜமாக்க முடியும் என்று நம்புபவர்கள் குறைவு. இம்முறை குறிப்பிட்ட தொகையினர் வாக்களித்தாலும் தேர்தலின் பின்னர் தாம் தப்பு செய்துவிட்டதாகவே மக்கள் நினைப்பார்கள். வாக்குகளை வழங்கக் கூடிய ளவுக்கு மக்கள் இன்னமும் ஜே.வி.பியை நம்பவில்லை. அதனால் தான் வாக்களிக்கச் சென்றும் மக்கள் அவர்களுக்கு புல்லடி இடுவதில்லை.

சுபத்ரா தேசப்பிரிய
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

அரசியல் அரங்கம்

அர்ஜூன்



தேர்தலை நடத்துவதற்கு 16 பில்லியன் ரூபாவை செலவு செய்வது தேவையற்ற ஒன்றாகும். இதற்கு செலவு செய்யும் பணத்தினால் பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாது என நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

'உள்ளூராட்சித் தேர்தலால் நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாது!

# ரூபா 16 பில்லியனை செலவு செய்யும் வீண்விரயச் செயல்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் சந்திப்பு

**கே: அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மிகவும் வயது குறைந்த அமைச்சராக நீங்கள் காணப்படுகின்றீர்கள். இந்த சாதனையைப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: பின்தங்கிய சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதால், நான் அமைச்சரவையில் இளம் அமைச்சராக நியமிக்கப்பட்டேன் என்பதை மறந்துவிடக் கூடாது. இளைஞர்கள் அரசியலுக்கு வருவது மிகவும் கடினம். அரசியலில் இருக்கும் இளைஞர்களைப் பார்த்தால், அவர்களில் பெரும்பாலானவர்கள் என்னைப் போன்றவர்கள். நாங்கள் உறவினர்களின் ஊடாக வந்தவர்கள். இதனை உண்மையான ஜனநாயகம் என்று நான் கருதவில்லை. எனது தந்தையின் மறைவுக்குப் பிறகு நான் அதிகாரத்துக்கு வந்திருந்தாலும், பல இளைஞர்களுக்கு அப்படியான நிலை இல்லை.

உண்மையில் அதிக திறமையும், பதவிகளுக்கான தகுதியையும் கொண்ட இளைஞர்கள் பலர் இருக்கலாம். இலங்கையைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் அதைத்தான் எதிர்பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஐந்து ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகும், எந்தக் கட்சி தலைமையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அதன் அமைச்சரவையில் இளைஞர் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். ஏனெனில், அரசியல்வாதிகளுக்கும் இளைஞர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பது மிகப்பெரிய பிரச்சினை. எனவே, அமைச்சரவையில் இளைஞர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்க ஒருவர் தேவை.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க உங்களையும், உங்கள் கட்சியையும் வழிநடுத்தியது யாது?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரந்த அரசியல் அனுபவமே இதற்குப் பிரதான காரணமாகும். நான் நேர்மறைகளை மட்டுமே முன்வைக்கப் போகிறவன் அல்ல, சில எதிர்மறைகளும் உள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை 45 ஆண்டுகளுக்கும் மேற்பட்டது. அதனால், எல்லாவிதமான எதிர்ப்புகளும், விமர்சனங்களும் இருக்கும். இதனை யாராலும் மறுக்க முடியாது என நான் நினைக்கின்றேன். இருந்தபோதும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்ததுடன், இதற்கான மாற்றமும் நிகழ்ந்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்பு, நாட்டின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. எந்தக் கட்சியால் தற்போது அரசியல் நடத்தப்பட்டாலும், உண்மையில் இந்தியாவும் சீனாவும் கடன் மறுசீரமைப்புக்கு உத்தரவாதம் அளித்துள்ளன. ஆறு மாதங்களுக்கு முன்பு இல்லாத சர்வதேச ஆதரவை நாம் நாட வேண்டும். ஜனாதிபதி குறிப்பிட்ட திறமையுடன் வந்திருந்தார் என்று நான் நினைக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் உரிய மரியாதையை வழங்குகிறோம். தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டால், நாங்கள் வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, அவர் மற்றொரு வேட்பாளரை ஆதரித்தார். எனவே, நெருக்கடியைச் சமாளிக்க மிகவும் அனுபவம் வாய்ந்த மற்றும் தகுதியான நபர் யார் என்ற விடயம் எழுந்தது.

**கே: தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இந்தத் தருணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது அவசியமில்லை என்பதே எனது நிலைப்பாடாகும். அது தோல்விப் பயத்தால் அல்ல, நடைமுறைச் சாத்தியம் பற்றிக் கூறுகின்றேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு வாக்கு வங்கி பலமாக உள்ளது. அதனால் நாங்கள் எந்த அறையின் பக்கம் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, நமது வாக்குகள் எப்போதும் நம்முடன் இருக்கும். தேர்தலை நடத்துவதற்கு 16 பில்லியன் ரூபா செலவு செய்வது நாட்டின் பொருளாதாரத்தை மாற்றப் போவதில்லை. இந்தத் தேர்தல் ஜனாதிபதியையோ பிரதமரையோ மாற்றப் போவதில்லை.

உதாரணமாக, அதில் 10 சதவீதம் மலையக சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்டால் அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் சிறப்பாக அமையும். உள்ளூராட்சித் தேர்தல் என்பது கட்சியை விட வேட்பாளரையே சார்ந்துள்ளது என்பது அரசியல் வட்டாரத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். எனவே, அது மக்களின் ஆணையின் உண்மையான பிரதிபலிப்பைக் கொடுக்கப் போவதில்லை. எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அவசியமில்லை, ஏனெனில் அது திறைசேரியிலிருந்து தேவையற்ற பணத்தைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

அதைத் தவிர, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றன என்பதற்கு உறுதியான ஆதாரம் இல்லை. தேர்தலை விரும்பாதவர்களும் எதிர்க்கட்சியில் உள்ளனர் என்பதை என்னால் நேர்மையாகக் கூற முடியும்.



**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றன என்பதற்கு உறுதியான ஆதாரம் இல்லை. தேர்தலை விரும்பாதவர்களும் எதிர்க்கட்சியில் உள்ளனர்**

**கே: பெருந்தோட்ட அரசியல் தலைவர்கள் தோட்ட சமூகத்திற்கு எதனையும் செய்யவில்லை என்ற விமர்சனம் உள்ளது. இந்த எண்ணத்தை மாற்ற நீங்கள் என்ன செய்யத் திட்டமிட்டுள்ளீர்கள்?**

பதில்: பெருந்தோட்ட அரசியல் தலைவர்கள் மலையக சமூகத்திற்கு எதனையும் செய்யவில்லை என நான் கூறமாட்டேன். எதிர்க்கட்சியில் உள்ள எனது சக அரசியல்வாதிகளும், மலையக அரசியல் தலைவர்களை விமர்சிப்பவர்களும் சரியான உண்மையை அறிந்து பேசவேண்டும். வார இறுதியில் அவர்கள் அனைவரும் தங்கள் ஆடம்பரமான வீடுகளில் வாழ்கின்றனர். மலையகத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளாமல் தொழிற்சங்கங்கள் மீது மாத்திரம் குற்றஞ்சாட்டுகின்றனர். மலையக மக்களை இந்த அவல நிலைக்குத் தள்ளுவது தொழிற்சங்கங்கள் அல்ல, தோட்டக் கம்பனிகள் என்பதை ஆதாரத்துடன் காட்டக்கூடிய விவாதத்திற்கு யாரையும் நான் பகிரங்கமாக அழைக்கிறேன்.

மலையகத்தில் கம்பனிகள் மக்களைச் சுரண்டுவதை நாம் அறிவோம், அதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. ஐ.நா சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை கூட எங்களிடம் உள்ளது. அதில் நிறுவனங்கள் தொழிலாளர்களைச் சுரண்டுகின்றன என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**மலையக மக்களை அவல நிலைக்குத் தள்ளுவது தொழிற்சங்கங்கள் அல்ல, தோட்டக் கம்பனிகள்!**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொறகொட

# மக்களுக்கு தூயகுடிநீரை வழங்குவதில் இந்தியாவிடம் கற்க வேண்டிய பாடம்!

இந்தியா உலகிலேயே அதிக சனத்தொகை கொண்ட நாடாக மாறி வருகின்றது. மக்கள் தொகை அதிகரிப்புடன் பொதுத்தேவைகள் குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. உணவு, வீடு, மின்சாரம், போக்குவரத்து, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட தேவைகள் குறித்து புதிதாக திட்டமிட வேண்டியுள்ளது.

மக்களுக்குத் தேவையான சுத்தமான நீரை வழங்குவது அவசியமாகும். சர்வதேச அறிக்கைகளுக்கு அமைய உலக சனத்தொகையில் நூற்றுக்கு 18 வீதத்தினர் இந்தியாவில் வசிக்கின்றனர். உலகின் தூய நீர்வளத்தில் இந்தியாவிடம் நூற்றுக்கு நான்கு வீதமே உள்ளது. 2019 ஆம் ஆண்டின் தரவுகளுக்கு அமைய மக்கள் தொகையில் நூற்றுக்கு 65 வீதமானோருக்கு உபயோகப்படுத்த கிடைக்கும் நீரானது குறிப்பிட்ட தரத்தில் இல்லை என அறிய முடிகின்றது. 2025 ஆம் ஆண்டளவில் இந்தியர்களுக்காக தூயகுடிநீரை வழங்குவதற்கு 'ஜலஜீவன்' திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தூயநீரை வழங்குவதற்காக கிராமிய மட்டத்தில் செயற்படுத்தப்படும் திட்டத்திற்காக இந்திய மத்திய அரசு நேரடியாக தலையிட்டுள்ளது. திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்த மற்றும் ஒதுக்கப்படும் நிதியில் உயர்ந்தபட்ச பயனை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குழாய் நீர் விநியோகத்துக்கான திட்டத்தை ஆரம்பிக்கும் போது மூன்று இணைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதிகாரிகள்,பயனாளர்கள் மற்றும் அரசல்லாத அமைப்பின் இணைப்புகளே ஏற்படுத்தப்படுகின்றன.

தேவையான உபகரணங்களை விலைக்கு வாங்குவதற்கு டென்டர் கோரப்படுகின்றது. குறைந்த விலைக்கு உபகரணங்கள் வாங்கப்பட்டு திட்டங்களுக்காக வழங்கப்படுகின்றன. நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்வது பிரதேசங்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றது. ஆரம்ப நடவடிக்கைகளுக்காக மக்கள் பிரதிநிதிகள் பங்குபெறுவதோடு நீர் ஆதாரங்களை தெரிவு செய்தல், குழாய்நீர் தடத்தை திட்டமிடல். தடாகங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு அவர்களின் கருத்துகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

இலங்கைக்கும் அது சிறந்த எடுத்துக்காட்டாக அமையலாம். அபிவிருத்தித் திட்டம் ஒன்றை திட்டமிடும்போது பல தரப்பாரும் கருத்துத் தெரிவிப்பார்கள். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பிரதேச வாசிகள் மாத்திரமன்றி மதத்தலைவர்கள் கூட ஒவ்வொருவிதமான கருத்துகளைக் கொண்டு செயற்படுவார்கள். அண்மைக்காலங்களில் இலங்கையில் அபிவிருத்திக்காக முன்வைக்கப்பட்ட திட்டங்கள் உக்கிரமான விவாதங்களுக்கு உட்பட்டதோடு இறுதியில் பாரிய எதிர்ப்புடன் முடிவடைந்தன.

துறைமுக நகரம், மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், துறைமுக அபிவிருத்தி, அதிவேகப் பாதை மற்றும் விமான நிலையங்கள் போன்ற பாரிய திட்டங்களை தயாரித்தல் தொடக்கம் முடிவுக்கு வரும் தினம் வரை தாமதமாதல் பெரும் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தியாவின் நீர் வழங்கல் திட்டங்களின் புதிய தகவல்கள் இணையதள மூலமாக புதுப்பிக்கப்படுகின்றன. பாவனையாளர்கள் நீரைப் பயன்படுத்தும் அளவு மாத்திரமல்ல நீர் மாதிரியின் தரமும் அளக்கப்படுகின்றது. அவற்றின் முடிவுகள் கூட வெளிப்படையாக காணப்படுகின்றன. ஆதார் கார்ட் முறையின் கீழ் நீர்க்கட்டணத்திற்காக சலுகைகள் பெரும் முறையும் உண்டு. சலுகைகள் கிடைக்கும் வீடுகள் பற்றிய தகவல்களின்படி, அறவிடப்படும் வரி இறுதியில் சலுகையாக கிடைக்கும் மக்களை சரியாக அறிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.

2019ஆம் ஆண்டு ஜலஜீவன் திட்டத்தை அறிமுகப்படுத்திய வேளையில் இந்தியாவில் 300 இலட்சம் வீடுகளுக்கு குழாய்நீர் வழங்கப்பட்டிருந்தது. தற்போது 1100 இலட்சம் வீடுகளுக்கு தூய்மையானநீர் குழாய் மூலம் வழங்கப்படுகிறது. பாடசாலைகள் உள்ளிட்ட பொதுஇடங்கள் பாரியளவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நீர் விநியோகத் திட்டங்களின்படி குறைந்தபட்சம் 60,000 கிராமங்கள் நன்மை அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசுத்தநீரை பயன்படுத்துவதால் சுகாதார சீர்கேடுகளை அனுபவித்து வந்த இந்தியா இன்று நீர் பயன்பாடு தொடர்பில் புதிய கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நீர்த்தட்டுப்பாட்டிற்கு உள்ளாக நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நாடு திட்டமிட்ட முறையில் பயணம் செய்வதால் வெற்றியை நோக்கி நடைபோடுகின்றது.

சர்வதேச சமூகம் நீர்ப்பாவனை குறித்து பாரியளவில் கவனம் செலுத்தி வருகின்றது. இரண்டு பில்லியன் அளவிலான மக்களுக்கு எப்போதும் தூயநீர் கிடைப்பதில்லை என்பதோடு அதிகளவானோர் நீரைத் தேடி அரை மணித்தியாலயமாவது பயணம் செய்வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. தினந்தோறும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்கள் நூற்றுக்கு 15 வீதமானோர் அசுத்த நீர்பாவனை காரணமாக பாதிக்கப்பட்டவர்களாவர். வருடத்திற்கு 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் அசுத்த குடிநீரால் ஏற்படும் நோயினால் மரணமடைகின்றார்கள்.

இலங்கை நீர்ப்பற்றாக்குறை உள்ள நாடல்ல. ஆனால் அதிகமானோர் நீர் ஆதாரங்களுடனான தொடர்பால் சிரமத்துக்குள்ளாகிறார்கள். தூயநீர் கிடைக்காததால் சிறுநீரக நோய் பரவி வருகின்றது. விசேட வைத்தியசாலைகள் கூட அதற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன. திட்டமிட்ட நீர் பயன்பாடு மற்றும் சரியான தேவைகளை அறிந்து மக்களுக்கு நீரை வழங்குதல் பெரும் பொறுப்பாகும். ஜலஜீவன் திட்டத்தின்படி இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் செயற்படும் விதம் பற்றி மக்கள் நன்குணர்ந்துள்ளார்கள். தூரநோக்கற்ற முடிவுகள் மற்றும் ஊழல், மோசடிகள் குறித்து பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்னொரு புறம் கணக்காய்வு அறிக்கைகள் மூலமும் தெரியவருகின்றது. இந்த விடயங்களை ஆழமாக ஆராய்ந்து சமூகத்தில் கிடைக்கும் பதில்களுக்கு அமைய வெளிப்படையான முறைகளை தயாரிக்க முடியும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# கற்பிட்டி, கண்டல்குழி கடலில் கரையொதுங்கும் டொல்பின்கள்

## 15 இல் மூன்று டொல்பின்கள் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி கண்டல்குழி குடாவ பகுதி கடற்கரையோரத்தில் டொல்பின்கள் நேற்றிரவு முதல் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

வழமைக்கு மாற்றமாக டொல்பின் ஒன்று கரையொதுங்கியதை அவதானித்த மீனவர் ஒருவர், இதுபற்றி ஏனைய மீனவர்களுக்கு தெரியப்படுத்தி , கடற்படையினருக்கும் அறிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் , கடற்படையினர் மற்றும் பொலிஸார் நேற்றுக்காலை அவ்விடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

இதன்போது, அங்கு 15 இற்கும் மேற்பட்ட டொல்பின்கள் கரையொதுங்கியிருந்தன.

கரையொதுங்கிய டொல்பின் மீன்களை மீண்டும் கடலுக்குள் அனுப்ப மீனவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் கடற்படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய டொல்பின்களில் மூன்று டொல்பின்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கரையொதுங்கிய டொல்பின் மீன்களை பார்வையிடுவதற்காக கற்பிட்டி உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் கண்டல்குழி குடாவ பகுதியை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கடலுக்குள் இருக்கும் டொல்பின்கள், கரையை நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, உயிரிழந்த டொல்பின்களை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க கால அவகாசம்

## பாதுகாப்பு அமைச்சு விசேட அறிவிப்பு

**ஸாதிக் ஷிஹான்**



பாதுகாப்பு அமைச்சின் எழுத்துமூல அனுமதிப்பத்திரமின்றி வைத்துள்ள சகலவிதமான சட்டவிரோத ஆயுதங்களையும் அரசிடம் ஒப்படைக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி (06) தொடக்கம் மார்ச் மாதம் (15) வரையிலான காலப்பகுதியில் இவற்றை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதிய 2318/02 என்ற இலக்கம் விஷேட வர்த்தமானிக்கு அமைவாவே, இந்தக் கால அவகாசத்தை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே, சட்டவிரோத ஆயுதங்களை பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலைகளில் ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

இக்காலப்பகுதிக்குள், ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு எதிராக, எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலக்கெடு முடிந்ததும், சட்டவிரோத ஆயுதங்களை பறிமுதல் செய்யவும், இந்நபர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் (சிவில் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு) டி. எம். சமன் திசாநாயக்கவை 0112335792 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு, இது தொடர்பான மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# விபத்தில் படுகாயமடைந்த யாழ். மாநகரசபை உறுப்பினர் றெமீடியஸ் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில், படுகாயமடைந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி மு.றெமீடியஸ் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் (08) புதன் கிழமை இவர்,பயணித்த போது, வீதியின் குறுக்கே சென்ற நாயில் மோதி இவ்விபத்து நிகழ்ந்தது.

இதில், இவரணிந்திருந்த தலைக் கவசம் கழன்றதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், நேற்று (11) சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

# வலம்புரி சங்கொன்றுடன் இருவர் ஹற்றனில் கைது

## ரூ.06 கோடிக்கு விற்க முயன்றபோது சம்பவம்

**ஹற்றன் விசேட நிருபர்**



வலம்புரி சங்கொன்றை ஆறு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு முயன்ற இருவரை,விஷேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்ரதன் பகுதியில் சுருவத்துக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் வைத்தே (10) இவர்கள் கைதாகினர்.

நுவரெலியா அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலால்,நேற்று முன்தினம் இரவு இவ்வீடு சோதனை செய்யப்பட்டது. இதன் போது அரிசிப் பாதிரமொன்றில் இந்த வலம்புரிச்சங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

இதில்,கைதான இருவரும் ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வலம்புரி சங்கை ஆறு கோடி ரூபாவுக்கு இவர்கள் விற்பனை செய்யவிருந்ததாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வலம்புரி சங்கு மற்றும் சந்தேக நபர்கள் நேற்று (11) சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பலாலி விமான நிலையத்தில்...

பயணி ஒருவருடன் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தார். நிகழ்வில் வடபிராந்திய சுங்கத் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர், யாழ். பலாலி விமான நிலையத்தின் பணிப்பாளர் மற்றும்உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். விரைவில் சென்னை பலாலிக்கிடையிலான விமான சேவை அதிகரிக்கப்படவுள்ளதாக, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திர சிறீ தெரிவித்தார்.

## அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாடு...

அரச ஊழியர்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தாத தேர்தலை நடத்துவது சம்பந்தமாக முறையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவாவுக்கு தேர்தல் கண்காணிப்புக்கான தேசிய மத்திய நிலையம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

மேற்படி மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.பி ஹேரத்தின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அரச நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சூழல், தேர்தலுக்கு மிகவும் பொருத்தமில்லாதது.

நிதி கையிருப்பில் உள்ளபோது நிதியமைச்சின் செயலாளரோ அல்லது வேறு எந்த செயலாளரோ நிதி இல்லை என்று சொல்வதை எண்ணிப் பார்க்க முடியாது.

எவ்வாறாயினும், நிதி இல்லை என்பதை நிதியமைச்சின் செயலாளர் நீதிமன்றத்திற்கு சத்தியக் கடதாசி மூலம் அறிவித்துள்ளார்.

அவ்வாறிருக்கையில் கோரப்பட்டுள்ள நிதி கிடைக்கும் என்பதாக நம்ப முடியுமா? என்றும் அதில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## உயிராபத்தை ஏற்படுத்தும் பாதுகாப்பற்ற...

உலக நாடுகள் பாவனையிலிருந்து மீள உள்பவாங்கியுள்ள நிலையில், இலங்கையில் இவ்வகையான வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாயு பலூன் செயற்பாடு உள்ளிட்ட பாதுகாப்பற்ற காரணங்களுக்காகவே,இவை,மீள உள்வாங்கப்படுகி ன்றன.எனினும்,

வாயு பலூன் செயற்பாட்டினால் சாரதிக்கு உயிராபத்து விளைவிக்கக் கூடிய மோட்டார் வாகனங்கள் உள்ளிட்ட சுப்பர் ஜீப் வாகனங்கள் நாட்டின் வீதிகளில் ஓடுகின்ற மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உற்பத்திக் கோளாறுகள் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளில், இவ்வாகனங்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்யும் முகவர் நிறுவனங்கள் மூலம், இதுபோன்ற அபாயம் மிக்க வாகனங்களின் உரிமையாளர்களின் விபரங்களை மேற்படி திணைக்களம் பெறவுள்ளது.விபரங்கள் பெறப்பட்டதும், இவ்வாகனங்களை

மீளப்பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உயிர் காப்பு வாயு பலூன் எச்சரிக்கை மிகுந்த வாகனங்களை செலுத்துதல் பெரும் ஆபத்தானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ரி. எம்.எஸ். கே தென்னகோன் அது தொடர்பில் தெரிவிக்கையில்:

மீளப் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி, ஊடகங்கள் ஊடாக விரைவாக மக்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## துருக்கிக்கு சிலோன் டீயை...

இலங்கை நன்கொடையாக வழங்கியுள்ளது. கொழும்பிலுள்ள துருக்கி தூதரகத்தில் வெளியுறவு அமைச்சின் அவசரகால பதிலளிப்பு பணிப்பாளர் நாயகம் ஓ.எல். அமீர் அஜ்வாத், இந்த சிலோன் டீயை,துருக்கித் தூதுவரிடம் ஒப்படைத்தார். இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்களின் ஆதரவுடன் பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இந்த நன்கொடை வழங்கப்பட்டதாக வெ ளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## பலியானோர் எண்ணிக்கை...

அந்த நாடுகள் அறிவித்துள்ளன. திங்கட்கிழமை (06) அதிகாலை இந்த பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. பலரும் உறங்கி கொண்டிருந்த நேரத்தில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதால், அதிகளவில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

துருக்கி காசியான்டெப் மாகாணத்திலுள்ள நூர்டகிக்கு கிழக்கே, 23 கி.மீ. தொலைவில் 24.1 கி.மீ. ஆழத்தில் 7.8 ரிக்டர் அளவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டது.இதையடுத்து

துருக்கி, சிரியாவின் எல்லை நகரங்களில் கட்டிடங்கள் குலுங்கி, வீழ்ந்தன.

இஸ்ரேல், லெபனான், எகிப்தின் தலைநகர் கெய்ரோ நகரம் உள்ளிட்ட அயல் நாடுகளிலும் உணரப்பட்டது.

இந்நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இரு நாடுகளிலும் மொத்தம் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலி எண்ணிக்கைகள் மேலும் உயருமென அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்டு 04 நாட்கள் ஆன நிலையில், தெற்கு துருக்கி மற்றும் வடமேற்கு சிரியாவில் மொத்த உயிரிழப்பு 24 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக, சிட்னி மார்னிங் ஹெரால்டு என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில், குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் என சகலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகள் தொடர்கின்றன.

## வீதியோரத்தில் காய்கறிகள் விற்ற...

நீக்கப்பட்டுள்ளார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் கண்டிப்பான உத்தரவின் பிரகாரமே, மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதற்காக

பாதிக்கப்பட்ட பெண்ணிடம் எழுத்துமூலம் மன்னிப்பு கோருவதற்கும், மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட ராகலை, ஹைபோரஸ்ட் பகுதியின் பிரதான வீதியின் ஓரத்தில்,பெண்ணொருவர் மரக்கறி வகைகளை விற்பனை செய்து வந்துள்ளார்.

அவ்விடத்துக்கு வந்த மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகி, அவ்விடத்தில் மரக்கறி விற்பனை செய்ய வேண்டாமென அப்பெண்ணை கடும் தொனியில் மிரட்டி – காய்கறிகளை காலால் உதைத்து அடாவடியில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பான காணொளியும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற பின்னர், மத்துரட்ட பிளான்டேசனுக்கு உடன் அழைப்பை ஏற்படுத்திய அமைச்சர் ஜீவன் தொண்டமான், அந்த நிர்வாகியின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அவரை உடன் நீக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.

இதனை ஏற்ற பெருந்தோட்ட யாக்கம், அதிகாரியை உடனடியாக பணி நீக்கம் செய்தது.

## முறைகேடுகளை, உடனடியாக விசாரிக்க...

அதே நிறுவனம், மேலும் பல நிறுவனங்களுக்கு துணை ஒப்பந்தங்களையும் வழங்கியிருந்தது.

துணை ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனங்கள், ரயில்வே திணைக்களத்தில் பணிபுரியும் சில அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட உபகரணங்களும் காணாமலாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்தே இந்த முறைகேடுகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு...

தொலைக்காட்சி நாடக சிறந்த நடிகர் மற்றும் நடிகைக்கான விருதுகள் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பான நாடகங்களுக்கே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமதி விருது வழங்கும் இவ்விழா இலங்கைக்கான கொரிய தூதுவர் சந்தோஷ் வுன் ஜிங் ஜியோங்கேவின் தலைமையில் பத்தரமுல்லையில் நடைபெற்றது.

வாழ்நாளில் ஒரு தடவையே வழங்கப்படும் யூ. டபிள்யூ. சுமதி பால விருது, இம்முறை கலைஞர் சனத் குணதிலக்க மற்றும் பாடகி இந்திராணி பெரேராவுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சுமதி விருது ஆரம்பகர்த்தா திலங்க சுமதி பால உள்ளிட்ட கலைஞர்கள் பலரும் இவ்விருது விழாவில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலக சைவப் பேரவையின்...

இலங்கைக் கிளையினரால் சைவக்கொடி தினம் அனுஷ்டிக்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சைவ சமய மக்கள் பரந்து வாழும் கொழும்பு, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களிலு ள்ள ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறி ப்பாடசாலைகளில் இக்கொடி தின வைபவம் இடம்பெறும்.

மாவட்டங்களில் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதி, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், சைவ மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்தப்பட உள்ளது. உலக சைவப்

## எங்கள் கருத்து

# விமர்சனத்தினால் பயனில்லை, தீர்வுகளே நாட்டுக்குத் தேவை!

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்விதத்திலும் பொறுப்புதாரி அல்லர். கடந்த அரசாங்க காலத்தில் நலிவுற்றுப் போன பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அரசியல் தலைவர் எவரும் இல்லாததொரு நிலைமையிலேயே நாட்டின் தலைமைப் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏகோபித்ததாக அவரைத் தெரிவு செய்தனர்.

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதையடுத்தே பொருளாதார நெருக்கடியின் விளைவான அவலங்கள் படிப்படியாக நீங்கத் தொடங்கின. பொருளாதார மீளெழுச்சியின் பலன்களை ஆங்காங்கே காணவும் முடிகின்றது. புதிய வருடத்தின் இறுதிப் பகுதியில் பொருளாதார மீளெழுச்சியை தெளிவாகக் காண முடியுமென்று பொருளாதார நிபுணர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற பொருளாதாரத்தை முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதென்பது ஓரிரு நாட்களுக்குள் சாத்தியமாகக் கூடிய மாயவித்தையல்ல. அவ்வாறு சாத்தியமென்று எதிரணியினர் கூறுவார்களேயானால் அது அரசியலுக்கான போலி வார்த்தையென்றே கொள்ள முடியும்.

நாட்டின் பொருளாதாரம் எவ்வாறான நிலையில் வீழ்ந்து கிடக்கின்றதென்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் அக்கிராசன உரையின் போது விபரமாகக் கூறியிருந்தார். அவர் கூறியிருந்த அத்தனையுமே உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஆகும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், பொருளாதாரத்தைச் சீர்செய்யும் ஆலோசனை எதனையுமே முன்வைக்காமல் விமர்சனத்தை மாத்திரமே எதிரணியினர் முன்வைத்து அவதூறு அரசியல் நடத்தி வருவதையே காண முடிகின்றது. அவர்களது உள்நோக்கம் எதுவென்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல!

## வடபகுதி அபிவிருத்தியில்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வடமாகாண பிரச்சினைகள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் (10) நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலில் வடமாகாண அரசியல் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி மேலும் கூறியதாவது

நல்லிணக்க வேலைத்திட்டத்தின் கீழ், அதிகூடிய அதிகாரத்தை பகிர்வது குறித்தும் வடக்கு பிரதேசத்தின் அரசியல் விவகாரங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. பெப்ரவரி 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையிலும் உண்மைகளை தெளிவுபடுத்தியுள்ளேன். இன்று நான் அதைப் பற்றி பேசப் போவதில்லை.

பொருளாதார அபிவிருத்தியுடன் வடமாகாணத்திலும் பாரிய அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென நான் நம்புகிறேன். யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் முற்றாக அழிந்தது. எதிர்பார்க்கப்பட்ட நிலை இன்னமும் எட்டப்படவில்லை. எனவே, நாட்டை அந்நிலைக்கு கொண்டு வருவதற்காக 10 வருடத் திட்டத்தின் கீழ் செயல்பட எதிர்பார்க்கிறோம்.

இதற்கு வெளிநாட்டு உதவிகள் மட்டுமன்றி புலம்பெயர் அமைப்புகளின் உதவிகளையும் பெற வேண்டும்.

எனவே, இது தொடர்பில் உங்கள் கருத்துகளை அறியவும், அபிவிருத்திப் பணிகளுக்கு உங்கள் கருத்துகளைப் பெறவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். இந்த மாகாணத்தில் புதிய பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குவதற்கான உங்கள் யோசனைகளை எமக்கு வழங்குங்கள்.

பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்காகவே உரம் வழங்குவதற்கு முன்னுரிமை அளித்தோம். எதிர்காலத்தில் ஏனைய பயிர்களுக்கும் உரங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இங்கு கருத்து தெரிவித்த பெரும்பாலானோர் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றியே பேசினர். குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய பல பிரச்சினைகள் உள்ளன. எனினும், நாட்டின் தற்போதைய நிலைமையில் இந்த வருடம் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வது கடினமாக இருக்கும்.இருந்தாலும், எதிர்காலத்தில் அது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவோம்.

இன்றைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதாயின் ஒரு திட்டத்துக்கமைய செயற்படவேண்டும். வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வேண்டும். மேலும், எதிர்காலத்துக்காக இந்த ஆண்டு முதல் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட வேண்டும். அவற்றையும் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும் அந்நியச் செலாவணி கையிருப்பு மேலதிகமாக இருக்க வேண்டும்.

எனவே, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மற்றும் போட்டித்தன்மையுள்ள பொருளாதாரம் என்பவற்றை நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதற்காக சில முக்கிய மாகாணங்கள் சிலவற்றை தெரிவு செய்துள்ளோம். அதில் ஒன்று வட மாகாணம். அந்த வேலைத்திட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால், வடமாகாணத்தின் பொருளாதாரம் பாரியளவில் முன்னே றும்.

அதன்படி வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாயத்தை நவீனமயப்படுத்துவதே எமது முதல் முயற்சியாகும். கிளிநொச்சியிலிருந்து குமண மற்றும் அங்கிருந்து உடவளவை வரை மேற்கொள்ளப்படும் நெற்பயிர்ச்செய்கை மூலம் ஒரு ஏக்கருக்கு 06, 07 மெற்றிக் தொன் அறுவடையைப் பெறுவது எமது எதிர்பார்ப்பாகும். இதன் காரணமாக அப்பகுதிகளில் நெல் உற்பத்தி அதிகரிக்கும் போது ஏனைய பகுதிகளிலுள்ள காணிகள் வேறு முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட முடியும்.

மீன்பிடித் தொழிலை வணிக ரீதியாக இலாபகரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். பாரம்பரிய மீன்பிடி தொழில் மட்டுமல்ல, இறால் வளர்ப்புக்கும் முன்னுரிமை அளித்துச் செயற்படலாம்.

இழுவை மடிவலை பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்துவோம். அதே போன்று வடக்கு நீர்ப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

மல்வத்து ஓயா மற்றும் யோத எல ஆகியவற்றை இணைத்து, நீர்ப்பாசன திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவும் ஏனைய ஆறுகளை பாதுகாக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று ஆனையிறவு கடல்நீரேரிக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கும், பூநகரி ஏரியை அபிவிருத்தி செய்வதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. குளங்களில் சூரியக் கலங்களைப் பொருத்தி மின்சாரம் பெறுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கான சாத்தியம் குறித்தும் ஆராயப்படுகிறது .

புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு கடற்கரை வரையான பிரதேசத்திலிருந்தும் அம்பாந்தோட்டை கடற்கரையில் இருந்தும் 3040 மெகாவோர்ட் மேலதிக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அது குறித்து ஆராய்ந்து வருகிறோம். எதிர்காலம் பசுமை அமோனியா மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில்தான் உள்ளது. இதில் பெரும்பாலானவை வடக்கு மாகாணத்தில் இருந்து கிடைக்கிறது. வடக்கின் பொருளாதாரத்தை முற்றாக மாற்றி பலமான பொருளாதாரமாக உருவாக்க முடியும்.

மேலும், மன்னாரிலிருந்து திருகோணமலை வரையிலான சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். சிறிய கப்பல் இந்த தீவுகளுக்குச் செல்கின்றன. சுற்றுலாப் பயணிகள் பாரம்பரிய இந்துக் கோயில்களுக்குச் செல்கின்றனர்.

மாங்குளம் பரந்தனில் கைத்தொழில் வலயங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றமையும் குறிப்பிடதக்கது. மேலும், இந்தப் பகுதிக்கு மற்றொரு அரசு சாரா பல்கலைக்கழகத்தை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இப்பகுதிக்கு தொழில்நுட்ப நிறுவனங்களை கொண்டு வருவதன் மூலம், அறிவு சார் தொழில்நுட்ப பகுதியாக இதை மாற்ற முடியும். மேலும் பூநகரியை புதிய நகரமாக மாற்றுவதே எங்கள் திட்டம். இந்த அனைத்து செயற்பாடுகளின் ஊடாகவும் வடக்கின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதே எனது எதிர்பார்ப்பாகும்.

அத்துடன் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளை இந்தியாவின் உதவியுடன் நடைமுறைப்படுத்த வேண்டும். அது வடமாகாணத்தின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் விடயமாகும். யுத்தத்துக்கு முன்னர் வட மாகாணம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பரந்த பங்களிப்பை வழங்கியது. அரசாங்கம் என்ற வகையில், அந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்தி துரிதமாக அதனை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம்.

நல்லிணக்கத்தினால் மட்டும் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது. நாட்டில் வறுமை ஒழிக்கப்பட்டு இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டும். இல்லையெனில் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காது.

மேலும், இந்த மாகாணத்தில் இருந்து போதைப்பொருளை ஒழிக்க வேண்டும். கீழ் மட்டத்தில் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து அனைவரும் இணைந்து ஆராய்வது அவசியம்.

இதை அரசாங்கத்தினால் மட்டும் செய்ய முடியாது. நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நாங்கள் ஆதரவை வழங்குவோம், அதன்படி மக்கள் தமது பகுதிக்கான அபிவிருத்தியை பொறுப்பேற்று அரச ஆதரவுடன் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாகாணமும் தத்தமது மாகாணத்தின் அபிவிருத்தியை பொறுப்பேற்க வேண்டும். 09 மாகாணங்களுக்கு இடையில் போட்டி நடத்துவோம்.

அந்த போட்டியின் மூலம் நாடு அபிவிருத்தி அடையும் என்றார்.



# உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான காலம் கனிந்திருக்கிறது

## இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கனடாவிலிருந்து
இனியவன் இசாறுத்தீன்



**கடந்த இரண்டு வருடங்களாக நிதி அமைச்சர் – நீதி அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் என்று அடிக்கடி அதிகம் பேசப்பட்டவர். இன்றைய இலங்கை அரசியலில் ஒரு தவிர்க்கமுடியாத இளம் ஆளுமையாக இருப்பவர். சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் வழக்கறிஞர் அலி சப்ரியுடன் தொடர்புகொண்டபோது பிறந்தது இந்த நேர்காணல்.**

**அமைச்சரே! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?**

நான் நலமாய் இருக்கிறேன். முதலாவதாக என்னோடு கதைப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தைத் தந்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**இலங்கையில் வெளிவிவகார அமைச்சராக இருக்கும் நீங்கள் இதற்கு முன் மூன்று அமைச்சுப் பதவிகளை வகித்தவர் என்ற வகையில் உங்களுடைய பார்வை எப்படியாக இருக்கிறது? அலி சப்ரி என்பவர் யார்?**

அலி சப்ரி என்றால் அவரொரு இலங்கைப் பிரஜை. நீதித்துறையில் ஒரு வழக்கறிஞர். எல்லா இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையை உண்டாக்க வேண்டும் என்று கனவு காணும் மனிதர். அப்படித்தான் என்னைப் பார்க்கிறேன்.

**உங்கள் கனவு எப்படிப்பட்டது?**

இலங்கை மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும். அதற்காக நாம் பாடுபடவேண்டும் என்று நினைக்கிறேன்.

**உங்கள் கனவைப் போலவே எங்கள் கனவும் இருக்கிறது. ஆனால் உங்கள் அரசியல் பிரவேசம் எப்படியானது?**

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க எல்லா இனங்களையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும். அதற்குமுன் தமிழ், முஸ்லிம்களோடு மட்டுமல்லாமல் சிங்கள மக்களோடும் பேச வேண்டும். எல்லோரும் ஒன்றாய் பேசிய பின்னரே தீர்வு காண வேண்டும். இதற்காகத்தான் நான் அரசியலுக்கே வந்தேன்.

**நீண்டகால இலங்கை அரசியலை உற்றுநோக்கிக் கொண்டிருப்பவர் என்ற வகையில் இலங்கையில் என்னதான் பிரச்சினை இருக்கிறது? அந்தப் பிரச்சினைகளை நீங்கள் எப்படிப் புரிந்து வைத்திருக்கிறீர்கள்?**

பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவது இனவாத அரசியல்வாதிகள், இனங்களின் ஒற்றுமையை இல்லாமல் செய்திருக்கிறார்கள். இரண்டாவது, நீண்ட காலமாக நாட்டின் பொருளாதாரத்தை பிழையான முறையில் நிர்வகித்திருக்கிறார்கள். மூன்றாவது, இலங்கையின் கல்வித்தரம் நவீனப்படுத்தப்படவில்லை: நீங்கள் இருக்கும் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, அது இன்னும் உயர்த்தப்பட வேண்டி இருக்கிறது.

**வடக்கு, கிழக்கில் வாழுகிற தமிழ், மலையக, முஸ்லிம் மக்கள், என்ற சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொண்ட நீண்ட காலப்பிரச்சினை அண்மைக்காலமாக பெரும்பான்மைச் சமூகமும் அரசாங்கத்தோடு கொண்டுள்ள முரண்பட்ட நிலை ஒரு பிரச்சினையாக மாறியிருக்கிறதே?**

ஆம். இலங்கையில் சில அரசியல்வாதிகள் இனவாதத்தை தூண்டி விடுகின்ற காரணத்தால் இன ஒற்றுமை குலைந்திருக்கின்றது. ஆனால் அந்த நிலை கொஞ்சம் மாறியிருக்கிறது. தற்போதுள்ள இன ஒற்றுமையை இன்னும் வளர்க்க வேண்டும். இலங்கையர் என்ற ஒரு தேசிய அடையாளத்தை எப்படியும் மேம்படுத்த வேண்டும். உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி தொடர்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. மக்களுக்கான அரச சேவையை அரசியலாக்கி விட்டிருக்கிறார்கள், சிவில் நிர்வாக சேவைக்குத் தேவையான அதிகாரத்தைக் கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள். இவற்றை நேர்த்தியாக, சரியாக மாற்றியமைக்க வேண்டும். இதற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இவற்றைத் தீர்ப்பது சவாலானது.

**சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, உங்கள் அரசாங்கம் எதை முன்வைக்கப் போகிறது? இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் ஆலோசிப்பதற்கு உங்களையும் உள்ளடக்கிய ஒரு குழு உருவாக்கப்பட்டிருக்கிறது, அந்த குழுவின் பிரதான நோக்கம் என்ன? அது எப்படியான பிரச்சினைகளை அடையாளம் காண்கிறது? எப்படியான தீர்வை வழங்கி வைக்கப் போகிறது?**

இலங்கை யுத்தத்தில் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக அதாவது தமிழ், முஸ்லிம். சிங்கள மக்கள் மற்றும் அரசபடைகள் என எல்லோருடனும் கலந்தாலோசித்து தெற்கு மக்களையும் சேர்த்துக்கொண்டே பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் பற்றிப் பேச வேண்டும். அரசியல் தீர்வைக் காண வேண்டும். அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதைப் பற்றியும் ஆலோசிக்கிறோம். உண்மை கண்டறிவதற்கான பொறிமுறையை உண்டாக்கும் பணியையே இப்போது செய்துகொண்டிருக்கிறோம். இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் "இந்த பிரச்சினையை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கக் கூடாது, எப்படியாவது இதை அவசரமாகத் தீர்த்துவைக்க வேண்டும்" என்று என்னிடம் பலமுறை நேரடியாகப் பேசியிருக்கிறார். அதற்கேற்ப எல்லா நடவடிக்கையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**இலங்கையில் யுத்தம் முடிந்து 13 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில் ஏன் அதிகார பகிர்வு அல்லது அரசியல் தீர்வு இன்னமும் சாத்தியப்படவில்லை? இதற்கு என்ன பிரதான காரணம்? இதை உங்கள் அரசாங்கம் எப்படிக் கையாளப்போகிறது?**

ஒவ்வொருவரும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்த நிலமை மாறியிருக்கிறது. இப்போது இனவாதம் பேசுவதில்லை. ஒரு விடயத்துக்கு ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வரும்போது சில அரசியல்வாதிகள் அங்கு இனவாதத்தையே பேசுவார்கள். அதுதான் இதற்குக் காரணம். அதுதான் நடந்தது. இப்போதெல்லாம் எவரும் இனவாதம் பேசுவதாகத் தெரியவில்லை. எல்லோரும் நல்லிணக்கம் பற்றியே பேசுகிறார்கள். இது ஒரு சவாலாய்த்தான் இருக்கிறது. இது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கிறது.

**இந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கியமானது. இதை எல்லா நாடுகளிலும் பேசுகிறார்கள். கனடாவிலும் கூட பழங்குடி மக்களுக்கு நிகழ்ந்த அநீதி பற்றிப்பேசும்போது நல்லிணக்கம் அதிகம் பேசப்பட்டது. ஆனால் தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நல்லிணக்கம், -பொறுப்புக் கூறல், போதுமானதாக அல்லது திருப்தியான முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டே தமிழர் தரப்பிடம் இருக்கிறது. நேர்மையான, திருப்தியான, உறுதியான புதிய அணுகுமுறையை எப்படிப் பலப்படுத்த முடியும்?**

யாழ்ப்பாணத்தில் அரச புனர்வாழ்வு அலுவலகம் உள்ளது. அது பல சேவைகளைச் செய்துள்ளது. சென்ற ஜனவரியில் நான் அங்கே சென்று அதனூடாக 1000 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 100 மில்லியன் ரூபாய் நஷ்டஈடு கொடுத்தேன். இது மட்டும் போதாது. ஆனாலும் அந்த பொறிமுறையைப் பலப்படுத்த வேண்டும் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இலங்கையில் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உண்டாக்குவதற்குரிய காலம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இலங்கை வரலாற்றில் யுத்தம் என்பது ஓர் இருண்ட யுகம். அதில் தமிழர் மட்டுமல்ல எல்லோருமே கஷ்டப்பட்டார்கள், நஷ்டப்பட்டார்கள். இலங்கைப் படையினர் 26000 பேர் தமது உயிரைத் தியாகம் செய்தனர். 1184 இந்தியப் படையினர் பலியாகினர். இன்னும் ஆயிரக் கணக்கான சிங்கள தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் பலியாகினர். பாதிக்கப்பட்டனர். இவை வெளிவருவதற்கான ஒரு களம் இனி வர வேண்டும். கொலம்பியா, தென் ஆபிரிக்கா, ஆர்ஜன்டினா, கொரியா, பெரு போன்ற நாடுகளில் எப்படி வெற்றியளித்ததோ அப்படி ஒரு முறையை இங்கு காண்பதற்கான காலம் வந்திருக்கிறது என்றுதான் நினைக்கிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பதைக் கண்டறியவும் ஒரு நம்பகமான ஒரு திட்டத்தை உருவாக்க உள்ளோம். தென்னாபிரிக்க தூதுவரிடமும் நான் பேசியிருக்கிறேன். இதற்கு அரசியல் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. இனியும் அப்படியான சம்பவங்கள் நிகழக் கூடாது. இதற்கு எல்லா தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும். இதை கவனமாகச் செய்ய வேண்டும்.

**இலங்கையில் நல்லிணக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது கூட தமிழர் காணி அபகரிப்பு நிகழ்கின்றது. கைது செய்யப்படுகிறார்கள், தடுத்து வைக்கப்பட்டார்கள் இன்னமும் காலம் காலமாய் சிறையில் இருக்கிறார்கள். அவற்றை ஏன் நிறுத்தக் கூடாது. எதற்காக அரசாங்கம் இவற்றை அனுமதித்துக்கொண்டிருக்கிறது?**

இப்படிப் பல சம்பவங்கள் நிகழத்தான் செய்கின்றன. ஆனால் வடக்கு கிழக்கில் இது சம்பந்தமாகப் பல நல்ல விடயங்களும் நடக்கின்றன. காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில சில சம்பவங்கள் நடந்தாலும் எல்லாவற்றுக்கும் ஏற்ற நல்ல தீர்வு விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்வுபூர்வமாக மிக ஆர்வத்தோடு சிறுபான்மை மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இப்போது முயற்சி செய்து கொண்டிருக்கிறார். நானும் அவரோடு சேர்ந்து அதற்காக மிக நெருக்கமாக வேலை செய்துகொண்டிருக்கிறேன். இதுவே உண்மை.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# சிதறிக் கிடக்கும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள்

## அத்தனை தரப்புகளும் பழைய, உழுத்துப் போன அரசியலையே கொண்டுள்ளன

கருணாகரன்

தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் உடைந்து பல துண்டுகளாகச் சிதறிக் கிடப்பதையிட்டு போராளி ஒருவர் கவலையோடு சில விடயங்களைப் பேசினார். கூடவே சில கேள்விகளையும் எழுப்பினார். அவர் எழுப்பிய கேள்விகள் இதுதான்.

1. தற்போது மேலும் பல துண்டுகளாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடைந்துள்ளது. அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியேறி உள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் பல அணிகள் போட்டியிடுகின்றன. இது தமிழரின் அரசியலை பலவீனப்படுத்தும் நடவடிக்கையல்லவா?

2. இப்படிப் பிரிந்தும் உடைந்தும் பல அணிகளாக நிற்பது தவறானது. இந்த நிலையானது ஒடுக்குகின்ற மேலாதிக்கவாதிகளுக்கு வாய்ப்பாகும். ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள மக்களுக்கு பாதகமாகும் என்பதைத் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர், புலம்பெயர் நாடுகளில் உள்ளோர் போன்றோர் ஏன் கண்டிக்கவில்லை?

3. இப்படி உடைந்தும் பிரிந்தும் நிற்கும் சக்திகளையும் கட்சிகளையும் ஏன் ஓரணிக்குள் கொண்டு வருவதைப்பற்றி யாரும் சிந்திக்காமல் உள்ளனர்? அப்படி யராவது சிந்தித்திருந்தால் அவர்கள் எடுத்த முயற்சிகள் என்ன?

4. மூத்த அரசியல் தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா, விக்கினேஸ்வரன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா தொடக்கம் அடுத்த நிலையில் உள்ள தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோருடன் இதைக்குறித்து – இந்த அவல நிலையைக் குறித்து யாராவது முறையாகப் பேசியுள்ளனரா?

5. இந்தத் தலைவர்கள் தமிழ் மக்களுடைய விடுதலையைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் எவ்வாறு சிந்திக்கின்றனர்?

6. கடந்த காலத்தில் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றி தீவிரமாக வலியுறுத்திக் கொண்டிருந்தவர்கள், நிகழ்காலத்தில் அந்த ஒற்றுமையைச் சிதைப்பவர்களாகவே உள்ளனர்? இதற்கான காரணங்களை இவர்கள் விளக்குவார்களா? அல்லது இவர்களை ஆதரிப்போர் இதற்கான காரணங்களைச் சொல்வார்களா? அல்லது இதைப்பற்றித் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர், புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் விளக்கமளிப்பார்களா?

7. இதைக்குறித்து – இந்தச் சீரழிவு நிலையைக் குறித்து தமிழ் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் நிலைப்பாடு என்ன? பதில் என்ன?

8. இந்த நிலை தொடருமானால் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம் எப்படி அமையும்?


9. அல்லது இப்படிப் பிரிந்து நிற்கும் அணிகளில் எந்த அணி சரியானது? எது உண்மையானது? எது மெய்யாகவே தமிழ் மக்களுடைய அரசியலைச் சரியான திசையில், சரியான முறையில் கொண்டு செல்கிறது என்பதையாவது இவர்கள் மக்களுக்குத் தெரிவிக்கலாம் அல்லவா?

10. அப்படியில்லை என்றால் இந்த அரசியற் கட்சிகளின் சீரழிவுக்கு நிகராகவே இந்தத் தரப்பினரும் உள்ளனர். இவர்களும் வேடிக்கை பார்க்கின்றனர். தங்களால் எதையும் செய்ய முடியாது என்ற கையறு நிலையில் உள்ளனர் என்றே அர்த்தமாகும் அல்லவா? இதை விட்டு விட்டு ஒவ்வொரு தரப்பைப் பற்றியும் விமர்சிப்பதில் என்ன பயன்? என்று கேட்கிறார் நண்பர்.









தமிழ் மக்களின் நிலையையும் அவர்களுடைய அரசியலையும் ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு இந்தக் கேள்விகளின் நியாயமும் அதற்கான அடிப்படையும் புரியும். அவர்களுக்கு இந்த நிலை கவலையையே அளிக்கும். காரணம், அந்தளவுக்கு தமிழ்ச் சமூகம் தன்னுடைய அரசியலுக்காகவும் விடுதலைக்காகவும் இழப்புகளைச் சந்தித்திருக்கிறது. சக்திக்கு மீறிப் பெருந்தியாகங்களைச் செய்துள்ளது. இதற்கெல்லாம் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாகப் பெரும் பின்னடைவையே அது சந்தித்திருக்கிறது.

அதாவது வரலாற்றை முன்னகர்த்துவதற்குப் பதிலாக தமிழ்த் தேசிய அரசியற் சக்திகள் அதைப் பின்தள்ளியுள்ளன. மேலும் பின்தள்ளிக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவுக்கும் இந்தத் துயர வரலாற்றில், தியாக வரலாற்றில் இணைந்தும் விலகியும் பயணித்தவர்களே இன்று அரசியல் அரங்கில் இருப்பவர்கள். மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்றோர் நேரடியாகவே கடினமான அரசியற் பயணத்தின் வழியாக வந்தவர்கள். மேலும் சொன்னால், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் கூட நெருக்கடிகளின் வழியே அரசியலைத் தொடர்ந்தவர்கள். இவர்கள் கூட தங்களுடைய கடந்த காலத்தின் பெறுமதியைக் குறைக்கும் விதமாக நடந்து கொள்வது கவலை அளிக்கிறது.

அரசியலில் இதொன்றும் புதியதல்ல. வரலாறே இப்படித்தான் ஏற்ற இறக்கத்தோடு பயணித்திருக்கிறது என்று யாரும் சொல்லக் கூடும்.

இது தவிர்க்க முடியாத நிலை. இதை விட வேறு எதைச் செய்ய முடியும் என்று இவர்கள் கேட்கக் கூடும். அப்படிக் கேட்டால் – அல்லது அப்படிச் சொன்னால் இவர்கள் சூழ்நிலைக் கைதிகளாக உள்ளனர் என்றே அர்த்தமாகும். அரசியல் தலைவர்கள் ஒரு போதும் சூழ்நிலைக் கைதிகளாக இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவர்கள் தலைவர்களில்லை. சூழ்நிலையைச் சரியாகக் கையாளும் ஆளுமை உள்ளவர்களே தலைவர்களாகின்றனர். மற்றவர்கள் வரலாற்றைத் துயரக்குழிக்குள்ளேயே தள்ளி விடுகின்றனர்.

இன்றைய சீரழிவு அரசியலில் துணிவுடன் நிமிர்ந்து நிற்கக் கூடிய, தீர்மானங்களை உறுதியோடு எடுக்கக் கூடியவர்களே வெற்றியடைவர். மக்களுக்கான வெற்றியையும் விடுதலையையும் அவர்களால்தான் அளிக்க முடியும்.

இதற்கு சில விலைகளைக் கொடுக்க நேரிடும். இப்படித் துணிவுடன் நிற்கும் போது பல சவால்களைச் சந்திக்கவும் வேண்டியிருக்கும். ஆனால், அதைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்.

துயரம் என்னவென்றால், கடந்த காலத்தில் மிகச் சவாலான, உயிராபத்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கடந்து வந்தவர்கள், இன்று மிகச் சாதாரண அரசியல் நெருக்கடிகளைச் சந்திக்கவும் கடக்கவும் பயப்படுகின்றனர். இனியும் றிஸ்க் எடுக்க முடியாது என்று சிந்திக்கிறார்களா? அல்லது றிஸ்க் எடுப்பதில் களைப்படைந்து விட்டார்களா?

அப்படிக் களைப்படைந்து விட்டார்களென்றால், அவர்கள் அரசியலில் இருந்து விலகி விடலாம். களத்தில் நிற்பதாக இருந்தால் களமாடத்தான் வேண்டும்.

இதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் மேலும் சில விடயங்களை நினைவூட்ட வேண்டியுள்ளது. தமிழ் அரசியல் பல தடவை இந்த மாதிரி உடைந்து உதிரித் தன்மையைக் கொண்டிருந்திருக்கிறது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து செல்வநாயகம் தரப்பு பிரிந்து சென்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரிந்து சென்றது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்ும் பின்னர் ஈ.பி.ஆர்.எல். எவ்வும் பிரிந்து சென்றன. ஏன் ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்விலிருந்து தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி பிரிந்து சென்றது. அண்மையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) மணிவண்ணன் அணி பிரிந்து சென்றது. அதைப்போல ரெலோவிலிருந்து ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தரப்புப் பிரிந்து சென்றது.

ஜனநாயகச் சூழலில் இதெல்லாம் வழமை எனச் சிலரும் இது தமிழ் அரசியலில் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம், மலையக அரசியலிலும் நிகழ்வதுதான் என்று வேறு சிலரும் கூறக்கூடும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து மலையக மக்கள் முன்னணியும் பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் உருவாகிய வரலாறு இதைச் சொல்லும். அதைப் போல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து உடைந்தும் பிரிந்தும் சென்ற தரப்புகளையும் இவர்கள் அடையாளம் காட்டலாம்.

ஏன், ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்களிலிருந்து உடைவும் பிரிவும் உண்டாகவில்லையா என்றும் நீங்கள் கேட்கலாம். புலிகளிலிருந்து உடைந்து புளொட் உருவாகியதையும் ஈரோஸிலிருந்து உடைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் உருவாகியதையும் அதிலிருந்து உடைந்து ஈ.பி. டி.பி உருவாகியதையும் இவர்கள் காட்டலாம். மட்டுமல்ல ஈழதேசிய விடுதலை முன்னணி என்ற நான்கு இயக்கங்களின் கூட்டைப் புலிகள் உடைத்து நொறுக்கவில்லையா என்றும் கேட்கலாம்.

இந்தத் தவறுகளின் விளைவுகளைத் தானே தமிழ்ச் சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இன்று புலிகள் சந்தித்திருக்கின்ற வரலாற்றுத் துயரம் உணர்த்துவதும் இதைத்தானே. ஒரு கட்டத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தாமே தடை செய்த தரப்புகளை ஏற்று அரவணைத்துக் கொண்டதை – தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம். இதையெல்லாம் கவனத்திற் கொண்டே புதிய – எதிர்காலத்துக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

ஆம், தமிழ் அரசியலை முற்றிலும் புதிதாக – யுத்தத்துக்குப் பிந்திய அரசியலாக முன்னெடுக்க வேண்டும். அதற்குப் பழைய வழிமுறைகளும் பழைய சிந்தனைகளும் ஒரு போதும் உதவாது.

நீங்கள் புதிய முறையில் பந்து வீசினால்தான் மட்டையைப் பிடிப்பவருக்குக் குழப்பமும் தடுமாற்றமும் உண்டாகும். எப்படி அந்தப் பந்தை எதிர்கொள்வது என்று தெரியாமல் தத்தளிப்பார்கள்.

ஆனால், பிரிந்தும் உடைந்தும் சிதறிக் கிடக்கும் அத்தனை தரப்புகளும் பழைய – உழுத்துப் போன அரசியலையே கொண்டுள்ளன. பழைய அரசியல் வழிமுறையைக் கொண்டிருக்கும் வரை எதிர்த் தரப்பில் உள்ளவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. அவர்கள் அதை மிக எளிதாகவே எதிர்கொள்வர்.

இதனால்தான் இவற்றில் எதைத் தேர்வது என்று தெரியாத தடுமாற்றம் பலருக்கும் உள்ளது. இன்னொரு பக்கம் இதைப்பற்றிப் பலருக்கும் தெரியும். தெரிந்து கொண்டே தெரியாததைப்போல, எதையும் புரியாததைப்போல நடிக்கிறார்கள். நான் உட்படப் பலரும் தமிழ் அரசியலின் பலவீனத்தையும் தவறுகளையும் தொடர்ந்து குறிப்பிட்டு வந்துள்ளோம். அப்படித் தெளிவாகக் குறிப்பிட்டவை, முன்னுணர்ந்து சொன்னவை, விமர்சித்தவை, கண்டித்தவை, குற்றம்சாட்டியவை, சுட்டிக் காட்டியவை அனைத்தும் மெய்யெனக் காலம் நிரூபித்துள்ளது. மேலும் மெய்ப்படுத்தி வருகிறது.

இருந்தாலும் தமிழ் மக்களும் அவர்களிடையே உள்ள மெத்தப் படித்த மேதாவிகளும் அரசியல் அறிஞர்களும்(!) பலதைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. புரிந்து கொண்டாலும் அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை.

அரசியற்கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் அவற்றின் தொண்டர்களும் தெரிந்து கொண்டே நடிக்கிறார்கள். அல்லது தெரிந்து கொண்டே பிழைப்பு நடத்துகிறார்கள். இதை மாற்றிக் கொள்ளாத வரையில் மீட்சியில்லை. இது தொடர்பாக யாராவது சிந்தித்தால் அவருக்கு வெற்றி.

# 13 ஆவது திருத்தத்தை துரும்பாக வைத்து அரசியல் ஆட்டம் ஆரம்பம்!

**இலங்கை பல்லின மற்றும் பல்மத நாடாக அடையாளம் காணப்பட்டாலும், அரசியலில் மதகுருமாரின் ஆதிக்கம் தொடர்ந்தும் காணப்பட்டு வருகிறது. குறிப்பாக பௌத்த மதத்தலைவர்கள் அரசியல் ரீதியாக அழுத்தங்களைக் கொடுப்பவர்களாக உள்ளனர்.**



பல தசாப்தங்களாக இந்த நிலைமை காணப்படுகின்ற போதும், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ள நிலையில் மீண்டும் ஒருமுறை பௌத்த மதத் தலைவர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். கடந்த புதன்கிழமை கொழும்பு பத்தரமுல்லையில் பாராளுமன்றத்துக்கு அருகில் ஒன்று கூடிய பௌத்த குருமார் பாராளுமன்றத்துக்குச் செல்ல முயற்சித்ததுடன், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை வீதியில் தீயிட்டுக் கொளுத்தி தமது எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதானது நாட்டைப் பிளவுபடுத்துவதாக அமையும் என்றும், இதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென்றும் கூறியே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தினை நடத்தியிருந்தனர்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினையை தனது பதவிக் காலத்திலாவது தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை எடுத்துள்ளார். நடந்து முடிந்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது அவருடைய இலக்காக இருந்தது. இதற்கான ஆரம்பகட்டக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்திருந்த ஜனாதிபதி, இது பற்றி அவர்களுடன் கலந்துரையாடியிருந்தார். அரசியலமைப்பின் ஊடாகத் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக இதன்போது ஜனாதிபதி கூறியிருந்தார்.

அவருடைய இந்தக் கருத்தைத் தொடர்ந்தே இனவாத கருத்துகளை மீண்டும் முன்வைத்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன.

13 ஆவது திருத்தம் என்பது இலங்கை_ இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபை முறைகளை அறிமுகப்படுத்தும் ஓர் அரசியலமைப்புத் திருத்தமேயாகும். இதில் மாகாணசபைகளுக்குக் காணப்படும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இதுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதுவரை ஆட்சியிலிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் எவரும் இதனை நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறான பின்னணியில், முழுமையாக 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பே ஒருசிலரை கலவரமடையச் செய்துள்ளது. உண்மையைக் கூறுவதாயின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையின் ஊடாகப் பெருமளவு அதிகாரங்கள் எதுவும் மாகாண சபைகளுக்குச் சென்றுவிடப் போவதில்லை.



> ### 13 ஆவது திருத்தத்தினால் நாடு பிளவுபடப் போவதில்லையென்பது உறுதியென்ற போதிலும், மக்கள் மத்தியில் மாயத்தோற்றத்தை ஏற்படுத்துவதில் இனவாத அரசியல் சக்திகள் முயற்சி!

> ### முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாடு!

இந்தியாவின் மாநிலமொன்றில் உள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்றுக்குக் காணப்படக் கூடிய அதிகாரங்கள் கூட 13 ஆவது திருத்தத்தின் ஊடாகக் கிடைத்துவிடப் போவதில்லை. அதற்கும் அப்பால், தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் ஆரம்பத்தில் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக இது கொண்டுவரப்பட்டிருந்தாலும், தமிழர்களுக்கு இதில் பெரிய நம்பிக்கை இருக்கவில்லை. இருந்தாலும் ஆகக் குறைந்தது மாகாண சபைக்குரிய அதிகாரங்களையாவது மத்திய அரசாங்கம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழர்களிடம் இருந்து வருகிறது.

அது மாத்திரமன்றி பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் ஃபெடரல் தீர்வு என்று கூறினாலும், பிரிக்கப்படாத இலங்கை என்ற விடயத்தில் பெரும்பாலானவர்கள் உறுதியாக இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் தமது அரசியல் இருப்புக்காக இனவாதத்தைக் கையில் எடுக்கும் தென்பகுதி அரசியல்வாதிகளும், அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் ஒரு சில பௌத்த மதத் தலைவர்களும் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதை பாரதூரமான தீங்கிளைக்கும் விடயமாகக் காண்பிக்க விரும்புகின்றனர்.

குறிப்பாக கடந்தகால அரசியல் சூழ்நிலைகள் காரணமாக மக்கள் மத்தியில் செல்ல முடியாதுள்ள விமல் வீரவன்ச போன்ற சில அரசியல்வாதிகள் இனவாதத்தை மாத்திரே அரசியல் விற்பனைப் பொருளாகக் கொண்டவர்கள் போன்று செயற்படுவதைக் காண முடிகின்றது. 13ஆம் திருத்தத்துக்கு எதிரான இந்த எதிர்ப்பலை சாதகமாக அமையும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதுபோன்ற இனவாத சக்திகளே கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் ஒவ்வொரு குழப்பங்கள் ஏற்படுவதற்கும் எண்ணெய் ஊற்றியவர்களாகக் காணப்படுகின்றன. இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் அனைத்துத் தரப்பினரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றிணைந்து மீண்டெழுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளே வெற்றிகரமானதாக அமையும்.

பொருளாதார ரீதியில் காணப்படும் சவால்களுக்கு நேரடியான தீர்வுகளைக் காணும் அதேநேரம், ஸ்திரமான அரசியல் சூழ்நிலையும் பொருளாதார நெருக்கடித் தீர்வுகளுக்கு அவசியமானதாகும். மறுபக்கத்தில் இலங்கை பல்வேறு உலக நாடுகளின் உதவியை நாடியிருக்கும் பின்னணியில், எமது விவகாரம் தொடர்பில் உலக நாடுகளும் அவதானமாக இருக்கின்றன. எனவே, இதுபோன்ற இனவாத சக்திகளின் செயற்பாடுகளால் ஏற்படக் கூடிய குழப்பமான சூழ்நிலை இலங்கை குறித்த சர்வதேச நிலைப்பாட்டிலும் தாக்கத்தைச் செலுத்தலாம்.

இது இலங்கைக்கு வழங்கக் கூடிய உதவிகளைப் பாதிப்பதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அதேவேளை, இலங்கை ஒவ்வொரு தடவையும் இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும்போது உடனடியாக ஓடிவந்து உதவும் நாடாக இந்தியா காணப்படும் நிலையில், 13 ஆம் திருத்த விடயத்தில் இந்தியாவும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது. இதுபோன்ற பல்வேறு காரணிகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இதுவரை எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்காத நிலையில், தற்பொழுது எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்கும் என எதிர்பார்ப்பதாக கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

# சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில் பாதுகாப்பை பலப்படுத்துவதில் இந்தியா தீவிரம்!

**அமெரிக்க விஞ்ஞானிகள் சம்மேளனம் (Federation of American Scientists) எனப்படும் அமெரிக்க அமைப்பு கடந்த ஆண்டு நடத்திய ஆய்வின் அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் இந்திய அணு ஆயுத கொள்கை பாகிஸ்தானை விட்டு, சீனாவை மையமாக வைத்து வகுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**





இந்திய அணு ஆயுதங்கள் மற்றும் அவற்றை ஏவும் தளவாடங்கள் ஆகியவை நவீனப்படுத்தப்பட்டு வருவதாகவும், பழைய தளவாடங்களின் வரிசையில் புதிதாக நான்கு தளவாடங்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்போது இந்தியா இரண்டு வகையான விமானங்கள், தரையில் இருந்து ஏவப்படும் நான்கு வகையான ஏவுகணைகள் மற்றும் இரண்டு கடல்சார் ஏவுகணைகள் என மொத்தத்தில் எட்டு வெவ்வேறு ஏவு தளவாடங்களைப் பயன்படுத்தி வருகிறது.

இவற்றின் வரிசையில் மேலும் நான்கு அதிநவீன ஏவு தளவாடங்கள் விரைவில் இணைய உள்ளதாகக் கூறப்படுகிறது. இவைதான் இந்தியாவின் Nuclear Triad எனப்படும் முப்பரிமாண அணு ஆயுத தாக்குதல் திறனின் தூண்கள் என்றால் மிகையாகாது.

அதேபோல இந்தியாவிடம் சுமார் 138 முதல் 213 அணு ஆயுதங்களை தயாரிக்கத் தேவையான 700 கிலோகிராம் அளவிலான ஆயுததர புளூட்டோனியம் கையிருப்பு உள்ளதாகவும், ஆனால் இவை பெரும்பாலும் பயன்பாட்டு நிலையை எட்டாமல் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்படுகிறது.

ஜனவரி 2021 இல் 156ஆக இருந்த அணு ஆயுதங்களின் எண்ணிக்கை ஜனவரி 2022 இல் 160ஆக அதிகரித்துள்ளது. இந்தியா மிகவும் மெதுவாக தனது அணு ஆயுத எண்ணிக்கையை அதிகரித்து வருவதாக சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மஹாரஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள BARC – Bhabha Atomic Research Centre நிலையம்தான் இந்தியாவின் பிரதான அணு ஆயுத தர புளூட்டோனியம் விநியோக இடமாகும். இந்தியா இங்கு மேலும் ஒரு அணு உலையை நிறுவி மேற்குறிப்பிட்ட தரத்திலான புளூட்டோனிய தயாரிப்பை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இது தவிர, இந்தியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிப்பிலும் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகிறது. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள INS VARSHA வர்ஷா கடற்படைத்தளம்தான் இந்திய கடற்படையின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் இருப்பிடமாகும்.

இவை அனைத்தையுமே இந்தியா தற்போது சீனாவை மனதில் வைத்து கொள்கைசார் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருவதன் அடையாளம் ஆகும் என அமெரிக்க விஞ்ஞானிகள் சம்மேளன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இதேசமயம் இந்தியா தனது இராணுவத்திற்கு எதிர்கால போரிடும் வாகனங்களை கொள்வனவு செய்ய உள்ளது. இதற்கான அறிவிப்பையும் வெளியிட்டுள்ள நிலையில், இந்த கேள்விப்பத்திரத்தில் ஜெர்மன் நிறுவனம் பங்கேற்க உள்ளது.ஜெர்மனியைச் சேர்ந்த Rheinmetall Landsysteme நிறுவனம் தனது Lynx அதிநவீன யுத்தவாகனத்தை வழங்க முன்வந்துள்ளது.

> ### ஆயுதங்கள், ஆயுதங்களை ஏவும் தளவாடங்கள் நவீனமயம்!

தொழில்நுட்ப பரிமாற்றம் வழங்கி இந்திய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந்தியாவில் இந்த வாகனங்களை தயாரிக்க இந்நிறுவனம் முன்வந்துள்ளது. 34 முதல் 50 தொன்கள் வரை எடையுடையது இந்த வாகனம்.

500 கிமீ வரை செல்லக்கூடியது இந்த வாகனம்.அதிநவீன துப்பாக்கி அமைப்புகளையும் இந்த வாகனம் கொண்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, இந்திய அரசுசார்ந்த ஆய்வகமான NMRL (Naval Materials Research Labaratory) எனப்படும் கடற்படை உலோகவியல் ஆய்வகமும், கல்வரி (Scorpene) நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிக்கும் பிரான்ஸை சேர்ந்த Naval Group நிறுவனமும் ஒரு முக்கிய திட்டத்தில் கைகோர்த்துள்ளன.

அதாவது இந்திய கல்வரி ரக நீர்மூழ்கிக் கப்பல்களில் AIP (Air Independent Propulsion) எனப்படும் தொழில்நுட்ப அமைப்பை சோதனை செய்து இணைப்பதற்கான திட்டமே அதுவாகும். NMRL ஆய்வகம் இந்தியாவிலேயே உருவாக்கியுள்ள மேற்குறிப்பிட்ட அமைப்பை Naval Group ஆய்வு செய்து தர சான்றிதழ் அளிக்க வேண்டும்.

இந்த AIP அமைப்பு இல்லாத நீர்மூழ்கிக் கப்பல்கள் நீர்ப்பரப்பிற்கு மேலே வந்து தேவையான ஒக்ஸிஜனை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் அடிக்கடி மேலே வர வேண்டும். அவ்வாறு வரும்போது எதிரிகளிடம் சிக்கி தாக்கப்படும் வாய்ப்புகள் அதிகம். ஆகவேதான் இந்த அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த அமைப்பு உள்ள நீர்மூழ்கிக் கப்பல்கள் மிகவும் நீண்ட காலம் கடலுக்குள்ளேயே பயணிக்க முடியும். தற்போது கல்வரி ரக கப்பல்கள் 24 மணி நேரம் மட்டுமே கடலுக்குள் இருக்க முடியும். இனி இது 14 முதல் 21 நாட்களாக அதிகரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கடற்படை தனது ஆறு கல்வரி நீர்மூழ்கிக் கப்பல்களிலும் இந்த அமைப்புகளை பொருத்த முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன.

இதேவேளை ஆகாயப்பரப்பில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதிலும் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில் இந்திய தரைப்படைக்கு முதலாவது Boeing AH – 64E தாக்குதல் ஹெலிகொப்டர் கொள்வனவு செய்யப்பட உள்ளதாகவும், ஏப்ரல் 2024 அளவில் ஆறு அபாச்சிகளும் கொள்வனவு செய்யப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய தரைப்படையின் AAC – Army Aviation Corps எனப்படும் வான்படை பிரிவு இவற்றை பயன்படுத்தவுள்ள நிலையில், இந்திய விமானப்படையின் அபாச்சி ஹெலிகொப்டர்களில் இருந்து தனித்து தெரியும் வகையில் இவற்றுக்கு பாலைவன மணலநிற வண்ணப்பூச்சை கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.


> ### தரை, ஆகாயம், கடல் பாதுகாப்பை அதிகரிக்க புதிய ஆயுதங்கள், தளவாடங்கள், நவீன தொழில்நுட்பம்!

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

**இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நாடு பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய சந்தர்ப்பத்தில், சவால்களை வெற்றிகொள்ள அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. பொருளாதார பாதிப்பு நிலைமைகளை ஓரளவுக்கு சீர்செய்ய நெடுந்தூரம் பயணிக்க வேண்டும் என்பது அடிக்கடி வலியுறுத்தப்பட்டு வருகிறது.**





# சவால்களை வெற்றி கொள்வதென்பது நெடுந்தூர பயணம்!




சம்யுக்தன்

> பொருளாதார நெருக்கடியின் பாரதூரத்தன்மையை அக்கிராசன உரையில் விபரித்துக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இது தொடர்பில் தெளிவான பாதையொன்று அல்லது வழிகாட்டலொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வருகின்றார். கடந்த புதன்கிழமை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்திய ஜனாதிபதி இதனை மீண்டும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஜனாதிபதியாக அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சாராம்சத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் நிகழ்ச்சித் திட்டத்தினை முன்வைப்பதாக இந்த உரை அமைந்திருந்தது.

நாடு இதுவரை கடந்து வந்த அரசியல் பயணத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டு புதிய பாடமொன்றைக் கற்க வேண்டியதன் அவசியத்தையும், நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டைக் கடக்க வேண்டுமானால் புதிய மற்றும் புதுமையான சிந்தனையின் அவசியம் உள்ளது என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் வெளிப்படுத்தியிருந்தார்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதாரப் போக்கிற்கு மாற்று இல்லை என்ற தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாயையான தீர்வுகளைக் கூறி



> நாட்டின் நெருக்கடி வேளையில் தனது பொறுப்பைத் தட்டிக்களித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி!

பொதுமக்களை தவறாக வழிநடத்துவதற்குப் பதிலாக, மாற்று வழிகள் ஏதும் இருந்தால் அதனை முன்வைக்குமாறு அரசை விமர்சிக்கும் தரப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வரி அறவீடுகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டமையால் திறைசேரிக்கான வருவாய் குறைந்தமை நாடு பொருளாதா ரீதியில் வீழ்வதற்கு மற்றுமொரு காரணியாகும். இதனை சீர் செய்யும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வரி அறவீட்டில் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. கடந்த காலத்தில் வரி குறைக்கப்பட்டமையை விமர்சித்தவர்கள் மீண்டும் அரசாங்கம் வரி அறவீட்டை அதிகரிக்க எடுக்கும் நடவடிக்கைகளை விமர்சித்து வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் வரி விடயத்தில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது என்பதை ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார். புதியதொரு வரிக் கொள்கையை அறிமுகப்படுத்துவது அரசியல் ரீதியில் தனக்குப் பிரபல்யத்தை ஏற்படுத்தாது என்றாலும், நாட்டின் நன்மை கருதி பிரபல்யமற்ற தீர்மானங்களை எடுப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்களின் முக்கியத்துவம் இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் பெரும்பாலானவர்களுக்குப் புரியும் என்பதும் அவரது நிலைப்பாடாக அமைந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை முன்னரே பெறத் தவறியமை குறித்து பிரஸ்தாபித்திருந்த ஜனாதிபதி, மக்கள் எதிர்கொண்டிருந்த சுமைகள் படிப்படியாகக் குறைந்து வருவதானது நாடு சரியான பாதையில் பணிக்கின்றது என்பதற்கான அறிகுறி என்றும் தெரிவித்திருந்தார். அது மாத்திரமன்றி கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்களில் சர்வதேச நாடுகள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் நாடு சரியான பாதையில் செல்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கை பொருளாதார ரீதியில் கவலைக்கிடமான நோயாளியாகக் காணப்படுவதாகவும், நோயை இனங்கண்டு உடனடியாகச் சிகிச்சை அளிப்பதே தேவையானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இருந்தபோதும் சிலர் சிகிச்சை வழங்கிய வைத்தியர்கள் மீது குறைகண்டு பிடிக்கின்றனர். அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறுகின்றனர். எனினும், முதலில் நோயாளிக்கு சிகிச்சை வழங்குவதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். அதனையே தாம் தற்பொழுது செய்து வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாராளுமன்ற கொள்கைப் பிரகடன உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த கருத்தாடல்களுக்கும் அப்பால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான முயற்சிகையும் ஜனாதிபதி அண்மையில் முன்னெடுத்திருந்தார். இதற்காக சர்வகட்சிகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. இது விடயத்தில் கட்சிகளுக்கிடையில் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றபோதும், ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார் என்பதையும் அவருடைய பாராளுமன்ற உரை எடுத்துக் கூறுகிறது.

> மக்கள் எதிர்கொண்டிருந்த சுமைகள் படிப்படியாகக் குறைந்து வருவதானது நாடு சரியான பாதையில் பணிக்கின்றது என்பதற்கான அறிகுறி

'ஒற்றையாட்சி அரசில் உயர்ந்தபட்ச அதிகாரத்தைப் பகிர்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனாலும், நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய ஒரு விடயத்தினை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாட்டைப் பிரிப்பதற்கு அல்லது பிரிப்பதற்கு துணை போகும் எந்தவொரு நடவடிக்கையினையும் நாம் மேற்கொள்ள



> வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வில் உறுதியான நிலைப்பாடு

மாட்டோம். நான் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். இங்கு அரசியல் கட்சி எனக்கு இல்லை. ஆகுவே அனைத்து முன்மொழிவுகளையும் நான் பாராளுமன்ற தேசிய சபை ஊடாகவே நடைமுறைப்படுத்துவேன். அதற்கு மேலதிகமாக மக்கள் கருத்துப் பிரதிநிதித்துவப் பணிக்காக ஜன சபைச் சட்டத்தையும் சட்டமாக்குவோம்' என அவர் குறிப்பிட்டிருந்தார்.

புதிதாகச் சிந்தித்து புதியதொரு பயணத்தை மேற்கொள்வதற்குரிய காலம் தற்போது வந்துள்ளது. இதுவரை நாம் பின்பற்றிய சம்பிரதாய அரசியல் தொடர்ந்தும் செல்லுபடியாகாது. அரசியல் நன்மைகளுக்காகப் போலியாக மற்றும் மூடநம்பிக்கையின் மூலம் மேற்கொண்ட ஏமாற்று வேலைகள் எதிர்காலத்துக்குப் பொருந்தாது என்பதையும் அவர் கூறியிருந்தார்.

ஜனாதிபதி கூறியதைப் போன்று கடந்த காலத்தில் மேற்கொண்டதைப் போன்ற அரசியல் இனிமேலும் மேற்கொள்ள முடியாது என்ற களநிலைவரத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் ஸ்திரமான அரசியல் சூழல் இருக்க வேண்டும் என்பதற்கு அப்பால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்குத் தேவையான பொருளாதார சூழல் அத்தியாவசியமானதாகும். இவ்வாறான பின்னணியை உணர்ந்து கொண்டு அரசியல் செயற்பாடுகளை அனைவரும் முன்னெடுக்க வேண்டும்.

அது மாத்திரமன்றி நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சவாலான சூழ்நிலைக்கு அரசாங்கத்தினால் மாத்திரம் தனித்து நின்று முகங்கொடுக்க முடியாது. எதிர்க்கட்சியில் உள்ள அரசியல்வாதிகள், தொழிற்சங்கத்தினர் மற்றும் நாட்டு மக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இருந்தாலும் எதிர்க்கட்சியில் உள்ள அரசியல்வாதிகள் நாட்டு நிலைமை மீது அக்கறை காண்பதற்குப் பதிலாக தமது சொந்த அரசியலிலேயே அதிக அக்கறை காண்பிக்கின்றனர் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரையைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்திருந்தது. இது தவிரவும், பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்துள்ள குழுவினர், தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பெரும்பாலான எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியின் இந்த உரையைப் புறக்கணித்திருந்தனர்.

பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியினராக இருந்தால் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும், அரசாங்கம் இழைக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதற்கான பொறுப்பையாவது நிறைவேற்ற வேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தனது பொறுப்பைத் தட்டிக்களித்துள்ளது என்றே கூற வேண்டும்.

கடந்த பல சந்தர்ப்பங்களில் நாட்டைப் பொறுப்பேற்று வழிநடத்திச் செல்லுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த சவாலை ஏற்றுக் கொள்ள மறுத்த அவர்கள், அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பும் வழங்காது, தாமும் மக்களுக்கு மாற்றுத் தீர்வுகளை வழங்காது வெறும் சுயநல அரசியல் மேற்கொண்டு வருவதையே காணக் கூடியதாக உள்ளது.

உண்மையில் மக்கள் மீது அக்கறை உள்ளவர்களாக இருந்தால் அரசாங்கம் தொடர்பில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்து நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு வழிநடத்த வேண்டியதே எதிர்க்கட்சிகளின் பணியாகும். ஒரு சில அரசியல் கட்சிகள் தேர்தல் வெற்றி தொடர்பில் தாம் மேற்கொண்டுள்ள சுய கணிப்புகளின் அடிப்படையில் அரசியல் செய்து வருகின்றன. இவ்வாறான தரப்பினருக்கு ஆதரவாக உள்ள தொழிற்சங்கங்கள் நாட்டைக் குழப்பும் வகையில் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றன. நாட்டை பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீட்டெடுக்க மேற்கொள்ளும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இவை அனைத்தும் முட்டுக்கட்டைகளாகவே அமையும்.

எனவே, இதுபோன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டு அனைத்துத் தரப்பினரும் சிந்தித்து செயற்படுவதே காலத்தின் தேவையாகும்.

> **கடந்த அரசாங்க காலத்தில் வரிஅறவீடுகள் குறைக்கப்பட்டமையால் திறைசேரிக்கான வருவாய் குறைந்தது. நாடு பொருளாதார ரீதியில் வீழ்வதற்கு அதுவுமொரு காரணி!**

# ஐ.ம.ச வின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்த வடிவேல் சுரேஸ்

பதுளை – மடுல்சீமையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்பதாக முன்னதாக அறிவித்திருந்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சுகவீனம் காரணமாக அதில் பங்கேற்க முடியாதென பின்னர் அறிவித்திருந்ததாக வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

எனினும், இச்சந்தர்ப்பத்தில், வெலிமடையில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், சஜித் பிரேமதாஸ பங்கேற்றுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் வருகைக்காக காத்திருந்த பொது மக்கள்,இதனால் ஏமாற்றமடைந்தனர்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் இந்தச் செயற்பாட்டில் எனக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே, ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் விலகுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளர் மற்றும் பசறை தொகுதியின் பிரதம அமைப்பாளர் ஆகிய பதவிகளிலிருந்து விலகுவதாக வடிவேல் சுரேஸ் கூறினார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ மடுல்சீமை நகருக்கு வருகை தருவதாக கடந்த சில நாட்களாக மக்கள் பரபரப்பாக பேசிக் கொண்டனர். கடந்த வெள்ளியன்று ஆதரவாளர்கள் நூற்றுக் கணக்கானோர் அவருக்காக கூடியிருந்தனர்.

பதுளை மாவட்ட அமைப்பாளர் வடிவேல் சுரேஷ் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ கூட்டத்திற்கு சமுகமளிக்காமையால் கட்சி ஆதரவாளர்கள் கூச்சலிட்டனர்.

இதன்போது ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம், கைகலப்பாக மாறத்தொடங்கியது. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக கைகலப்பில் ஈடுபட்ட ஐந்து பேரை மடுல்சீமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடிவேல் சுரேஸ் ஏற்பாடு செய்திருந்த பிரசார கூட்டத்தில் சுமார் 8000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். கூட்டத்திற்கு சஜித் வராததையடுத்து வேதனை அடைந்த அவர் உடனடியாகவே தான் கட்சியில் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்தும் இராஜினாமாச் செய்வதாக ஊடகங்களுக்கு அறிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டதன் பிரகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மக்களின் உரிமையான சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளதாலும், தேர்தல் ஆணைக்குழு முறையாக தேர்தல் நடத்தப்படும் என்று நீதிமன்றத்தில் உறுதிமொழி அளித்துள்ளதாலும், இது தொடர்பில் உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எம்.எஸ்.முஸப்பிர்

## தூதுவர் அமீர் அஜ்வத் எழுதிய

# "இலங்கை – ஓமான் உறவுகள்: நேற்று, இன்று, நாளை"

### நூல் அறிமுகம்




ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையில் தொடர்பை வலுப்படுத்துவதற்கும் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்குமான இணைப்புப் பாலங்களாக செயற்படுபவர்களே இராஜதந்திரத் தூதுவர்கள். ஒருநாட்டின் அதிபர் முதல் அந்நாட்டு அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உட்பட வர்த்தக பிரமுகர்கள் மற்றும் மக்கள் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு தூதுவர்களே முன்னின்று உழைக்கிறார்கள். இதற்காகவே ஒவ்வொரு நாட்டிலும் இருதரப்புத் தூதுவராலயங்கள் ஸ்தாபிக்கப் படுகின்றன.

இலங்கையின் சிரேஷ்ட இராஜதந்திரியும் சட்டத்தரணியுமான ஓ.எல். அமீர் அஜ்வாத், ஓமான் நாட்டுக்கான இலங்கை தூதுவராக 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். இக்காலகட்டத்தில் இலங்கைக்கும் ஓமானுக்குமிடையில் வர்த்தகம், முதலீடுகள், உல்லாசப்பிரயாணம், விவசாயத்துறை, சக்திவளத்துறை, உயர்கல்வி, வேலைவாய்ப்பு, விளையாட்டுத்துறை, விமான மற்றும் கடற்போக்குவரத்துத் துறைகளை ஊக்குவிப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்ட தூதுவர் அமீர் அஜ்வத். இத்துறைகளில் இரு நாடுகளுக்குமிடையே காணப்படும் அபரிதமான வாய்ப்புகள் அவற்றை பயன்படுத்துவதில் அவர் கண்ட வெற்றிகள் பற்றிய தனது அனுபவங்களை ஒரு நூலாக ஆங்கில மொழியில் எழுதி வெளியிட்டுள்ளார். “இலங்கை ஓமான் உறவுகள்: நேற்று, இன்று, நாளை” எனப் பெயரிடப்பட்டுள்ள இந்நூல் இலங்கை இராஜதந்திர சேவையிலுள்ள தூதுவர் ஒருவர் பணியில் இருக்கும்போதே தனது அனுபவங்களைப் பகிர்ந்து எதிர்கால வாய்ப்புகளை ஆவணமாக்கிய முதல் நூலாக கருதப்படுகிறது.

இலங்கை ஓமான் உறவுகள் பற்றி முதன் முதலில் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள இந்நூல் இரு நாடுகளுக்கிடையில் பயன் தரக்கூடிய நல்லுறவை வளர்ப்பதில் ஒரு இராஜதந்திரியின் சொந்த அனுபவத்தையும் வெற்றி பெற்ற முயற்சிகளையும் மற்றும் எதிர் காலத்தில் சாத்தியமான வாய்ப்புகளையும் பதிவு செய்கிறது.

நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் அரசாங்க ஊழியர்களின் அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் புத்தாக்க சிந்தனைகள் மூலமாக நமது நாடு எவ்வாறு பயன் பெற முடியும் என்பதற்கும் வெளிநாட்டு சேவையிலுள்ள எமது இராஜதந்திரிகளின் பணிகள் எத்தனை முக்கியத்துவமிக்கவை என்பதற்கும் தூதுவர் அமீர் அஜ்வத்தின் இலங்கை – ஓமான் உறவுகள் என்ற நூல் நல்ல உதாரணமாகும். இலங்கைக்கும் அரபு உலகத்துக்குமிடையிலான தொன்று தொட்ட உறவை அழகிய முறையில் மீட்டிக் காட்டி எதிர் கால உறவுக்கு பலமான அத்திவாரத்தை இடுவதற்கான ஒரு முற்போக்கு நூலாக இது அமைந்துள்ளது.




40 ஆண்டுகால இலங்கை ஓமான் இராஜதந்திர உறவுகளை நினைவுகூருமுகமாக ஓமான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திர கற்கை நிறுவனத்தில் இந்நூலின் முதல் பிரதி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது. இந்நூலின் மீள் வெளியீடு இவ்வாண்டு ஜனவரி மாதம் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கை நிறுவனத்தில் இலங்கை வெளிவகார அமைச்சு மற்றும் இலங்கையிலுள்ள ஓமான் நாட்டுக்கான தூதரகத்தின் அனுசரணையுடன் கொழும்பில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருனி விஜயவர்தன, இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹ்மத்அலி அல் றஷ்தி மற்றும் நூலாசிரியர் தூதுவர் அமீர் அஜ்வத் ஆகியோர் இணைந்து நூலை உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைத்தனர்.

அழகிய அர்த்தமுள்ள அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ள இந்நூல் இலங்கைக்கும் ஓமானுக்குமிடையிலான இருதரப்பு ஒற்றுமைகளைத் துல்லியமாக படம்பிடித்துக் காட்டுகிறது.

இந்நூலுக்கு மெருகூட்டும் மிக முக்கிய அம்சமாக ஓமான் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் செய்யத் பத்ர் அல் புசைதி எழுதிய இந்த நூலுக்கான முகவுரை அமைந்துள்ளது. அவர் தனது முகவுரையில்

இலங்கை ஓமான் உறவுகள் என்ற தொனிப்பொருளில் அதிகாரம் பெற்றவராக தூதுவர் அமீர் அஜ்வத் விளங்குவதோடு அவர் எழுதியுள்ள வெற்றிகரமான இருதரப்பு முயற்சிகள் தொடர்பான ஒரு கண்ணோட்டம் இந்நூலை வாசிப்பவர்களுக்கு நல்ல தகவல்களை வழங்குவதோடு அத்தகவல்கள் இலகுவில் ஈடுபாட்டைத்தருவனவாகவும் அமைந்துள்ளன.”

நூலாசிரியரினால் எழுதப்பட்டுள்ள நூலின் முன்னுரை நூல் பற்றிய அறிமுகத்தையும் அது எழுதப்பட்டதன் நோக்கத்தையும் சுட்டிக்காட்டி நூலுக்கான ஒரு திறவுகோலாக அமைகிறது.

ஐந்து பாகங்களை உள்ளடக்கிய இந்நூலின் முதல் அத்தியாயம் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே அரபு உலகுடன் இலங்கை கொண்டுள்ள வரலாற்றுத் தொடர்புகளை ஆராய்வதோடு கிறிஸ்துவுக்குப்பின் 5ம் நூற்றாண்டில் அனுராதபுர இராஜ்யத்துக்கும் சாசானிய பேரரசுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு மற்றும் இஸ்லாத்தின் வருகைக்குப்பின் பொலன்னறுவை இராஜ்யத்திலிருந்து கண்டி இராஜ்யம் வரை இஸ்லாமிய உலகுடன் இலங்கைக்கு இருந்த நெருங்கிய தொடர்புகளையும் வரலாற்று ஆதாரங்களுடன் தெளிவாக விளக்கும் நூலாசிரியர் பின்னர் ஓமான் நாட்டுடனான இலங்கையின் இறுக்கமான வரலாற்று தொடர்புகளையும் எடுத்துரைக்கிறார்.

நூலின் இரண்டாம் அத்தியாயம் இலங்கைக்கும் ஓமானுக்குமிடையே இராஜதந்திர உறவுகள் உருவாக்கப்பட்ட வரலாறு மற்றும் இரு நாடுகளுக்குமிடையே சேவையாற்றிய முன்னாள் தூதுவர்களின் தகவல்களை வழங்குவதோடு, 40 ஆண்டுகால இலங்கை ஓமான் இராஜதந்திர உறவுகளைக் நினைவுகூருமுகமாக இரு நாடுகளுக்குமிடையே ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் முக்கிய நிகழ்வுகளை பட்டியலிட்டுள்ளது.

நூலின் மூன்றாம் அத்தியாயம் தற்போது இருநாடுகளுக்குமிடையில் நிலவிவரும் இருதரப்பு உறவுகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் நடைமுறையிலுள்ள இருதரப்பு ஒப்பந்தங்கள் பற்றிய தகவல்களையும் வழங்குகிறது.

நான்காம் அத்தியாயத்தில் இலங்கைக்கும் ஓமானுக்குமிடையிலான நீண்ட கால மக்கள் தொடர்பாடல் மற்றும் இலங்கையர்கள் ஓமான் நாட்டுக்கு ஆற்றிய பணிகள், ஓமான் நாட்டிலுள்ள இலங்கையின்

தொடர் 19ஆம் பக்கம்...

# ஷொப்டரின் மரணத்தில் தொடரும் மர்மங்கள்





> தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் பெப்ரவரி 9ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில் 8 ஆம் திகதியே நீதிமன்ற அறிக்கையாக தினேஷ் ஷாப்டர் சயனைட் குடித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்ற செய்தி பல ஊடகங்களில் பரப்பப்படுகின்றது. எனினும் தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலை என்பதை அவருடைய குடும்பத்தினர் ஏற்க தயாராகவில்லை. இச்சம்பவம் திட்டமிட்ட மனித படுகொலையாகவே அவர்களால் பார்க்கப்படுகின்றது.

## அடுத்தடுத்து வெளிவரும் மாறுபட்ட பிரேதபரிசோதனை அறிக்கைகள்

ஜனசக்தி குழுமத்தின் முன்னாள் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் சமூகத்தில் பலருடைய கவனத்தையும் விவாதத்தையும் ஈர்த்த ஒரு சம்பவமாகும். எனினும் இச்சம்பவத்தின் மர்ம முடிச்சுகள் இன்னும் அவிழ்க்கப்படவில்லை. இந்நிலையில் இதன் பின்னணியில் பலமான ஒருவர் இருக்கின்றாரா போன்ற சந்தேகமும் பலரிடையே தற்போது எழுந்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகள் மட்டுமின்றி மரணத்துக்கான காரணமும் கூட நொடிக்கு நொடி மாறிக்கொண்டே செல்கின்றது. தினேஷ் ஷாப்டரின் மரணத்தின் பின்னர் 24 மணித்தியாலத்துக்குள் பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் கழுத்து நெரிக்கப்பட்டமையால் உயிரிழந்துள்ளார் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் இரண்டாவது தடவையாக அதே சட்ட வைத்திய அதிகாரியினால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் கழுத்தை தானே நெரித்து தற்கொலை செய்திருக்கலாம் என்று கூறப்பட்டது. தற்போதும் ஒரு அறிக்கை வெளிவந்துள்ளது. அதுவும் அதே சட்டவைத்திய அதிகாரியினாலேயே வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தினேஷ் ஷாப்டர் சயனைட் குடித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அதை உறுதிப்படுத்தும் வகையில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் சாட்சியங்களும் கட்டமைக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் பெப்ரவரி 9ஆம் திகதி இடம் பெறவிருந்த நிலையில் 8 ஆம் திகதியே நீதிமன்ற அறிக்கையாக தினேஷ் ஷாப்டர் சயனைட் குடித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்ற செய்தி பல ஊடகங்களில் பரப்படுகின்றது.

எனினும் தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலை என்பதை அவருடைய குடும்பத்தினர் ஏற்க தயாராகவில்லை. இச்சம்பவம் திட்டமிட்ட மனித படுகொலையாகவே அவர்களால் பார்க்கப்படுகின்றது.

தினேஷ் ஷாப்டரின் தந்தை சந்திரா ஷாப்டர் அண்மையில் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

'டிசம்பர் 15ஆம் திகதி எனது மகனை வழியனுப்பிவைப்பதற்காக பார்க்க சென்றேன்.

அவர் அன்று மாலை 4.00 மணிக்கு குடும்பத்தவர்களுடன் பிரிட்டன் செல்வதற்கு திட்டமிட்டிருந்தார். அவர் தனது பிள்ளைகளை அங்குள்ள பாடசாலைகளில் சேர்ப்பதற்கு திட்டமிட்டிருந்தார்.

அன்று நல்ல மனநிலையில் தான் இருந்தார். அவரும் மனைவியும் என்னுடன் அமர்ந்து வழமை போல வேடிக்கையாகப் பேசினர். நான் மதியமளவில் அங்கிருந்து புறப்பட்டேன். அவர் ஒரு அவசர சந்திப்பிற்காக செல்லவேண்டியுள்ளதாக எனக்கு சொன்னார்.

அவர் பதற்றமாகவிருக்கவில்லை. தினேஷ் மிகவும் மென்மையான இரக்க குணம் கொண்டவர் என்பது அவரை தெரிந்தவர்களுக்கு தெரியும். அவர் தனது குடும்பம் நண்பர்கள் குறித்து மிகவும் அர்ப்பணிப்புடன் இருப்பார். குடும்பத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதை உறுதி செய்வதை தனது கடமையாக அவர் கருதினார்.

வாழ்க்கை அவனிடமிருந்து சீக்கிரமே கொள்ளையடிக்கப்பட்டாலும் அவனுடைய தாக்கம் இன்னும் பல ஆண்டுகளாக நினைவில் இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

இவை தினேஷின் மரணம் மற்றும் தினேஷ் பற்றிய உண்மைகள். ஈவிரக்கமற்ற கொலைக்கு ஆளான ஒரு நல்ல மகனின் பெயரையும் கெடுக்க வேண்டாம் என்றும் மனித இனத்தை கெடுக்கும் நோக்கத்தில் பொய்களைப் பரப்ப வேண்டாம் என்று ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனவே ஆரம்பத்திலிருந்தே தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலை என்ற கருத்தை சமூகத்தில் விதைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுவருவதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது.

தினேஷ் ஷாப்டர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஷ பிரேமரத்னவும் இதனை மறுத்துள்ளார். சட்டவைத்திய அதிகாரியால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கைகள் மாறிபடுவதாகவும் அதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும்

தொடர் 18ஆம் பக்கம்...



வசந்தா அருள்ரட்ணம்





குவைத் இலங்கைத் தூதரகத்தின் 75ஆவது சுதந்திர தின ராஜதந்திர வரவேற்பு உபசார வைபவம் குவைத்திலுள்ள ஹயாத் ரீஜன்சி ஹோட்டலில் தூதுவர் காண்டீபன் பாலசுப்ரமணியம் தலைமையில் கடந்த 08.02.2023 நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

# வாரபலன்



**12-02-2023 - 18-02-2023**

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ராசியில் ராகு. 2ல் செவ்வாய். 12ல் குரு. மூன்றுக்கும் 6க்கும் உடைய புதன் சூரியனோடு கர்ம ஸ்தானத்தில் இணைந்து சுக ஸ்தானத்தை பார்க்கிறார். பூமி யோகம் உண்டு. வண்டி வாகனங்கள் மற்றும் வீடு கட்டும் அமைப்பு உண்டு. சுக்கிரன் லாபஸ்தானத்தில் இருப்பதால் கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். இதுவரை வராமல் இருந்த ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு முதலியவை கிடைப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உண்டு. ஜென்ம ராகு. நட்பில் கேது. சில நேரங்களில் உங்களுடைய நட்பும் உறவும் பகையாகிவிடும். ஆகையினால் எச்சரிக்கையோடு இருங்கள்.

## ரிஷபம்

ராசியில், 12க்குரிய செவ்வாய் இருக்கின்றார். புதன் சுகாதிபதி சூரியனோடு பாக்கியஸ்தானத்தில் இணைந்து உங்கள் வெற்றி ஸ்தானத்தைப் பார்க்கின்றார். எதிலும் நீங்கள் துணிச்சலோடு இறங்குவீர்கள். வெகு காலமாக காத்திருந்த ஒரு வாய்ப்பு உங்கள் கதவைத் தட்டும். தளராத முயற்சி நிறைவேறாத காரியத்தையும் நிறைவேற்றி வைக்கும். சுக்கிரன் அமைப்பினால் கணவன் மனைவி ஒற்றுமை நீடிப்பது மட்டுமல்ல கலைத்துறையினருக்கும் நல்வாய்ப்பு உண்டு. 12ல் ராகு, விரயம். செலவு. உங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களையும் அருகாமையில் உள்ளவர்களையும் அனுசரித்துக் கொள்ளுங்கள். ராசியில் செவ்வாய். உணர்ச்சி வசப்பட்டு உயர் ரத்த அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாம். எதிர்பாராத பயணங்கள், அலைச்சல்கள் உண்டு.

## மிதுனம்

ராசிநாதன் அஷ்டமத்தில் சூரியனோடு இணைந்து இருக்கின்றார். சூரியன் உங்கள் தன குடும்ப ஸ்தானத்தைப் பார்வையிடுகின்றார். குடும்பத்தில் சிறிய சிறிய பிரச்சினைகள் வந்தாலும் மனம் விட்டு பேசுவதன் மூலமாக நீங்கிவிடும். 11ஆம் இடத்தில் ராகு உங்களுக்கு சில நல்ல செய்திகளையும் லாபங்களையும் தருவார். வணிகத் தடைகளை நீக்குவார். குரு உங்கள் சுகஸ்தானத்தைப் பார்வை செய்வதால் பூமியோகம் உண்டு. செவ்வாயும் நான்காம் இடத்தை பார்வையிடுவதால் இடம் வீடு வாங்குபவர்களுக்கு தேவையான பண உதவி கிடைக்கும். 12ல் செவ்வாய். ராசிநாதன் 8ல். உங்களுக்கு தவறான ஆலோசனை சொல்பவர்கள், உங்கள் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்பவர்களை அடையாளம் கண்டு கொண்டு விலக்குங்கள். விரயச் செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வப்பொழுது சிறு ஆரோக்கிய குறைபாடுகள் ஏற்படும். கடன் பிரச்சினைகள் தலைவலியைத் தரும்.

## கடகம்

சுக்கிரன் அஷ்டமத்தில் இருக்கிறார். குடும்ப அதிபதி சூரியன் உங்கள் ராசியைப் பார்க்கின்றார். பூர்வ புண்ணிய ஸ்தானத்தை குரு 9ம் பார்வையாகப் பார்வையிடுகின்றார். இவையெல்லாம் நல்ல அமைப்புகள். தடைகள் வந்தாலும் கூட உடைத்து விட்டு முன்னேறக் கூடிய நல்ல உற்சாகமான மன நிலையை இந்த கிரக அமைப்புகள் தரும் என்பதால் முயற்சிகளைக் கைவிட வேண்டாம் சுக்கிரன் எட்டில் இருந்தாலும் பாதிப்பை ஏற்படுத்தமாட்டார். சந்திரன் நிலையால் விரயங்கள் சற்று அதிகரிக்கும் வாரம் இது. எனவே விழிப்புணர்வோடு செலவு செய்யுங்கள் உங்களைப் பற்றி பொறாமைப்படுபவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டு எச்சரிக்கையோடு பழகுங்கள். அடுத்தவர் விசயத்தில் எக்காரணத்தை முன்னிட்டும் தலை இடாமல் இருக்க வேண்டும்.

## சிம்மம்

ராசிநாதன் சூரியன் ஆறில் சனியோடு இணைந்து இருக்கிறார். அவரோடு புதனும் இருக்கின்றார் அவர்கள் இணைந்து விரய ஸ்தானத்தைப் பார்ப்பதால் எச்சரிக்கை தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். குரு உங்கள் தனஸ்தானத்தைப் பார்வையிடுவதால் சிக்கல்கள் வந்தாலும் விலகிவிடும். வருமானம் அதிகரிக்கும். பாக்கியஸ்தானத்தில் உள்ள ராகு உங்களுக்கு உதவுவார். கொடுத்த கடனை வசூலிப்பதில் கவனம் செலுத்துங்கள். நல்ல நண்பர்களை அடையாளம் கண்டு கொண்டு உங்களுக்கு பக்கபலமாக இணைத்துக் கொள்ளுங்கள். குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் அவ்வப்பொழுது சில தடைகளை கொடுக்கவே செய்யும். அதிக அலைச்சலையும் தரும்.

## கன்னி

ராசிநாதன் புதன் வாரத் தொடக்கத்தில் நான்காம் இடத்தில் சூரியனோடு இணைந்து இருக்கிறார். சனியும் அவரோடு இருக்கின்றார். அவர் உங்கள் லாபஸ்தானத்தைப் பார்வையிடுவதால் வியாபார தடைகள் நீங்கும். வணிகம் அதிகரிக்கும். குரு ராசியைப் பார்வையிடுவதால் கஷ்டங்கள் வந்தாலும் விரைவில் நீங்கிவிடும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருந்தாலும்கூட, சுக்கிரன் 12ஆம் இடத்தை பார்வையிடுவதால் சில பேச்சுவார்த்தைகள் விவகாரத்தை உண்டாக்கி விடும் என்பதால் எச்சரிக்கை தேவை. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சொந்த வீடு அமையும். தெய்வீக திருத்தலங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும். 8ம் இடத்தில் ராகுவும் 2ஆம் இடத்தில் கேதுவும் சிரமங்களை ஏற்படுத்தும். பொருள்கள் சில நேரங்களில் திருட்டுப் போய்விடும் அல்லது தவறிவிழுந்து உடைந்துவிடும்.

## துலாம்

ராசிநாதன் சுக்கிரன் 5ஆம் இடத்திலிருந்து உங்கள் லாபஸ்தானத்தை பார்வையிடுகிறார். கலைஞர்களுக்கு இதுவரை இல்லாத வாய்ப்புகள் கிடைக்கும். பெண்களுக்கு நினைத்த எண்ணங்கள் பூர்த்தியாகும். புதிய பொருட்களையும் நகைகளையும் வாங்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். தொழில் நல்லபடியாக நடக்கும். வருமானம் ஓங்கும். நட்பு வட்டாரங்களில் சிறிய பிரச்சினைகள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறையும். ஆன்மிக சிந்தனைகள் ஓங்கும். ராசிக்கு அதிபதி சுக்கிரன் பலம் பெற்று இருப்பதால் கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். உங்களைப் பற்றி குறை சொல்பவர்கள் இருக்கிறார்கள் அவர்களிடம் எச்சரிக்கையோடு இருங்கள். அவ்வப்பொழுது மனத் தடுமாற்றம் ஏற்படும். அது உங்கள் வேகத்தை தடுக்கும்.

## விருச்சிகம்

ராசிநாதன் செவ்வாய் ராசியைப் பார்வையிடுவதால் எது வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரிய எண்ணம் ஏற்படும். அது தவிர குரு பகவானும் உங்கள் ராசியைப் பார்வையிடுகின்றார். அவர் தன குடும்ப அதிபதி. எனவே குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். சுகஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் வீடு, வாகனம் முதலிய பொருள் சேர்க்கைகள் ஏற்படும். விரும்பிய பொருளை வாங்கும் யோகம் ஏற்படும். பெண்களால் ஆதாயம் உண்டு. பதவி உயர்வு, ஊதிய உயர்வு, சலுகைகள் முதலியன கிடைக்கும் காலம் இது. அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். தொழில் விஸ்தரிப்பு முயற்சிகளும் பலனளிக்கும். 12ல் இருக்கும் கேது பிரச்சினைகளும் தரும். அவரை ராகு பார்ப்பதால் நன்றாக இருக்கும் ஆரோக்கியத்தில் எதிர்பாராத சிறு நோய்கள் ஏற்படலாம். அது தற்காலிகமானதுதான். உடனடியாக கவனியுங்கள். அலட்சியப்படுத்த வேண்டாம்.

## தனுசு

ராசிநாதன் குரு உங்கள் தொழில் ராசியைப் பார்வை இடுவதால் வியாபார உத்தியோக இடங்களில் தேவையான உதவிகள் கிடைக்கும். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் சற்று முரண்டு பிடித்தாலும் கடைசியில் உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு உதவுவார்கள். கணவன், மனைவி ஆலோசனைகளும் ஒத்துழைப்புகளும் குடும்ப அமைதியைச் சீராக்கும். அதனால், உங்கள் செயல்திறன் கூடும். தெய்வ பலம் உண்டு. சிலருக்கு பதவி உயர்வுகளும் கிடைக்கும். தொழில் போட்டிகள் குறையும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். எக்காரணத்தை முன்னிட்டும் தன்னம்பிக்கையை இழக்க வேண்டாம். எதிலும் பொறுமை தேவை. வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும்.

## மகரம்

ராசிநாதன் சனி ஆட்சியில் இருக்கிறார். இவைகளெல்லாம் சற்று சிரமத்தைத் தந்தாலும், உங்கள் சொந்த ராசி நாதன் சனி கைவிடமாட்டார். அந்த அனுபவம் உங்கள் எதிர்கால நலனுக்கு உகந்தது என்பதை மறந்துவிட வேண்டாம். மூன்றில் உள்ள குரு உங்களுக்கு தைரியமான சிந்தனையைத் தருவார். நீங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் எதிர் காலத்தைப் பற்றிய தேவையற்ற அச்சத்தை மனதில் கொள்ளக் கூடாது. தேவையில்லாத மன அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் கற்பனை பயங்களும் வரும். உங்களைச் செயல்படாமல் வைக்கும் அதிலிருந்து விலகி வெளியே வாருங்கள். ஊக்கமுடன் இருங்கள்.

## கும்பம்

ராசியில் சுக்கிரன் இருக்கிறார். சப்தம ராசியைப் பார்க்கிறார். நட்பு பலப்படும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் பெண்களுக்கு இது நல்ல காலம். அவர் லாபாதிபதியும்கூட எனவே தொழில் விஸ்தரிப்புகள் செய்யும் காலம் இது. வணிகம், வியாபாரம் முதலியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். கௌரவம் ஓங்கும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். பிள்ளைகள் திருமண முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கை தரம் உயரும் போது சில குறுக்கீடுகளும் சஞ்சலங்களும் இடையூறுகளும் ஏற்படும் என்பதால் மிகவும் ஜாக்கிரதையோடு முன்னேறுங்கள். அதிகமான உழைப்பும் பொறுப்பும் கூடிக் கொண்டே போகும். அதிக வெளியூர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

## மீனம்

ராசிநாதன் குரு ஆட்சியில் இருக்கிறார். தைரிய ஸ்தானத்தில் செவ்வாய். ராசியில் குரு இருந்து சில அலைச்சல்களைத் தந்தாலும்கூட அது தரும் அனுபவத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். குருவும் செவ்வாயும் பாக்கிய ஸ்தானத்தைப் பார்வையிடுவதால் இடர்பாடுகள் ஏற்படாது. சூரியனும் சனியும் உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானத்தை பார்க்கிறார்கள். முன்னோர்கள் ஆசிகள் உண்டு. குலதெய்வத்தையும் இஷ்ட தெய்வத்தையும் வணங்க வேண்டும் என்று உள்ளுணர்வு தூண்டும். உடனே செயல்படுத்துங்கள். எல்லா விஷயங்களும் உங்களுக்கு நன்மையாக முடியும். வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு அனுகூலமான பலன்களே ஏற்படும். தொழிலில் நல்ல லாபம் எதிர்பார்க்கலாம். போட்டிகள் குறையும். வெளிவட்டாரப் பழக்கங்களில் சில சறுக்கல்கள் உண்டு என்பதால் கவனமுடன் இருங்கள். எதிலும் உடனடியாக யோசிக்காது பதில் சொல்லி மாட்டிக் கொள்ளாதீர்கள்.

# மத்தியஸ்தமும் இளைய தலைமுறையும்

'மத்தியஸ்தம்' என்ற சொல்லின் நேரடிப் பொருள் ஒரு உடன்பாட்டிற்கு வருவது என்பதாகும். பழங்காலத்திலிருந்தே பிணக்குகளுக்குத் தீர்வு காணும் முறை பின்பற்றப்பட்டுவந்ததற்கான ஆதாரங்களை வரலாறுச் சான்று பகிர்கின்றது. பிணக்குகளை உரையாடல் மூலம் தீர்த்து வைப்பதே மத்தியஸ்தத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் பங்குபெறும் மத்தியஸ்தர்கள் பக்கச்சார்பற்றவர்கள், அவர்கள் எந்தத் தரப்பினருக்கும் சார்பானவர்கள் அல்ல. மேலும், எந்தவொரு பிணக்குத் தொடர்பாகவும் அவர்கள் முன்கூட்டியே முடிவுகளைத் தீர்மானிப்பதில்லை. ஏனெனில் அவ்வாறான முடிவுகள் சமூகத்தில் பிரச்சினைகளை உண்டாக்க வாய்ப்புள்ளது. மத்தியஸ்த சபைகள் அதிகாரிகள், அதிகார மேலாதிக்கம் இல்லாமல் மனிதாபிமானமாக நடப்பவர்கள்.

மோதலுக்கான மூலகாரணத்திற்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையிலான தொடர்பு.

இளைய சந்ததியினருக்கு 'பிணக்குகள்' பற்றிய விழிப்புணர்வு என்பது தற்போதைய சமூகத்தில் வாழ்வதற்கும் மிகவும் அவசியமான ஒன்று. சமூகம் பெரும்பாலும் ஒரு பிணக்கினை இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெறும் தர்க்கமாகவே அடையாளம் காட்டுகின்றது. ஆனால் பிணக்கு என்ற சொல் பரந்த கருத்தினைக் கொண்டது. இளம் தலைமுறையினர் பிணக்கின் தன்மையைப் புரிந்துகொள்வதில் 'வேறுபாடு'என்ற காரணியைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். பிணக்கு என்பது வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் ஒன்று. நாம் வாழும் சூழலில் உள்ள மனிதர்களும் அவர்களின் சமூக நிலைகளும் ஆளுக்காள் வேறுபட்டவை. அந்த வேறுபாடு தனித்தன்மை என்று அழைக்கப்படுகின்றது, பிறப்பிலான இயல்புகளும் வாழும் சூழலும் அவ் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. மரபுரிமையாக தொடர்ந்து வரும் பிறவிப் பண்புகள் தொடர்ந்து காணப்பட்டாலும் கூட, சுற்றுச்சூழல் காரணியைப் பொறுத்து தனி மனிதன் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகின்றான்.

சுற்றுச்சூழல் காரணிகளால் மட்டுமல்லாமல், கல்வி, அனுபவம், மதம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தனிமனிதன் ஒருவன் மாற்றமடைகின்றான்.

### கல்வியின் முக்கியக் குறிக்கோள் மற்றும் உணர்வு சார்ந்த நிர்வாகம்

தொழில் ஒன்றைப் பெற்று வாழ்வை நிலைநிறுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இலங்கையின் கல்வித் துறையில், கல்வியின் அத்தியாவசிய அடிப்படைப் பணிகளின் அளவு மிகவும்




அரிதாகவே உள்ளன. அதுதான் மன உணர்வுகளை நிர்வகித்தல்.எதிர்காலத்தில் பொறியாளர், மருத்துவர், போன்ற தொழில் முறை நிபுணத்துவம் வாய்ந்த இலக்குகளை மட்டுமே கொண்ட சமூகத்தில், ஒரே கட்டமைப்பில் சிக்கி வாழ வேண்டிய நிலை காரணமாக இளம் தலைமுறையினரின் சமூக ஆளுமை மழுங்கடிக்கப்படுகின்றது. மேலும், பாடசாலைக் காலத்திலேயே துன்பம், வலி, மகிழ்ச்சி, உற்சாகம், கோபம் போன்ற எந்த ஒரு உணர்வு பூர்வமான சூழ்நிலையையும் சரியாக நிர்வகிப்பது எப்படி என்பதைக் கற்பிப்பதன் மூலம், பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து வாழ்நாள் முழுவதும் பிணக்குகளை எதிர்கொண்டு அவற்றை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கு இது பெரும் உதவியாக அமையும். இன்றைய காலகட்டத்தினை நோக்கும்போது பல்கலைக்கழக மட்டத்தில் இருந்தும் கூட ஒரு பிணக்கினை நிர்வகிப்பதில் இளைய தலைமுறையினர் நடந்துகொள்ளும் விதம் மிகவும் வருத்தமளிக்கின்றது. சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இளைஞர்களின் உணர்வு ரீதியான பலவீனமான நிர்வாகம் எதற்கும் பயன்படாத ஒன்றகவே உள்ளது.

### இளைய தலைமுறையினராகிய, உங்களால் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ள முடியுமா?

பன்முகத்தன்மையை முதலில் எதிர்கொள்ளும் இடமாக பாடசாலையைக் கருதலாம். எந்தவொரு எதிர்கால சூழலிலும் பன்முகத்தன்மையை பொறுத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஒழுக்கமான தனிநபரை பாடசாலை மூலம் உருவாக்க முடியும். பிறருடைய துக்கம், வேதனை, வலி, சந்தோசம், போன்றவற்றை தன்னுடைய துக்கம், வேதனை, வலி, சந்தோஷம் போல உணரும் 'அனுதாபம்' உள்ளவர் சமுதாயத்தில் பிணக்குகள் இல்லாமல் வாழ முடியும். பெரும்பாலும், தவறான அணுகுமுறைகள், தவறான தகவல்கள் மற்றும் மற்றவரைப் பற்றிய தவறான கருத்துக்கள் போன்றவற்றால் ஒரு பிணக்கு நீண்டகாலமாகவும், வெறுப்பாகவும் மாற்றமடைகின்றது. குறிப்பிட்ட சம்பவத்துடன், தொடர்புடைய நபருடன் வெறுப்பு அதிகரிப்பதால் பிணக்கு மேலும் தீவிரமடைகின்றது.

### இளைய தலைமுறையினராகிய உங்களை 'மத்தியஸ்தம்' செய்வதற்கு அவர்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானவர்கள்?

இலங்கையில் தற்போது 329 மத்தியஸ்த சபைக் குழாம்கள் செயற்படுகின்றன. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மத்தியஸ்த சபைக் குழாம்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், மத்தியஸ்த சபைக் குழாம்களின் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும். ஒவ்வொரு மத்தியஸ்தரும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்தியஸ்தம் மற்றும் தகவல் தொடர்பாடல் நுட்பங்கள் குறித்த 40 மணி நேரப் பயிற்சியை பூர்த்திசெய்து. அதன் பிறகு, ஒரு மணி நேரத் தேர்வில் அவர்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் மத்தியஸ்தர்களாகத் தேர்வு செய்யப்படுகின்றார்கள். மத்தியஸ்த சபைகளின் மூலம் எந்த வயதிலும் உள்ள இளைஞர்கள் தங்கள் பிணக்குகளைத் தீர்க்க முடியும்.

### மத்தியஸ்தம் பற்றி இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

முதலில் மத்தியஸ்த செயற்பாட்டில் , பிணக்குடன் தொடர்புடைய மற்ற தரப்பினரை எதிரியாகக் கருதக் கூடாது. மத்தியஸ்த செயற்பாட்டில், உங்கள் பிணக்கினைத் தீர்க்க சிறந்த நபர் உங்கள் எதிரி என்று நீங்கள் கருதும் நபர் என்று நினைக்க நீங்கள் பயிற்றுவிக்கப்படுகிறீர்கள். இது தொடர்பாடல் செயற்பாடுகளை மேலும் வெற்றிகரமாக்குகின்றது.

### பாடசாலையில் மத்தியஸ்த செயற்பாடுகளை நிறுவுதல்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் மத்தியஸ்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகும். அதன் அடிப்படையில், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மற்றும் நீதி அமைச்சும் ஒன்றிணைந்து ஒரு திட்டத்தினை ஆரம்பித்து, 2004 முதல் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து பாடசாலைகளில் மத்தியஸ்த சபைப் பிரிவுகளை நிறுவுவதற்கான திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. அடிப்படையில், இங்கு என்ன செயற்பாடு நடக்கின்றது என்றால், பாடசாலை மாணவர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட பிணக்குகள் பாடசாலையில் நிறுவப்பட்ட மூத்த மாணவர்களைக் கொண்ட பாடசாலை சமரசப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. அதற்காக 25 மாணவர்கள் மற்றும் ஐந்து ஆசிரியர்கள் அடங்கிய மத்தியஸ்த பிரிவு பாடசாலையில் நிறுவப்படும். அங்கு, மத்தியஸ்தச் செயற்பாட்டில் பங்குபெறும் மூத்த மாணவர்கள் ஒரு பிணக்கினைத் தீர்க்க மத்தியஸ்தம் செய்கின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளில் மட்டும் அல்ல, பல்கலைகழக அளவிலும் மத்தியஸ்த செயற்பாட்டினை அமுல்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

பல்கலைக் கழகங்களில் பாட அறிவுக்கு மேலதிகமாக சமூக அறிவைக் கொண்ட ஒரு சரியான குழுவை உருவாக்குவதும் ஒரு சமூகப் பொறுப்பாகும். சுற்றியுள்ள சூழலைப் புரிந்துகொண்டு, உலகின் உயர்தர இசையைக் கேட்கும், ரசிக்கும் திறனும், நல்ல இலக்கிய அறிவும் கொண்ட ஒரு பிரிவு சமூகமயமாக்கப்பட வேண்டும்.

**கனகசூரியர்**

# அங்காராவில் சுதந்திரதினக் கொண்டாட்டம்

**6ஆம் திகதியன்றைய கொண்டாட்டங்கள் பிற்போடப்பட்டன**









அங்காராவில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 75வது சுதந்திர தினத்தை 2023 பெப்ரவரி 04 அன்று தூதரக வளாகத்தில் அங்குள்ள இலங்கையர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் பங்கேற்புடன் கொண்டாடியது. தூதுவர் ஒகுஷான் ஏர்துகுருல், துருக்கி வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பணிப்பாளர் நாயகம் அலிஷான் இஸ்பு, தெற்காசியாவுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் பிர்ஹாக் பிங்கொல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இதில் சிறப்பதிதிகளாகப் பங்கேற்றனர். அதேவேளை துருக்கியில் 6ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை ஒட்டிய இராஜதந்திர வரவேற்புபசார விழா, புகைப்படக் கண்காட்சி மற்றும் நடன நிகழ்ச்சிகள் என்பன கடந்த 6ஆம் திகதியன்று துருக்கியில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**பொருளாதார அரசியல்**



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரி மூளைசாலிகளின் வெளியேற்றத்தை அதிகரிக்குமா?

**இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய இறைவரிக்கொள்கை தொழில்வாண்மையாளர் மத்தியிலும் புலமைச் சமூகத்தினர் மத்தியிலும் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவை வருமானமாகப் பெறும் பணியாளர்கள் மத்தியிலும் தொழில் துறையினர் மத்தியிலும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக சம்பளப்பட்டியல் மூலம் வருமானம் பெறுபவர்கள் ஜனவரி மாதத்தில் 6 சதவீதம் தொடக்கம் 36 சதவீதம் வரையில் வெட்டப்பட்ட வரிகளை கழித்து தங்களுக்கு கையில் கிடைத்த சம்பளத்தைப் பார்த்து அதிர்ந்து போயிருக்கிறார்கள். சிலருடைய சம்பளங்கள் பத்துப் பதினையாயிரம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிகிறது. பலர் வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்வது என்று திண்டாடுகிறார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் வருமானம் உழைக்கும் குடும்பங்களின் நிலை சற்று சமாளிக்கத்தக்கதாக இருந்தாலும் தனிஒருவரது சம்பளத்தை நம்பிவாழும் குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.**

உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரி (PAYE) என்பது சமூகத்தில் மிகுந்த சிரமத்துடனும் அர்ப்பணிப்புடனும் தமது கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பெற்று வாண்மைத் தொழில்களில் ஈடுபடும் மனித மூலதனத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். ஏனெனில் சம்பளப்பட்டியல்கள் மூலம் பெறப்படும் அவர்களது வருமானங்கள் முறையான பதிவுகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் அரசாங்கத்தினால் இலகுவாக இலக்கு வைக்கப்படவும் முடிகிறது. ஆனால் இலங்கையின் 70 சதவீதமான பொருளாதார முறைசாராத தொழில் முயற்சிகளாகும் இவற்றில் ஈடுபடுவோர் இலட்சக் கணக்கில் சம்பாதித்தாலும் எங்கேயும் கணக்கு வைக்கப்படுவதில்லை வரிகள் செலுத்தப்படுவதுமில்லை. பெரும் புள்ளிகள் வர்த்தகர்கள் அரசியல்வாதிகள் என சமூகத்தில் மிகஉயர்ந்த மட்டத்தில் உள்ளோரும் அதிகார வர்க்கத்தினரும் வரிகளைச் செலுத்துவதில் இருந்து ஏதோ ஒரு வழியில் தப்பித்துக்கொள்ள முயல்கின்றனர். ஆனால் சம்பளத்திற்காகத் தொழில் புரியும் மத்தியதர வர்க்கத்தினரே எப்போதெல்லாம் அரசாங்கத்தின் கஜானா காலியாகிறதோ அப்போதெல்லாம் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

| Monthly Salary (LKR) | Income Tax liability (prior to 1st Jan 2023) | Income Tax liability (After 1st Jan 2023) |
|---|---|---|
| 250,000 | - | 21,000 |
| 300,000 | 3,000 | 35,000 |
| 400,000 | 9,000 | 70,500 |
| 500,000 | 15,000 | 106,500 |
| 600,000 | 27,000 | 142,500 |
| 700,000 | 39,000 | 178,500 |
| 1,000,000 | 90,000 | 286,500 |

**ஒரு குறிப்பிட்ட தொகை வருமானத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனவே தவிர அவ்வாறு அதிகரிக்கும் போது வரி அறவிடல் பற்றிய கோட்பாடுகள் கொள்கைகள் நல்ல நடைமுறைகள் (Good practices) பற்றியோ கிஞ்சித்தும் சிந்திக்கபட்டதாகத் தெரியவில்லை.**

இப்போதும் கூட நூறு பில்லியன் வருமானத்தைத் திரட்டியே ஆகவேண்டும் என்ற முனைப்பில் அவ்வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட தொகை வருமானத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனவே தவிர அவ்வாறு அதிகரிக்கும் போது வரி அறவிடல் பற்றிய கோட்பாடுகள் கொள்கைகள் நல்ல நடைமுறைகள் (Good practices) பற்றியோ கிஞ்சித்தும் சிந்திக்கபட்டதாகத் தெரியவில்லை. மாறாக எங்களுக்கு இந்தளவு வருமானம் தேவை அதைப் பெறவேண்டுமானால் இந்த வரிவீதங்களை நாங்கள் அறவிட்டே ஆகவேண்டும் ஆகவே நீங்கள் அதை கட்டாயம் செலுத்தியே ஆகவேண்டும் என்று அரசாங்கத்தின் வலிந்த செய்விக்கும் பலத்தின் ஊடாக சம்பளத்தில் இருந்து வரியை அறவிட்டுக் கொள்கின்றனர். மற்றைய நாடுகளில் எல்லாம் இதை விடக் கூடுதலாக அறவிடுகிறார்கள் என்று நியாயமும் கற்பிக்கிறார்கள். வரிஅறவீடு என்பது ஒரு நாட்டின் உட்கட்டுமானங்களை உருவாக்கவும் பொதுச் சேவைகளை வழங்கவும் நலன்புரித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தேவைப்படும் நிதியைப் பெற உதவும் ஒரு சாதனம் அதைத் தவிர அரசு துறை நிறுவனங்களின் மூலம் உழைக்கப்படும் இலாபங்கள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நன்கொடைகள் என்பனவும் ஒரு அரசாங்கத்தின் வருவாய் மூலாதாரங்களாகும். வலிந்து அறவிடப்படும் வரியானது வரலாற்றுக் காலந்தொட்டே ஆட்சியாளரின் பிரதான மூலாதாரமாக வரி இருந்துள்ளது. ஆனால் ஒரு வரியானது வரிசெலுத்துபவரை உடல் ரீதியாகவே உளரீதியாகவே காயப்படுத்தாது பூவில் இருந்து வண்டு தேனை எடுப்பது போல இருக்க வேண்டும் என்பர். வரியானது ஒருவரால் செலுத்தப்படக் கூடிய அளவில் இருக்கவேண்டும். வரியின் காரணமாக ஒருவரது பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது. அதேநேரம் அறவிடப்படும் வரியினால் சமூகம் நன்மை அடையும் என வரி செலுத்துபவருக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். மாறாக வரியை ஆட்சியாளர் தமது ஆடம்பரமான நடவடிக்கைகளுக்காகச் செலவிடுபவர்களாகவும் ஊழல்வாதிகளாகவும் இருப்பின் வரி செலுத்துபவர்கள் தமது கடின உழைப்பில் இருந்த உருவிய பணத்தில் சிலர் சொகுசு வாழ்க்கை அனுபவிப்பதை ஒரு போதும் விருப்ப மாட்டார்கள். நாடு மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள வேளையில் பணவீக்கம் ஐம்பது அறுபது சதவீதங்களில் உள்ள ஒரு நிலையில் வருமான வரிகளை மிகக் கூடிய சதவீதங்களில் ஒரே தடவையில் அதிகரிக்க தீர்மானிப்பது வரி செலுத்துபவர்களின் வருமானம் மற்றும் செலவு நடத்தைகளில் மின்சார அதிர்ச்சி போன்றதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொருவரும் தமது நிரந்தர வருமானங்களுக்கேற்பவே தமது செலவு நடத்தைகளை வடிவமைத்திருப்பர் நீண்டகாலக் கடன்களை பெற்றிருப்பர். திடீரென ஏற்படும் வருமான இழப்பு அவர்களை நிலை குலையச் செய்யும்.

வருமானங்களைக் கணிப்பிடும் போது ஒருவர் தனது உத்தியோகத்தின் நிமித்தம் பெறும் வீடு வாகனம் தனிப்பட்ட ஆளணி போன்ற ஏனைய நேரடிப்பணக் கொடுப்பனவல்லாத நன்மைகளின் பெறுமதிகளையும் உள்ளடக்கி வரி அறவிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் ஒருவர் தான் பெறும் பணவருமானத்திற்கு அப்பாலும் சென்று வரிசெலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார். சிலருக்கு இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி வரி அறவிடும் போது வீட்டுக்கு கொண்டு செல்ல வருமானம் எதுவும் மிஞ்சாத நிலை உருவாகியிருந்தது. குறிப்பாக அரசாங்கத்துறையில் உள்ள உயர் நிலை அதிகாரிகளின் நிலை அதனால் கவலைக்குரியதாக மாறியது. இப்போது பணமல்லாத நன்மைகளாக வழங்கப்படும் வீட்டுவசதி வீட்டு வாடகை வாகனம் அல்லது வாகன வாடகை, வாகன சாரதியின் சம்பளம், நிறுவனத்தால் வழங்கப்படும் காப்புறுதிச் செலுத்தல்கள் போன்றவை வரிக்கணிப்பீட்டிற்கான வருமான வகையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறது.

எனவே சிலவகையான பணமல்லாத நன்மைகளை அனுபவிப்பர்களுக்கு ஓரளவு நிம்மதி ஏற்பட்டிருக்கும். ஆனால் இத்தகைய நன்மைகளை வெகுசிலரே அனுபவிக்கின்றனர். உழைக்கும் போதே வருமான வரி செலுத்துவோரில் மிகப்பெரும்பாலானோர் கடனாளிகளாக உள்ளனர். வரியை அறவிட்டபின்னர் கிடைக்கும் வருமானத்தில் பெற்றகடன்களை மீளச்செலுத்த முடியாமல் இலங்கை அரசாங்கத்தைப் போல வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். ஆகவே குறைந்தபட்சம் இந்த வரிச்சீர்திருத்தம் வருவதற்கு முன்னர் கடன்கள் பெற்றுள்ளவர்களின் வெளிநின்ற கடன்சுமைகளையும் கடன் மீளச் செலுத்த வேண்டியுள்ள காலத்தின் தேவையையும் கருத்திற்கொண்டு குறைந்தபட்ச வாழ்க்கைச் சுமையை சுமப்பதற்குப் போதுமான வருமானத்தையும் ஒதுக்கி எஞ்சிய தொகைக்கு முப்பத்தாறு சதவீத வரியினை விதிப்பதே அடிப்படையில் மனிதாபிமானமுள்ள நடவடிக்கையாக அமையும். அவ்வாறில்லாமல் இப்போதுள்ள வரிமுறையைத் தொடர்ச்சியாக அமுல் செய்தால் மத்தியதரவகுப்பு மிகப்பெரிய பேரவலத்தைச் சந்திக்கும். தொழில் புரிவோர் மத்தியில் வறுமையை அதிகரிக்கும். உத்தியோகத்தைக் கைவிட்டு பெட்டிக்கடை வைத்துப்பிழைப்பது அல்லது வாகனத்தை வைத்து ஹயர் ஓடுவது இலாபகரமானதாக மாறும். மிகப்பெரியளவில் மூளைசாலிகள் வெளியேற்றம் இடம் பெறும். நாடு எதிர்பாராத பொருளாதார சுருக்கத்தை அடையும் இப்போதுள்ள நிலையில் இது நாட்டுக்கு நல்லதல்ல.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# உளவு பலூன் விவகாரமும் அமெரிக்க சீன இராஜதந்திர முறுகலும்

**உலகளாவிய விவகாரம் துருக்கி, சிரிய நிலநடுக்கத்தை மையப்படுத்தியுள்ளது. அந்த நாடுகளின் பாரிய அழிவையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகளின் உதவிகள் தொடர்ந்தாலும் நிலநடுக்கமும் தொடர்வதனால் அழிவுகளை கட்டுப்படுத்த முடியாது இரு நாடுகளும் திணறிக் கொண்டுள்ளன. இடிபாடுகளுக்குள் சிக்கிய மக்களையும் உடலங்களையும் மீட்பதில் அதிக சிரமங்களை இரு நாடுகளும் எதிர் நோக்கியுள்ளன. இத்தகைய துயரம் ஒருபக்கம் நிகழ மறுபக்கத்தில் சீனா, அமெரிக்க இராஜீக முறுகல் இரு நாடுகளுக்குமிடையில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஏற்கனவே வர்த்தக முறுகல் மற்றும் தைவான் விவகாரம் இரு நாட்டுக்குமான அரசியல் பொருளாதார இராணுவ பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பதற்றத்தை அதிகரிக்கும் விதத்தில் சீனா அனுப்பியதாக அமெரிக்கா குறிப்பிடும் உளவு பலூன் விவகாரம் பாரிய முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இக்கட்டுரையும் இரு நாட்டுக்குமான இராஜீக முரண்பாட்டை தேடுவதாக அமையவுள்ளது.**

முதலாவது இரு நாட்டுக்குமான அண்மைய முரண்பாட்டுக்கான அடிப்படையாக சீனாவின் இராட்சத பலூன் அமெரிக்க தென் மாநிலத்தில் அமைந்துள்ள மோண்டடானாவில் உள்ள அணு சக்தி ஏவுதளத்திற்கு மேல் பறந்ததாகவும் அது உளவு பார்ப்பதற்காக சீனாவால் அனுப்பப்பட்டதாவும் அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. வானிலை ஆராய்ச்சி என்ற பெயரில் அமெரிக்காவுக்கு மேல் பறந்து கொண்டிருந்த பலூன் ஜனவரி 28 ஆம் திகதி அமெரிக்காவுக்குள் பிரவேசித்துள்ளது. பெப்ரவரி 3ஆம் திகதி வரை அதன் பறப்பு அமெரிக்க வான் பரப்பில் நிகழ்ந்துள்ளது. சீனாவின் உளவு பலூன் அமெரிக்க விமானத் தளமான மால்ஸ்ட்ரோமை இலக்கு வைத்தே பறந்ததாகவும் அதனை உளவு பார்ப்பதற்காகவே அனுப்பப்பட்டதாவும் அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. இத்தகைய விமானத் தளம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கொண்டிருப்பதுடன் அணுவாயுதங்களை தாங்கிச் செல்லும் திறன்கொண்ட ஏவுகணைகளை ஏவும்தளம் எனவும் தெரியவருகிறது. அது மட்டுமன்றி சீனா உளவு பலூன் அமெரிக்காவின் இறையாண்மைக்கு எதிரானது திட்டமிட்ட தெளிவான அத்துமீறல் என்று அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. சீனாவின் உளவு பலூன் மூன்று பேருந்துகளை ஒன்றாக சேர்த்தது போன்ற பாரிய அளவுடையது எனவும் தெரியவந்துள்ளது.




இரண்டாவது அத்தகைய இராட்சத பலூனை அமெரிக்கா அத்திலாந்திக் சமுத்திரத்தில் வைத்து சுட்டுவீழ்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இதனை பென்டகன் சீனாவின் உளவு ஊர்தி என அறிவித்துள்ளது. இது மூன்று நாட்களுக்கு மேல் அமெரிக்காவின் வான்பரப்பில் அமெரிக்க பாதுகாப்பு பிரிவான பென்டகனால் கண்காணிக்கப்பட்டதெனவும் தரையில் சுட்டு வீழ்த்தாது கடலில் பாதுகாப்புக் கருதி சுட்டு வீழ்த்தியதாகவும் பென்டகன் அறிவித்துள்ளது. சுடப்பட்ட சமயம் பலூன் 60 ஆயிரம் அடியில் பறந்து கொண்டிருந்ததாகவும் ஏறக்குறைய ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரம் அடி உயரம் வரை சீன உளவு பலூன் பறந்ததாவும் கூறப்படுகிறது. பலூனை வெடிக்க வைத்ததை அடுத்து அமெரிக்கப் போர் விமானங்கள் அருகே பறந்ததாகவும் தெரியவந்துள்ளது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன் இலகுவில் சுட்டு வீழ்த்த முடியாததாக உள்ளதுடன் அதன் சிதைவுகளை கண்டு கொள்வதும் கடினமாகவே உள்ளதென தெரியவந்துள்ளது. இருந்தபோதும் சிதறிய பலூன் சிதைவுகள் கரோலினா கடற்கரை நகருக்கு அருகே வீழ்ந்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. சிதைவடைந்த பலூனின் பாகங்கள் அமெரிக்க பாதுகாப்பு பிரிவினரால் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதுபற்றிய மேலதிக தகவல்கள் எதையும் வெளியிட முடியாது எனவும் அமெரிக்க பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது.

மூன்றாவது அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள சீனாவின் வெளியுறவுத் துறையானது, சீனா வானிலை ஆராய்ச்சிக்காக பலூன்களை பயன்படுத்துகிறது. அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட பலூன் ஒன்றுதான் வழிதவறி அமெரிக்க எல்லைக்குள் நுழைந்து விட்டதென்றும் விளக்கம் அளித்துள்ளது. இது சர்வதேச விதிகளை மீறி அமெரிக்கா செயல்பட்டிருகிறது எனவும் வானிலை ஆராய்ச்சிக்கான சீனாவின் பலூனை சுட்டுவீழ்த்தியது சட்டவிரோதம் எனவும் சீனா பதிலுக்கு அமெரிக்கா மீது குற்றம் சாட்டியுள்ளது. இதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம் எனவும் சீனா எச்சரித்துள்ளது.

நான்காவது சீனாவை எதிர்கொள்ளவும் அதன் மீதான எச்சரிக்கையை அதிகரிக்கும் விதத்திலும் அமெரிக்கா சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. அமெரிக்கா பிலிப்பைன்ஸில் அமைத்துள்ள விமானப்படைத் தளங்களில் போர் விமானங்களை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. அவ்வாறே அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் பிளிங்டனின் சீன விஜயத்தை ஒத்தி வைத்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அவ்வாறே 08.02.2023 அன்று மாநிலங்கள் சபையில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீனா மீது பாரிய குற்றச்சாட்டினை முன்வைத்ததுடன் அதனை எதிர்த்து செயல்பட அமெரிக்க இராணுவம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தார். பலமான கரகோசத்திற்கு மத்தியில் பைடன் தனது உரையை நிகழ்த்தியிருந்தார். சீனா மீது அதிக குற்றச்சாட்டுகளை பைடன் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இரு நாட்டுக்குமான பதற்றம் அதிகரித்திருப்பதுடன் தைவான் விவகாரத்தில் அமெரிக்காவின் நகர்வுகளுக்கு பதில் நடவடிக்கையாகவே பலூன் விவகாரம் அமைந்திருப்பது போல் தெரிகிறது. தாய்வான் விடயத்தை சீனா இலகுவில் விட்டுக் கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதனால் எப்படி அமெரிக்கா எவ்வாறு சீனாவின் எல்லைக்குள் நகர்ந்ததோ அவ்வாறே சீனாவும் அமெரிக்க எல்லைக்குள் நகர்த்தப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. இது இரு நாடுகளதும் பாதுகாப்பு மற்றும் இறைமை சார்ந்த விடயமாகவே பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் எல்லைக்குள் நிகழ்ந்ததால் அமெரிக்க இறைமை பாதிக்கப்படுகிறது எனக்கூறும் அமெரிக்கா சீனாவின் எல்லைக்கு நுழையும் போது மட்டும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமை எனக் கூறிக்கொள்ள முனைகிறது.

ஆனால் ஏனைய நாடுகளை விட சீனா அமெரிக்க வானில் அமெரிக்காவுக்கு சவால் விட்டுள்ளதாகவே தெரிகிறது. குறிப்பாக உலக நாடுகளின் உள்விவகாரங்களில் உளவு பார்ப்பதும் ஆட்சி மாற்றத்தை மேற்கொள்வதும் நெருக்கடியை உருவாக்குவதும் வழமையான அரசியலாகக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு சீனாவின் உளவு பலூன் பாரிய சவாலாக அமைந்துள்ளது. அதன் பாதுகாப்பில் அதிக பலவீனம் உள்ளதாகவே தெரிகிறது. அதாவது 28.01.2023 முதலே அமெரிக்கா, சீனாவின் உளவு பலூனை கண்காணிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் எப்போது முதல் அந்த உளவு பலூன் அமெரிக்க வான் பரப்புக்குள் பிரவேசித்ததென அமெரிக்காவால் உறுதிப்படுத்த முடியவில்லை. அது மட்டுமன்றி உளவு பலூன் அத்திலாந்திக் கடல்பரப்புக்குள் நுழையும் வரை அமெரிக்கா வெறுமனே கண்காணித்ததே தவிர வேறு எந்த நடவடிக்கையையும் அதன் மீது எடுக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இது அமெரிக்கப் பாதுகாப்புச் சார்ந்து வேறு நகர்வுகளுக்கு வித்திடும் விடயமாக மாறுவதற்கான வாய்ப்பு உண்டு. செப்டெம்பர் தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்கா அதிகம் கொதிப்படைந்த நிகழ்வாகவே இது தெரிகிறது. அது ஜோ பைடனது உரையில் தெளிவாக தெரிந்திருந்தது. அதனால் தாய்வான் விடயம் தீவிரம் அடைய வாய்ப்புள்ளதாகவே உணரப்படுகிறது.

இரு நாடுகளதும் இராஜீக நகர்வுகள் முறிவடைவதற்கான வாய்ப்புக் குறைவாக அமைந்தாலும் அச்சுறுத்தல் பரஸ்பரம் அதிகரிப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் உலகளாவிய போக்கில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. உலக ஒழுங்கில் இரு நாடுகளும் தனித்துவமான பாதுகாப்பு எச்சரிக்கைகளை கட்டமைக்க முயலுகின்றன. வட, தென் கொரியாவுக்கிடையிலான பலூன் முரண்பாடு போன்றதல்லாத போக்கொன்றுக்கான சூழலே அதிகமாக உள்ளது.

எனவே அமெரிக்க, சீன பொருளாதார அரசியல் போட்டியானது முழு அளவிலான இராணுவப் போட்டியாக மாறுவற்கான சூழலை உருவாக்கத் தொடங்கியுள்ளது. பட்டி மற்றும் பாதை முன்முயற்சியானது இந்தோ, பசுபிக் சமுத்திரங்களைக் கடந்து உலகளாவிய ரீதியில் நிகழ்ந்து வருகிறது. இத்தகை சந்தர்ப்பத்தில் எழுந்துள்ள நாடுகளுக்கிடையிலான பரஸ்பர போட்டி புறச்சூழலின் பலத்தினால் கட்டமைக்கப்பட வாய்ப்புள்ளது. அமெரிக்க வெளியுறவில் ஏற்பட்டுவரும் மாற்றமானது மீளவும் இராணுவ கெடுபிடிக்கு வித்திடுவதாகவே தெரிகிறது. வெளிப்படையாக சீனா, ரஷ்யா, வடகொரியா, ஈரான் அணியானது மேற்குலகத்தை எதிர்கொள்ள இத்தகைய நகர்வுகள் தவிர்க்க முடியாத தேவையாக எழுந்துள்ளது. உலக நாடுகளுக்குள் அமெரிக்க நுழைவை தடுக்க முடியாது விட்டாலும் எச்சரிக்கை செய்யுமளவுக்கு சீனாவின் பலம் வலுவடைந்துள்ளதாகவே நோக்கப்படுகிறது. அண்டவெளித் தொழில் நுட்பத்தில் அமெரிக்காவின் பலத்தை விஞ்சமுடியாத சீனா, அதனை அடைவதற்கு முனைகிறதாகவே தெரியவருகிறது. இஸ்ரேலின் ஈரானிய அணுவிஞ்ஞானி மீதான தாக்குதல் அண்டவெளித் தொழில் நுட்பத்தின் இராணுவத் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது. சைபர் தாக்குதலை கடந்து சற்றிலைற் மூலமான தாக்குதல்களை இராணுவம் கொண்டிருக்க வேண்டிய தேவையை அதிகரித்துள்ளது. அரசியல் அதிகாரத்தின் முக்கிய அங்கமாக அண்டவெளி உருவெடுத்துள்ளது. தரையும் கடலையும் கடந்து அரசியல் அதிகாரத்தை அடையும் ஓரங்கமாக அண்டவெளியும் அதன் தொழில் நுட்பமும் காணப்படுகிறது.



# வரி நிவாரணம் வழங்கி அரச வருமானம் வீழ்ச்சியடைவதை எவ்வாறு தடுக்கலாம்?

## வரி தொடர்பிலான விமர்சனங்கள்!

எம். எஸ். முஸப்பிர்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டில் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் உழைக்கும் போது செலுத்தும் வரியை நீக்கியமை மிகவும் தவறான செயலாகவே அனைவராலும் பார்க்கப்பட்டது. தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடந்த வருடம் அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 8.3 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

இந்த நிலைமையின் கீழ் IMF நிபந்தனைகளுக்கு அமைவாகச் சென்று ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் மாதாந்த சம்பளம் பெறும் ஊழியர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கான நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

உழைக்கும் போது செலுத்தும் வரியை நீக்கினால் நாட்டுக்கு சுமார் 100 பில்லியன் ரூபாய்கள் இழப்பு ஏற்படும் என்றும், வரி எல்லையை இரண்டு இலட்சம் ரூபாய் வரை உயர்த்தினால் நாட்டிற்கு 63 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படும் என்றும் கடந்த எட்டாம் திகதி புதிய பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய தனது அக்கிராசன உரையின் போது தெரிவித்தார்.

வரி தொடர்பில் விமர்சன ரீதியான கருத்துக்களை தெரிவிக்கும் தரப்பினரிடம் கீழ்வரும் கேள்விகளை நாம் கேட்டோம்.

01 உங்கள் அரசாங்கம் ஆட்சியமைத்தால் இந்த வரியினைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?


02 மக்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கினால் அரச வருமானம் வீழ்ச்சியடையும் சவாலுக்கு எவ்வாறு முகங் கொடுப்பீர்கள்?

03 உங்கள் கட்சியின் பொருளாதாரக் கொள்கைக்கு அமைவாக எந்த அளவு வரை அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு வரிச் சலுகை வழங்குவீர்கள்?

04 அரசு மற்றும் தனியார் துறை பணியாளர்களிடமிருந்து வரி அரவிடுவது தொடர்பில் உங்கள் கட்சியின் கொள்கை என்ன?

05 இதனை விடவும் அரச வருமானம் குறைவடைந்தால் அந்த வருமானத்தை எவ்வாறு ஈடுகட்டுவீர்கள்?

06 வரி அறவிடாமல் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற வேறு வழிகள் உள்ளனவா?



### சம்பளத்தை வழங்கி, ஒரே வரிக் கொள்கையை ஏற்படுத்த வேண்டும்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்**
**எரான் விக்ரம ரத்ன**

01 அரச வருமானத்தை உயர்த்த வேண்டும். கடந்த வருடம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் வருவாய் 8.3 சதவீதமாக குறைந்தது. 2015ஆம் ஆண்டு நாங்கள் அரசாங்கத்தை பொறுப்பேற்ற போது அது 10%ஆக இருந்தது. அதை 13 சதவீதமாக உயர்த்தினோம். பின்னர் மோசமான நிர்வாகத்தினால் உணவுப் பணவீக்கம் 100% ஆக உயர்ந்தது. தற்போது சற்று குறைவடைந்துள்ளது. இன்று பணவீக்கம் வரியாகிவிட்டது. வருமானம் பாதியாகிவிட்டது. அரச வருமானம் உயர வேண்டும் என்றாலும், அதனை யாரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வது? வியர்வை சிந்தி கஷ்டப்பட்டு உழைப்பவர்களிடம் தங்கி இருக்கக் கூடாது. வரிவிலக்கு வரம்பு குறைக்கப்பட்டால், இவர்கள் பிச்சைக்காரர்களாக மாறுவார்கள்.

02 அரசின் வருமானம் குறைந்து வரும் சவாலை எதிர்கொள்வதற்காக வருமானத்தைக் கண்டறிவதற்காக பல்வேறு வழிகள் உள்ளன.

03 உழைக்கும் போது செலுத்தும் வரிக்கான எல்லையை இரண்டு இலட்சமாக உயர்த்தினால் நாட்டிற்கு 63 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படும் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். நான் இந்த வரி எல்லையை ஒரு இலட்சமா அல்லது இரண்டு இலட்சமா என்று கூறப்போவதில்லை. இந்த எல்லையினை இலக்கங்களில் கூறினால் எம்மால் வாதத்தை முன்வைக்க முடியாது. இது அறிவியல் ரீதியாகச் செய்ய வேண்டிய ஒன்றாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய எம்மால் கொண்டுவரப்பட்ட வரிச்சட்டத்தை ஒரே நாளில் மாற்றினார். இதனால் ஒரு வருடம் கடக்கும் முன்னரே 600 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. நாடு கடனில் மூழ்கியது.

04 அரசு மற்றும் தனியார் துறை என்ற பேதங்கள் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும். அனைவருக்கும் அவர்களது தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்பட வேண்டும். அரசியல் ரீதியான ஆட்சேர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். திறமையானவர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறானவர்களுக்கு சந்தை நடைமுறைகளுக்கேற்ப சம்பளத்தை வழங்க வேண்டும். செயற்றிறன் மிக்க அரச சேவையை ஏற்படுத்த வேண்டும். நல்ல சம்பளத்தை வழங்கினால் அனைவருக்கும் ஒரே வரி கொள்கையை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான மாற்றத்தை உருவாக்கவே நாம் செயல்படுவோம்.

05 அரச வருமானம் உயர்வடைய வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் வருமானத்தை அதிகரிப்பதற்கு இன்னும் நிறைய வழிகள் இருக்கின்றன.

06 2015/19ம் ஆண்டில், வருமான இடைவெளி வருமானத்தைப் பார்த்தே ஈடு செய்யப்பட்டது. ஆனால் இன்று நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. வருமானம் மட்டுமல்ல, செலவையும் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கம் வரி தொடர்பில் எதையும் கூறவில்லை. ஜனாதிபதியிடமிருந்து எந்த முன்மொழிவுகளும் இல்லை. வீட்டு வருமானத்தை விட செலவு அதிகமாக இருந்தால் கடன் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் வாழ்நாள் முழுவதற்கும் கடன் பெற முடியாது. இலங்கையில் கடந்த 74 வருடங்களினுள் 5 ஆண்டுகளில் மட்டுமே நேர்மறையான ஆரம்ப இருப்பு உள்ளது. அதில் இரண்டு வருடங்கள் அதாவது, 2017 /2018 காலப்பகுதியில் நிதி அமைச்சில் நாங்கள் இருந்தோம். 69 வருடங்களும் செலவு அதிகமாகும்.



### வரி இல்லாமல் மக்கள் நல அரசை முன்னெடுத்துச் செல்ல முடியாது!

**சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான**
**டளஸ் அழகப்பெரும**

01 வரி அறவிடுதல் மற்றும் அந்த நிதி எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது தொடர்பில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். இது நமது நாட்டில் இல்லை. இதனால் வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்கள் நாட்டுக்கு பணம் அனுப்புவதில்லை. எமது ஆட்சியின் கீழ் வரி செலுத்தும் மக்களுக்கு தமது பணம் எந்த வகையில் முதலீடு செய்யப்படும் என்ற உறுதிமொழியை வழங்க முடியும். இந்த வரி நியாயமானதாக இருக்க வேண்டும். வரி அறவீடு நியாயமானதாக இல்லை. சமுர்த்தி பெறும் மக்களின் முன்னேற்றத்திற்காக குறிப்பிட்ட அளவு வரி வசூலிக்கப்பட வேண்டும்.


02 அரசு வருமானம் சரிவடைந்துள்ளது. அந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டும். இதற்கு காரணமான விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். இதில் பல காரணிகள் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. இன்று வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள் வேறு கணக்குகளில் தமது பணத்தை வைப்பிடுவது ஏன்? இதற்கு அவர்களை குற்றம் சுமத்த முடியாது. இந்த குறைபாடுகளை இனங்காண வேண்டும்.

03 இந்த வரி வரம்பை இரண்டு இலட்சமாக அதிகரிப்பது நியாயமானது. ஒரு இலட்சம் வரம்பை இரண்டு இலட்சம் ரூபாயில் இருந்து தொடங்கினால் அதனால் நிவாரணம் கிடைப்பதுடன் வரி தொடர்பான மோசடிகளும் நின்றுவிடும். போதியளவு வரிகளை அறவிட்டுக் கொள்வதற்கும் அரசாங்கத்தால் முடியும். இந்த வரி மொத்த கொடுப்பனவுகள் உள்ளடங்கிய வருமானத்தில் சேர்க்கப்படுகிறது. எனவே இது நியாயமற்றது.

04 அரசு மற்றும் தனியார் துறை பணியாளர்களிடமிருந்து வரி அறவிடும் வரிக் கொள்கை இலகுவானதாகவும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். முதலீட்டாளர்கள் அல்லது தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் வரி அறவிடப்பட வேண்டும். மக்கள் கேட்காத வரிச் சலுகைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் வழங்கியதாலேயே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. இது ஒரு வெற்றிடத்தை உருவாக்கியது. சரியான முறையில் பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்படாததால் அன்னிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறை ஏற்பட்டது.

05 இந்த ஓட்டைகளை அரசு மூட வேண்டும். பணம் சேகரிக்க பல்வேறு வழிகள் உள்ளன. தற்போதைய ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்களும், நாம் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களின் மூலமும் மறைந்துள்ள பணம் வெளியே வந்தால் முழு அரச சேவையினதும் வரித் தொகையை விட அதிக பணம் சேரும். மோசடிகளை ஒழிப்பதன் மூலம், எம்மால் அதிக பணத்தை சேமிக்க முடியும். பயனற்ற திட்டங்களை நிறுத்த வேண்டும். எரிசக்தி செலவுகள் குறைக்கப்பட வேண்டும். தனியார் போக்குவரத்து வழித்தடங்களை மேம்படுத்துவதன் மூலம்தான் உலகின் வளர்ந்த நாடுகள் பணத்தை மீதப்படுத்துகின்றன. ஏனைய நாடுகளில் மக்களுக்கான போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு ஆகியவற்றின் விலையைக் குறைத்து அதிக அளவில் வரி வசூலிக்கப்படுகிறது.

06 வரி வேண்டாம் என்று யாரும் கூறுவதில்லை அல்லவா?. வரி இல்லாமல் மக்கள் நலன் அரசை முன்னெடுத்துச் செல்ல முடியாது. வரிகள் கண்டிப்பாக தேவை. என்றாலும் அடிப்படை பண்புகள் இருக்க வேண்டும்.



### வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை வரியாகச் செலுத்துகிறார்கள்!

**மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர்**
**டில்வின் சில்வா**

01 எமது வரிக் கொள்கை தவறானது. அது சிக்கலானது. எனவே அது இலகு படுத்தப்பட வேண்டும். அது தாங்கிகொள்ள கூடியதாக அமைய வேண்டும். எமது ஆட்சியில் இதனை இலகுப்படுத்தி மக்களால் தாங்கிக் கொள்ள முடியுமானவாறு வரிக் கொள்கையினை கடைப்பிடிப்போம். தற்போதைய உழைக்கும் போது வரி செலுத்தும் முறை மிகவும் அநீதியானது. மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே உழைக்கும் போது செலுத்தும் வரி மாற்றப்பட வேண்டும். வரிக் கொள்கையை நியாயமானதாகவும் இலகுவான ஒன்றாகவும் ஆக்குவதே எமது நோக்கமாகும்.

02 கடந்த காலங்களில் பல்வேறு அரசுகள் கடத்தல்காரர்களுக்கு வரிச்சலுகை வழங்கின. இன்றும் அநீதியான முறையில் வரிச்சலுகை வழங்கப்படுகிறது. அதன் பிறகு சாமானிய மக்கள் மீது வரிச்சுமை திணிக்கப்படுகிறது. இந்த நேரத்தில், சரிவடைந்த உற்பத்தி மற்றும் வணிகங்கள் மீட்கப்பட வேண்டும். அதற்கு வியாபாரம், உற்பத்தி செய்பவர்களுக்கு சில நிவாரணங்களை வழங்க வேண்டும். அரசாங்கம் கூறுவதைப் போல் வரி குறைவடையப் போவதில்லை. நியாயமாக அறவிட்டால் கண்டிப்பாக வரி கிடைக்கும். எனினும் இங்கு பிரச்சினை எழுவது நண்பர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கி, வரிச் சுமையினை மக்கள் மீது திணிப்பதனாலாகும்.

03 இந்த வரி வரம்பு எவ்வளவு என்பதை பேசி முடிவு செய்ய வேண்டும். வரி அறவிடும் நிறுவனம், அரச வருமானத்துடன் கலந்தாலோசித்து இது தீர்மானிக்கப்பட வேண்டும். ஒரு இலட்சம் ரூபாய் வரம்பை எவ்வாறு மாற்றுவது என்பதை பொருளாதார நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பிறகே முடிவு செய்ய முடியும். இன்று ஒரு இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுபவர்கள் தமது வருமானத்தில் மூன்றில் ஒன்றை வரியாகச் செலுத்துகிறார்கள். இதனால் எமது தொழில் செய்வோர் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

04 அரச அல்லது தனியார் துறையினர் என யாராக இருந்தாலும் வருமானம் ஈட்டுப வர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். எனினும் அது தாங்கிக் கொள்ளக்கூடிய நியாயமானதாக இருக்க வேண்டும். தாம் செலுத்திய வரி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இருந்தால் அனைவரும் விருப்பத்தோடு வரி செலுத்துவார்கள். அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

05 அரசின் வருமானம் குறைவது வரிப் பிரச்சினையால் மட்டுமல்ல. வரியால் மாத்திரம் நம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. நாட்டின் வருமான வழிகள் அதிகரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், பிச்சைக்காரர்களுக்கு வரி விதிப்பது போன்று நாட்டை உருவாக்க முடியாது. மத்திய வங்கியின் கணக்குகளை சமநிலைப்படுத்துவது மட்டுமே நோக்கமாக இருக்கக்கூடாது.

06 அரசாங்கம் வரி அறவிடவே வேண்டும். வரி அறவிடக் கூடாது என்று நாம் ஒருபோதும் கூறவில்லை. அது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் வரி வசூலித்தாலும், யாரிடம் இருந்து வரி வசூலிப்பது என்பதுதான் கேள்வி. எவ்வளவு வரி விதிப்பது என்ற வாதத்தை எழுப்ப வேண்டும். மக்கள் மீது அரசு விதிக்கும் வரிகள் எளிமையாகவோ அல்லது நியாயமாகவோ இருந்தால், அரசுக்கு வருமானம் அதிகமாக இருக்கும். அதேபோன்று வசூலிக்கப்படும் வரிப்பணத்தை மீண்டும் மக்களுக்கே பயன்படுத்தினால், வீண்விரயம், மோசடிகள் இல்லாமல் இருந்தால், மக்கள் தாமாக முன்வந்து வரி செலுத்த முற்படுவார்கள்.



### இலவசமாக வழங்கும் சேவைகளை நிறுத்தி அந்த பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்!

**தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான**
**மனோ கணேசன்**

01 ஒரு அரசு செயல்படுவதற்கு வரி விதிப்பு இன்றியமையாதது. வரி விதிக்கக் கூடாது, எங்கள் ஆட்சியில் வரி நீக்கப்படும் என்று கூறுவது நடைமுறைக்கு புறம்பானது. குறைந்த வருமானம் பெறுவோரையும், ஏழைகளையும் துன்புறுத்தாத வகையில் வரி வசூலிக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

02 மக்களுக்கு சார்பான அரசாங்கமாக இருந்தால் மறைமுக வரிகளை அதிகரித்து நேரடி வரிகளைக் குறைக்க வேண்டும். நாம் வாங்கும் தீப்பெட்டிக்கும் வரி விதிக்கப்படுகிறது. விலைக்கு வாங்குபவர் கோடீஸ்வரராக இருந்தாலும் அன்றாட வருமானம் பெறுபவராக இருந்தாலும் அதை ஒரே விலையில் ஒரே வரியுடன்தான் வாங்குகிறார். இது நியாயமற்றது. தமக்கு கிடைக்கும் வருமானத்திற்கு அமைவாகவே வரி அறையிடப்படல் வேண்டும். நாம் அவ்வாறான செயற்பாட்டையே கடைப்பிடிக்க வேண்டும். அதை போன்று தொழிலாளர்களின் சேவைக்கு உரிய சம்பளம் கிடைக்க வேண்டும். தமக்கு வருமானம் இல்லையென்றால் மக்கள் எவ்வாறு வரி செலுத்துவது? எனவே, நாட்டின் ஆட்சியை நடத்துவதற்கு சம்பளம் வழங்குவது இன்றியமையாததாகும்.

03 இந்த ஒரு இலட்சம் வரம்பை நாம் மாற்ற வேண்டும். பத்து வருடங்களுக்கு முன்பிருந்த ஒரு இலட்சம் ரூபாவின் பெறுமதி இன்றில்லை. பணவீக்கத்தின் அடிப்படையில் வரிவிதிப்பு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். பணவீக்கம் வேகமாக மாறுவதால், இந்த வரம்பை உறுதியாகக் கூற முடியாது. தர்க்கரீதியாக முடிவெடுப்பது மக்கள் சார்பான அறிவார்ந்த ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். ஏழை மக்களால் தாங்கும் வகையிலும், நாட்டின் ஆட்சி சரிவடையாத வகையிலும் வரி விதிப்பு முறை உருவாக்கப்பட வேண்டும்.

04 அரச துறையைப் போன்று தனியார் துறையினரும் நாட்டு குடிமக்களாகும். அவர்கள் அனைவரும் நாட்டின் பொதுச் சேவைகளை அனுபவிக்கிறார்கள். தனியார் மற்றும் பொதுத் துறை என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் வரி செலுத்தும் உரிமை உண்டு. இதுவரை இலவசமாக வழங்கி வந்த சேவைகளை படிப்படியாக குறைத்து நிறுத்தும் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். ஒரே இரவில் ஒரே மாதத்தில் இந்த விடயங்களை செய்ய முடியாது. முறைப்படி இலவசமாக வழங்கும் சேவைகளை குறைத்து அந்த பணத்தை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்த வேண்டும். இதன் ஊடாக மக்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்த வேண்டும்.

05 அரசின் வருமானம் வரிகள் மூலம் கிடைக்கிறது. மேலும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் இலாபம், வெளிநாட்டு உதவிகள். நாம் கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். நாடு வளர்ச்சியடைந்து தனியார் மற்றும் அரச துறைகள் வலுப்பெற்றால் நாட்டின் வருமானம் சிறப்பாக இருக்கும். மக்கள் வாழ வாய்ப்பளிக்க வேண்டும்.

06 வரியில்லாமல் அரசாங்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதை அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். சமுர்த்தி பட்டியலில் சுமார் இரண்டு லட்சம் பேர் உள்ளனர். இந்தப் பட்டியலைத் தயாரிப்பதில் பெரும் பிரச்சினைகள் உள்ளன. சில சமயங்களில் உதவி தேவைப்படுபவர்களுக்கு அது கிடைப்பதில்லை. இது அநியாயமாகும். சமுர்த்தி வழங்குவதற்காக மின்சாரப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான ரீதியில் குறைந்த வருமானம் பெறுவோரை அடையாளம் காண வேண்டும்.

# நெஞ்சை உலுக்கிய நிலநடுக்கம்



நள்ளிரவில் ஆழ்துயிலில் துயரங்கள்
நடுங்கியவேளை உதிர்ந்தன உயிர்கள்
தள்ளிவீழாத அடுக்குக் கட்டடங்கள்
தகர்ந்தன சுற்றிலும் புழுதி மூட்டங்கள்

ஆண்கள் பெண்கள் பேதங்கள்
ஆய்ந்தறியத் தெரியாத அனர்த்தங்கள்
கண்ணிமைக்கும் நேரத்து சோகங்கள்
கண்ணீர் நிறைக்கும் இதயங்கள்

ஆயிரங்கள் தாண்டிவிட்ட மரணங்கள்
ஆறாயிரத்தை தொட்ட காயங்கள்
உயிர்கசியும் பொழுதின் அவலங்கள்
உறவுகளோடு இடிபாடுகளுக்குள் உடலங்கள்

இதுபோல் துயரம் இன்னொன்று
இறைவா வேண்டாம் இனியென்று
பொதுவாய் கேட்போம் வரமொன்று
பொங்கும் விழிநீர் துணை நின்று

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்




# உலகின் அழிவு

பூகம்பத்துக்கான தயார்ப்படுத்தல்
செதிலிறகுகள் சிறகடிக்கின்றன
கூட்டுப் புழுக்களின் தன்னடக்கம்
வானவில் தரை இறங்குகிறது

பிறப்பொக்கும் உயிர்களுக்கு
வியத்தகு இயல்புகள்
ஆர்ப்பரிக்கும் கரப்பான் பூச்சிகளாக
சுயதம்பட்ட மனிதர்களின்
மேலாதிக்க திணிப்புகளில்
சீரழிகிறது சமுதாயம்

கருவறை உதைக்கையில் நிலவறை
திறந்து கொள்கிறது
இரண்டக வாழ்வில் இயல்புநிலை
உடைக்கும்
வளவர்களின் வாய்வீச்சில்
கலப்படச் சொற்கள்
கலகம் செய்கின்றன

நிர்வாணம் மறைக்கும் கந்தல் துணியில்
பட்டுச்சரிகை மினுக்குகிறது
பட்டுப்பூச்சி மரணிக்கிறது
ஒட்டுத் துணியும் இல்லா ஏழை
வறுமைத் தீயில்
புதிதாய் எழுகிறான்

கனகசபாபதி செல்வநேசன்
அல்வாய்

# நிலநடுக்கம்

துருக்கி சிரியா
துயரால்
துவண்டு போனேன்

உள்ளம்
உருகி ஓடியது

நொடிப் பொழுதில்
உயிர்கள்
பயிர்களானதே!

தரையில்
மீனாய் துடிதுடித்த உறவுகளே!

தூக்கத்தில்
தூங்கியவர்களே!

உலகம்
கலங்கியது

கண்ணுக்கினிய
நகரங்கள்
நன்றாய் நொருங்கிப் போனது

ஐம்பது வருடங்களுக்கு
தேவையான கல்லறைகள்
ஓரிரு நாட்களுக்குள் தேவைப்பட்டது

பூகம்பமே!
நீ
சொல்ல வருவது என்ன?

இரக்கமான
உள்ளங்களை படைக்கவா!
படிப்பினைகளை
ஞாபகமூட்டவா!
இறைவனை அழைக்கும்
சத்தங்களை கேட்கவா!
மரணிக்க போகும் மனிதனே!
அனர்த்தங்களும் அழிக்கையில்
யுத்தங்களும் தேவைதானா?

இப்படிக்கு
கையொப்பம்
நிலநடுக்கம்

மூதூர்
றிஸ்வின்.

# சுய தம்பட்டம்



மழை முகில்களோ
வானில் எங்கும்
ஆனால் மழை எங்கே?

என்ன ஆனது
இயற்கைக்கு?

அனைத்தும்
எதிர்மாறாகவே
நடக்கிறது?

ஒரு வேளை
இந்த உலகில்
வாழும் மனிதர்களை,

இயற்கைக்கு
பிடிக்க வில்லையோ?

எல்லாம்
எதிர்மாறாகவே
நடக்கிறது

அப்படி என்றால்
இதுதான். இந்த
உலகின் முடிவாக
இருக்க வேண்டும்.

வின்னவன்.
குமுழமுனை.

# பொய்யழகு

யாரோ!
முகம் கழுகிவிட்டு
கண்ணாடி பார்த்ததும்
முகத்தை பிடிக்கவில்லை

கூடுதலான நீரில்
குளித்து விட்டு
கண்ணாடி பார்த்தும்
அழகு போதாதே!
மனம் பாரித்தது

நன்றாய்
துடைத்தும்
முகத்தின் தோலை தேய்த்தும்
சரி வரவேயில்லை

முகத்தை முற்றாய் மறைத்து
எதை எதையோ பூசியும்
அழகு போதாதே!

மீண்டும்
முயற்சிகள்
இப்போது
கொஞ்சம் மனம் ஆறுதல்

அலறி பூவாக்கிய முகத்தில்
ரோஜா பூவின் நிறமும்
கலந்தால்
புதிய
அழகு தோன்றுமே!

ஓ
அவசர அவசரமாய்
பசைகளும்
தூள்களும்
எண்ணைகளும்
அழகை வளர்த்து
கனியாக்கி விட்டது

எல்லோரும் பாருங்கள்
மொனாலிசாவா?
மன்னிக்கவும்
எல்லோராவா?
போரழகுதான்
பேரழகேதான்

எல்லோரும்
கை தட்டுங்கள்
கணக்குப் பாருங்கள்
சொந்த முகம்
எத்தனை படலங்களின்
உள்ளே புதைந்து உள்ளது?



மூதூர் றிஸ்வின்

# கரு நிற பகல்கள்

கருமை...
கருமை! சிறு
புள்ளி புள்ளி என
ஆங்காங்கே, துளி பல
பூத்த வெண்மை...

கருநிற பகல்கள்,
குளிர்க்கும் இருட்டுக்குள்
ஒளிர்ந்தது அதுவாக...
குறை கொண்ட கண் போல
ஒடிந்து என் பார்வை ஒட்ட!

ஒரே சிறு ஒட்டை ஆங்கு
வேறொன்றும் நட்பில் இல்லை
ஒடுங்கிய இரு கண்கள்,
ஓராயிரம் கற்றைக் கும்பல்!

ஆடை பூக்கும் பூஞ்சனப்பற்றை,
பார்வையில் பூத்து?
அறையெங்கும் வெளிர்சாயம்!
தூரல் ஒளியாய் பெய்கிறதோ?

ஓர் நாள் பெய்த
அக்னித்தூரல் மீண்டும்
ஊர்மேல் விழுகிறதோ?

ஷஹீ சாதிக்



# சாலை விபத்து

சாலைக்கு தெரியாது
நான் சாக
பிறந்தவன்
என்று ....

என் எதிரே?
வரும் கனரக
வாகனத்திற்கு
தெரியாது நான்
வாழ பிறந்தவன்
என்று....

என்னை விட்டு
பிரியா துடிக்கும்
இதயத்திற்கு
தெரியாது நான்
பிரிய
போகின்றேன்
என்று.....

இன்று என்
மேல் குருதி
பெருக்கெடுக்க
இறந்து கிடக்கின்றேன்
நடு வீதியில்
விதியற்ற
அனாதை போல்.....

அருளானந்தம் ஞா.பிரகாஷ்
கந்தப்பளை

# நினைவுகளின் தினம்

நினைவுகளை பேணவென
நினைவுகளை வழங்கவென
நினைவுகளை மீட்கவென
நினைவுகளால் வாழவென
நினைவுபடுத்தும் தினம்

நினைவுகள் பேசியதை
நினைவுக்குரியவரிடம் கூறும்
நினைவுநாள் மணவிருப்புநாள்
நினைவுகள் நிஜங்களாகும் நாள்
நினைவே வாழ்வாகும் பெருநாள்

இணுவில் வாகீசன்

# கறுப்பு நிறத்தழகி



கறுப்பு நிறத்தழகி
பல வர்ண நிறத்தழகி

முகத்தில் உண்டு மாய அழகு
உதட்டில் உண்டு ரோஜா மலரின் அழகு

வெண் சாம்பல் மீசை வதனம் உண்டு
கண் தீண்டும் பாசை கரு விழியும் உண்டு

பிஞ்சு காலில் கூர் நகமும்,
சின்ன வாயில் ஆணி வேர் பல்லும்,

இரையின் உயிரை வெல்லும்,
இவளின் அணிகலன்கள்

"மியாவ்" இவள் தாய்மொழி
பெரிய புலியும் இவள் வழி
பெருச்சாளி எலி இவளை கண்டால் ஒழி
இல்லையேல் உனக்கு உண்டு வலி
இவளுக்கு இல்லை எதற்கும் கிலி
இவள் பாய்ச்சலில் ஆகும் எல்லாம் பலி
இவளுக்காகவே இக்கவி

வன்னிக்கவி லக்சன்

# படைப்பின் விசித்திரம்

மலரும் கொடியில்
உதிரும் பூ
வாழ்க்கையின் தத்துவம்

மகிழும் மனத்தில்
துயரும் இருக்கும்
அடைவாய் பக்குவம்

ஓடும் நதிக்கு
கடலின் நடுவே
கிடைக்கும் அடைக்கலம்

ஓடும் வாழ்வில்
தடுக்கி விழுந்தால்
நமக்கோ உயிர்ப்பயம்

புலர்ந்தால் மடியும்
பனியின் துளிக்கோ
வாழ்க்கைப் பூக்களம்

பிறந்தால் மடியும்
வரையில் நமக்கோ
வாழ்க்கைப் போர்க்களம்

அஃறிணையான
உயிர்கள் கொண்ட
வாழ்வோ உயர்தரம்

உயர்திணையான
மனிதர்கள் எமது
வாழ்வோ கீழ்த்தரம்

இருப்பதைக் கொண்டு
சிறப்புடன் வாழும்
இயற்கையில் யாவும்
இறைவன் அதிசயம்

இருப்பதை விட்டுப்
பறந்திட நினைக்கும்
மனிதர்கள் நாமவன்
படைப்பின் விசித்திரம்

மெய்யன் நடராஜ்

# விருந்தோம்பல் துறை நிபுணர்களின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு SHMA ஆதரவு

உலகின் பழைமையான மற்றும் முதல் ஹோட்டல் முகாமைத்துவ பல்கலைக்கழகமான *University Ecole heteliere de Lausanne* இன் *EHL* நிபுணத்துவ டிப்ளோமா கற்கையினூடாக தொழிற்பயிற்சியை (*VET*) வழங்குவதற்காக ஏ பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிலல் நிலையமான சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமி (*SHMA*), நெஸ்லே லங்கா பிஎல்சியுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. துறையின் வளர்ந்து வரும் இளம் வயதினரின் திறன்களை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கும் நடவடிக்கைகளுக்கமைய இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.



இந்த உடன்படிக்கை பவர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் மற்றும் நெஸ்லே லங்கா பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளரான ஜேசன் அவன்சினா ஆகியோரிடையே 2022 டிசம்பர் 12ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் பவர் மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனங்களின் அதிகாரிகளும் பங்கேற்றிருந்ததுடன், இலங்கை சமையல்கலை நிபுணர்கள் குழாம் மற்றும் இலங்கை விருந்தோம்பல் பட்டதாரிகள் சம்மேளனம் (*SLHGA*) ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

உலகின் மாபெரும் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு நிறுவனமாக திகழ்வதுடன், இலங்கையில் 115 வருடங்களுக்கு மேலாக, ஆரோக்கியமான குடும்பங்களை பேணுவதற்காக ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் வழங்கி வருவதுடன், தொழிற்துறையைச் சேர்ந்த *EHL* நிபுணத்துவ டிப்ளோமா தொழிற்பயிற்சி பங்குபற்றுநர்களுக்கு தமது திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், சிறந்த விருந்தோம்பல் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளை வழங்குவதிலும் முழு அனுசரணையை வழங்கி பங்களிப்பு வழங்க முன்வந்திருந்தது.

# Brandix மனுசத்கார திலின 2022 இனூடாக பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

*Brandix Apparel Ltd.* இனால் *Brandix* குடும்பத்தின் 16,824 பாடசாலை மாணவர்களுக்கு காகிதாதிகள் மற்றும் பாடசாலைப் புத்தகப் பைகள் அடங்கிய அத்தியாவசிய பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தன. புதிய கல்வி ஆண்டுக்கு அவசியமான வகையில், “மனுசத்கார திலின” 2022 எனும் திட்டத்தின் கீழ் இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போதைய காகிதாதிப் பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்படும் சூழலில், எமது அணி அங்கத்தவர்களுக்கு உதவும் தேவையை புரிந்து கொண்டு, 10,933 *Brandix* ஊழியர்களுக்கு இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டிருந்தது.

அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதரவளிக்கும் *Brandix* இன் ஒப்பற்ற செயற்பாடுகளின் அங்கமாக இந்த அன்பளிப்பு அமைந்திருந்தது.

2022 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டம், தொடர்ச்சியான 7 ஆவது வருடமாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், முன்பள்ளி முதல் தரம் 13 வரையில் பயிலும் சிறுவர்களுக்கு காகிதாதிப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டிருந்தன.

*Brandix Apparel* இன் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு குழுமத் தலைவர் மலிகா சமரவீர கருத்துத் தெரிவிக்கையில், “புதிய பாடசாலைக் கல்வியாண்டின் ஆரம்பம் என்பது சகல மாணவர்களாலும் அதிகளவு எதிர்பார்க்கப்படுவதுடன், விறுவிறுப்பானதாகவும் அமைந்துள்ளது.

ஆனாலும், எமது நிறுவனத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ள எமது ஊழியர்கள், தமது சிறுவர்களுக்கு இந்த அத்தியாவசிய பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் பெருமளவு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதை உணர்ந்துள்ளோம்.

எமது சமூகத்தாரின் நலனைப் பாதுகாப்பது என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், இவ்வாண்டின் மனுசத்கார திலின நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, சிறுவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து தம்மை விருத்தி செய்து கொள்வதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.” என்றார்.

# உயிர்த்திணிவு தொழில்நுட்ப கொதிகலன் திட்டத்தில் முதலீடு செய்யும் நெஸ்லே லங்கா நிறுவனம்

இலங்கைக்கு நன்மையான செயல்பாடுகளை ஆற்றுகின்ற தனது பயணத்தின் தொடர்ச்சியாக, நெஸ்லே லங்கா நிறுவனமானது, நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் நிலைபேற்றியல் மீதான தனது வலுவான கவனத்துடன், மேலும் முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனம், குருநாகலில் உள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில் ஒரு உயிர்த்திணிவு தொழில்நுட்ப கொதிகலன் திட்டத்தில் ரூபா 1 பில்லியனிற்கும் மேலான தொகையை முதலீடு செய்யவுள்ளது. 2050 ஆம் ஆண்டுக்குள் தனது மதிப்புச் சங்கிலி முழுவதும் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான நிறுவனத்தின் முயற்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை இது வழங்கும்.

மக்களுக்கு மட்டுமின்றி, பூமிக்கும் சாதகமான விளைவை ஏற்படுத்தும் விதத்தில் தனது செயல்பாடுகளை நிலைபெறச் செய்வதில் நெஸ்லே உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, நிறுவனம் 2025 ஆம் ஆண்டில் 20% மற்றும் 2030 ஆம் ஆண்டில் 50% பச்சைவீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதுடன், ஈற்றிலே 2050 ஆம் ஆண்டளவில் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் நோக்கில், பண்ணையில் இருந்து ஆரம்பித்து தயாரிப்பின் பாவனை முற்றுப்பெறும் வரை ஒட்டுமொத்த மதிப்புச் சங்கிலி முழுவதும் வியாபித்துள்ள ஒரு விரிவான வேலைத்திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த உயிர்த்திணிவு தொழில்நுட்ப கொதிகலனின் கட்டுமானமானது இலங்கையில் நெஸ்லே நிறுவனத்தில் நிலைபேற்றியல் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை இலக்காக மாறியுள்ளதுடன், இதன் விளைவாக உற்பத்தியில் பச்சைவீட்டு வாயு வெளியேற்றம் அண்ணளவாக 37% ஆல் குறைக்கப்படும்.

1984 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் குருநாகல் தொழிற்சாலையானது நாட்டில் விற்பனை செய்யப்படும் நெஸ்லே தயாரிப்புகளில் 90% க்கும் அதிகமானவற்றை உற்பத்தி செய்து வருகிறது.

# இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் Senaro GN125 மோட்டார் சைக்கிள்

இலங்கையில் மோட்டார் சைக்கிள் துறையில் ஒரு திருப்புமுனையை *Senaro GN125* மோட்டார் சைக்கிள் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இந்த மோட்டார் சைக்கிளால் எமது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையவுள்ளது.



இதன் மூலம் 200க்கும் மேற்பட்ட நேரடி வேலைவாய்ப்பு மற்றும் பல மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் 35% உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாகங்களை கொண்டு தயாரிக்கப்படுவதால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த வணிக வாய்ப்புகளை உருவாக்குகிறது.

இந்த *Senaro GN125* மோட்டார் சைக்கிளை உள்நாட்டில் தயாரிக்கப்படும் உதிரிப்பாகங்களை மேலும் அதிகமாக சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு இறக்குமதிகளை குறைப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்த பங்களிப்பு செய்வதோடு நாணய வெளியேற்றலையும் தடுக்கிறது.

*Senaro GN125* மோட்டார் சைக்கிள் சந்தையில் ரூ. 590,000 விற்கப்படுவதோடு 60,000 கி.மீ உத்தரவாதமும் வழங்கப்படுகிறது. இதற்கான உதிரிப்பாகங்கள் கையிருப்பில் உள்ளதோடு தீவு முழுவதும் விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை வழங்குனர்கள் மற்றும் பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். செனாரோவின் உற்பத்திகள் எதிர்காலத்தில் அதன் தயாரிப்புகளுடன் உலகளாவிய சந்தைகளை ஆராய்ந்து உருவாக்குவதாகும்.

# செலான் ஊக்குவிப்புத் திட்ட அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு பெறுமதிவாய்ந்த கைக்கடிகாரம்

சகல செலான் வேர்ள்ட் மாஸ்டர் கார்ட்தாரர்களுக்காகவும் முன்னெடுக்கப்பட்டிருந்த பிரத்தியேகமான ஊக்குவிப்புத் திட்டத்தின் வெற்றியாளர் தெரிவு, செலான் டவர்ஸில் அண்மையில் இடம்பெற்றது.



தன்னியக்க தெரிவினூடாக வெற்றியாளராக எஸ். தில்லைநாதன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மேல் மாகாண வருமானவரி திணைக்களத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த வெற்றியாளர் தெரிவு இடம்பெற்றது.

இதன் போது 2 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான பெறுமதி கொண்ட ஒமெகா கடிகாரத்தை பெற்றுக் கொண்டார். செலான் வங்கியின் அதிகாரிகள் முன்னிலையில் வெற்றியாளர்களுக்கு வெற்றிப் பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன.

ஒமெகா என்பது சுவிஸ் கைக்கடிகார வர்த்தக நாமமாக அமைந்திருப்பதுடன், சிறப்பு, புத்தாக்கம் மற்றும் செம்மையானநுட்பம் ஆகியவற்றுடன், நீண்ட கால வர்த்தக நாம வரலாற்றையும் கொண்டுள்ளது.

கடந்த பண்டிகைப் பருவ காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான அத்தியாவசிய அட்டையாக திகழும் செலான் கார்ட்ஸ், கிறிஸ்மஸ் சொப்பிங்கில் ஈடுபட்ட செலான் வேர்ள்ட் மாஸ்டர்கார்ட் தாரர்களுக்கு வெகுமதி வழங்கும் நோக்குடன் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

2022 ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 15 ஆம் திகதி வரை ரூ. 1 மில்லியன் வரை மொத்தமாக செலவிட்ட அட்டைதாரர்களுக்கு வெற்றியீட்டுவதற்கு வாய்ப்பை வழங்கியிருந்தது.



# ‘Top50 Women Global Economic Forum மற்றும் Top50 Global Professional & Career Women Awards 2023 அறிமுகம்

இலங்கையின் பொருளாதார மீட்டெடுப்பின் முன்னணியில் உள்ள பெண்களின் வர்த்தகத் தலைமையை நிலைநிறுத்தி சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (*IFC*) மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இணைந்து பணிபுரியும் நிர்வாகத்திலுள்ள பெண்களுடன் (*WIM*) *‘Top50’ Women Global Economic Forum* மற்றும் *Top50’ Global Professional & Career Women Awards 2023* ஐ அறிமுகப்படுத்தியது.

கொழும்பில் 2023 ஜூன் 15 – 17 வரை 3 நாட்கள் இடம்பெறும் இந்நிகழ்வில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் திறமைகளை உள்ளடக்கிய இலங்கைப் பெண்களுக்கு உலகளாவிய வலையமைப்பு வாய்ப்புக்களைத் திறந்து அவற்றைப் பெற்றுத்தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த பரிசளிப்பு விழாவானது *IFC* யின் தொடர்ச்சியான 8ஆவது ஆண்டாகும். மேலும் *IFC DFAT* பணிபுரியும் பெண்கள் (*Women in Work*) நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து 5ஆவது ஆண்டாக நடாத்துகிறது. தொழில், வணிகம் மற்றும் அன்றாட வாழ்வில் சிறந்து விளங்கும் பெண்களுக்கு அங்கிகாரம் வழங்கும் வகையிலும் ஏனையோரை ஊக்குவிக்கும் வகையிலும் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

2011ஆம் ஆண்டு 5 விருதுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த *‘Top50’* விருதுகள் வங்கி மற்றும் நிதி, விருந்தோம்பல், ஊடகம், சட்டம், சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலிகள் போன்ற பரந்தளவிலான தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 580க்கும் மேற்பட்ட பெண் தலைவர்களை அங்கீகரித்துள்ளது. இவ்வாண்டு நிகழ்வில் பொருளாதார மீட்டெடுப்பில் பெண்கள் வகிக்கும் முக்கிய நிலை என்ற கருப்பொருளில், இரண்டு நாள் மன்றமும் இடம்பெறவிருக்கிறது. மேலும் இதில் சிறந்த உள்ளூர் மற்றும் சர்வதேச பேச்சாளர்கள் மற்றும் அரச, பொது மற்றும் தனியார் துறை சிவில் சமூகங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பங்குதாரர்களையும் கொண்டு வருகிறது. பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் வணிகத் தலைமையை மேம்படுத்துவதில் தனியார் துறையின் பங்கு என்ற தலைப்பில் கவனம் செலுத்தவுள்ளது.

# சிறந்த பெண் ஏற்றுமதியாளருக்கான தங்கவிருது விந்தியா பெரேராவுக்கு

இலங்கையின் அடையாளத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்லும், மாணிக்கக் கற்களை அரிந்து பட்டை தீட்டும் கலையின் முதன்மை நிறுவனமான வரையறுக்கப்பட்ட பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி விந்தியா பெரேராவுக்கு தேசிய ஏற்றுமதிச் சபை (*NCE*) ஏற்பாடு செய்த 2022 ஆம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர்களுனக்கான விருது விழாவில் சிறந்த பெண் ஏற்றுமதியாளருக்கான தங்க விருதை வென்றுள்ளார்.

மேலும், திருமதி விந்தியா பெரேராவின் தலைமையிலான பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனம் உள்ளிட்ட இரண்டு நிறுவனங்கள் இதே விருது விழாவில் இரட்டை வெங்கலப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேற்படி விருது விழா கொழும்பு சங்ரீலா ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

'இலங்கை நாமத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்லும் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் ஆக்கத்திறன் மிக்க மாணிக்கக் கல் வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும் எமது அடையாளத்தை உலகெங்கும் பதியச் செய்வதற்கும் தொடர்ந்து உழைத்து வருகின்றோம். எமது அனைத்து உற்பத்திகளும் உயர் தரத்திலானவை. இப்பெருமை மிகு வெற்றிக்கு பங்களித்த எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கும், வழங்குநர்களுக்கும், பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய தாயாரான பிரிலியன்ட் கட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் மாலனி பொல்கம்பொலவிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பும் ஆசிர்வாதமும் எனக்கு பெரும் ஊக்கமளிப்பதாக உள்ளது' என திருமதி விந்தியா பெரேரா தெரிவித்தார்.

# கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச பாடசாலை

பிரித்தானிய சுயாதீன பாடசாலைகளின் சிரேஷ்ட தூதுக்குழுக்கள், கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச பாடசாலையொன்றை அமைப்பது தொடர்பில், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் கொழும்பு துறைமுக நகரத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுவதற்காக, இம்மாத தொடக்கத்தில் கொழும்பு துறைமுக நகரத்துக்கு விஜயம் செய்தனர்.



இந்த பாடசாலைகள் 16 ஆம் நூற்றாண்டு வரை பின்செல்லும் ஒரு வளமான பாரம்பரியம் மற்றும் கல்வியாளர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் சர்வதேச கூட்டாளர்களின் பல்வேறு சமூகத்தின் பக்கபலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

மேலும், மாணவர்களின் சிறந்த சாதனைகள் மற்றும் *Russell Group* இல் உள்ள மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களில் நுழைவு அனுமதி மூலம் இணை பாடத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றில் இவை சிறந்து விளங்குகின்றன.

கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ள சர்வதேச பாடசாலையானது, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா போன்றவற்றில் உள்ள விடுதிப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் தெற்காசிய பிராந்தியத்தின் செல்வந்த சமூகத்தை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளுடன் சர்வதேசமயமாக்கல் மீது இலங்கை கொண்டுள்ள அர்ப்பணிப்பை நிரூபிப்பதாக அமையும்.

இலங்கையின் இறையாண்மை பிரதேசத்தில் 2.69 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை சேர்த்துள்ள கொழும்பு துறைமுக நகரம், இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு நிதியுடனான அபிவிருத்தித் திட்டமாகும்.

இத்திட்டம் முடிவடைந்தவுடன் மொத்த முதலீடு 15 பில்லியன் அமெரிக்க டொலர் ஆக அமையும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையானது கொழும்பு துறைமுக நகரத்தில் ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மஞ்சரி சிறுகதை

# துன்பத்தின் முடிவு

தேவகி தனது மகள் பூர்ணிமாவிடம் கூறினாள், “பிள்ளை நான் தோட்டத்துக்கு போகிறேன். இன்றைக்கு தோட்ட வேலைக்கு முருகனுடன் மூன்று பேர் வருகிறார்கள். இன்றைக்கு அவர்கள் வந்தால் வேலை முடிந்து விடும். மழையும் தொடங்கப் போகுது. மிளகாய் கன்று நட வேண்டும். நான் அதுக்குள்ள போயிட்டு வாரன் மகள்.” என்றாள்,

“அம்மா நான் அவர்கள் நாலு பேருக்கும் தேநீர் தயாரிக்கிறேன். நீங்கள் வந்து எடுத்துக் கொண்டு போங்கோ” என்றாள்.

தேவகிக்கு நாற்பத்து ஐந்து வயது இந்த மாதத்துடன் முடிகிறது. தேவகி வருடம் முழுவதும் தோட்ட வேலைகள் செய்வதனாலும், எல்லா இடங்களுக்கும் நடந்தே செல்வதனாலும் அவரது உடல் ஆரோக்கியமாக இருந்தது. வயது முதிர்ச்சியினாலும், வேதனைகளாலும் அவர் கொண்டிருந்த கவலைகள் அவரது தலைமயிரை வெண்மையாக்கி இருந்தது. ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொண்டு எதிர்நீச்சல் அடிக்க வேண்டும் என்ற அவரின் தீர்மானம் அவரை சுறுசுறுப்பாக வைத்திருந்தது. தேவகி கறுப்பானவர். ஆனால் அவரது முகம் அம்சமாகவும் பார்ப்போரைக் கவரக்கூடியதாகவும் இருந்தது. சுருண்ட தலைமுடியும் அவரது தோற்றத்துக்கு மெருகூட்டியது.

தேவகி தனது தோட்டத்துக்கு நடந்து சென்றார். இந்தத் தோட்டம் அவளுக்கு பெற்றோரிடமிருந்து சீதனமாக கிடைத்தது. இரண்டாயிரம் கண்டு என்பது சுமார் பத்து பரப்பளவு உள்ள பண்படுத்தப் பட்ட விவசாய நிலமாகும். தேவகி குன்றூரிலேயே வாழ்ந்து வந்தார். குன்றூர் முழுவதும் வளம் நிறைந்த செம்மண்ணால் நிறைந்திருந்தது. தேவகியின் நிலத்தில் பணப் பயிராக புகையிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும்.

அதனை விட அவரது தோட்ட நிலத்தில் எல்லா மரக்கறி வகைகளையும் பயிர் செய்ய முடியும். மிளகாய், கத்தரி, வெண்டி, பயிற்றங்காய், பாகல், புடலங்காய், கரட், பீட்ரூட், உருளைக் கிழங்கு போன்ற பல்வேறு பயிர்களை பயிரிடக்கூடிய விவசாய நிலம் அது. தேவகி இவ் வருடம் பருவ மழை ஆரம்பமாவதற்கு முன்னர் மிளகாய் கன்று நடுவதற்கு தீர்மானித்திருந்தார். அதற்காக சில நாட்களுக்கு முன்னர் தான் வேலையாட்களை கொண்டு தோட்டத்துக்கு ஒரு லொறி மூலம் இயற்கை உரமான மாட்டெருவை கொண்டு வந்து போட்டார். அதனைப் பரவி தோட்டத்தை கொத்துவித்து மிளகாய் கன்று நடுவதற்கு வசதியாக நிலத்தை மட்டமாக்கி பாத்திகளை உருவாக்க வேண்டி இருந்தது. இதனை தோட்டம் கட்டுதல் என்று கூறுவர். இப்பொழுது தோட்டம் கட்டுவதற்காகவே வேலையாட்கள் வருவதாக மகளிடம் கூறியிருந்தார். அதனை பார்ப்பதற்காகவே தேவகி மகள் பூர்ணிமாவிடம் சொல்லிவிட்டு தோட்டத்துக்கு செல்கிறார்.

அப்போது அவர் மனம் கடந்த கால வாழ்க்கையை அசைபோடத் தொடங்கியது. தேவகிக்கு அவளது பெற்றோர், தூரத்து உறவினரான கருணன் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். கருணன் குன்றூரில் இருந்து சுமார் இருநூறு மைல்களுக்கு அப்பால் இருந்த காட்டூர் என்ற இடத்தில் தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். கருணனின் பெற்றோரும் தேவகியின் பெற்றோரும் உறவினர்களின் துணையுடன் இருவரின் ஜாதகத்தையும் சாஸ்திரி ஒருவரிடம் கொடுத்து பொருத்தம் பார்த்தனர். சாஸ்திரியார், “எண்பது வீத பொருத்தம் இருக்கிறது. திருமணம் செய்வது சிறந்தது.” என்று கூறவே தேவகியின் திருமணம் குன்றூரில் விமர்சையாக நடைபெற்றது.

தேவகி பெற்றோருக்கு ஒரே பெண் பிள்ளை என்பதால் சீதனமாக வீடு வளவும், தோட்டக் காணியும், நகையும், கொஞ்சக் காசும் கொடுத்தனர். கருணன் காட்டூரில் போலீஸ் அதிகாரியாக கடமையாற்றினார். அவர் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர். இது தேவகியின் குடும்பத்தினருக்கு தெரிந்திருக்கவில்லை. திருமணம் முடிந்த பின்னர் நடந்த வரவேற்பு விழாவில் கருணன் சக உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்தியபோதே இது தெரிய வந்தது. இதனை அறிந்த தேவகியும் பெற்றோரும் கவலையடைந்தனர். எனினும் திருமணம் முடிந்துவிட்டபடியால் எப்படியோ சமாளித்துக் கொள்வோம் எனத் தங்கள் மனதைத் தேற்றிக்கொண்டனர்.

கருணன் திருமணம் முடிந்த பின்னர் குன்றூருக்கு அண்மையில் இருந்த பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றார். ஆரம்பத்தில் சில வருடங்கள் கருணன் மதுபானம் அருந்தும் பழக்கத்தை குறைத்திருந்தான். இதனால் குடும்பத்தில் பெரியளவான குழப்பங்கள் ஏற்படவில்லை. கருணனுக்கும் தேவகிக்கும் முதல் இரு பெண்பிள்ளைகளும் பின்னர் இரு ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். மூத்த மகளுக்கு பூர்ணிமா எனவும் இரண்டாவது மகளுக்கு லட்சுமி எனவும் பெயரிட்டனர். இதேபோல் மூன்றாவது மகனுக்கு ரமணன் எனவும், நாலாவது மகனுக்கு ரங்கன் எனவும் பெயரிட்டனர். ரங்கன் பிறந்த பின்னர் ரங்கனின் கிரகநிலை ஏற்படுத்திய தாக்கமோ அல்லது வேறு ஏதாவது காரணமோ தெரியவில்லை, தேவகிக்கும் கருணனுக்கும் இடையில் மோதல்கள் நாளுக்குநாள் வலுவடைந்தன.

தேவகி தனது குடும்பத்திற்கு போதிய வசதிகளை ஏற்படுத்த முடியவில்லை என்று தனது கணவனை குற்றம் சாட்டினார். கருணன் மதுப்பிரியனாக இருந்தாலும் நேர்மை தவறாதவன். அதனால் அவன் லஞ்சம் வாங்குவதில்லை. தனது சம்பளத்தை மட்டுமே வருமானமாக கொண்டிருந்தான். வீட்டில் நிம்மதி இல்லாதபோது மதுபானம் அதிகளவில் அருந்தினான்.

இதனால் மேலும் மேலும் பிரச்சினைகள் அதிகரித்தன. ஒரு சந்தர்ப்பத்தில் விரக்தியடைந்த கருணன் தனது சொந்த கிராமமான காட்டூருக்கு அண்மையிலிருந்த பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றான். அவ்வாறு சென்ற கருணன் மீண்டும் குன்றூருக்கு வரவில்லை. தேவகியின் பெற்றோர் எவ்வளவோ சொல்லியும், பிடிவாத குணம் கொண்ட தேவகி பின்னர் கணவனுடன் தொடர்புகொள்ள முயற்சிக்கவில்லை. அவள் தனக்கு சொந்தமான சீதனத் தோட்டத்தில் விவசாயம் செய்து அதன் மூலமாக கிடைத்த வருமானத்தைக் கொண்டு பிள்ளைகளை வளர்த்து வந்தாள். பெண் பிள்ளைகளை பத்தாம் வகுப்பு வரை கல்வி படிப்பித்தாள்.

தேவகியின் கடைசி மகனான ரங்கன் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தபோது, தாயிடம் தனக்கு புதிய சைக்கிள் ஒன்று வாங்கித் தருமாறு கேட்டான். தேவகி நினைத்தாள், ரங்கனுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் அவன் நண்பர்களுடன் சேர்ந்து கெட்டுப் போய்விடுவானென்று. அதனால் பல காரணங்களை சொல்லி அதனைத் தட்டிக் கழித்தாள். ரங்கனுடைய நண்பர்கள் பலர் சைக்கிளிலேயே பாடசாலைக்கு சென்றனர். ரங்கன் மூன்று மைல் தூரம் நடந்தே பாடசாலைக்கு சென்றான். ஒருநாள் சைக்கிள் வாங்கித் தராவிட்டால் தான் பாடசாலைக்கு செல்லப்போவதில்லை என அடம்பிடித்தான். அவ்வாறே அவன் பாடசாலை செல்லாது வீட்டில் இருந்தான்.

ஒருநாள் வீட்டில் யாருமில்லாதபோது தாயைப் பயமுறுத்த நினைத்தான். தற்கொலை செய்துகொள்ளப்போவதாக தாயைப் பயமுறுத்தினான். தாயைப்பயமுறுத்த தற்கொலைக்கு முயற்சியும் செய்தான்.

சில மணித்தியாலங்களின் பின்னர் தோட்டத்தில் இருந்து வந்த தாய் தேவகியும், அவளது பெண் பிள்ளைகளும் வீடு திறந்திருப்பதையும், ஆளரவமற்று இருப்பதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உள்ளே சென்ற இரண்டாவது மகள்,

“ஆ! ஐயோ அம்மா! தம்பி விழுந்து கிடப்பதைப் பாருங்கோ.” என்று சத்தமிட்டு அழுதாள். தாயும் பூர்ணிமாவும் உள்ளே ஓடிச்சென்று பார்த்தனர். அவர்களும் அக்காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்து ஐயோ! என்று சத்தமிட்டு அழுதனர். இவர்களின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு அயலவர்களும் ஓடி வந்தனர். அக் கூட்டத்தில் வந்த முதியவர் ஒருவர் ரங்கனின் கையை பிடித்துப் பார்த்துவிட்டு, அவன் இறந்து பலமணிநேரம் கடந்துவிட்டது என கூறினார். பின்னர் பிரேத பரிசோதனையின் பின்பு ரங்கன் தற்கொலை செய்துகொண்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

தேவகிக்கு விழுந்த இரண்டாவது பெரிய இடியாக மகன் ரங்கனின் இறப்பு அமைந்திவிட்டது. ஒரு வருடம் வரை எதுவும் செய்ய முடியாது இடிந்து போய் இருந்தாள் தேவகி இருந்தாள். பிள்ளைகளே தோட்ட வேலைகளையும் கவனித்து வந்தனர். பெண் பிள்ளைகளின் படிப்பு முடிந்ததால் முழு நேரமாக தோட்டத்தில் பயிர்களை கவனிக்க முடிந்தது. மூத்த மகன் ரமணன் நன்றாக படித்தான். அவன் உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான். அவனால் தோட்ட வேலைகளில் முழுமையாக ஈடுபட முடியவில்லை.

தனது பெண் பிள்ளைகள் தோட்டத்துக்கு அலைவதையும், தனது மகன் ரமணன் தனது பாடங்களை படிப்பதில் சிரமம் அடைவதையும் தாய் தேவகி அவதானித்தாள். இதனால் தேவகி படிப்படியாக தனது மனநிலையினை மாற்றி தோட்ட வேலைகளில் கவனம் செலுத்தினாள். இக்காலத்தில் அரசாங்கம் விவசாய உற்பத்திகளின் இறக்குமதியை தடை செய்திருந்தது. இதனால் காரணமாக தேவகியின் தோட்டப் பயிர்ச்செய்கையால் அதிக வருமானம் கிடைத்தது. அதனைக் கொண்டு இரு பெண்களுக்கும் திருமணம் செய்து வைத்தாள்.

இதேவேளை உயர்தர பரீட்சை எடுத்த மூத்த மகன் ரமணன் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தேறினான். பல்கலைக் கழகத்துக்கும் விண்ணப்பித்திருந்தான். ஒருநாள் தபால்காரன் கடிதம் ஒன்றை கொண்டுவந்து கொடுத்தான். பூர்ணிமா அதனை வாசித்து விட்டு தாயிடம், “தம்பிக்கு இன்ஜினியரிங் கிடைத்துவிட்டது.” என்று கூறி சந்தோசமாக சத்தமிட்டாள். இதனை கண்ட தேவகியும் மிகுந்த மகிழ்ச்சியுடன், “எனது துன்பங்களுக்கு எல்லாம் பரிசாக மகனுக்கு சிறந்த உயர் படிப்பு படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்து விட்டது.” என்று கூறி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். சிறிது நேரத்தில் மயக்கம் அடைந்து கீழே விழப்போனாள். தாய் தேவகியை, பூர்ணிமா கைத் தாங்கலாக பிடித்துக் கொண்டாள். உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட தேவகிக்கு அதிக சந்தோசத்தினால் மாரடைப்பு ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது. தேவகி துன்பங்களில் விடுதலை பெற்று அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்தாள்.

(யாவும் கற்பனையே)



குப்பிளான் ஆ.மோகனசுந்தரம்...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 57

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 | ■ | 06 |
| 07 | | | | ■ | 08 | 09 | |
| 10 | | ■ | 11 | 12 | | | ■ |
| | ■ | 13 | | | | | 14 |
| 15 | 16 | | ■ | 17 | | | |
| ■ | 18 | | | | ■ | ■ | |
| 19 | | | ■ | ■ | 20 | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.................... ....................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 57
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 57

**இடமிருந்து வலம்**

1. தருணத்துக்குப் பொருத்தமான எண்ணம்
7. இதுவும் ஒரு விலங்கு
8. ஒருவகைப் புல் (குழம்பியுள்ளது)
10. ஒருவகை மரம் (குழம்பியுள்ளது)
11. சுலபம் அற்ற நிலை, சிரமம் (குழம்பியுள்ளது)
13. கீழ் நிலை ( குழம்பியுள்ளது)
15. உயிரை அழிக்கும் நிலை (திரும்பியுள்ளது)
17. கிளர்ச்சி அல்லது சண்டை (குழம்பியுள்ளது)
18. பரபரப்போ அவசரமோ இல்லாதநிலை
19. ஒருவரது மதிப்பும் கௌரவமும் (குழம்பியுள்ளது)
20. சூரியனின் ஆதிக்க நேரம் (திரும்பியுள்ளது)
22. ஓவியம் குழம்பிக் காணப்படுகின்றது.
23. மாரி காலத்து இரவில் இதுவும் பெய்யும் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இருவர்க்கிடையிலான நட்பு அல்லது பழக்கம்
2. பெண்
3. மன ஒருமை ஆசனப் பயிற்சி
4. படைப்பு
5. பயன்பாட்டுக்கு அல்லது சேவைக்கு செலுத்தும் பணம் (தலைகீழ்)
6. புத்தகம்
9. முத்தமிழில் ஒன்று (குழம்பியுள்ளது)
12. தாமரை
13. ஜாக்கிரதை அல்லது கூர்மையாகக் கவனித்தல்
14. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
16. தினமும் (குழம்பியுள்ளது)
19. ஒரு தமிழ் மாதம்
21. பழம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 56

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பிடிவாதம்
5. சாது
7. தினம்
8. வால்
9. தும்பி
10. புரவி
11. மாடு
12. வைகறை
14. வனிதை
16. அபயம்
18. சரி
20. பயம்
21. மைதானம்
22. பாலம்

**மேலிருந்து கீழ்**

1. பிணி
2. வானம்
3. தம்பி
4. சிம்
5. சால்பு
6. துவாரம்
9. துக்கம்
10. விமானி
11. வடு
12. வையகம்
13. அறை
15. தைரியம்
17. பசுமை
19. சம்பா
20. பல

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல் பரிசு (ரூ 500/) | இரண்டாம் பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| எம்.எச்.எல்.பாத்திமா பீபீ, இல 128, ஹிஜ்ராபுர, திகன, ரஜவெல்ல | ரஞ்சினி சிவஞானம் 43/1 புகையிரதநிலைய வீதி, மட்டக்களப்பு | பாதிமா நிப்லா இல 273, பொல்கஹயாய, நாரம்மல |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 55

### பாராட்டு பெறுவோர்

1. **அனுராதா பாக்கியராஜா**
வெள்ளவத்தை
2. **ஏ.டபிள்யூ.எம். நியாஸ்**
மாவனல்ல
3. **வி.பாலேந்திரா**
வெள்ளவத்தை
4. **எம்.எம்.எம். நிஸாம்**
காலி
5. **கு.போஜராஜன்**
சிலாபம்
6. **எஸ்.ஜனஹாசினி,**
கொழும்பு 13,
7. **தக்கியா நூரி**
அக்கறைப்பற்று 04
8. **எப்.ஆர்.ஏ. சக்கூர்**
மடவளபஸார்
9. **எஸ்.தவநாயகி**
மட்டக்களப்பு
10. **ஏ.சந்தியாகோ**
கண்டி

# தெஹிவளை பள்ளிவாசலில் இன்று ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா

மாவத்தகம தினகரன் நிருபர்



அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச்,உமர்தீன் எழுதிய ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா,இன்று (12) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெறும்.

"மாற்று மதத்தவர்களை மதித்து வழிகாட்டும் மார்க்கம் இஸ்லாம். மஸ்ஜிதின் ஊடாக சமூகத்தை வளப்படுத்துவோம், மழலைகளுக்கான அழகிய பெயர்கள், அருள்மிகு ரமழானும் அதன் சட்ட திட்டங்களும்" ஆகிய ஐந்து நூல்களே இன்று வெளியிடப்படுகின்றன.

தெஹிவளை களுபோவளை வீதியில் அமைந்துள்ள முகைதீன் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் (தெஹிவளை பெரிய பள்ளி) இவ்விழா இடம்பெறுகிறது.

இந்நூல்கள் பற்றிய அறிமுகவுரையை பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மதும், நூல்கள் பற்றிய மதிப்பீட்டு உரையை நிதா பவுண்டேசன் அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் ஹஸன் பரீத் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையினை நூலாசிரியர் அஷ்ஷெய்க் எச் உமர்தீன் நிகழ்த்தவுள்ளார்.

## சீனாவின் அச்சுறுத்தலை...

(08ஆம் பக்கத் தொடர்)

மேலும் இந்த வண்ணப்பூச்சு பெரும்பாலும் இவை பாகிஸ்தானுடனான எல்லையோரம் பயன்படுத்தப்படும் என்பதை சுட்டிக் காட்டுவதாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்தியாவின் நான்கு தரைப்படை விமானிகள் போயிங் நிறுவனத்தில் அபாச்சி ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கான பயிற்சிகளை பெற்று வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இந்திய தரைப்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றிற்கு 39 அபாச்சி ஹெலிகொப்டர்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது விமானப்படை ஏற்கனவே 22 அபாச்சி ஹெலிகொப்டர்களை பெற்றுவிட்டது. தரைப்படைக்கு 17 ஹெலிகொப்டர்கள் வாங்கப்பட உள்ளன என்பது கூடுதல் தகவல் ஆகும்.

இந்தியா தனது பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. சீனாவின் எத்தகைய அச்சுறுத்தலையும் முறியடிக்கும் வகையில் இந்தியா தனது நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலுப்பிள்ளை சிதம்பர நாதனின் அமுத விழா இன்று பலகொல்லயில்

(மாவத்தகம தினகரன் நிருபர்)



கண்டி மக்கள் கலை இலக்கியத்தின் ஏற்பாட்டில் சமூகச் செயற்பாட்டாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதனின் அமுத விழா, இன்று ஞாயிற்றுக் கிழமை பலகொல்ல மல்லிகா மண்டபத்தில் மு. ப 10.00 மணிக்கு நடைபெறும்.

மாத்தளை மாவட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் எம். எம். பீர்முஹம்மது தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சின்னத்திரைக் காணொளிக் கலைஞர் வின்சன்ட் குனரட்ன கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். வரவேற்புரையை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராஜனும். கவி வாழ்த்தினை கண்டி இந்து சீனியர் கல்லூரியின் அதிபர் கவிஞர் வெ. சிவக்குமாரும் பாராட்டுரையை குன்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலய அதிபர் எஸ் சிவஞான சுந்தரம், ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

## 13 ஆவது திருத்தத்தை...

(08ஆம் பக்கத் தொடர்)

'ஒற்றையாட்சி அரசில் உயர்ந்தபட்ச அதிகாரத்தைப் பகிர்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனாலும், நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய ஒரு விடயத்தினை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாட்டைப் பிரிப்பதற்கு அல்லது பிரிப்பதற்கு துணை போகும் எந்தவொரு நடவடிக்கையினையும் நாம் மேற்கொள்ள மாட்டோம்' என்றும் ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார். எனவே, நாடு பிளவுபடுவதை எவரும் விரும்பாத சூழ்நிலையில் அவ்வாறானதொரு மாயத் தோற்றத்தை உருவாக்கி அரசியல் இலாபம் தேடுவதற்கே சில தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.






# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## தூய்மை செய்தல் மற்றும் துப்புரவு சேவை 2023/ 2014

தூய்மை செய்தல் மற்றும் துப்புரவு சேவைக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒப்பந்தக் காலம் ஓர் ஆண்டாக (365 நாட்கள்) அமையும்.
3. தகுதியுடைய விலைமனுதாரர்கள் எந்த ஒரு அரச நிறுவனத்தாலும் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர்கள் தூய்மை செய்தல் மற்றும் துப்புரவு சேவைகளுக்காக நிறுவனம் ஒன்றாக அல்லது தனிப்பட்ட அமைப்பாக பதிவு செய்த சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுதாரர் அரச துறை அல்லது வேறு ஒரு அரச கூட்டுத்தாபனத்தில் ஓர் ஆண்டுக்கு குறையாத திருப்திகரமான துப்புரவு சேவை ஒப்பந்தம் ஒன்றின் பதிவினை பெற்றிருத்தல் வேண்டும்.
6. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் காசாளருக்கு அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பெயரில் இலங்கை வங்கி கோபரேட் கிளையின் 7120156 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்த ரசீதின் பிரதி ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்தி 2023.02.13ஆம் திகதி தொடக்கம் 2023.02.27ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை SLITHM இல் இருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
7. இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "தூய்மை செய்தல் மற்றும் துப்புரவு சேவை 2023/ 2024" என்று குறிப்பிட்டு 2023.02.28ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம். விலைமனுக்கள் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 1ஆவது மாடி, பெறுகைப் பிரிவில் 2023.02.28 ஆம் திகதி பி.ப. 2.30க்கு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
8. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
9. இது தொடர்பில் மேலதிக விபரங்களை வேலை நாட்களில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். (தொ. இல. 011 2208300).
10. பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது என்பதோடு அதிகாரிகளிடம் ஆதரவு திரட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்**





# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## வெளிவாரி பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிகள் பிரிவு

## விசேட அறிவித்தல்

## 2023 பெப்ரவரி முதல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வெளிவாரி பட்ட பரீட்சைகள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிகள் பிரிவின் மூலம் 2023 பெப்ரவரி மாதம் முதல் நடத்தப்படும் பரீட்சைகள் பற்றிய விபரங்கள் கீழ்க்காணுமாறு:-

| | பரீட்சை | மாணவர் குழு | விபரம் | நடத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ள காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2018 கலைமாணி மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் (பொது) வெளிவாரி பட்டம் II பரீட்சை (புதிய பாடத்திட்டம்) மற்றும் 2019 கலைமாணி (பொது) வெளிவாரிபட்டம் II பரீட்சை (புதிய பாடத்திட்டம்) | 2018 மற்றும் 2019 (2014/ 2015/ 2017 மறு அமர்வு) | விண்ணப்பங்கள் கோரல் முடிவடைந் துள்ளது | 2023.02.20 முதல் |
| 2 | 2017 கலைமாணி மானிட விடயல் மற்றும் சமூக விஞ்ஞானம் (பொது) வெலிவாரி பட்டம் III பரீட்சை (புதிய பாடத்திட்டம்) | 2017 (2014/ 2015 மறு அமர்வு) | விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2023.02.17 | 2023.04.26 முதல் |
| 3 | 2021 கலைமாணி (பொது) வெளிவாரிபட்டம் 1 பரீட்சை (புதிய பாடத்திட்டம்) | 2021 (முதன்முறையாக தோற்றும் அபேட்சகர்களுக்கு மட்டும்) | விண்ணப்பங் களை கோரும் இறுதித் திகதி 2023.02.24 | 2023 மார்ச் மூன்றாம் வாரத்தில் இருந்து |
| 4 | கலைமாணி (பொது) வெளிவாரி பட்டம் 1 மறு அமர்வு (பழைய பாடத்திட்டம்) | 2011 இற்கு முன் பதிவு செய்த மாணவர்கள் (இப் பரீட்சைக்கு தோற்றக்கூடிய இறுதி வாய்ப்பாகும்) | விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி 2023.01.31 | 2023 பெப்ரவரி 24 முதல் |
| 5 | 2021 சமூக விஞ்ஞானமாணி சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கல்வி (பொது) வெளிவாரி பட்டம் 1 பரீட்சை | 2021 (2014/ 2015/ 2017/ 2018/ 2019/ 2020 மறு அமர்வு) | விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி 2022.12.30 | 2023 மார்ச் |
| 6 | 2018/ 2019/ 2020 கலைமாணி ஆங்கிலம் (பொது) வெளிவாரி பட்டம் II பரீட்சை | 2018/ 2019/ 2020 (2014/ 2015/ 2017 மறு அமர்வு) | விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி 2023.01.09 | 2023.02.19 முதல் |
| 7 | 2018 கலைமாணனி ஆங்கில (பொது) வெளிவாரி பட்டம் III பரீட்சை | 2018 (2014/ 2015/ 2017 மறு அமர்வு) | விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதி 2023.01.09 | 2023.04.23 முதல் |

ஒவ்வொரு பரீட்சைக்குமான பரீட்சை விண்ணப்பங்கள் கோரல், பரீட்சை நேரசூசி வெளியிடல், பரீட்சை அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் வெளிவாரி பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறி பிரிவின் இணையதளத்தின் ஊடாக நடைபெறும் **பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்ட பின்பு பரீட்சைக்கு குறுகிய காலம் இருக்கும் போது நேரசூசி வெளியிடப்படுவதால் கவனமாக இருக்குமாறு பரீட்சை அபேட்சகர்கள் சகலரிடமும் தயவுடன் வேண்டுகிறேன்.** திட்டமிட்டவாறு பல்கலைக்கழகத்திற்கு அல்லது கிட்டிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை நடத்தப்படும் என்பதை தயவுடன் கவனியுங்கள்.

2023ஆம் ஆண்டில் நடத்தப்படும் வெளிவாரி பட்டம் பரீட்சை பற்றிய திட்டமிடல் www.http://external.sjp.ac.lk/ இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**2023.02.12**

**தொடர்புகள்: 0113485402**

# முதலீடுகள், வட்டி வருமானம், வரி

மனித வாழ்வில் உழைப்பு எவ்வளவு முக்கியமோ சமஅளவில் அவனுடைய சேமிப்பு முறையும் வாழ்க்கையை தீர்மானிக்கிறது. எமது முன்னோர் கொடுத்த பொன்மொழி, "மண்ணிலும் பொன்னிலும் போடுவது ஒரு நாளும் வீண் போகாது" என்பதே ஆகும். அந்த வகையில் பணத்தினை பணமாக சேமித்து வைத்தல் என்பதையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் மக்கள் இந்த சேமிப்பு முறையை கையாண்டு வந்தாலும் "தமிழ் பேசும் மக்கள்" மிகவும் நேர்த்தியாகவும் முறையாகவும் காலாகாலமாக செய்துவருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தவகையில் தமிழர் "வாழையடி வாழையாக" தமது கடினமான உழைப்பினால் கிடைக்கின்ற வருமானத்தில் சிக்கனமாக வாழ்ந்து, தமது சந்ததியினர் எதிர்காலத்தில் கஷ்டங்கள் இல்லாமல் வாழ்வைக் கொண்டு நடத்த பணத்தினை பல வகைகளில் சேமித்து வந்தனர்.

இதில் முதன்மையாக காணப்படுவது பணத்தினை வங்கியில் சேமிக்கும் முறையாகும்.

பொதுவாக பணத்தினை மூன்று விதமாக சேமிப்பதை நாம் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. முதலாவதாக(*Day to Day Requirements*) அன்றாட வாழ்க்கை செலவினை கையாளக்கூடிய முறையிலும், இரண்டாவதாக (*Medium Term Requirements*) நடுத்தர காலதேவையை பூர்த்தி செய்யும் முகமாகவும் மூன்றாவதாக(*Long Term Requirements*) நீண்ட கால தேவைகளுக்காக சேமிப்பதுமாக இருந்து வந்ததை அவதானிக்ககூடியதாக இருந்தது.

கால மற்றும் தொழில்நுட்ப மாற்றத்தை உள்வாங்கி இன்று பல புதிய சேமிப்பு முறைகளை வர்த்தக வங்கிகளும், நிதி நிறுவனங்களும் மக்களுக்கு வழங்கி வருவதனை நாம் நடைமுறையில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. "மாற்றம் ஒன்றே மாறாது" என்ற வாசகத்திற்கிணங்க, மக்களுக்கு தங்கள் வருமானத்திற்கேற்ப சேமிக்கும் முறையை இந்த புதிய மாற்றம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்.

காலங்காலமாக வழக்கத்தில் இருக்கும் வங்கி நடைமுறை கணக்கு (*Current Account*), சேமிப்பு கணக்கு (*Saving Account*), நிலையான முதலீடு (*Fixed Deposit*) என்பவற்றுடன் தற்காலத்தில் புதிது புதிதாக பல சேமிப்பு திட்டங்கள் இருப்பதனை நாம் வழக்கத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக 100 நாள் சேமிப்பு திட்டம், 300 நாள் சேமிப்பு



திட்டம், மூன்று வருட மற்றும் ஐந்து வருட சேமிப்பு திட்டங்கள், திறைசேரி முதலீடுகள் (*Treasury Bill*), பிணைமுறிகள் (*Treasury Bond*), வெளிநாட்டு நாணய சேமிப்பு (*RFCNRFC*) என அடுக்கிக் கொண்டே போகலாம்.

மிகவும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தினை சேமிக்கும் பொழுது மிகவும் விழிப்புணர்வுடன் மக்கள் செயல்பட வேண்டும். ஏனென்றால் தற்காலத்தில் பல மோசடிகள் நடைபெறுவதால் மக்கள் பின்வருவனவற்றை கவனத்தில் கொண்டு தகுந்த வர்த்தக வங்கிமற்றும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வது சாலச்சிறந்ததாகும்.

□ இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெறப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனமாக இருத்தல் வேண்டும். (*Approved by Sri Lanka Central Bank*)

□ உரிய காலத்தில் நிதிக்கூற்று மற்றும் ஆண்டு அறிக்கையினை சமர்ப்பித்திருத்தல் வேண்டும். (*Annual Report & Audited Accounts*)

□ மக்களின் நன்மதிப்பு (*Goodwill*)

□ கடந்த காலகாலங்களில் நிதி சட்ட முறைமையை உரிய முறையில் பின்பற்றியமை. (*Statutory Compliance*).

□ சிறந்த நிர்வாக இயக்குனர் குழுமம் (*Excellency of Board of Directors*).

□ எத்தனை ஆண்டுகள் நிதி நடவடிக்கைகளில் இயங்கிவருகின்றது என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுவாக நீண்ட காலம் நிதி நடவடிக்கைகளில் இருந்திருந்தால் சாதக தன்மையாக கருதப்படும்.

□ பொதுவாக நிதி நிறுவனத்தின் தேறிய சொத்தின் பெறுமதிஅதிகமாக காணப்பட்டால் சிறந்ததாக கருதப்படும். (*Surplus Positive Net Worth*).

□ வரி(*Tax*), ஊழியர் சேமலாப நிதி (*EPF*), ஊழியர் நம்பிக்கை நிதி (*ETF*), ஓய்வூதிய கொடுப்பனவு (*Pension Provisions & Payments*) மற்றும் ஏனைய கட்டாய கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் செலுத்தி இருத்தல் வேண்டும். (*Statutory payments should have been be adhered*)

□ அரசாங்கத்தினால் மற்றும் பொதுமக்களினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்படாத வங்கி மற்றும் நிதி நிறுவனங்களாக இருத்தல். (*No Legal Action filed in Courts*)

அத்துடன் பின்வரும் விடயங்களிலும் மக்கள் சிறந்த தரவுகளை பெற்று அதனை தகுந்த முறையில் ஆராய்ந்து அதன் பின்பே தமது முதலீடுகளை செய்வது சிறந்ததாகும். அவையான,

□ பணவீக்கம் *Inflation*

□ இலங்கை ரூபாவின் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிரான பெறுமதி மாற்றங்கள் – *Rupee Valuation against other Foreign Currency*

□ அரசின் நிதிக் கொள்கை – *Finance Policy*

□ அரசியல் ஸ்திரத்தன்மை – *Political Stability*

□ அரசின் பொருளாதாரக் கொள்கை – *Economic Policy*

□ உலக பொருளாதார மாற்றங்கள். உதாரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை மாற்றங்கள், மசகு எண்ணெயின் விலை மாற்றங்கள், ரஷ்யா, உக்ரேன் போன்ற நாடுகளுக்கு இடையிலான யுத்தங்களின் தாக்கங்கள்.

□ தற்பொழுது பிரபல்யமாக பேசப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுகடன் மறுசீரமைப்பு பொறிமுறை. (*Local Debt Restructure&Foreign Debt Restructure Mechanism*).

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார பிரச்சினையை முகம்கொடுக்கும் முகமாகவும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் அரச வரிக்கொள்கையில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன(*Tax Policy Changes*). அதற்கு அமைவாக வட்டி வருமானத்திற்கு என்ன வகையான வரிமாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்பதனை மக்கள் தெளிவாக தெரிந்திருத்தல் மிகவும் அவசியம். அந்த வகையில் பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன,

□ வட்டி வருமானத்தினை முதலீட்டு வருமானமாக வகைப்படுத்தல் (*Investment Income*).

□ (5%)ஐந்து வீத"தடுத்து வைத்தல்வரி" (*Withholding Tax –WHT*) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

□ முதியோர் ஒருவருக்கு மாதம் ஒரு லட்சம்(*Rs.100,000 per month*) அல்லது வருடம் 12 லட்சம் (*Rs.1,200,000 per Annum*) வரையிலான வட்டி வருமானத்திற்கு மேற்கூறிய தடுத்து வைத்தல் வரி அறவிடப்பட மாட்டாது. ( *Privilege for Senior Citizen Benefit*).

□ அவ்வாறு கழிக்கப்படுகின்ற தடுத்து வைத்தல் வரியினை உறுதிப்படுத்தி சான்றிதழ் வழங்குதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (*WHT Certificate*).

□ எனவே வரி செலுத்துபவர் தான் செலுத்த வேண்டிய மொத்த வரியினை கணக்கிட்டு மேற்கூறியவாறு வங்கியினால் அவர் சார்பாக செலுத்தப்பட்ட தடுத்து வைத்தல் வரியினை (*WHT*) கழித்து மிகுதியினை செலுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

□ வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு (*Foreign Currency Deposit*) கிடைக்கின்ற வட்டி வருமானத்திற்கு "தடுத்து வைத்தல்வரி"அறவிடப்படமாட்டாது. தடுத்து வைத்தல் வரியிலிருந்து வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது (*Interest from Foreign Currency Deposit is Exempted from WHT*).

உதாரணமாக,60 வயதிற்கு உட்பட்டவர் தனது வைப்பிற்கு மாதம் ரூபா50,000/=ஐ வட்டி வருமானமாக பெறுபவராக இருப்பின், வங்கி 5%ஐ அதாவது ரூ.2,500/=ஐ தடுத்துவைத்து மிகுதி 95%ஐஅதாவது ரூ 47,500/=ஐ வங்கி, வாடிக்கையாளருக்குக் கொடுக்கும். தடுத்து வைத்தல் வரியாக கழிக்கின்ற பணத்தினை, அந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு (*Department of Inland Revenue*) செலுத்தி அதனை உறுதிப்படுத்தி சான்றிதழை வழங்கும்

சில நுட்பமான முதலீட்டு முறையினை கையாள்வதன் வாயிலாக மேற்கூறிய "தடுத்து வைத்தல் வரி" அறவிடுதலில் இருந்து சட்டத்திற்கு உட்பட்டதாக தவிர்த்துக் கொள்ளலாம். அவற்றில் சில,

□ ஒன்றுக்கு மேற்பட்ட தனி நபர்களின் பெயர்களில் முதலீட்டினை வைத்திருத்தல்.

கணவன், மனைவி, தாய், தந்தை மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளின் பெயர்களின் வைப்பினை பிரித்து வைத்திருத்தல்.

□ வெளிநாட்டு நாணயத்தில் வருகின்ற வருமானத்தினை அந்தந்த வெளிநாட்டு நாணயத்தில் முதலீடுகளை ஒழுங்குபடுத்துதல். முடியுமான வரையில் தேவைக்கு அதிகமாக வெளிநாட்டு நாணயத்தினை இலங்கை நாணயமாக மாற்றாது பேணுதல் சிறந்ததாகும்.

□ திறைசேரி முதலீடுகள் (*Treasury Bill*) மற்றும் பிணைமுறிகள் (*Treasury Bond*) போன்றவற்றில் முதலீடு செய்தல்.

கடன் பத்திர முதலீடுகள்– *Investment inDebentures*

கடந்த சில காலமாக கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்,வர்த்தக வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் கம்பனிகள் கடன் பத்திரங்களை வழங்குவதன் வாயிலாக மக்களிடம் வைப்பினை பெற்று அதற்கு கவர்ச்சியான வட்டி விகிதங்களை வழங்கிவருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிக வட்டியை எதிர்பார்த்து முதலினை இழக்காமல் மக்கள் மேற்கூறிய சில ஆலோசனைக்கிணங்க கம்பனிகளை தெரிவு செய்து கடன் பத்திரத்தில் முதலீடு செய்வது மிகவும் முக்கியமானதாகும். காரணம்,ஒருவேளை முதலீடு செய்த கம்பனி வங்குரோத்து(*Bankruptcy*) நிலையை அடைந்தால் அல்லது வைப்பாக பெற்றுக்கொண்ட பணத்தினை திருப்பி செலுத்த முடியாது போனால் அந்தப் பொறுப்பினை முதலீடு செய்பவர்களே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

"*IGNORANCE OF LAW IS NO EXCUSE*" என்கின்றது சட்டம். அதாவது நடைமுறையில் உள்ள சட்டங்களினை தெரிந்து, முழுமையாக அறிந்திருந்து அதன்படி செயல்படுதல் ஒவ்வொரு மனிதருடைய கடமையாகும்.

நெற்றிவியர்வை சிந்தி, பல சவால்களுக்கு முகம் கொடுத்து, இந்த போட்டியான உலகத்தில் நாம் உழைக்கின்ற ஒவ்வொரு ரூபாயும் மிகவும் முக்கியமானது.

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பாரிய பணவீக்கத்திற்கும் (*High Inflation*),பொருட்களின் விலையேற்றத்திற்கும்இலங்கை ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சிக்கும் (*Rupee Depreciation*) முகம் கொடுத்து அதனையும் சமாளித்து வெற்றி கொண்டு சேமிக்கின்ற பணத்தினை நமது எதிர்கால வாழ்க்கைக்கும், நமது பிள்ளைகளின் எதிர்கால தேவைகளுக்கும் ஈடு கொடுத்து கண்ணும் கருத்துமாக சேமித்து வருவோமாயின் எமது வாழ்வின் இலட்சியத்தை அடையக்கூடிய தன்மையை நிச்சயமாக நாம் உருவாக்க முடியும்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி & முகாமைத்துவ ஆலோசகர்

## ஷாப்டரின் மரணத்தில்... 10ஆம் பக்க தொடர்...

கடந்த 9 ஆம் திகதி புதுக்கடை பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற பகிரங்க வழக்கு விசாரணைகளின் போது தெரிவித்திருந்தார்.

இதுவரை ஊடகங்களுக்கு வெளிவராத தினேஷ் ஷாப்டர் கொலைச் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணைகள் கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரியவின் தீர்மானத்துக்கமைய கடந்த 9 ஆம் திகதி பகிரங்கமாக விசாரிக்கப்பட்டது.

இதன்போது ஒரே சட்டவைத்திய அதிகாரி இரண்டு தடவைகள் மரணத்திற்கு இரண்டு காரணங்களை கூறியதாகவும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரி ருஹூல் ஹக்கினால் டிசம்பர் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட சுருக்கமான பிரேத பரிசோதனை அறிக்கையில் கழுத்து நெரிக்கப்பட்டமையால் மூச்சுதிணறல் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மரணம் தொடர்பான முழுமையான பிரேத பரிசோதனை அறிக்கையை தயாரிக்கும் போது மரணத்துக்கான காரணம் மாறியுள்ளதாக சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இதில் சயனட் உணவுடன் கலந்தமையால் மரணம் நிகழ்ந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பிலும் சட்டத்தரணி தனது வாதங்களை முன்வைத்தார். இம்மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட சட்டவைத்திய அதிகாரி ருஹூல் ஹக் 2022.12.20 ஆம் திகதி முதல் வைத்திய சபையினால் 8 மாத காலத்துக்கு சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு சட்டத்தரணி கொண்டுவந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி அனுஷ பிரேமரத்த,

குற்றவியல் வழக்கு 372 ஆம் பிரிவின் கீழ் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தினேஷ் ஷாப்டர் நல்ல மனநிலையில் இருக்கவில்லை என அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும் இறுதிநேரத்திலும் வியாபார நோக்கத்துக்காக Zoom தொழில் நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் முற்பகல் 11.23 மணிக்கு முழுமையான பதிவொன்றினையும் தினேஷ் ஷாப்டர் பதிவுசெய்துள்ளார். இதுதொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் குற்றபுலனாய்வு திணைக்களத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மரணத்தின் பின்னர் ஸ்தலத்துக்கு விஜயம் செய்த நீதிமன்ற அதிகாரியின் கருத்துபடி

இறந்தவரின் வலது காதுக்கு மேலே இரண்டரை அங்குல ப்ளாஸ்டர் இடது கண்ணுக்கு மூன்று அங்குலத்திற்கு கீழே சிவப்பு கீறல், வலது கண்ணுக்குக் கீழே ஒரு சிறிய கீறல் காயம் காணப்பட்டதாவும் கழுத்தைச் சுற்றி சிவந்து, இரு கைகளின் இரண்டு கட்டை விரல்களின் மேலிருந்து முதல் மூட்டின் உள் பக்கம் ஊதா நிறமாகவும், உடலின் கீழ் பகுதி நடுப்பகுதியிலிருந்து சிவப்பு நிறமாகவும் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய பிரேத பரிசோதனை அறிக்கையில் அத்தகைய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதை ஜனாதிபதி சட்டத்தரணி அனுஷ பிரேமரத்த சுட்டிக்காட்டியிருந்தார்.

மூன்று இரத்த மாதிரிகள் பரிசோதனையாளரின் அறிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன. குறிக்கப்பட்ட மற்றும் குறிக்கப்படாத இரத்த மாதிரிகள் பெறப்பட்டன. அதில் குறிக்கப்பட்ட இரத்தமாதிரிகளில் சயனைட் கலந்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அது பொருந்தவில்லை. எனவே அறிவியல் விளக்கங்களுடன் சட்டத்தரணி சயனைட் கதையை சிந்திக்க வைத்துள்ளார்.

மேலும், இறந்தவரின் விரல் நகங்கள் டி.என்.ஏ அறிக்கைக்காக அரசபகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கைகள் இன்னும் வரவில்லை. எனவே தினேஷ் ஷாப்டரின் மரணம் கொலையா தற்கொலையா என்பதை நிரூபிப்பதற்கான போதிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களிலும் முரண்பாடுகள் காணப்படுவதாக சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான முழு விசாரணை அறிக்கையை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையில்,

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் இல்லத்திலிருந்து பொரளை மயானம் வரையிலான பல சி.சி.டி.வி காட்சிகளை நாங்கள் ஆய்வு செய்தோம். அவர் மதியம் 2 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

வாசலிலுள்ள சி.சி.டிவி காட்சிகளை உன்னிப்பாக ஆய்வு செய்தோம். அவரது கழுத்தில் கண்டெடுக்கப்பட்ட கேபிளைப் போன்ற வயர் அவர் வீட்டை விட்டு வெளியேறும் போது சாரதி ஆசனத்துக்கு பக்கத்திலிருந்த ஆசனத்தில் இருந்துள்ளமை தெரியவருகின்றது.

மேலும்,ஷாப்டரின் கழுத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்த கேபிள் டேப்பைப் போன்ற ஒரு கேபிள் டேப் அவரது வீட்டில் மனைவியின் தாயின் அறைக்கு செல்லும் நடைபாதையில் கிடைத்தது.

இந்த இரண்டு கேபிள் டேப்புகளுக்கும் இடையே ஒற்றுமை இருக்கக்கூடும்.

மேலும், இறந்தவரின் கழுத்திலுள்ள டிவி கேபிள் பெல்ட்கள் 01 மற்றும் 02 எனவும், வீட்டிலிருந்த டிவி கேபிள் பெல்ட்கள் 03 முதல் 41 எனவும் இலக்கமிடப்பட்டிருந்தன.

மேலும், அவரின் கைகளில் கட்டப்பட்டிருந்த ZIP TIE தினேஷ் ஷாப்டரின் வீட்டிலும் காணப்பட்டன. அவர் தனது வீட்டிலிருந்து பொரளை மயானத்திற்கு பயணித்தபோது, வேறு எந்த வாகனத்தையும் கடந்து செல்லவில்லை. அவரை யாரும் தொடர்வதும் விசாரணையின் போது அடையாளம் காணப்படவில்லை.

காரில் வேறு யாரும் பயணிக்கவில்லை. பொரளை மயானத்தில் பணிபுரியும் இருவரிடமிருந்து வாக்குமூலம் பெற்றோம். காரிலிருந்து ஒருவர் இறங்கியமைக்கான எந்த காட்சியும் காணப்படவில்லை எனவும் குற்றப்புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் அவரின் மனைவியிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தினேஷ் ஷாப்டர் சில காலமாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

அதிக கோபம் மற்றும் வியாபாரத்தில் ஆர்வம் இல்லாமல் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு, மனநல மருத்துவர் நில் பெர்னாண்டோவிடம் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

பல தொழிலாதிபர்களிடம் பணப் பரிவர்த்தனை செய்து வியாபாரத்தில் பெரும் நஷ்டமடைந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஷாப்டரின் மரணத்திற்கு வேறொருவர் காரணமாக இருக்கலாம் என்பதற்கான சாட்சியங்கள் போதுமானதாகவில்லை. இருப்பினும், தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றோம் என குற்றப்புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

எனினும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் இவ்வாறானதொரு அறிக்கையை முன்வைத்துள்ள போதிலும்,

இச்சம்பவத்தில் பிரதான சாட்சியாளராக கருதப்பட்ட பொரளை பொது மயானத்தில் வேலை செய்யும் நிலாமிய 'அனாத கொள்ள' என்று அழைக்கப்படும் பகுதியில் இறந்த ஒருவரின் உடலை புதைப்பதற்கு தோண்டிவைக்கப்பட்டிருந்த குழிக்கருகில் பிற்பகல் 2.00 மணியளவில் வரும் போது அவ்விடத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் தினேஷின் கார் நின்றதாகவும் இதன்போது அந்த கார் அருகே உயரமான மெல்லிய தோற்றத்தையுடைய காற்சட்டையும் மேற்சட்டையும் அணிந்திருந்த நபரொருவர் நின்றுகொண்டு மயானத்தின் பின்புறமாகவுள்ள சுடுகாட்டை நோக்கி வேகமாக நடந்து செல்வதை அவதானித்ததாகவும் மீண்டும் ஒருமுறை அவரை கண்டால் அடையாளம் காட்டமுடியும் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்திருந்தார்.

எனினும் இதுவரை நடந்த நீதவான் விசாரணைகள் பகிரங்கமாக நடைபெறாமையால் சாட்சியாளரான நிலாமிய அங்கு எவ்வாறு சாட்சியங்கள் வழங்கியிருப்பார் என்பது குழப்பமாகவுள்ளது.

மேலும் நிலாமிய தெரிவித்தஅந்த நபர் யார் என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே தான் முழு விசாரணையும் தினேஷ் ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் இறுதி விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் 8ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் உண்மையில் பிரபல றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலை சம்பவத்தை நினைவுபடுத்துகின்ற போதிலும் மர்மம் துலங்க வேண்டும் என்பதே அனைவரினது எதிர்பார்ப்பாகும்.




வாராவாரம் வெளிவரும் 'படித்ததும் பகர்வதும்' தொடர் தவிர்க்க முடியாத காரணங்களால் இம்முறை வெளிவரவில்லை

மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**மேசைக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்கான கேள்வி அறிவித்தல்**

**(கேள்வி இல. PGIM/DB/01/2023)**

1. மேசைக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் (மேல்நிலை) தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் செயற்படுத்தப்படும்.
   I. விலைமனுதாரர் இலங்கையில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 10 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
சஞ்சிகை ஆசிரியர் யுவராஜனின் தமிழ்ப்பணி மிகவும் போற்றுதற்குரியது. அத்துடன் நூல்களை அச்சிடுவது தொடர்பான செலவினங்கள் வானளாவ உயர்ந்துள்ள இந்த காலகட்டத்தில் இம்முயற்சியில் துணிந்து இறங்கி உள்ள அவரை நாம் அனைவரும் பாராட்டவேண்டும். தமிழ் கூறும் நல்லுலகம் யுவராஜனின் சீரிய தமிழ்ப்பணியை மனப்பூர்வமாக ஏற்று அவரை உற்சாகப்படுத்தும் என நம்பலாம்.

பேராசிரியர் தை. தனராஜ்

## கலாநிதிப் பட்டம் பெற்றார் ஜெகநாதன் தற்பரன்



கொழும்பு தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் சட்ட முதுமாணி ஜெகநாதன் தற்பரன் சட்டத்தில் தனது கலாநிதி பட்டத்தை அண்மையில் பெற்றுக் கொண்டார். தற்பரன் ஒரு வழக்கறிஞர், சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது சட்ட முதுமாணி கற்கையினை முடித்து, ஆயுத மோதல்களில் பாதிப்புற்ற சிறுவர்களின் பாதுகாப்பில் அரசுகளின் பொறுப்புடைமை குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டத்தை பெற்றுள்ளார்.

சட்டக் கல்லூரி உட்பட்ட பல்வேறு நிறுவனங்களில் விரிவுரையாளராகவும், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் துஷ்பிரயோகம் மற்றும் அலட்சியம் ஆகியவற்றிலிருந்து சிறுவர் பாதிப்படைவதனைத் தடுக்கும் சர்வதேச சங்கத்தின் மேதகு உறுப்பினராகவும் செயற்பட்டு வரும் இவர், தெற்காசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தனது அனுபவங்களையும் ஆய்வு செய்து சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நிரூபித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டம், மனிதாபிமானச் சட்டம், பாதுகாப்பு என பல தளங்களில் பல ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும் அவர் சிறுவர்களுக்கான சமூக நீதி பெற்றுக் கொள்வதற்கான ஆசிய வழக்கறிஞர் சங்கத்தின் நிறுவனர் ஆவார்.

சர்வதேச சட்டங்களில் பொறுப்புக்கூறலுக்கு ஏற்ப கடந்த இருபத்து ஐந்து வருட காலமாக சிறந்த பணியைச் செய்தமைக்காக அவரது சேவைகளுக்கான அங்கீகாரமாக அவருக்கு சிறப்பு கலாநிதி பட்டம் ஜப்பானை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் உலக அமைதிக்கான சர்வதேச பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 50

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | 09 | 10 |
| | 11 | | 12 | 13 | |
| 14 | 15 | | 16 | | |
| 17 | | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | | 25 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) இது மலர்ந்து விட்டால் பூவாகி விடும். மலரின் முந்திய பருவத்தின் பெயர்.
(4) தன்மை பன்மைப் பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)
(7) நாட்டையும் மக்களையும் காவல் காப்பவன் என்பதால், அரசனுக்கு இவ்வாறும் ஒரு ஒத்தபொருள் சொல் உள்ளது.
(12) சூரியக் குடும்பத்திலுள்ள கிரகம் ஒவ்வொன்றையும் இப்பெயராலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(14) மணலும் மணல் சார்ந்த இடமும் உள்ள பிரதேசம் இப்பெயரால் குறிப்பிடப்படும். (தலைகீழான சொல்)
(18) மாணவர் கற்கும் கல்விக்கூடம்.
(22) கூரிய முட்கள் கொண்ட வரண்ட பிரதேசத்துக்குரிய தாவரம்.

### மேலிருந்து கீழ்

(1) நாம் பேசுகின்ற பாஷை. விழி போல இதனைக் காக்க வேண்டும் என்றார் கவிஞர் கண்ணதாசன்.
(3) மரங்கள் அடர்ந்த, எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்ற இடம். (தலைகீழான சொல்)
(4) இந்துக்கள் தங்களது வீட்டுவாசலில் வர்ணமாவினால் இடுகின்ற அழகுப் படைப்பு. (தலைகீழான சொல்)
(5) தன்மை ஒருமை பெயர்ச்சொல்.
(8) இல்லாதோருக்கு வாரி வழங்கும் கொடையாளி இவர்.
(11) பாவங்கள் செய்பவர் இவர். (தலைகீழான சொல்)
(14) உள்ளத்தில் எழுகின்ற இந்த சோகநினைவை முடிந்தவரை விரட்டியடிக்க வேண்டும். இல்லையேல் நிம்மதி குலைந்து விடும். (தலைகீழான சொல்)
(18) மட்பாண்டங்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்.
(21) மழை பெய்யும் காலப்பகுதி. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 49

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சுதந்திரம் 07. பாரி 11. பல்லி 14. பார்
17. கதை 19. கீரை 23 சூரியன்

**மேலிருந்து கீழ்**

01. பரிசு 02. தபால் 04. மதி 06. கர்வம்
13. எலி 14. பாதை 19. கீரி 21. நரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 48

### பாராட்டு பெறுவோர்

1. **தி. மனுஜன்**
தரம் 06, கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி, திருமால் முக வீதி, காரைதீவு 07.

2. **தமீம் எஸ்.அப்துல்லா**
தரம் 11, அக்/ அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி, அக்கரைப்பற்று 04.

3. **எஸ்.எப். சிம்லா**
தரம் 04, ப/கெ, முஸ்லிம் மகா வித்தியாலயம், இல. 326/1, பலகொல்ல, கெள்கல்ல.

4. **ஏ.என். உல்பா மர்யம்,**
தரம் 04, மாறை/வெலிகம மு. ஆரம்பப் பாடசாலை, இல. 35/1, சமகி மாவத்தை, வெலிகம.

5. **தி. சயந்தவி,**
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை, இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

6. **எம்.எம்.எம். அஜ்மல்,**
தரம் 06, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை, இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.


7. **எம்.எச்.எம். சைட்,**
தரம் 03B, அல்ஹிலால் மத்திய கல்லூரி, இல. 44/1, ஜும்மா மஸ்ஜித் வீதி, நீர்கொழும்பு.

8. **எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 08B, க/பதியுதீன் மகளிர் வித்தியாலயம், இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

9. **அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம், இல. 337, மங்கெதர, துல்ஹிரிய

குறுக்கெழுத்துப் போட்டி இல. 50
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**கடவுள் வாழ்த்து: கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்...**

***தெளிவுரை :***
*தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?*

# இவ்வார மழலை




சதீஷ்குமார்/சிந்துஜா,
கொழும்பு 13

# சுவீடன்



ஐரோப்பா கண்டத்திலுள்ள சிறு நாடுகளில் சுவீடனும் ஒன்று. பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த நாடு.

சுவீடன் உலக மகா யுத்தங்கள் இரண்டிலும் சிக்கிக் கொள்ளாமல் நடுநிலை வகித்தது.

சுவீடன் மக்கள் நடு ஆசியப் பகுதியிலிருந்து வந்ததாக வரலாறு கூறுகின்றது.

உலகிலேயே வடக்கேயுள்ள நாடு சுவீடன். அதனால் இங்கு பருவநிலை வியப்பானது. மே மாதம் தொடங்கி மூன்று மாதம் இளவேனிற் காலமாக உள்ளது. இக்காலத்தில் சூரியன் இரவும் பகலும் ஒளி வீசுகின்றது. மே மாதத்தில் தோன்றும் சூரியன் ஜுலை மாதம் தான் மறையும். இதனால், சுவீடனுக்கு 'நள்ளிரவு சூரிய நாடு' என்ற பெயர் உண்டு.

சுவீடன் நாட்டு மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள்.

இங்கு நவம்பர், டிசம்பர் மாதங்கள் மூடு பனியாகவிருக்கும். அப்போது, உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுவது இந்நாட்டு மக்களின் பொழுது போக்காகும். இவர்களது தேசிய விளையாட்டு உதைப் பந்தாட்டமாகும்.

இவர்கள் பெரும்பாலும் சைக்கிளில் தான் பயணிப்பார்கள். சைக்கிளை அப்படியே தெருவில் விட்டுச் சென்றாலும் அதை எவரும் திருடுவதில்லை.

கல்வித்துறையில் சுவீடன் முன்னேறியுள்ளது. ஒன்பது ஆண்டுகள் கட்டாயக் கல்வி முறை நடைமுறையில் இருந்து வருகின்றது.

சுவீடன் பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்று விளங்குகின்றது.

சுவீடன் மக்கள் நாய்ப் பிரியர்கள். பெரிய கடைகளில் பொருட்கள் வாங்குபவர்கள், நாய்களைச் சிறிது நேரம் பார்த்து கொள்வதற்கு 'நாய்ப் பண்ணை' உண்டு. சுவீடனின் முக்கியமான நகரங்கள் ஸ்டொக்ஹோம், கோதன்பர்க், மால்மோ, உப்சாலா ஆகும்.

இரசாயன அறிஞரான ஆல்பிரட் நோபல் (1933- 1896) என்ற சுவீடிஷ்காரர் தான் நோபல் பரிசை அறிமுகப்படுத்தியவர். இத்திட்டம் 1901 முதல் ஒவ்வொரு ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் நாள் ஐந்து துறைகளுக்கான பரிசுகளை வழங்கி வருகின்றன.

சுவீடன் மக்கள் தங்கள் நாட்டில் மிகுதியாகவுள்ள காகிதங்களிலிருந்து செய்யாத பொருட்களே இல்லை. கரன்சி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகில் பரப்பியவர்கள் சுவீடிஷ்காரரே.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுவீடன் கீழ் நிலையிலிருந்து முன்னேறிய நாடென்று குறிப்பிடலாம்.

நாம் பிற நாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதனால் தான், எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

**சாரணா கையூம்...**

# பொற் கொல்லனின் வஞ்சகத்தை அம்பலப்படுத்திய ஆக்கிமிடிஸ்



*இத்தாலி நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள சிசிலித் தீவின் 'சிரக்கூஸ்' என்ற இடத்தில் கி.மு. 287ஆம் ஆண்டில் ஆக்கிமிடிஸ் பிறந்தார்.*

*ஆக்கிமிடிஸ் ஒரு விஞ்ஞானி, கணித மேதை. எகிப்தில் உள்ள 'அலெக்சாந்திரியர்' என்ற மிகப் பழைமையான பல்கலைக்கழகத்தில் கற்றவராவார்.*

*பிற்காலத்தில் சிரக்கூசை 2ஆம் ஹைரென்மேகல் என்ற அரசன் ஆண்டு வந்தான். இவ்வரசனுக்கு அரச ஆலோசகராக இவர் பணியாற்றி வந்துள்ளார்.*

*ஒருநாள் ஹைரென் மன்னன் ஆக்கிமிடிஸை அழைத்து தான் புதிதாக செய்வித்த தங்கக் கிரீடத்தைக் காட்டி அது சுத்தமான தங்கத்தினால் செய்யப்பட்டதா? அல்லது வேறு உலோகம் அதில் கலக்கப்பட்டுள்ளதா? என்பதை கண்டு பிடிக்குமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் கிரீடத்திற்கு எந்த சேதமும் ஏற்படக் கூடாதெனவும் வேண்டிக் கொண்டான்.*

*ஆக்கிமிடிசும் பல நாட்கள் முயற்சி செய்தும் அதற்கான விடையை கண்டுபிடிக்க முடியாமல் போனது.*

*இதே சிந்தனையில் இருந்த அவர் ஒரு நாள் குளிப்பதற்காக தண்ணீர் நிரப்பப்பட்டிருந்த தொட்டியொன்றினுள் இறங்கினார். அப்போது ஓரளவு நீர் வெளியே வழிந்தோடியதை அவதானித்தார். அதனை நுணுக்கமாக ஆராய்ந்ததினால் கிரீடத்திற்கான விடை அவருக்கு கிடைக்கப் பெற்றது. அந்த சந்தோசத்தில் 'யூரேக்கா', 'யூரேக்கா' (கண்டுபிடித்து விட்டேன்) என்று கூறிக் கொண்டே தன்னை மறந்த நிலையில், தன் ஆராய்ச்சி கூடம் நோக்கி வேகமாக ஓடிச் சென்றார்.*

*பின்னர் அரண்மனையில் அரசனின் முன்னிலையில் கிரீடம் பற்றிய பிரச்சினையை ஆக்கிமிடிஸ் செயல் மூலம் செய்து காட்டினார்.*

*கிரீடத்தின் நிறைக்கு சமமான தூய தங்கமும் வெள்ளியும் கொணரச் செய்தார். மேலும் நீர் நிரப்பிய மூன்று பாத்திரங்களும் வழிந்தோடும் நீரை சேகரிக்க மூன்று தட்டுகளும் வரவழைக்கப்பட்டன.*

*ஒரு பாத்திரத்தில் வெள்ளியையும் மற்ற பாத்திரத்தில் தூய தங்கத்தையும் மூழ்கச் செய்தார். அப்போது வெள்ளி பாத்திர நீர் அதிகமாக வழிந்தன. காரணம் வெள்ளி, தங்கம் நிறையில் சமமாக இருந்தாலும் வெள்ளி பருமனில் பெரியது என விளக்கினார்.*

*மேலும், கிரீடத்தை மூழ்க முன் அரசருக்கு கூறினார், "கிரீடத்தின் நீரும் தூய தங்கத்தின் நீரும் சமமாக இருந்தால் கிரீடம் தூய தங்கத்தினால் செய்யப்பட்டது என ஏற்றுக் கொள்ளலாம். மாறாக கிரீட நீர் அதிகமாக இருந்தால் உலோகம் கலக்கப்பட்டுள்ளது என முடிவு செய்யலாம்."*

*கிரீடம் மூழ்கச் செய்த போது அதிகமான நீர் வழிந்தோடியது. எனவே கிரீடத்தில் வேறு உலோகம் கலக்கப்பட்டுள்ளது. என உறுதி செய்யப்பட்டது.*

*எனவே, அரசனுக்கும் அரசுக்கும் வஞ்சகம் செய்த பொற்கொல்லன் தண்டிக்கப்பட்டான். ஆக்கிமிடிஸ் அரசனின் புகழாரத்திற்கு பாத்திரமானார்.*

*அக்காலத்தில் வட்டம் ஒன்றின் பரப்பளவை காண்பதில் பிரச்சினைகள் இருந்தன. அப்பிரச்சினைக்கு தீர்வாக (பை ஆர் வர்க்கம்) என்ற சூத்திரத்தை கண்டுபிடித்தவரும் ஆக்கிமிடிஸேயாகும்.*

**என். மொஹமட் லாபீர்...**
பதுளை



# தாவரங்கள் பேசுமா?

*தாவரங்கள் காற்றில் ஆடுவதைப் பார்த்திருப்பீர்கள். அவை அவ்வாறு ஆடுவதன் மூலம் ஒன்றுக்கொன்று பேசுகின்றன என்ற அதிசயத் தகவலைக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள். தாவரங்கள் ஒலிக்கு ஹரென்பான்ஸ் காட்டுவது மட்டுமல்ல தாங்களே சில ஒலிகளை வெளியிடவும் செய்கின்றன என்கிறார்கள் இவர்கள்.*

*இந்த ஆய்வை மேற்கொண்ட பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அதிசக்தி வாய்ந்த ஸ்பீக்கர்களைப் பயன்படுத்தினர். அதன் மூலம் சோளப் பயிர்கள் தமது வேர்ப் பகுதியிலிருந்து வெளியிட்ட ஓசையைக் கேட்டனர். காற்றில் தாவரங்கள் தமது விருப்பம் ஏதுமில்லாமல் இயல்பாக ஆடுவது போலத் தோன்றினாலும் உண்மையில் அவை அப்போது தொடர்ந்து உரையாடிக் கொண்டு இருக்கின்றனவாம்.*

*மொழி என்பது மனிதர்களின் கண்டுபிடிப்பு என்று இனியும் நாம் பெருமையடித்துக் கொள்ள முடியாது.*

**கே.எல். ஹில்மி...**
*தேசிய பாடசாலை, சம்மாந்துறை 10*

# துள்ளிக் குதிக்கும் ஆட்டுக்குட்டி...!

துள்ளித்துள்ளி ஓடிவரும் ஆட்டுக்குட்டி
துடியாட்டம் போடுமெந்தன் ஆட்டுக்குட்டி
கறுப்போடு வெள்ளைநிற ஆட்டுக்குட்டி
விருப்போடு நான்வளர்க்கும் ஆட்டுக்குட்டி.

மணியென்ற பெயருடைய ஆட்டுக்குட்டி
மனசார நான்விரும்பும் ஆட்டுக்குட்டி
எப்போதும் என்பின்னால் சுற்றிவந்து
என்னோடு விளையாடும் ஆட்டுக்குட்டி.
அடிக்கடி பால்குடிக்கும் ஆட்டுக்குட்டி – அதன்
அம்மாவுக்கு தொல்லைதரும் ஆட்டுக்குட்டி
வில்லைப்போல மேலெழுந்து துள்ளிவிழும்
வித்தைசெய்து காட்டுகின்ற ஆட்டுக்குட்டி.

அன்போடு நாமணைக்கும் ஆட்டுக்குட்டி
அனைவருமே நேசிக்கின்ற ஆட்டுக்குட்டி
கண்போல நாம்கருதும் ஆட்டுக்குட்டி
கலகலப்பை எமக்குத்தரும் ஆட்டுக்குட்டி.



**ஷெல்லிதாசன்....**
திருகோணமலை

# வாரம் ஒரு பெரியார்

## தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார்



சேவியர் தனிநாயகம் அடிகளார் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்துறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்ரனிசுலாசு – சிசிலியா இராசம்மா பல்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்தில் இவர் தமிழில் கொண்ட தீராத காதலினால் உரோமன் கத்தோலிக்க குருவாக நியமிக்கப்பட்டபோது தனது பெயரினை சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக் கொண்டார்.

தனிநாயகம் அடிகளார் தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில வழிக் கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார். இக்காலத்தில் ஆங்கிலம், இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்சு, செருமன், எசுப்பானியம், போர்த்துக்கீயம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தொடர்ந்து உருசியம், கிரேக்கம், இபுரு, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்து ஒரு பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

திருவனந்தபுரம் மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது 1934 தொடக்கம் 1939 வரை உரோம் நகரில் வத்திக்கான் பல்கலைக்கழகம் சென்று The Carthaginian Clergy என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரையினை எழுதி தெய்வ தத்துவத்தில் (Doctor of Divinity) பட்டம் பெற்றார். இவ்வாய்வுக் கட்டுரை 1960இல் நூல் வடிவில் வெளியானது.

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கன்குளம் என்னும் ஊரில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் நான்காண்டுகள் துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். முறையான தமிழைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங்கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயில ஆரம்பித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றார். 1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இரத்தினசாமி, மற்றும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைக் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கியத்தில் சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, எம்.லிட். பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றது.

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1961 முதல் 1968ஆம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியாராகவும் பணியாற்றினார். கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் காலப்போக்கில் தமிழ் மீது தீராக் காதல் கொண்டு அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும் பரப்பும் தூதராகவும் தமிழ்க் கலாசாரம் ஏட்டின் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார்.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு ஜப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஒரே வருடத்தில் 200க்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார்.

தமிழ்பணி செய்யவே இறைவன் தன்னை அழைக்கின்றான் என்று உறுதியாக நம்பிய அடிகளார், முதல் உலகத் தமிழ் மாநாட்டின் முதல் அமர்வுக்கு அவர் தலைமை தாங்கிய போது "என்னை நன்றாய் இறைவன் படைத்தனன், தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே" என்னும் திருமூலரின் வரிகளைக் கூறிய பின்னரே ஆங்கிலத்தில் தம் உரையைத் தொடர்வார்.

அறிவாளியாகவும், ஆன்மீகவாதியாகவும். செயல் வீரனாகவும். உலகில் உள்ள தமிழர்களை, தமிழறிஞர்களையும் ஒன்று இணைத்த மாவீரன். பக்திச்சுவையும் மனிதாபிமானமும், தமிழ் இனத்தின் விடிவெள்ளியாகவும் திகழந்த அடிகளார் 1980 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார்.

# மஞ்சரி விளையாட்டு



# அரசியலாகும் ஆசிய கிண்ணம்

இந்திய அணி பாகிஸ்தான் வராவிட்டால் பாகிஸ்தான் அணி இந்தியா வராது என்ற தர்க்கம் சிறுபிள்ளைச் சண்டை போல் இருந்தாலும் அதில் ஒரு சமத்தும் இருக்கிறது. ஆனால், யதார்த்தத்தில் அந்த சமத்துவம் என்பது பொருந்தாது.

வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறப்போகும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை எங்கே நடத்துவது என்ற குழப்பத்தில், மேற்கூறியது பாகிஸ்தான் முன்வைக்கும் பிரதான தர்க்கம்.





ஆசிய கிண்ண போட்டி நடந்து ஒரு மாதத்திலேயே இந்தியாவில் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவிருக்கிறது. எனவே நீங்கள் வராவிட்டால் நாங்கள் வரப்போவதில்லை என்று கூறுவதில் என்ன தப்பிருக்கப்போகிறது. ஆனால் இந்தியாவும், பாகிஸ்தானும் கிரிக்கெட் போட்டியை நடத்துவதாக இருந்தால் அது வெறும் கிரிக்கெட் போட்டியாக மாத்திரம் இருக்காது. அங்கே பெரிய அரசியல் இருக்கும் என்ற கோணத்தில்தான் பிரச்சினையை அணுக வேண்டும்.

ஆசிய கிண்ணத்தை பாகிஸ்தான்தான் நடத்தும் என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்று. முன்னர் போல் பாகிஸ்தானின் பாதுகாப்புப் பிரச்சினையை இப்போது காரணமாகக் கூற முடியாது. அது மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே முடிந்த கதை. பட்டாசு வெடித்தாலும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்க பயப்படும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் அண்மையில் அங்கு சென்று கிரிக்கெட் ஆடி இருக்கின்றன.

ஆனால் கடந்த ஒக்டோபரில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் ஜெய் ஷா, இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது என்றும் ஆசிய கிண்ணம் பொது இடத்தில் நடைபெறும் என்றும் அறிவித்ததே இப்போது பெரும் பிரச்சினையாக வெடித்திருக்கிறது.

ஜெய் ஷா என்பவர் இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவராக மாத்திரம் இருந்தால் பரவாயில்லை அவர் ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் தலைவரும் கூட. எனவே அவரது அறிவிப்புக்கு மதிப்பு அதிகம்.

பின்னர், ஆசிய போட்டி அட்டவணை வெளியிடப்பட்ட போது போட்டியை நடத்தும் நாடு பற்றி எதுவும் கூறப்படாமல் இருந்தது பாகிஸ்தானின் கோபத்தை மேலும் அதிகரித்தது. இதனாலேயே ஆசிய கிரிக்கெட் கௌன்ஸிலின் அவசரக் கூட்டத்துக்கு பாக். கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்திருந்தது.

இதன்படி கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி பஹ்ரைனில் கூடிய அவசரக் கூட்டத்தில் பாக். மற்றும் இந்திய பிரதிநிதிகளுக்கு இடையே வாக்குவாதம் வெடித்தது எதிர்பார்த்ததே.

இந்திய அணி பாகிஸ்தான் வராவிட்டால் பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தில் ஆட இந்தியா வராது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் சேதி கூறியபோது, ஆசிய கிரிக்கெட் கௌன்சிலையும், சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலையும் குழப்பிக்கொள்ள வேண்டாம் என்று ஜெய் ஷா பதிலளித்தார்.

அதாவது இந்திய அணி பாகிஸ்தான் வருவதற்கு இந்திய அரசு அனுமதிக்காது என்பது ஜெய் ஷாவின் தர்க்கம். அதனாலேயே போட்டியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அவர் கூறுகிறார். ஆனால் போட்டியை நடத்தும் பாகிஸ்தானின் உரிமையை அவர் மறுக்கவில்லை.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் டுபாய், அபூதாபி அல்லது ஷார்ஜா எங்கேயாவது பாகிஸ்தானுக்கு போட்டியை நடத்த முடியும் என்கிறார் ஜெய் ஷா. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உடனடியாக இறங்கி வரும் என்று எதிர்பார்த்துவிட முடியாது. இந்த பரிந்துரைக்கு அது ஒப்புதல் அளிக்கவில்லை. என்ன முடிவாக இருந்தாலும் பாக். அரசே அதனை எடுக்க வேண்டி ஏற்படும் என்பது அதன் நிலைப்பாடு.

எனவே பஹ்ரைன் கூட்டத்தில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அடுத்த மாதம் இது பற்றி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடாகி இருக்கிறது. அப்போது எப்படியாவது இறுதி முடிவு ஒன்று எட்டப்பட வேண்டிய நெருக்கடியும் உள்ளது. எந்த முடிவாக இருந்தாலும் அது சுமுகமாக முடிய வேண்டும் என்பது முக்கியம்.

இந்தியா வராவிட்டால் என்ன பாகிஸ்தானில் போட்டியை நடத்துவோம் என்று எடுத்தோம் கவிழ்த்தோம் என்று பாகிஸ்தானால் முடிவு எடுக்க முடியாது. ஏனென்றால் அது அரசியலுக்கு அப்பால் போட்டியை நடத்துவதிலும் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும்.

என்னதான் கூறினாலும், இந்தியா என்பது தங்க முட்டை போடும் வாத்து. இந்தியா இன்றி போட்டியை நடத்துவது அனுசரணையாளர்களை பின்வாங்கச் செய்யும். ஏற்கனவே பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் பாகிஸ்தானுக்கு அது பெரிய இடியாக இருக்கும்.

உலகக் கிண்ணத்தை நடத்தப்போகும் இந்தியாவின் கதையும் இதுதான். பாகிஸ்தான் இன்றி உலகக் கிண்ணத்தை நடத்துவது என்பது விளையாட்டு, பொருளாதாரம், அரசியல் என்று அனைத்து வகையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.

அடிப்படையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையில் இரு தரப்பு கிரிக்கெட் போட்டி நடப்பது என்பது இரு நாடுகளுக்கும் இடையில் ஓரளவு சுமுகமான உறவு இருப்பதாக அர்த்தம்.

2012-13 இல் பாகிஸ்தான் அணி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் தொடர் ஒன்றுக்காக இந்தியா சென்றதே இரு நாடுகளும் கடைசியாக ஆடிய இரு தரப்பு தொடராக இருந்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் டெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இந்தத் தொடர் நடத்த இணக்கம் எட்டப்பட்டது என்பதில் இருக்கும் அரசியல் புரிந்திருக்கும்.

ஆனால் 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதே இல்லை. 2009இல் பாகிஸ்தானில் இலங்கை அணியினர் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலும், இந்தியா அணி பாகிஸ்தான் பக்கம் திரும்பிப் பார்க்காமல் இருப்பதற்கு ஒரு சாக்காகவும் இதுவரை காலமும் இருந்து வந்தது.

மற்றபடி சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் அல்லது ஆசிய கிரிக்கெட் கௌன்ஸில் நடத்தும் கிரிக்கெட் தொடர்களிலேயே இரு அணிகளும் ஒன்றை ஒன்று எதிர்த்தாடுகின்றன. அப்படியான போட்டிகளுக்கு இப்போது மவுசு அதிகம். போட்டி அட்டவணை வெளியாகும்போதே டிக்கெட் வாங்குவதற்கும் அனுசரணைக்கும் முண்டி அடிப்பார்கள். பணம் கொட்டும்.

இப்படியாக பாகிஸ்தான் அணி கடைசியாக 2016 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அது டி20 உலகக் கிண்ணத்தில் ஆடுவதற்காக. அடுத்த ஆசிய கிண்ணப் போட்டியிலும் கூட இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் ஒரே குழுவில் சேர்க்கப்பட்டு இரு அணிகளுக்கும் அதிக போட்டி விழும் வகையில் அட்டவணையை திட்டமிட்டு அமைத்திருக்கிறார்கள்.

எனவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கிரிக்கெட் ஆடுவது என்பது எல்லோருக்கும் தேவையானது, ஆனால் யாராலும் தீர்மானிக்க முடியாதது. அடுத்த ஆசிய கிண்ண போட்டியின் நிலைமையும் இப்படித்தான். போட்டி எங்கே, எப்போது எப்படி நடக்கும் என்று தெரியவில்லை. ஆனால் இந்தியா மற்றும் பாகிஸ்தானை இணைத்து எப்படியாவது நடத்த வேண்டும்.

போட்டியை இலங்கையில் நடத்தலாம் என்ற பேச்சும் வலுவாக இருக்கிறது. ஆனால் பாகிஸ்தான் போட்டியை நடத்தினால் அது ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்லலாம். எப்படியோ நல்ல முடிவு ஒன்றை எடுப்பது எல்லோரதும் கிரிக்கெட், அரசியல், பொருளாதாரத்திற்கு நல்லது.



> ‘இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கிரிக்கெட் ஆடுவது என்பது எல்லோருக்கும் தேவையானது, ஆனால் யாராலும் தீர்மானிக்க முடியாதது. அடுத்த ஆசிய கிண்ண போட்டியின் நிலைமையும் இப்படித்தான்’

**எஸ்.பிர்தௌஸ்...**

## டெஸ்டுக்கு தயாராகும் இலங்கை

நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாத்தில் புதுமுக வீரர்களாக நிஷான் மதுஷ்க மற்றும் மிலான் ரத்னாயக்க சேர்க்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இலங்கை தேர்வுக் குழு தொடர்பில் பிரச்சினை இருந்தபோதும், இலங்கை அணியின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் நியூசிலாந்து சுற்றுப் பயணத்திற்கான அணித் தேர்வு விரைவில் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

வரும் மார்ச் ஆரம்பத்தில் நியூசிலாந்து செல்லும் இலங்கை அணி முதலில் இரு டெஸ்ட் போட்டிகளில் ஆடவிருக்கிறது. இந்த டெஸ்ட் போட்டி இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆடுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதாக இருக்கும்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் தரவரிசையில் இலங்கை இப்போது 3ஆவது இடத்தில் இருந்தபோதும் நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடர் என்பது அது இரண்டாவது இடத்திற்கு முன்னேற வாய்ப்பை தரக்கூடியது.

இந்த டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2–0 என முழுமையாக வென்றால் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆடும் எதிர்பார்ப்பை கிட்டத்தட்ட உண்மையாக்கிவிடலாம். அப்போது தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியா அதனை தக்கவைத்துக்கொள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 4–0 அல்லது 3–1 என வெல்ல வேண்டிய நெருக்கடி ஏற்படக்கூடும்.

ஆனால் தரவரிசையில் தற்போது முதலிடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டியில் ஆடுவதற்கு இந்தியாவுடனான டெஸ்ட் தொடரின் ஒரு போட்டியை சமன் செய்தால் போதும்.



மறுபக்கம் தென்னாபிரிக்காவும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் கிண்ணத்தை வெல்லும் போட்டியில் உள்ளது. தென்னாபிரிக்கா அடுத்து மேற்கிந்திய தீவுகளுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவிருப்பதோடு அந்தப் போட்டி முடிவும் இலங்கைக்கு பாதிப்பை செலுத்தும்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் தற்போது அறிவித்திருக்கிறது. இதன்படி அந்தப் போட்டி லண்டன் ஓவலில் வரும் ஜூன் 7 தொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெறும். 12ஆம் திகதி மேலதிக நாளாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையிலேயே டெஸ்ட் அணி பற்றி உறுதி செய்யப்படாத செய்தி வெளியாகி இருக்கிறது. திமுத் கருணாரத்ன தலைமையிலான 18 பேர் கொண்ட குழாத்தில் மேற்சொன்ன இரு புதுமுக வீரர்களையும் முக்கியமானவர்களாக பார்க்கலாம்.

இதில் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக நடந்து முடிந்த முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் நிஷான் மதுஷ்க சிறப்பாக செயற்பட்டிருந்தார். இலங்கை ஏ அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக செயற்பட்ட அவர் முதல் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இரட்டைச் சதம் பெற்றார்.

அதேபோன்று அவர் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபை அணிக்காக முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்களை பெற்றார்.

இதுவரை 37 முதல்தர போட்டிகளில் ஆடியிருக்கும் 23 வயதான மதுஷ்க 10 சதங்களுடன் 3267 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். இன்னிங்ஸ் ஒன்றில் அவரது அதிகபட்ச ஓட்டங்கள் ஆட்டமிழக்காது 300. அதாவது டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு பொருத்தமான வீரராக அவரை பார்க்கலாம்.

மற்ற வீரரான வேகப்பந்து வீச்சாளரான 26 வயது மிலான் ரத்னாயக்க இதுவரை 22 முதல்தர போட்டிகளில் 42 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். டெஸ்ட் குழாத்தில் அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் சேர்க்கப்பட்டிருப்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

டெஸ்ட் தவிர நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இலங்கை அணி 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகளிலும் ஆடவிருக்கிறது. இதில் ஒருநாள் போட்டி இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற இலங்கை அணிக்கு தீர்க்கமானது. எனவே அதற்காக அணியின் தேர்வு என்பது முக்கியமானது.

இங்கிலாந்து லயன்ஸ் உடன் இலங்கை ஏ அணி ஆடவிருக்கும் மூன்று ஒருநாள் போட்டிகள் அடிப்படையிலேயே அதற்கான அணி தேர்வு செய்யப்படலாம். குறிப்பாக குசல் ஜனித் பெரேரா, துஷ்மந்த சமீர போன்ற வீரர்கள் மீது அதிக அவதானம் செலுத்தப்பட வாய்ப்பு உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 பெப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை
Happy
Day



# 102 குழந்தைகளின் பின் ஞானம் பிறந்த தந்தை

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

மூசா அசஹ்யா கசேராவுக்கு அதிகப்படியான பிள்ளைகள். எந்த அளவுக்கு என்றால் பெரும்பாலான பிள்ளைகளின் பெயர்கள் கூட நினைவில் இல்லை.

உகண்டா கிராமத்தைச் சேர்ந்த கசேரா, கட்டுப்பாடாக இருந்திருக்கலாமே என்று இப்போதுதான் கவலைப்படுகிறார். அவருக்கு மொத்தம் 12 மனைவிமார். மனைவிகளின் பெயர்களைக் கூட வரிசையாகச் சொல்லத் தெரியவில்லை. அப்படி இருக்கும் அவருக்கு மொத்தம் 102 குழந்தைகள் 578 பேரக் குழுந்தைகள். “இது போதுமடா”, என்று இப்போதுதான் அவர் களைப்படைந்திருக்கிறார்.

“ஆரம்பத்தில் சுவாராஸ்யமாகத்தான் இருந்தது, ஆனால் இப்போது பெரும் பிரச்சினையாகிவிட்டது” என்கிறார் கசேரா. கிழக்கு உகண்டாவின் பின்தங்கிய பகுதியான புடலாஜா மாவட்டத்தில் இருக்கும் புகிசா கிராமத்திலேயே 68 வயதான கசேரா வசிக்கிறார். இப்போது அவருக்கு வேலையும் இல்லை.

“எனது உடல்நிலை மோசமடைந்து வருகிறது. இரண்டு ஏக்கர் காணியில்தான் இத்தனை பெரிய குடும்பத்தை வாழவைக்கிறேன். உணவு, உடை, கல்வியை கொடுக்க முடியாததால் இரண்டு மனைவிகள் கோபித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள்” என்று கசேராவை சந்திக்கச் சென்ற செய்தியாளரிடம் தனது குடும்ப கஷ்டத்தை சொன்னார்.

இப்போதெல்லாம் கசேராவின் பெரிய குடும்பத்தை பார்க்க ஊர் பேர் தெரியாதவர்களும் வருகிறார்கள். கிராமத்திலேயே பிரபலமானவர் அவர்தான். குடும்பம் இன்னும் பெரிதாவதை கட்டுப்படுத்த மனைவிமார் கருத்தடை மாத்திரை எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்.

“எனது மனைவிமார் கருத்தடை மாத்திரை எடுத்துக் கொண்டபோதும், நான் அதனைச் செய்யவில்லை. எனது பொறுப்பற்ற செயலால் அதிக குழந்தைகளை பெற்றதோடு அவர்களை கவனிக்கவும் முடியவில்லை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்” என்று ஒப்புக்கொள்கிறார் கசேரா.

ஆங்காங்கே உடைந்திருக்கும் வீடு மற்றும் அருகில் சில மண் குடிசைகளிலேயே கசேராவின் மிகப்பெரிய குடும்பம் வாழ்கிறது.

1972ஆம் ஆண்டு பாரம்பரிய சடங்குகளுடன் அவர் தனது முதல் மனைவியை திருமணம் புரிந்தார். முதல் குழந்தை அதற்கு ஓர் ஆண்டு கழித்து பிறந்ததோடு முதல் மனைவிக்கு மொத்தம் 17 குழந்தைகள்.

“என்னோடு உடன் பிறந்தவர் ஒருவர்தான் இருக்கிறார். அதனால் மேலும் திருமணங்கள் முடித்து அதிக குழந்தைகளை பெற்று எமது குடும்ப மரபை விரிவுபடுத்தும்படி எனது சகோதரர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆலோசனை வழங்கினார்கள்” என்கிறார் கசேரா.

கால்நடை வர்த்தகர் மற்றும் இறைச்சிக் கடைக்காரராக மாறி சற்று வசதியோடு இருந்ததால் ஊர் மக்கள் அவர்களின் மகள்மாரை திருமணம் முடித்துக் கொடுக்க முன் வந்தார்கள். இதில் சில பெண்கள் 18 வயதுக்கும் குறைவு.

1995 ஆம் ஆண்டில்தான் உகண்டாவில் சிறார் திருமணத்திற்கு தடைவந்தபோதும் குறிப்பிட்ட சில சமய வழக்கங்களுக்கு அமைய அங்கு பலதார திருமணத்திற்கு அனுமதி உண்டு.

இதனால் சுற்றி இருப்பவர்களின் ஆலோசனையை கேட்டு கட்டுப்பாடில்லாமல் திருமணங்களை செய்து குழந்தைகளையும் பெற்றெடுத்தார். இப்போது கசேராவின் இளைய குழந்தையின் வயது 10, மூத்த குழந்தையின் வயது 50. அவரது இளைய மனைவியின் வயது 35.



“எனது முதல் குழந்தை மற்றும் கடைசி குழந்தையின் பெயர்கள் மாத்திரமே என்னால் ஞாபகம் இருப்பதோடு சில குழந்தைகளில் பெயர்கள் முற்றாக மறந்துவிட்டது” என்று கூறும் அவர் சிறிய குறிப்புப் புத்தகத்தில் தனது குழந்தைகளின் பெயர் மற்றும் பிறந்த திகதிகளை எழுதி வைத்திருக்கிறார்.

“குழந்தைகளின் தாய்மார்கள்தான் அவர்களை அடையாளம் காண உதவுகிறார்கள்.”

இதில் சில மனைவிமாரின் பெயர் கூட ஞாபகம் இல்லை என்பது மற்றக் கொடுமை. அவரது 30 வயதான ஷபான் மகினோ என்ற மகன் ஆரம்ப பாடசாலை ஆசிரியராக இருப்பதோடு குடும்பத்தை பார்த்துக் கொள்வதில் தந்தைக்கு உதவி வருகிறார். குடும்பத்தில் படித்த ஒருசில பிள்ளைகளில் இவரும் ஒருவர்.

பெரிய குடும்பம் என்பதால் பிரச்சினைகளை தீர்க்க மாதத்திற்கு ஒருமுறை குடும்பத்தினர் ஒன்றுகூடுகிறோம் என்கிறார் விபரம் அறிந்த அந்த மகன்.

எனவே கசேரா குடும்பத்தினர் பிரச்சினைகளை இழுத்துவரமாட்டார் என்று சுமார் 4,000 பேர் வசிக்கும் புகிசா கிராமத்தின் நல்லது கெட்டதைப் பார்க்கும் அதிகாரி ஒருவர் கூறுகிறார். அவர் குடும்பத்தை நன்றாகப் பார்க்கிறார், உதாரணமாக சண்டை அல்லது திருட்டுப் பற்றி எந்த வழக்கும் அந்தக் குடும்பத்தில் இருந்து வருவதில்லை என்று அந்த அதிகாரி சான்று வழங்கினார்.

புகிசா கிராமத்து மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாக இருக்கிறார்கள். அரிசி, மரவள்ளிக்கிழங்கு, கோப்பி போன்ற பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுபவர்களாகவும் கால்நடை வளர்ப்பவர்களுமாகவே காலத்தை ஓட்டுகிறார்கள்.

கசேராவின் குடும்பத்தினரின் பெரும்பாலானவர்கள் அண்டை வீட்டார்களுக்கு உதவி செய்து பிழைப்பு நடத்துகிறார்கள். வீட்டுக்கு வெளியில் இருந்து கொண்டு தைக்கும் வேலைகளை செய்வது, தலைமுடி பார்ப்பது போன்ற வேலைகளை செய்வதிலேயே பெண்களின் காலம் போகிறது. மரத்தின் நிழலில் இருந்து சீட்டு விளையாடுவதே ஆண்களின் பொழுதுபோக்கு.

மதிய உணவுக்கு பெரும்பாலும் மரவள்ளிக்கிழங்கு சமைப்பார்கள். கசேரா, குடும்பத்தினருக்கு முறையாக உணவு வழங்கும் வேலையை செய்வதிலேயே அதிக காலத்தை செலவிடுகிறார்.

“உணவு அரிதாகவே எல்லோருக்கும் போதுமாக இருக்கும். குழந்தைகளுக்கு நாளுக்கு ஒருமுறை அல்லது நல்ல நாளாக இருந்தால் இரண்டு முறைதான் உணவு வழங்குவோம்” என்று கசேராவின் மூன்றாவது மனைவி சபீனா சொல்கிறார்.

அவருக்கு வேறு மனைவிகள் இருப்பது தெரிந்திருந்தால் நான் அவரை திருமணம் முடிக்க விருப்பப்பட்டிருக்க மாட்டேன் என்கிறார்.

“நான் வந்த பின்னர் தலைவிதிப்படி நடக்க அரம்பித்துவிட்டேன். நான்கு, ஐந்து என 12 வரை திருமணம் முடித்தார்” என்று விதியை நொந்துகொள்கிறார் சபீனா.

கசேராவின் இரு மனைவிகள் ஏற்கனவே பிரிந்து சென்ற நிலையில் வீட்டில் இடம் பத்தாததால் மேலும் மூன்று மனைவிமார் சுமார் 1.2 மைல் தூரத்தில் இருக்கும் மற்றொரு கிராமத்தில் வசிக்கிறார்கள்.

இத்தனை பிரச்சினைகளிலும் அதிகமான மனைவிமார் உங்களை ஏன் கைவிடவில்லை என்று கசேராவிடம் கேட்டபோது: “அவர்கள் அனைவரும் என் மீது அன்பு காட்டுகிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியாகவே இருக்கிறார்கள்” என்கிறார்.



# காதலர் தினம் தோன்றிய வரலாறு

ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் வந்ததுமே நினைவுக்கு வருவது காதலர் தினம் தான். காதலிக்கும் இளைஞர்கள் காதலர் தினத்தன்று தான் தங்களது காதலைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

ரோமானிய அரசனின் ஆட்சிக் காலத்தில் தான் காதலர் தின கொண்டாட்டம் துவங்கியதற்கான சான்றுகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கிளாடியுஸ் மிமி ஆட்சிக் காலத்தில் ரோமாபுரி நாட்டில் இனி யாரும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனவும், ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் ஒரு அதிரடி உத்தரவை விட்டுள்ளார். இந்நிலையில் அந் நாட்டு பாதிரியார் வாலண்டைன் அரசனின் அறிவிப்பை மீறி இரகசியமாக அனைவருக்கும் திருமணங்களை நடத்தி வைத்தான்.

இதனையறிந்த மன்னன் வால்ண்டைனை கைது செய்ததோடு, மரண தண்டனையை நிறைவேற்ற நாளும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதற்கிடையில் சிறைக்காவலரின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியசுக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளது. ஆனால், சிறைக்காவலருக்கு இது தெரியவர அஸ்டோரியசை வீட்டு காவலில் வைத்தான். அப்போது தான் வாலண்டைன் அஸ்டோரியசுக்கு தனது முதல் காதல் வாழ்த்து அட்டை மூலம் செய்தி அனுப்பினார்.

இதே நேரத்தில் தான் வாலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்த நிலையில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டார். அந்தநாள் கி.பி.270 பெப்ரவரி 14ம் நாள். இந்த நாளே வாலண்டைன் தினம் காதலர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.



# காதலின் நிஜ முகம்

காதல் மின்னலை போன்றது. அது எப்போது வரும்? என்று யாருக்கும் தெரியாது. எந்தவித நிபந்தனையும், எதிர்பார்ப்பும் இல்லாமல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை இந்த மூன்றும் சங்கமிக்கும் ஒரு புள்ளியே காதல்.

''நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்அஞ்சுதும் வேபாக் கறிந்து'' எனும் குறளே அதற்கு சான்றாகும். 'சூடான பண்டத்தைச் சாப்பிட்டால் நெஞ்சுக்குள் இருக்கின்ற காதலருக்குச் சுட்டுவிடும் என்று அஞ்சுகிற அளவுக்கு நெஞ்சோடு நெஞ்சாகக் கலந்திருப்பவர்களே காதலர்களாவார்கள்', என்பதே இந்த திருக்குறளின் விளக்கமாகும். இப்படி 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காதலின் சிறப்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

காதல் வருவதும், வந்தபின் அந்த காதலை யாருக்கும் சொல்லாமல் வளர்ப்பதும் ஒரு சுகமான சுமை தான்.

அதிலும் காதல் கைகூடிவிட்டால் போதும் உலகத்தையே வென்று விட்ட திருப்தி காதலர்களுக்கு ஏற்படும். மொத்தத்தில் காதல் மனிதனுக்கு ஓர் 'உற்சாக டொனிக்'.

அன்னையர் தினம், தந்தையர் தினம், நண்பர்கள் தினம் என்று உள்ளது போல், ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 14ம் திகதி காதலர் தினமாக கொண்டாடப்படுகிறது.

காதலில் விழுந்து, தன் மனம் கவர்ந்த காதலியை மனைவியாக அடைகிறவன் வெற்றியாளனாகவே பார்க்கப்படுகிறான். அந்த காதலும் வெற்றியடைந்ததாகவே கருதப்படுகிறது.

ஆனால் வாழ்கிற வாழ்க்கையில் தான் அந்த காதலின் நிஜ முகம் தெரியவருகிறது. ஆடம்பர கேளிக்கைகளை தவிர்த்து உள்ள புரிதலோடு காதலர் தினத்தை கொண்டாடினால் வாழ்வில் என்றும் சந்தோஷம் தென்றலாய் வீசும்.

ஒவ்வொரு ஆண்டும் காதலர் தினத்தன்று என்ன நிறத்தில் உடை அணிகிறோம் என்பதற்கு இளைஞர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஒவ்வொரு நிறத்திற்கும் ஒவ்வொரு அர்த்ததை வைத்திருப்பார்கள். இன்றைய இளம் தலைமுறையினரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல் அடிப்படையில் காதலர் தின உடைக்கான விளக்கம் வருமாறு:

பச்சை நிற உடை: எனக்கு விருப்பம் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

ரோஸ் நிற உடை: இப்போது தான் காதலை ஏற்றேன்.

நீல நிற உடை: இன்னும் காதலில் விழவில்லை.

மஞ்சள் நிற உடை: காதல் தோல்வி.

கருப்பு நிற உடை : காதல் நிராகரிக்கப்பட்டது.

ஓரஞ்சு நிற உடை: நிச்சயதார்த்தம் செய்ய ரெடி.

சிவப்பு நிற உடை: எனக்கு விருப்பம் இல்லை.

சாம்பல் கலர் உடை: எனக்கு காதல் வராது. வெறுக்கிறேன்.

வெள்ளை நிற உடை: ஏற்கனவே காதலிக்கிறேன்.

# செல்ஃபி உலா



சிமாஸ் சிராஜுதீன்


தினேஸ் அட்சரா


Fathima Arwa Ishak


ஆர். கீர்த்தனா


கலைஞர் விஜே


ஆர். டி. ஹரன்


ரஞ்சனி சுரேஷ்


சாந்தன்

# கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் "FIVE IN ONE" மாபெரும் இசை நிகழ்ச்சி

நாடறிந்த ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக் கமலின் 57 ஆவது கீத்ராத் " FIVE IN ONE " மாபெரும் இசை நிகழ்ச்சி இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்பு 7 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் ஞாயிறு மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக "இலக்கியபுரவலர்" ஹாஸிம் உமர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் முன்னிலை "கலைப்புரவலர்" ஸைட் சிவாஜி மௌலானா, தேசமான்ய அக்கரைப்பற்று ஏ. பி. அப்துல் கையூம் தலைமை வகிக்கவுள்ளனர். நுவரெலியா மாவட்ட ஐ.தே.க.இணைப்பாளர் திருச்செல்வம், பிரபல தொழிலதிபர்கள் எஸ். ரவீந்திரன். எம.ரி.எம். நௌஷாத் ஆகிய சமூகசேவையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இசை முரசு, ரி.எம்.எஸ். எஸ்.பி.பி, ஜேசுதாஸ் , முஹம்மது ராபி ஆகியோரின் பாடல்களை கலாபூஷணம் கலைக்கமல் பாடவுள்ளார்.




# "வீனஸ்", "அக்ஷரா" இசைக்குழுவினரின் இசை நிகழ்வு

IDM NATIONS CAMPUS INTERNATIONAL பிரதான அனுசரணையில் கவிக்கமல், பாசில், ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ்" "அக்ஷரா" இசைக்குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும்" கலந்த "வசந்த கானங்கள்" 60வது இசைநிகழ்ச்சி இன்று 12. 02. 2023 ஞாயிறன்று கொழும்பு 07 PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம் பெற உள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழ் எப் எம், மொஹபத் tv மற்றும் அக்ஷரா தமிழ் மீடியா ஊடக அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு கலாநிதி விநாயகமூரத்தி ஜனகன் (தலைவர் IDM Nations Campus international) தலைமைதாங்குவார். இதில் முன்னிலை அதிதியாக டாக்டர் எம்.ஏ.சி. மௌசூமும் பிரதம அதிதியாக கலாபூஷணம், கவியமுதன் இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ் தாஜ் மஹானும், விஷேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவரும் கௌரவ விருந்தினராக கலாநிதி அதிவணபிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்ணான்டோவும் (சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர்) கலந்து கொள்வார்கள். முனைவர் சதீஷ் குமார் சிவலிங்கம், (சிரேஷ்ட உப தலைவர், மலையக மக்கள் முன்னணி), சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர் ஈஸ்வரலிங்கம், தமிழ் எப் எம் நிர்வாகி ஹோசியா அனோஜன், சமூக சேவையாளர் ஆனந்தகுமார், கந்தசாமி கருணாகரன் (தேசிய ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கான செயலகம்), தொழிலதிபர் டாக்டர் பஹார்தீன், தொழிலதிபர் டாக்டர் ரமிஸ் மொஹம்மட், தேசமான்ய இஸ்மாயில், தேசமான்ய மௌசும் ஜிப்ரி, தொழிலதிபர் மொஹம்மட் சிராஜ், டாக்டர் கௌசலா தேவி கோவிந்தப் பிள்ளை,

நகரசபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, சமூக சேவையாளர் உசைன் போல்ட், Touch Touch உரிமையாளர் நவராஜா, தொழிலதிபர் ரபீக், சமூக செயற்பாட்டாளர் ஏ.டீ முரளீஸ்வரன், சமூகசேவையாளர் சாஜஹான் color house

மனித நேயன் இர்சாத் ஏ காதர், சமூக சேவையாளர் அஸீஸ் லக்கானா, கலைஞர் ஏ.ரவீந்திரன், கலைஞர் சண்மு, தொழிலதிபர் கலைஞர் ஓவியநாதன், குருசாமி புவனேஸ்வரன், குருசாமி தேசமான்ய பிச்சைக்கிருஷ்ணா, சமூக சேவையாளர் சிராஸ் யூனூஸ், சமூக சேவையாளர் இம்தியாஸ் காரியப்பர், கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் ஜே.எம். எம்.ரிஸ்வான், குருசாமி ஜே.வீரமூர்த்தி, தெகிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா, அஸீஸ் பவுண்டேசன் அதிபர் அஷ்ரப் அஸீஸ் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.






நண்பர் 1: ஏன் நின்னுகிட்டே சாப்பிடுறீங்க???
நண்பர் 2 : பொண்டாட்டி சாம்பாதியாத்திலே உட்கார்ந்து சாப்பிடரான்னு யாரும் கிண்டல் பண்ண கூடாதுல அதான்.



தொண்டர் 1 : தலைவர் எதுக்கு சலூன் கடைக்கு போகும்போதெல்லாம் தொண்டர்களையும் கூட்டிட்டு போறரர்
தொண்டர் 2 : முடி வெட்டுவதற்கு முன்னால் துண்டு போர்த்திவிடுவாலாம் அப்போ கை தட்டுவதற்காம்.



ஆசிரியர் : நம்ம பள்ளியில் 5 மாடிகள் இருக்குது. ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுக்கள் இருக்கு ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும்.
மாணவன் : எல்லா படிகளையும் ஏறணும் சார்.



மனைவி : அரை மணி நேரமா நான் நாயா கத்து றேன். நீங்க பேசாம இருந்தா என்னங்க அர்த்தம்.
கணவன் : எனக்கு நாய் பாஷை தெரியாதுனு அர்த்தம்.



சுக்கி : கணக்கு புஸ்தகம் ஏன் ரொம்ப சோகமா இருக்குது தெரியுமா?
பூமாரி : தெரியலைப்பா நீயே சொல்லு
சுக்கி : ஏன்னா அதுக்கு நிறைய ப்ரோப்லம்ஸ் இருக்குத்துல அதனால தான்.
பூமாரி :????



நிருபர் : வீட்டிற்கு ரெய்டு பண்ண வந்தவங்ககிட்டே ஈன்னு உங்க பல்லை காட்டினீங்களாம். ஏன்???
செல்வந்தர் : அவர்தான் என் சொத்தையெல்லாம் காட்ட சொன்னார் அதான் ஏன் சொத்தைபல்லை காட்டினேன்.

# சங்கவி திரையரங்கில் ஜுனியர் சுப்பர் சிங்கர்



சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஜேம்ஸ் இசைக் குழுவுடன் இணைந்து நடத்தும் ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் முதலாவது சுற்றுப் போட்டி இன்று 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி திரையரங்கின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் தலைமையில் மன்னார், பேசாலையிலுள்ள சங்கவி திரையரங்கில் நடைபெறவுள்ளது. இந்த ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியில் 08 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.


இந்த ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியில் பங்கு பற்றுகின்ற போட்டியாளர்கள் சிலர் படத்தில் காணப்படுகின்றனர்.

இந்த போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படும்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி இதற்கு ஊடக அனுசரணை வழங்குகிறது. இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற போட்டியாளர்கள் குறிப்பிட்ட தினங்களில் போட்டி நடைபெறும் இடத்துக்கு வந்து பங்கு பற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் இறுதிச்சுற்றுக்கு தெரிவாகும் அனைவருக்கும் நினைவுச் சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



ஒருவன் : உன்னை கடிச்ச கொசுவை ஏன்டா அடிக்காம விட்டுட்டே
மற்றொருவன் : அதுக்குள்ள என் ரத்தம் ஓடுதுடா அதான் விட்டுட்டேன்.



ராமு : சீப்பிற்கும் வாழைப்பழத்தோலிற்கும் ஒரு வித்யாசம் அது என்ன ??
சோமு : தெரியலையே நீயே சொல்லு
ராமு : சீப்பு தலையை வாரும் வாழைப்பழத்தோல் காலை வாரும்.



ஒருத்தன் தீபாவளிக்கு பட்டாசு வெடிச்சானாம். ஆனால் பட்டாசு வெடிச்சதும் அழுது கிட்டே இருந்தானாம். ஏன்???
ஏன்னா அவன் வெடிச்சது வெங்காய வெடியாம்.




**ஒரு குடும்பத்தினுடைய பிரச்சினையாக இருக்கலாம் அல்லது ஒரு தனி மனிதனுடைய பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் அந்த கதையை பேசும் போது மற்றவர்களினுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வாய்ப்பாக அமைகிறது.**

# ஒரு சமூகத்தின் கதையே மௌன மொழி

நான் சனாதனன். இலங்கையில் கிட்டதட்ட 7,8 வருடங்களாக குறும்படங்களை இயக்கிக் கொண்டு வருகின்றேன். இதுவரையிலும் 15 இற்கு மேற்பட்ட குறும்படங்களை இயக்கியுள்ளேன்.

1. மௌனமொழி திரைப்படம் எதைப் பற்றியது? மௌனமொழி என்கிற திரைப்படத்தினூடாக மிக விரைவிலேயே உங்களை சந்திக்க இருக்கிறேன். மௌனமொழி திரைப்படத்தின் படப்பிடிப்புகள் முழுவதுமாக முடிவடைந்து விட்டது. தற்போது Post Production வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. நுனவைiEditing,Dubbing, Music வேலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

என்னுடைய கணிப்பின் படி இன்னும் ஆறு மாதத்திற்குள் இலங்கையிலுள்ள திரையரங்குகளில் இத் திரைப்படம் வெளியிடப்படும். சர்வதேச அளவில் இத் திரைப்படத்தை வெளியிடுவதற்கான கலந்துரையாடல்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கான ஆதரவையும் சக நண்பர்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றனர். அது தொடர்பான முழுமையான அறிவிப்பு மிக விரைவிலேயே வழங்கப்படும். இந்த மௌனமொழி திரைப்படம் எதைப்பற்றியது என்று பார்த்தோமானால் நான் குறும்படங்களை இயக்கும்போது கூட சமூக கதைகளை இயக்குவது என்பது எனக்கு இலகுவான ஒரு கதைக்களமாக இருக்கிறது.

வெளிநாட்டுத் திரைப்படங்களை போல குறிப்பாக இந்திய திரைப்படங்களைப் போல ஆக்ஷன், திரில்லர் போன்ற காட்சிகளை வெளிப்படுத்தும் அளவிற்கு நம்மிடம் பட்ஜெட் இல்லை. என்றாலும் நமக்கான கதைகள் இங்கு நிறையவே இருக்கிறது. இங்கு வாழும் மக்களுக்கும் சரி இந்த சாதாரண சமூகத்தில் அவர்கள் அன்றாடம் கடந்து போகும் பிரச்சினைகள் அதிகம். அதைப்பற்றி பேசி அதற்கான தீர்வுகளை எம்மால் வழங்க முடியாமல் போகும். இருப்பினும் அந்தக் கதைகளை நாம் சொல்லலாம்.

அந்த கதைகள் வாயிலாக இங்கு இப்படியெல்லாம் நடக்கிறது என்பதை வெளிப்படுத்தால். அது ஒரு இனத்தினுடைய மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கலாம், ஒரு குடும்பத்தினுடைய பிரச்சினையாக இருக்கலாம் அல்லது ஒரு தனி மனிதனுடைய பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் அந்த கதையை பேசும் போது மற்றவர்களினுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வாய்ப்பாக அமைகிறது. ஆனால் இதிலிருக்கும் பிரச்சினை என்பது சமூகக் கதைகளை படமாக எடுப்பது சலிப்பை ஏற்படுத்தும் அல்லது ஒரு நாடகமாக இருக்கும் என்ற அபிப்பிராயங்கள் மக்களிடையே இருக்கிறது.

முடிந்தளவு இந்த சமூகத்தில் நடக்கும் ஒரு விடயத்தை கொஞ்சம் சுவாரஸ்யமாக அதுவும் ஒரு பெண்ணுடைய கண்ணோட்டத்திலிருந்து இந்த சமூகம் பார்க்கும் விதத்தை வெளிப்படுத்துவதே இந்த திரைப்படமாகும். ஒரு பெண்ணுடைய கண்ணோட்டத்திலிருந்து ஒரு சமூகத்தின் கதையே மௌனமொழி திரைப்படத்தின் கதையாக இருக்கிறது.

02. இரண்டு கட்டங்களாக படப்பிடிப்பை முடித்திருக்கிறீர்கள். இதில் பங்கேற்ற கலைஞர்கள், படப்பிடிப்பு அனுபவங்கள் போன்றவற்றை பகிர்ந்து கொள்ள முடியுமா? உண்மையாக இரண்டு கட்ட படப்பிடிப்புகள் என்று தான் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தோம். ஆனால் உண்மையில் மூன்று கட்டங்களாகவே படப்பிடிப்புகள் இடம்பெற்றன.

ஒவ்வொரு படப்பிடிப்புக்கும் நடுவில் எங்களுக்குள் நாங்களே ஆசுவாசப்படுத்திக்கொண்டோம் காரணம் தொடர்ச்சியாக போகும் போது நம்மோடு பணியாற்றியவர்களுக்கு அழுத்தம் அதிகமாக இருந்தது. பொருளாதாரப் பிரச்சினை அதிகமாக இருந்தது. அப்போது அந்த பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு தீர்வாக இடைவெளிவிட்டு மூன்று கட்டங்களாக படப்பிடிப்பை செய்து வந்தோம். இந்த மௌனமொழி திரைப்படம் உருவாகியதற்கு கதை, வசனம், திரைக்கதை, இயக்கம் நான் என்னுடைய ஈடுபாட்டை வழங்கியிருந்தாலும் இதற்கு இருவர் மிக முக்கியமான காரணமாக இருக்கின்றனர். ஒன்று இத் திரைப்படத்தின் தயாரிப்பாளர் ரவீந்தரன். 'ராஜதந்திரி' என்ற திரைப்படத்தை முழுக்க முழுக்க நானே எழுதி தயாரித்து அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தும் பாதியிலேயே கைவிடப்பட்ட ஒரு திரைப்படம்.

ஆனால் இந்தத் திரைப்படத்தை முழுமையாக பூரணப்படுத்த தயாரிப்பாளர் ரவீந்தரன் வழங்கிய ஆதரவும், ஒத்துழைப்பும் நிச்சயம் இவ்விடத்தில் பதிவு செய்ய வேண்டிய ஒரு விடயம்.

இரண்டாவது என்னுடைய நண்பர் கவிநாத். இத் திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகி, உதவி இயக்குனர், உதவி புகைப்பட இயக்குனர் என பலவிதமான வேலைகளை முன்னெடுத்து செய்தார். நான், ரவீந்திரன், கவிநாத் மூவரும் கலந்துரையாடிய போது கவிநாத் தான் கூறியது 'நாங்கள் நிறைய செய்துவிட்டோம். இருந்தாலும் நாம் ஒரு முழு நீள திரைப்படத்தை எடுக்க வேண்டும்.

மிகச் சிறந்த ஒரு ஆவணமாக நிச்சயம் இத் திரைப்படமிருக்கும்' என்று முதன் முதலில் திரைப்படமெடுக்க வேண்டுமென்று அவர் கூறிய அந்த வார்த்தை தான் நானும் ரவீந்திரனும் சேர்ந்து இத் திரைப்படத்தை உருவாக்க காரணமாய் அமைந்தது. நடித்த கலைஞர்கள் என்று பார்த்தோமானல் மட்டக்களப்பில் பிரபலமான ஜனாரவி என்பவர் கதாநாயகனாக நடித்திருக்கிறார். பிரபல நடிகையாக வளர்ந்து வரும் தீபதிகா கதாநாயகியாக நடித்திருக்கிறார்.

அதுமட்டமல்லாது கலைரியா, புதிய அலை கலை வட்டத்தைச் சேர்ந்த சண்மு, ரெனோலா, குறுந்திரைப்படங்கள் நிறைய நடித்த கேதீஸ், தனுஷ்கர் என்ற சின்ன பையனும் நடித்திருக்கிறார். இதில் தனுஷ்கர் நன்றாகவே நடித்திருக்கிறார். அவருடைய கதாபாத்திரம் நிச்சயம் பேசப்படும் என்று நான் நம்புகிறேன். தொலைக்காட்சி நாடகங்களில் நடித்த ஜெயசோதி என்கிறவரும், பிரபல நடிகை ஷாமிலா அக்காவும் இதில் நடித்திருக்கின்றனர்.

கேமராவுக்கு முன்னால் தோன்றிய இந்த நடிகர் நடிகைகளைத் தாண்டி ஒரு திரைப்படம் உருவாகுவதற்கு ஒரு மிகப்பெரிய குழு என்னுடன் இணைந்து பணியாற்றியது. அந்தக் குழுவில் பல சிங்களத் திரைப்படங்களில் பணியாற்றிய பிரியதர்ஷினி வழங்கிய தொழினுட்ப உதவிகள், புகைப்படக் கலைஞர் வினோத்ரோன் அவரின் படப்பிடிப்பு என்பனவும் குறிப்பிடத்தக்கது. திரைப்படத்தை உருவாக்க வேண்டும் என்று நாம் மனதில் நினைத்ததை அவர் தன் தோலில் தாங்கி வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார்.

பிரபா மோகன்ராஜ் இத்திரைப்படத்தின் உதவி இயக்குனராகவும், சண்டைப் பயிற்சிவிப் பாளராகவும்பணியாற்றினார்.

(07 ஆம் பக்கம் பார்க்க)







மேலும் ராகவி உதவி இயக்குனராகவும், மேலதிக ஒத்துழைப்பையும் வழங்கினார். அதுமட்டுமன்றி என்னுடைய மாணவர்கள் குழாமும் இதற்கு பெரிய ஒத்துழைப்பை வழங்கினார்கள். லக்ஷான், ப்ரகேஷ், கவின், கபிஸ், சரண், தரண், சுலக்ஷன் என மாணவர்கள் ஒன்றணைந்து இரவு பகல் பாராது பணியாற்றி ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கினார்கள். போஸ்டர் டிசைனிங் சதிஸ், இசையமைப்பாளர் நிருக்ஷன், எடிட்டிங் தனுகர் போன்று செஹானி, லக்மி போன்றோர் உதவியாளர்களாக பணியாற்றினார்கள்.

யசோதா அழகுக்கலை நிபுணராக பணியாற்றி யிருக்கிறார். நிஷாந்தன், ரகுராஜ், சுதாகரன் ஆகியோர் பொருளாதார ரீதியாக உதவி புரிந்தனர். ஊடக அனுசரணையை குவியம் மீடியா வழங்கி வருகின்றது. நன்றி என்பதை சாதாரணமாக ஒரு நேர்காணலில் தெரிவித்துவிட முடியாது. இதற்காகவே நாங்கள் தனியாகவே ஒரு காணொலியைப் பதிவிடவேண்டும். மௌனமொழி என்பது ஒரு பெரிய குழு. நான், ரவீந்தரன், கவிநாத் ஆகிய மூவரும் பேசிய அந்த ஆரம்பப் புள்ளி இத்தனை பேருடைய ஒத்துழைப்பில்லாமல் வெற்றிகரமாக நிறைவேறியிருக்காது.



03. நீங்கள் ஆரம்பித்து செய்ய முடியாமல் போன திரைப்படத்திற்கும் மௌனமொழிக்கும் ஏதேனும் தொடர்புகள் உண்டா? குறும்படங்கள் செய்யும் போது குறும்படங்கள் செய்து கொண்டிருக்கும் நிறைய பேரை ஒன்றிணைத்து 2017 இல் 'ராஜதந்திரி' என்கிற திரைப்படத்தை எடுத்தேன்.

கிட்டதட்ட அரை மணித்தியால படப்பிடிப்புக்கு பின்னர் அத்திரைப்படத்தை முழுமையாக முடிக்க முடியாமல் போனது. அதற்கு பிறகு 2022 இல் மௌனமொழி எடுப்பதற்கான முயற்சிகளை ஒரு குழுவை அமைத்து ஆரம்பித்தேன்.

'ராஜதந்திரி' திரைப்படத்திற்கும் 'மௌனமொழி' திரைப்படத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. 'ராஜதந்திரி' ஒரு த்ரில்லர் கதை. 2017 இல் உருவான கதை என்பதால் தற்போது அதன் கதைத்தன்மை பழையதொன்றாக தோன்றும். அதே கதையம்சத்தைக் கொண்ட இந்திய திரைப்படங்கள் சிலவும் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றன. மீண்டும் 'ராஜதந்திரி' படத்தை இயக்குவது என்பது ஏற்கனவே பார்த்த ஒரு பழைய கதை என்ற மனநிலையை ஏற்படுத்தும். விரும்பி எடுக்க இருந்த கதை 'ராஜதந்திரி'. இருப்பினும் அதற்கு முடியாமல் போனதால் பாதியிலேயே அந்த படத்தை கைவிட்டு விட்டேன்.

மௌனமொழி என்கிற திரைப்படத்தின் முழு கதையையும் முழுமையாக இந்த அணியோடு இணைந்து உருவாக்கி விட்டோம். இதற்கும் 'ராஜதந்திரி' கதைக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. 4. கொழும்பில் ஒரு திரைப்படத்தை எடுப்பது எவ்வளவு சவாலானது? கொழும்பு மட்டுமல்ல இலங்கையில் எந்தப் பாகத்திலிருந்து திரைப்படமெடுத்தாலும் அது சவாலானதாகவே அமையும். அதில் நிறைய பிரச்சினைகள் உள்ளன. சிங்களத் திரைப்படம் எடுப்பதில் இருக்கும் சவால் வெறுமனே ஒரு பொருளாதார பிரச்சினையாகத்தான் இருக்கும். காசு இருந்தால் படம் எடுக்கலாம். மக்களுக்கு கொண்டு போய் இலகுவாக சேர்த்திடலாம். ஆனால் எங்களுக்கு காசு இருந்தால் எடுத்திடலாம் என்பது ஒரு சவால். அதன் பிறகு அந்தப் படத்தை மக்களிடையே கொண்டுபோய் சேர்ப்பது மிகப் பெரிய சவாலாக இருக்கிறது.

இதற்கு காரணம் ஏற்கனவே இந்திய தமிழ் திரைப்படங்களினுடைய தாக்கம் இலங்கையில் மிகப்பெரியளவில் வியாபித்துள்ளது. அப்படியிருக்கும் போது இலங்கைத் திரைப்படம் அல்லது இலங்கை குறும்படம் அல்லது இலங்கை கலைஞர்கள் என மக்களிடையே கொண்டுபோய் சேர்ப்பது மிகவும் சவாலாக அமைகிறது.

அதிலும் ஒப்பீட்டு பார்ப்பதே இங்கு நமக்கான சவாலாக அமைகிறது. இலங்கை நடிகர்,இயக்குனர் இவர்களையெல்லாம் இந்திய இயக்குனர்,நடிகர்களோடு ஒப்பிடுவது நம்மவர்களையும், நம் இலங்கைத் தமிழ் சினிமாவையும் பின்தங்கச் செய்கிறது.

இதைத் தாண்டி நிறைய பேரால் முன்னாடி வரமுடியவில்லை. இலங்கைத் தமிழ் திரைப்படத்துறை என்பது பணம் சம்பாதிக்கும் ஒரு துறையல்ல. வேறொரு வேலை பார்த்த வண்ணமே உங்கள் திறமைகளையும்,கலைகளையும் உங்கள் சினிமா ஆசைகளையும் நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கிறது.

பொறுப்புகளும்,சுமைகளும் அதிகமாக இருக்கிறது. எனக்குத் தெரிந்தளவில் 10 வருடங்களுக்கு முன் குறுந்திரைப்படங்களை உருவாக்கியவர்களில் பலபேர் இன்று அதனை கைவிட்டு விட்டனர். வேறுவேறு துறைகளைத் தேர்ந்தெடுத்து அதற்குள் சென்றுவிட்டனர். அவ்வாறு செல்வதனால் இலங்கைத் தமிழ் திரைப்படத்துறை வளராது.

கலைஞர்கள் மென்மேலும் நம் சினிமாவை வளர்க்க இதற்குள் இருந்தால் மட்டுமே முடியும். கலைஞர்கள் இதற்குள்ளே நிலைத்திருக்க இலங்கை தமிழ் திரைப்படத்துறை ஒரு பணமீட்டுத் தரும் துறையாக மாற வேண்டும். நிறைய இளைஞர்கள் கொழும்பில் மட்டுமல்லாது இலங்கையில் பல இடங்களில் முயற்சி செய்த வண்ணமிருக்கிறார்கள். அது வெற்றியடையும் பட்சத்தில் நிச்சயமாக வியாபார ரீதியான துறையாக மாறி பல வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும். நம்இலங்கைத் தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்தும். தமிழர்களுக்கிருக்கும் ஒரு பிரச்சினையாக பிரதேசவாதம் பேசப்படுகிறது. என்னுடைய அணியில் இலங்கையிலுள்ள அனைத்து பாகங்களில் இருந்துமான நண்பர்கள் இருக்கின்றனர்.

இது ஒரு தமிழ் படம் என்பதால் இலங்கையிலுள்ள அனைவருக்கும் சேரக்கூடிய ஒரு படமாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஒரு ஆசையாக இருக்கிறது. பிரதேச ரீதியாக ஏற்படும் மொழிப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு அனைவருமே ஒரு தமிழ் திரைப்படத்தை வரவேற்க வேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து பிரதேசங்களில் இருக்கக்கூடிய திரையரங்குகளில் இத் திரைப்படத்தை வெளியிட்டு மக்கள் பார்வைக்கு கொண்டுசெல்வதே எங்களுடைய நோக்கம். வியாபார ரீதியாகவும் வெற்றிபெற்று, தமிழ் மக்கள் அனைவரிடமும் கொண்டு போய் சேர்த்து, பிரதேச வேற்றுமைகளையெல்லாம் கடந்து அனைவரும் எமது திரைப்படத்தை பார்த்து ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்பதே எங்களுடைய சவால்.

அதிலும் பொருளாதாரம் பெரிய பிரச்சினையாக இருக்காது. நான்கு ஐந்து நண்பர்களுடன் இணைந்தாலே நம்முடைய திரைப்படத்திற்கு பொருளாதார பலத்தினை ஏற்படுத்தலாம். ஆனால் நிறைய மக்களிடம் நிறைய காசிருந்தும் கூட ஒரு நல்ல திரைப்படத்தை இயக்க முடியாமல் போனமைக்கு காரணம் மக்கள் இலங்கைப் படத்தை அலட்சியமாக எண்ணிக் கொள்கின்றனர்.

அதைப் போலவே பிரதேசங்களாக பிளவுபட்டு தமக்கென்றவொரு வரையறையை வைத்துக்கொள்கின்றனர். இதையெல்லாம் தாண்டி வெற்றியடையவேண்டுமென்பதே என்னுடைய எண்ணமாக இருக்கிறது.

அயராத உழைப்பாலும்,கடும் முயற்சியாலும் இச் சவாலை வென்று முடிப்போம் என்று நம்புகிறேன்.

5. போஸ்ட் புரொடக்ஷன்ஸ் வேலைகள் எப்படிப் போகின்றன? படத்தை எப்போது வெளியிட திட்டமிட்டுள்ளீர்கள்? சமூகத்தில் நடக்கும் கதையை சமூகத்தில் நாம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். அதற்கு மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டும் என்பதற்காக நாம் வேலை செய்து கொண்டிருக்கின்றோம்.

படப்பிடிப்பு முழுமையாக முடிவடைந்து விட்டது. நான் கூறியது போல் இன்னும் 06 மாதத்திற்குள் இத் திரைப்படம் வெளியாகும். அந் நேரத்தில் எந்தெந்த திரையரங்குகளில் வெளியாகின்றனவோ அந்த திரையரங்குகளில் மக்களுக்கு கொண்டு போய் சேர்ப்பதற்காக பெரியளவில் ஊடகங்களின் ஆதரவும், சாதரண பொதுமக்களுடைய ஆதரவும், பிரபலமானவர்களுடைய ஆதரவும் தேவைப்படுகிறது.

கோடிக்கணக்கான பட்ஜெட் செலவழித்து ஒரு படத்தை எடுத்தாலும் கூட அதற்கு மார்க்கெட்டிங் விளம்பரம் என்பது மிக முக்கியமான ஒன்றாக அமைகிறது.

கையிலிருக்கும் பணத்தையெல்லாம் போட்டு சொல்லவிரும்பும் கதையை மெருகேற்றி சுவாரஸ்யமாகவும் தரமாகவும் இத் திரைப்படத்தை கொடுக்க தயாராக இருக்கிறோம். இந்த திரைப்படத்திற்கு நிச்சயம் இதுபோன்ற விளம்பரங்கள் தேவைப்படும். இந்த திரைப்படம் 2023 ஒகஸ்ட் அல்லது செப்டெம்பர் மாதங்களில் வெளியாகும் போது மக்கள் அனைவரும் வந்து பார்க்க வேண்டும். நண்பர்களுக்கு தெரியபடுத்த வேண்டும். சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டும். உங்கள் கருத்துக்களையும்,பதிவுகளையும் தெரியபடுத்த வேண்டும்.

நான் இந்த ஒரு படத்திற்காக மட்டும் கேட்கவில்லை. இலங்கையில் எந்த திரைப்படம் வந்தாலும் அதனை வரவேற்க வேண்டும். இலங்கையில் நிறைய படங்கள் வெளிவர வேண்டும். அவ்வாறு வெளிவந்தால் மட்டுமே இலங்கை சினிமாவின் போட்டித் தன்மை அதிகரிக்கும். போட்டிக்கான களமொன்று உருவாகமல் போட்டித் தன்மை உருவாகாது. மைதானமின்றி கிரிக்கட் விளையாட முடியாது நாங்கள் இங்கே மைதானமில்லாம் கிரிக்கெட் விளையாடுகின்றோம். இங்கே சரியான களமொன்று அமைக்கப்படவில்லை.

வெறுமனே ஒரு படம் எடுத்துவிட்டோம் வேலை முடிந்து விட்டது என்று நின்று விட்டால் இதை ஒரு துறையாக மாற்றமுடியாது. ஏதாவது ஒரு திரைப்படத்தினுடைய வெற்றி பல படங்களை உருவாக்கும். நிறைய படங்கள் வெளிவருவதன் மூலம் எது நன்றாக இருக்கும் என்றவொரு போட்டித்தன்மை உருவாகும். இதில் எமது மௌனமொழி திரைப்படத்திற்கும் ஒரு பங்கு இருக்கிறது. எமதுகுழுவினருக்கும் இதில் ஒருஅங்கம் இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக எங்களுடைய திரைப்படத்திற்கு ஆதரவை வழங்கவேண்டும். எங்களுடைய திரைப்படத்திற்கு மட்டுமன்றி இலங்கையில் வெளிவரும் எல்லா தமிழ் திரைப்படங்களுக்கும் நீங்கள் ஆதரவளிக்க வேண்டும்.

இந்தியத்திரைப்படங்களை நாம் எவ்வாறு திரையரங்குகளில் பார்க்கின்றோமோ அதேபோல் இலங்கைத் தமிழ் திரைப்படங்களையும் மக்கள் திரையரங்குகளுக்குச் சென்று பார்க்க வேண்டும் என்றவொரு ஆசையோடு விடைபெறுகிறேன்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்



**ஆயிரம் திரையரங்குகளில் 'ஆளவந்தான்'**

எம்.எம்.சுபையீர், மள்வானை

**கேள்வி:** சிலவருடங்களுக்குமுன் வெளியாகி தோல்வியைத் தழுவிய பட 'ஆளவந்தான்' படத்தை மீண்டும் திரையிடப் போகிறார்களாமே உண்மையா?

**பதில்:** கமலஹாசன் நடித்த 'ஆளவந்தான்' திரைப்படம் 1000 திரையரங்குகளில் ரிலிஸ் ஆகப் போவதாக தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு அறிவித்துள்ளார்.

கமல்ஹாசன் நடிப்பில் சுக்ரோஸ் கிருஷ்ணா இயக்கத்தில் உருவான 'ஆளவந்தான்' திரைப்படம் கடந்த2001ஆம் ஆண்டு வெளிவந்தது என்பதும் இந்தப்படம் பிரமாண்டமாக இருந்தாலும் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை என்பதும் ஆனால் அதே நேரத்தில் இந்தப் படம் இன்றளவும் பேசப்படும் ஒருபடமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்தப் படத்தின் நீளத்தைக் குறைத்து, டிஜிட்டல் முறையில் மீண்டும் உருவாக்கி உள்ளதாக கூறப்பட்ட நிலையில் தற்போது இந்தப் படத்தின் ரிலீஸ் திகதி குறித்த அறிவிப்பை கலைப்புலி எஸ்.தாணு அறிவித்துள்ளார். விரைவில் ஆயிரம் திரையரங்குகளில் அகிலமெங்கும் 'ஆளவந்தான்' திரைப்படம் ரிலீசாக உள்ளதாக அவர் அறிவித்து போஸ்டர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந்தப் போஸ்டர் மிகப்பெரிய அளவில் வைரலாகி வருகிறது. இரு வேடங்களில் கமல் ஹாசன், ரவீணாடண்டன், மணிஷா கொய்ராலா, சரத்பாபு, அனுஹாசன் உட்பட பலரது நடிப்பில் உருவான இந்தப் படத்திற்கு சங்கர் ஈசான்ய லாம் என்பவர் இசை அமைத்திருந்தார். புதிய டிஜிட்டல் வடிவில் வெளியாக இருக்கும் இந்தப்படம் எதிரிபார்த்த வெற்றியை பெறும் என்று கூறப்படுகிறது.



**'அந்த காரத்தில்' அர்ஜுன் தாஸ**

எம் .கே.முபாரக், கல்முனை.

**கேள்வி:** அட்லி தயாரிப்பில் 'அந்த காரம்' என்ற படத்தில் நாயகனாக நடிக்கும் அர்ஜுன் தாஸ் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**பதில்:** இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கிய 'கைதி',மாஸ்டர் மற்றும் விக்ரம் போன்ற படங்களில் வில்லனாக நடித்து ,குறுகிய காலத்திலேயே ரசிகர்கள் மனதில் இடம்பிடித்வர் அர்ஜுன் தாஸ்.

இவரின் காந்தக் குரலுக்கு தனி ரசிகர்கள் கூட்டமே உள்ளது.

ஒரு வில்லனாக தமிழ்சினிமாவில் அறிமுகமாகி இருந்தாலும், ஒரே மாதிரியான கதைகளை தேர்வு செய்து நடிக்காமல் ஒவ்வொரு படத்திற்கும்,வித்தியாசம் காட்டிவரும் அர்ஜுன் தாஸ் அட்லி தயாரிப்பில் 'அந்தகாரம்' என்கிற படத்தில்,. ஹீரோவாகவும் மாறினார். அடுத்தடுத்து பல படங்களில் பிஸியாக நடித்துவரும் இவர், இயக்குநர் விக்னேஸ்சிவன் அஜித்தை வைத்து இயக்க உள்ள படத்திலும் முக்கிய கதா பாத்திரத்தில் நடிக்க உள்ளார் என்கிற தகவலும் வெளியாகி உள்ளது.

**பன்முகத்துறை கலைஞர் பிரபு தேவா**



**கேள்வி:** நீண்ட இடைவெளிக்கும் பிறகு பிரபுதேவா மீண்டும இயக்குநராகப் போகிறாராமே?

**பதில்:** தமிழ் சினிமாவில் பன்முகத்துறை கலைஞர் பிரபு தேவா இந்தியா முழுவதும் அறியப்பட்ட ஒரு கலைஞராக இருக்கிறார்.

கொலிவுட்டில் நடன அமைப்பாளராக இருந்து , ஹீரோவாகி, பின்னர் 'போக்கிரி' படம் மூலம் வெற்றிகரமான இயக்குநராக வலம் வந்தார். ஆனால், அவரது சமீபத்திய படங்கள் வெற்றி பெறவில்லை என கூறப்படுகிறது. அதனால் அவர் மீண்டும் நடிப்புப் பாதைக்கு திரும்பினார். ஆனால் நடிப்பும் அவருக்கு பெரிய அளவில் கை கொடுக்கவில்லை. இதை அடுத்து மீண்டும் இயக்கத்தில் கவனம் செலுத்த உள்ளாராம் பிரபு தேவா. ரீ என்டரியில் முதல்படத்தை தெலுங்கு சூப்பர் ஸ்டார் நடிகர் சிரஞ்சீவியை வைத்து இயக்க உள்ளதாக சொல்லப்படுகிறது.


**விஜய் சேதுபதிக்கு 15 கோடி சம்பளம்**

எம்.மலர்ராணி, கொழும்பு13

**கேள்வி:** அரண்மனை 4ஆம் பாகமும் வருகிறதாமே. அதில் நடிக்க விஜய் சேதுபதி 15 கோடி வாங்குகிறாராமே... உண்மையா?

**பதில்:** இயக்குநர் சுந்தர் சீ இயக்கத்தில் 2014ஆம் ஆண்டு வெளியான'அரண்மனை'திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை தொடர்ந்து 'அரண்மனை'இரண்டாம் பாகம்



2016இல் வெளிவந்தது. இப்படத்திற்கும் மக்கள் நல்ல வரவேற்பு கொடுத்தனர். இதனால் நடிகர் ஆரியாவை வைத்து 'அரண்மனை' 3ஆம் பாகம் வெளிவந்தது. இப்படம் வசூல்ரீதியாக வெற்றி பெற்றாலும் ரசிகர்கள் இதற்கு கலவையான விமர்சனமே கொடுத்தனர். இதைத் தொடர்ந்து சுந்தர் சீ இயக்கும் 'அரண்மனை' 4காம் பாகத்தில் விஜய் சேதுபதி நடிக்க உள்ளதாக தகவல்வெளியானது. அதை உறுதிப்படுத்தும் விதமாக சுந்தர் சீ யின் பிறந்தநாள் கொண்டாட்டப் புகைப்படங்கள் வந்திருந்தன.இந்நிலையில் விஜய் சேதுபதி இப்படத்திற்காக வாங்கும் சம்பளம் குறித்த தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. அந்த படத்திற்காக அவர் 15கோடி சம்பளம் வாங்கப் போகிறார் என்று சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது. விஜய் சேதுபதியுடன் சந்தானமும் இப்படத்தில் இணைந்துள்ளதாக கூறப்படுகிறது.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# தளபதி 67 விஜய்க்கு மட்டுமா த்ரிஷாவுக்கும் ஸ்பெஷல்

விஜய்யின் தளபதி 67 படத்தின் டைட்டிலை ப்ரோமோவுடன் படத்தின் ரிலீஸ் தேதியையும் படக்குழு சமீபத்தில் அறிவித்தது. லோகேஷ் கனகராஜ் இயக்கும் விஜய்யின் லியோ படத்தை வரும் அக்டோபர் 19 ஆம் திகதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகளில் வெளியாகிறது.

இந்நிலையில் விஜய்யை விட த்ரிஷாவுக்கு தளபதி 67 ரொம்ப ஸ்பெஷல். ஏனென்றால் தளபதியின் 67வது படமான லியோ, விஜய்க்கு மட்டுமல்ல த்ரிஷாவுக்கும் 67வது படம் தான். இந்த மேட்டர் இதுவரை யாருக்கும் தெரியாமல் இருந்தது. இந்த ட்ரீம் ஜோடி எப்படி லியோ படத்தில் இணைந்தது என்று இப்போதுதான் தெரிகிறது.

1999 ஆம் ஆண்டு ஜோடி படத்தின் மூலம் துணை நடிகை ஆக அறிமுகமான த்ரிஷா, அதன் பிறகு மௌனம் பேசியதே, சாமி, லேசா லேசா போன்ற சூப்பர் ஹிட் படங்களில் நடித்து தற்போது வரை முன்னணி நடிகையாக கோலிவுட்டில் வலம் வந்து கொண்டிருக்கிறார். 39 வயதான த்ரிஷா இப்போதும் திருமணம் செய்து கொள்ளாமல் இளம் நடிகைகளுக்கெல்லாம் பயங்க டஃப் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அதிலும் 14 வருடங்களுக்கு முன்பு இணைந்து நடித்த விஜய், த்ரிஷா இருவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு லியோ படத்தில் இணைந்ததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. ஆகையால் விஜய்க்கு மட்டுமல்ல த்ரிஷாவுக்கும் இது 67வது படம் என்பதால் ரசிகர்களின் மத்தியில் இந்த படத்தை குறித்த எதிர்பார்ப்பை எகிற விட்டது.

அதுமட்டுமின்றி இந்த ஜோடியை திரையில் பார்ப்பதற்கும் ரசிகர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர். அதிலும் லியோ படத்திற்காக போடப்பட்ட பூஜையில் த்ரிஷா பேசும்போது, வெட்கப்பட்டு கொண்டிருந்த விஜய்யின் க்யூட் புகைப்படத்தை ரசிகர்கள் இப்போதும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் இந்த பூஜையில் இவர்கள் இருவரும் இணைந்திருக்கும் புகைப்படங்கள் தற்போது சோசியல் மீடியாவில் ட்ரெண்டாகிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் தளபதி 67 படம் த்ரிஷாவிற்கு எவ்வளவு ஸ்பெஷல் என்ற விஷயம் அவர்களுடைய ரசிகர்களிடம் தற்போது பரபரப்பாக பேசப்படுகிறது.



# நிர்வாணமாக நடித்தால் என்ன தப்பு

நடிகை பிந்து மாதவி, படத்திற்காக நிர்வாணமாக நடித்தால் என்ன தப்பு என்று அதிரடியாக கேள்வி எழுப்பி உள்ளார்.

வெப்பம் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை பிந்து மாதவி.

தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கிலும் பல படங்களில் நடித்துள்ள பிந்து மாதவிக்கு அங்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

ஒரு ஓர ஓர பார்வை.. சரி என்னை எப்போ சேர்வ.. உன்னாலே என் தூக்கம் போயிருச்சே என தேசிங்கு ராஜா படத்தில் வரும் பாடலின் மூலம் ரசிகர்களின் இதயத்தை வளைத்துப்போட்டவர் நடிகை பிந்து மாதவி. சில்க் ஸ்மிதா போல வசீகரமான கண்ணழகை கொண்ட பிந்து மாதவிக்கு தேசிங்கு ராஜா படம் நல்ல பெயரை பெற்றுத்தந்தது. அந்த படத்தில் விமலுக்கு ஜோடியாக நடித்திருந்தார்.

கேடிபில்லா கில்லாடி ரங்கா படத்தில் பாய்ந்து பாய்ந்து சண்டை போட்ட பிந்து மாதவி, தேசிங்கு ராஜா படத்தில் ஓவராக கவர்ச்சி காட்டி இருந்தார். அந்த படத்தின் வெற்றியைத் தொடர்நது, வருத்தப்படாத வாலிபர் சங்கர், ஒரு கன்னியும் மூன்று களவாணிகளும், தமிழுக்கு ஒன்றை அழுத்தவும், சவாலே சமாளி, ஜாக்சன் துரை, பக்கா, பசங்க, கழுகு 2 திரைப்படத்தில் நடித்தார்.

தமிழ், தெலுங்கு மொழிப்படங்களில் பிஸியாக நடித்த பிந்து மாதவிக்கு படவாய்ப்பு குறைந்ததை அடுத்து, கமல் தொகுத்து வழங்கிய பிக்பாஸ் நிகழ்ச்சியில் வைல்டு கார்டு போட்டியாளராக வந்த பிந்து நான்காவது இடத்தை பிடித்தார். இதையடுத்து, நாகார்ஜுன் தொகுத்து வழங்கி தெலுங்கு பிக் பாஸ் சீசன் 6ன் டைட்டில் வின்னர் ஆனார்.

தற்போது பிந்து மாதவி யாருக்கும் அஞ்சேல், மாயன், பகைவனுக்கு அருள்வாய் ஆகிய படங்களில் கைவசம் கைத்துக்கொண்டு பிஸியாக உள்ளார். தற்போது ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள பிந்து மாதவி, நயன்தாரா,த்ரிஷா, ஐஸ்வர்யா ராஜேஷ் போல கதாநாயகிகளுக்கு முக்கியத்தும் கொடுக்கும் படங்களில் நடிக்கவே ஆசைப்படுகிறேன்.

தற்போது பெரும்பாலான படங்கள் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களாக இருக்கின்றன. இதை ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையாக நான் பார்க்கிறேன்.

இதைத்தொடர்ந்து, ஹீரோயின்கள் நிர்வாணமாக நடிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த பிந்து, நடிகைகள் பட வாய்ப்புக்காக நிர்வாணமாக நடிப்பதில்லை, படத்தின் கதைக்கு தேவை என்பதால் அப்படி நடிக்கிறார்கள் அதில் ஒன்றும் தவறுஇல்லை, ஒரு நடிகையின் வேலை அதுவாக தான் நான் இருக்க முடியும், அதுபோன்ற கதாபாத்திரம் வந்தால் நானும் நிச்சயம் அவ்வாறு நடிப்பேன் என்று நடிகை பிந்து மாதவி பேட்டியில் கூறியுள்ளார்.



# சினிமாவில் உண்மையான காதலை பார்ப்பதே கஷ்டம்? கங்கனா

சர்ச்சைக்கு பெயர் போன கங்கனா ரனாவத், சித்தார்த் மல்ஹோத்ரா மற்றும் கியாரா அத்வானியின் திருமணத்திற்கு பொடிவைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாலிவுட் நடிகையான கங்கனா ரனாவத் தமிழில் ஜெயம் ரவியுடன் தாம் தூம் படத்தில் நடித்துள்ளார். இதன் மூலம் தமிழ் ஆடியன்சுக்கு பரிட்சயமானார். அடிக்கடி சர்ச்சைக்குரிய வகையில் பேசி பிரச்சனையில் சிக்குவதை வாடிக்கையாக வைத்திருக்கும் கங்கனாவை, பாலிவுட்டில் சர்ச்சை நாயகி என்றே அழைத்து வருகின்றனர்.

பாலிவுட் படங்களில் பிஸியாக நடித்து வந்தாலும் சோஷியல் மீடியாவில் படுஆக்டிவாக இருக்கும் கங்கனா ரனாவத் தொடர்ந்து வெறுப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துகளை தெரிவித்து வந்த காரணத்தால், அவரின் ட்விட்டர் கொள்கை விதிகளை மீறிய காரணத்தால் கடந்த 2021ம் ஆண்டு முடக்கப்பட்டது. தற்போது ட்விட்டர் கணக்கு இரண்டு வாரங்களுக்கு முன் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், கங்கனா ரனாவத் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், இன்று திருமணம் செய்யவிருக்கும் சித்தார்த் மல்ஹோத்ரா மற்றும் கியாரா அத்வானியின் திருமண வீடியோவைப் பகிர்ந்து திருமணத்திற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில், இந்த காதல் ஜோடி எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். சினிமா துறையில் உண்மையான காதலை பார்ப்பதே மிகவும் அரிதான ஒன்று. இவர்களை ஒன்றாக பார்ப்பதற்கு தெய்வீகமாக உள்ளது என்று பதிவிட்டு, தீய கண் ஈமோஜியையும் பதிவிட்டுள்ளார்.

இந்த பதிவினைப் பார்த்த ரசிகர்கள் சினிமா துறையில் உண்மையான காதல் இல்லையா? என்றும் மறைமுகமாக பல பாலிவுட் நடிகர்களை தாக்கும் விதமாக பதிவு செய்துள்ளார் என்றும் கருத்து தெரிவித்து வருகின்றனர். எதையாவது சர்ச்சையாக பேசுவதையே கங்கனாவின் வாடிக்கையாகி விட்டது என சில பிரபலங்களும் அவர் மீது கடுப்பில் உள்ளனர்.

சித்தார்த் மல்ஹோத்ரா மற்றும் கியாரா அத்வானியின் திருமணம் ஜெய்சால்மரில் உள்ள சூர்யாகர் பேலசில் நடைபெறவுள்ளது. இவர்களது திருமணத்தை ஒட்டி, ரசிகர்கள் அனைவரும் உற்சாகமாக உள்ளனர். இவர்களின் திருமணத்தில், கரண் ஜோஹர், மணீஷ் மல்ஹோத்ரா மற்றும் இஷா அம்பானி என மொத்தம் 120 பேர் கொண்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொள்ள இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



# நல்ல நட்பு நிலவ

திருமணமான பெண்களின் நட்பு, கணவன்மனைவி இடையே கருத்து வேறுபாட்டை உண்டாக்குவதும் உண்டு. அதை சுமுகமாக கையாள்வது அவசியம். இளம் வயதில் பெண்களுக்கு நிறைய தோழிகள் இருப்பார்கள். ஆனால் திருமணம் நடந்து கணவர், குழந்தைகள் என்று அவர்களுக்கான குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும்போது, அந்த நட்பு வட்டம் தானாகவே சுருங்கி விடுகிறது. அதைத் தாண்டி ஆரோக்கியமான நட்பு நீடிப்பதற்கு, நாம் என்ன செய்ய வேண்டும் என்று இங்கே பார்ப்போம். பல பெண்கள், தோழிகளிடம் பேசும்போது தங்கள் அன்றாட செயல்பாடுகள் மட்டுமில்லாமல், மற்றவர்களின் குடும்பப் பிரச்சினைகளையும் பகிர்ந்துகொள்வார்கள். இத்தகைய அணுகுமுறை, 'இதேபோல் நம் குடும்ப விஷயமும் பேசு பொருளாகும்' என்ற எண்ணத்தை உண்டாக்கி, நல்ல நட்பிலும் சந்தேகத்தை வர வைக்கும். தோழிகளிடம் விவாதிக்கும்போது நேர்மறை சிந்தனையோடு மட்டுமே இருக்க வேண்டும். அப்போதுதான் நட்பில் நம்பிக்கை நிலவும். 'தோழி, நம் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கொடுப்பாள்' என்ற வலுவான எண்ணம் பிறக்கும். முடிந்த வரை நட்புக்குள் கடன் கொடுப்பது, வாங்குவது போன்றவற்றை தவிர்க்கலாம். பணம் சார்ந்த பிரச்சினைகள் நல்ல நட்பையும் பிரித்து விடும்.

எந்த வயது பெண்களாக இருந்தாலும், நட்பில் சிறிய விஷயங்களை பெரிதாக்கி சண்டையிடக் கூடாது. பொறுமையாக அணுகினால் எத்தகைய பிரச்சினையையும் தீர்க்க முடியும். புரிதலின்மையே இளம் பெண்கள் நட்பில் விரிசல் ஏற்படுவதற்கு முக்கிய காரணம். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோல, நட்பில் அளவு மிஞ்சக்கூடாது.

இக்கால நட்பில், தங்கள் தனிப்பட்ட விஷயங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தோழிகளிடம் கூறி விடுகிறார்கள். அந்த தோழி திடீரென எதிரியாகி, அந்த ரகசியங்களை வெளியில் கூறும்போது மனம் வேதனைப்படுகிறார்கள். உயிருக்கு உயிரான தோழியாக இருந்தாலும், உங்களுடைய அந்தரங்க விஷயங்களை தோழிகளிடம் பகிர்ந்துகொள்வதைத் தவிர்க்கலாம். தேவைப்படும் நேரத்தில், தகுந்த ஆலோசனை கூறி வழி நடத்திச் செல்வதும் தோழியின் கடமையாகும். உங்கள் தோழிக்கு நீங்கள் செய்யும் நன்மை தெரியவில்லை, அவர்கள் உணரவில்லை என்றாலும் கடமையை தொடர்ந்து செய்வதே நட்பின் பலம். நட்பில் மொழி, நிறம் பார்க்கக் கூடாது. உள்ளத்தை மட்டுமே பார்க்க வேண்டும். வேற்று மொழி தோழிகளுடன் பழகும்போது, நமது உறவினர்கள் வந்தாலும் நம் மொழியில் பேசி தோழிகளை சங்கடப்படுத்தக்கூடாது. அது 'நம்மைப் பற்றிதான் பேசுகிறார்களா?' என்ற எண்ணத்தை உருவாக்கும். நட்பில் சிறு விரிசல் வந்தாலும், உடனே பேசித் தீர்க்க வேண்டும். தீய குணங்கள் தோழியிடம் இருந்தால், அதில் உள்ள கெடுதல்களைக்கூறி படிப்படியாக தோழியை நல்வழிப்படுத்த வேண்டும்.

தோழியின் உயர் குணங்களை, நல்ல செயல்களை பாராட்டலாம். புகழ்ச்சியால் யார் மனதிலும் நல்ல இடம் பெற்றுவிட முடியும். இதனை நட்பில் மறந்துவிடக்கூடாது. அதேநேரம் வஞ்சகப் புகழ்ச்சி கூடாது. உள்ளதை உள்ளபடி கூறி, உள்ளம் பூரிப்பதே உண்மையான நட்பை உறுதியாக்கும்.

## 'கப் பீட்சா'

வீட்டில் சப்பாத்தி மீதமாகி விட்டதா? அதைக்கொண்டு குழந்தைகள் விரும்பி சாப்பிடும் 'கப் பீட்சா' தயாரிப்பது எப்படி என்று இங்கு பார்ப்போம்.




**தேவையான பொருட்கள்:** ***சப்பாத்தி 4 எண்ணெய் 2 கப் மொசரில்லா சீஸ் (துருவியது) 1 கப் சில்லி பிளேக்ஸ் 2 டீஸ்பூன் பீட்சா சாஸ் 4 டீஸ்பூன் ஓரிகானோ 2 டீஸ்பூன் மிளகுத்தூள் 1 டீஸ்பூன் ஆலிவ் பழம் 5 குடைமிளகாய் (பொடிதாக நறுக்கியது) 2 டீஸ்பூன் வெங்காயம் (பொடிதாக நறுக்கியது) 2 டீஸ்பூன்***

**செய்முறை:**

ஒரு நீண்ட எவர்சில்வர் டம்ளரின் வெளிப்பகுதி முழுவதும் சிறிதளவு எண்ணெய் தடவி, அதன் மேல் சப்பாத்தியை நூல் கொண்டு கட்டுங்கள். வாணலியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் டம்ளரை அதில் போட்டு, சப்பாத்தி பொன்னிறமாக மாறும்வரை பொரித்து எடுங்கள். சூடு ஆறிய பிறகு டம்ளரில் இருந்து சப்பாத்தியை பிரித்து எடுக்கலாம். கிண்ணம் போல இருக்கும் சப்பாத்தியின் உள்ளே சீஸ், குடைமிளகாய், வெங்காயம், பீட்சா சாஸ் என ஒவ்வொன்றாக நிரப்பவும். அதன்மேல் மிளகுத்தூள், சில்லி பிளேக்ஸ், ஓரிகானோ ஆகியவற்றைத் தூவி ஆலிவ் பழம் கொண்டு அலங்கரிக்கவும். அடுப்பில் தவாவை வைத்து சூடானதும், தயார் செய்த சப்பாத்தியை அதன் மேல் வைத்து மூடி 15 நிமிடங்கள் வரை 'பேக்' செய்தால் 'கப் பீட்சா' தயார்.

# வாசனைத் திரவியங்கள்



நல்ல வாசனை திரவிய உற்பத்தியாளருக்கு 'ஒல்பாக்ஷன்' எனும் திறன் இருக்க வேண்டியது முக்கியம். அதாவது நறுமணங்களை முகர்ந்து பார்க்கும் திறன். இதன் அடிப்படையில் முதலில் 250 திரவங்களை முகர்ந்து பார்த்து அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை விதியாகவே நிர்ணயித்திருக்கிறார்கள். வாசனை திரவியங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களிடையே பிரபலமாக இருக்கின்றன. எகிப்து, சர்வதேச வாசனை திரவிய வர்த்தகத்தில் முதலாவதாக விளங்கியது. அந்த நாட்டு மக்கள் வாசனை திரவியங்களை 'கடவுளின் வியர்வை' என்று நம்பினார்கள். அந்தக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வாசனை திரவியங்களில் 'லவங்கப் பட்டை' முக்கியப் பொருளாக சேர்க்கப்பட்டது. கிரேக்கர்களும் வாசனை திரவியங்களை விரும்பி பயன்படுத்தினர். சில வாசனைகள் ஆரோக்கியத்தையும், உயிர்ச்சக்தியையும் மேம்படுத்துவதாக அவர்கள் நம்பினர். உலகம் முழுவதும் அந்தக் காலத்தில், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வணிகர்கள் போன்ற உயர்தட்டு மக்களிடையே வாசனை திரவியங்கள் அதிகம் புழக்கத்தில் இருந்திருக்கிறது. தற்போது வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்யும் பிரபல நாடுகளின் பட்டியலில் முன்னணியில் இருப்பது பிரான்சு. நல்ல வாசனை திரவிய உற்பத்தியாளருக்கு 'ஒல்பாக்ஷன்' எனும் திறன் இருக்க வேண்டியது முக்கியம். அதாவது நறுமணங்களை முகர்ந்து பார்க்கும் திறன். இதன் அடிப்படையில் முதலில் 250 திரவங்களை முகர்ந்து பார்த்து அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை விதியாகவே நிர்ணயித்திருக்கிறார்கள். வெயில் காலத்தில் லேசான நறுமணம் கொண்ட திரவியங்களையும், குளிர் காலத்தில் அடர்ந்த வாசம் கொண்ட திரவியங்களையும் பயன்படுத்தலாம். வாசனை திரவியம் வாங்கும்போது, மணிக்கட்டின் மீது பூசி அந்தப் பகுதியில் ஒவ்வாமை எதுவும் ஏற்படவில்லை என்றால் மட்டுமே வாங்குவது நல்லது. வாசனை திரவியங்களை வாங்கும்போது, மணிகட்டின் பின்பகுதி அல்லது கழுத்துப் பகுதியின் கீழ் பூசி பரிசோதிப்பது ஏன் தெரியுமா? அந்தப் பகுதி தான் நம் உடலின் 'பல்ஸ் பாயிண்ட்'. அங்கு இருக்கும் ரத்த நாளங்கள் உடல் வெப்பத்தை சீக்கிரம் வெளிப்படுத்தும். இதனால், வாசனை திரவியத்தின் நறுமணம் மற்றும் அதன் விளைவு எளிதாகத் தெரியும். நீங்கள் வாசனை திரவியம் பயன்படுத்த ஆரம்பிக்கும் சில நிமிடங்களிலேயே, அந்த நறுமணத்துக்கு உங்கள் மூளை பழக்கமாகி விடும். அதன் பிறகு உங்கள் வாசனையையும், வாசனை திரவியத்தையும் உங்களால் தனித்தனியே பிரித்து நுகர முடியாது. ஒரே வகையான வாசனை திரவியம், இரண்டு நபர்களின் உடலில் வெவ்வேறு விதமான வாசனைகளைக் கொடுக்கும். இதற்கு உடலின் இயற்கையான வாசம், வியர்வை, வெளிப்புற தூசு, மாசுபாடு போன்றவையும் காரணமாகும்.








# மெய்யன் நடராஜ் தலைமையில் 84 ஆவது வகவ கவியரங்கம்

கடந்த பௌர்ணமி தினத்தன்று தனது 84 ஆவது கவியரங்கை வெற்றிகரமாக நடத்திய வலம்புரி கவிதா வட்டம், கவிஞர் மெய்யன் நடராஜ் எழுதிய "மூச்சுவிடும் காதுகள் " கவிதை நூலையும் வெளியிட்டு வைத்தது. கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வினை வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார்.

கத்தார் நாட்டில் இருந்து விடுமுறையில் இலங்கைக்கு வந்திருக்கும் கவிஞர் மெய்யன் நடராஜ் கவியரங்கிற்கு தலைமை தாங்கி கவித்துமிக்க தனது கவிதைகளால் சபையோரை வசீகரித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழ கணேஷ் நன்றியுரையும் வழங்கினர். அண்மையில் எம்மை விட்டும் மறைந்த, கவிஞர் பிரேம்ராஜ் அவர்களின் தாயார், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி அவர்களின் மனைவியின் தாயார் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கவிஞர் மெய்யன் நடராஜ் தலைமை தாங்கி நடத்திய கவியரங்கில் கவிஞர்கள் வதிரி சி. ரவீந்திரன், கலைவாதி கலீல், வாசுகி பி. வாசு, முஹம்மத் சஜ்ஜாத், கவிஞர் திலகம் பிரேம்ராஜ், ரஷீத் எம். றியாழ், ஆர். தங்கமணி கணேஷ், ப. தங்கவேல், தாமரைச் செல்வி, கிண்ணியா அமீர் அலி, பவானி சச்சிதானந்தன், வெளிமடை ஜஹாங்கீர், ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், கவிநேசன் நவாஸ், எஸ். தனபாலன் ஆகியோர் கவிதை பாடினர்.


கவிஞர் மெய்யன் நடராஜ் எழுதிய "மூச்சு விடும் காதுகள்" கவிதை நூல் வகவம் சார்பாக சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பத்திரிகையாளர் கே. ஈஸ்வரலிங்கம், வெலிப்பன்னை அத்தாஸ், தி. ஸ்ரீதரன், மு. பர்ஹாத் சித்தீக், ஐ. எல். எம். ஆஸிக், ஜோன் சித்திரன், ஏ. நுஸ்ரான் பர்ஹத், ஜீ.ஜசிந்தா, மஸீதா அன்சார், நூருல் அயின் ஹுசைன், என்.பி. எம். தஸ்லீம், கவிக்கமல், பாஸில், சரூக் முஹம்மத் (கனடா), ஜோயேல் ஜோன்சன், ப. தங்கவேல், சீனு அமலன், சண்முகராஜா, இந்திரராஜா, எம். அன்சார் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

(படங்கள் முஹம்மத் நசார்)


















## மருதமுனை பாத்திமா சீபா இப்றாஹீம் எழுதிய

# 'இஸ்லாமிய உளவளத் துணையும் கிழக்கிலங்கையும்' நூல் வெளியீட்டு விழா

மருதமுனை, பெரியநீலாவணை பாத்திமா ஷPPபா இப்றாஹீம் எழுதிய 'இஸ்லாமி உளவளத் துணையும் கிழக்கிலங்கையும்' நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை(05022023) மாலை மருதமுனை பொது நூலக மண்டபத்தில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.நெய்னா முகம்மட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நூல் வெளீயீட்டு விழாவில் பிரதம அதிதியாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தின் பதிவாளர் எம்.எப்.ஹிபத்துல் கரீம் கலந்து சிறப்பித்தார். அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுள்ளாஹ், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மஸ்றூபா முகம்மது மஜீட்.ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் எஸ்.ஜெசீலா உதுமாலெப்பை ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் எச்.எஸ்.எம். ஹம்யான் கிறாத் ஓதி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். ஏ.எல்.எம்.சிஜாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.எ.ஏ.நஹீஜ் அஹமட் நூலாசிரியர் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மஸ்றூபா முகம்மது மஜீட் நூல் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். பிரதம அதிதி எம்.எப். ஹிபத்துல் கரீம், அதிதி வை.ஹபிபுள்ளாஹ் ஆகியோரும் உரையாற்றினார்கள். இங்கு நூலின் முதல் பிரதியை நூலாசிரியரின் பெரியப்பா ஏ.நெய்னா முகம்மட், தந்தை ஏ.எம்.இப்றாகீம், தாயார் ஆசிரியை ஏ.ஆர் ஹாஜறா ஆகியோர் நூலாசிரியர் பாத்திமா சீபாவிடமிருந்து பெற்றுக்கொண்டனர். மேலும் பிரதம அதிதி மற்றும் அதிதிகளுக்கு நூலாசிரியர் பாத்திமா சீபா இப்றாஹீம் நூலை வழங்கி வைத்தார். நூலாசிரியரின் உரையுடன் அஷஷெய்க் எ.எச்.எம்.பர்ஸான் நன்றியுரையாற்றினார் ஏ.ஏ.நஹீஜ் அஹமட் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

கலாபூஷணம் **பி.எம்.எம்.ஏ.காதர்**









## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## தொடர்பு படுத்துங்கள்






## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





நான் றொம்ப பிஸி...





# ஆசிரியரின் ஆசி கிடைக்குமானால் பல சாதனைகள் செய்யலாம்

## பாடசாலை பருவம் முதல் இன்று வரை 13 புத்தகங்களை எழுதியுள்ள ஹம்பாந்தோட்டை எழுத்தாளர் துவான் ஸூல்பிகார்

துவான் ஸூல்பிகார் அலி ஸப்பார் ஹம்பாந்தோட்டை மண்ணை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 34 வயது இளைஞன். ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் கல்வியை ஹம்பாந்தோட்டை ஸாஹிராவில் கற்று ஹம்பாந்தோட்டை நகரில் வசித்து வரும் ஓர் துடிப்பான இளைஞன். ஹம்பாந்தோட்டை உப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராக சேவையாற்றி தற்பொழுது சிறார்களின் ஆங்கில கல்வி மேம்பாட்டிற்காக பங்காற்றி வருகிறார். அத்தோடு சமூக சேவையிலும் ஈடுபட்டு பல்வேறு சமூக சேவை அமைப்புக்களிலும் பதவிகளை வகித்து மக்களுக்காக சேவையாற்றி வருகிறார். இவர் மும்மொழிகள் மாத்திரமன்றி மலாய் மொழியிலும் தேர்ச்சி பெற்றவர்.

ஹம்பாந்தோட்டையில் தற்பொழுது பல்வேறு மொழிகளிலும் கவிதை, சிறுகதை மற்றும் வரலாறு தொடர்பான 13



இற்கும் மேற்பட்ட நூல்களை மூன்று மொழிகளிலும் வெளியிட்டுள்ள இவரை தினகரன் வாரமஞ்சரி செந்தூரத்திற்காக செவ்வி கண்ட போது,

கேள்வி: கலை, இலக்கியத் துறையில் எவ்வாறு உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது எனக்கூற முடியுமா?

பதில்: எனது பாடசாலை ஆங்கில ஆசிரியரின் நல்லாசிதான் என்று தான் வேண்டும். ஏனென்றால், என்னுடைய முதலாவது புத்தகம் ஓர் ஆங்கில கவிதை புத்தகமாகும். அதனை நான் பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவனாக கல்வி கற்கும் பொழுதே வெளியிட்டேன். அந்த சந்தர்ப்பத்திலே என்னுடைய ஆங்கில ஆசிரியர் எம். எஸ். எம் ரிஷாம் என்னை பார்த்து நீ பிற்காலத்தில் ஓர் சிறந்த எழுத்தாளராக வருவாய் என்று. அன்றுகூறினார். அவர் கூறிய அந்த வார்த்தை இன்று நிஜமாகி உள்ளது . உண்மையில் ஓர் ஆசிரியர் மனமுவந்து கூறும் வார்த்தை ஒரு மாணவனுக்கு நல்ல ஆசிர்வாதமாக அமையும் என்பதற்கு இதுவே சிறந்த உதாரணமாகும். ஓர் ஆசிரியரின் ஆசி ஒரு மாணவனுக்கு கிடைக்குமானால் அவன் தன் வாழ் நாளில் பல சாதனைகள் செய்வான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கேள்வி: உங்களுடைய முதலாவது புத்தகத்தை எந்த ஆண்டு வெளியிட்டீர்கள்?

பதில்: என்னுடைய முதலாவது நூல்; “ த ரிலேஷன்ஸ்” எனும் ஆங்கில கவிதை நூல் ஆகும். அதனை நான் 2007 ம் ஆண்டில் எனது பாடசாலையிலேயே வெளியிட்டேன். அதில் சிறப்பம்சம் என்னவென்றால் என்னுடைய அந்த முதலாவது நூலிற்கு ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் அலுவலகத்திலிருந்து ஓர் பாராட்டுக் கடிதம் கிடைத்தது. இது மறக்க முடியாத நிகழ்வாகும்.

கேள்வி: இது வரை எத்தனை புத்தகங்கள் எழுதியுள்ளீர்கள். அது பற்றி சொல்ல முடியுமா?



பதில்: இதுவரை மொத்தம் பதின்மூன்று புத்தகங்கள் எழதியுள்ளேன். என்னுடைய முதலாவது புத்தகம் “த ரிலேஷன்ஸ்”. அது குடும்ப உறவினர்கள் பற்றிய ஓர் ஆங்கிலக் கவிதைப் புத்தகமாகும். இரண்டாவது புத்தகம் “ த பெஸ்ட் ஐலன்ட்” என்ற தலைப்பிலான ஓர் ஆங்கில கவிதைப் புத்தகமாகும். அது எமது இலங்கை திரு நாட்டை வர்ணித்து எழுதிய புத்தகமாகும். மூன்றாவது புத்தகமும் ஆங்கில மொழியில்தான் எழுதி வெளியிட்டேன். அந்த புத்தகத்தின்;; பெயர் “லவ்” ஆகும். அதாவது அன்பு என்ற தலைப்பில் அன்பின் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லும் வகையில் எழுதிய புத்தகமாக அது இருக்கிறது. நாளாவது புத்தகம் “மை ஸ்கூல்” என்ற புத்தகமாகும். இது எனது பாடசாலையின் 100 வருட வரலாற்றை கூறும் புத்தகமாகும். ஐந்தாவது புத்தகம் “த மாஸ்டர் ஒப் த பீஸ்” என்ற ஆங்கில கவிதை புத்தகமாகும். அது எமது நாட்டின் முன்னால் ஜனாதிபதி அவர்களுக்காக எழுதிய கவிதை புத்தகமாகும். அதை தொடர்ந்து “த லயன் ஒப் ஏஷியா” என்ற புத்தகத்தை ஆறாவதாக எழுதினேன். அதுவும் எமது நாட்டின் முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பாராட்டி எழுதிய புத்தகமாகும்.

ஏழாவதாக எழுதிய புத்தகம் “வானவில்” என்ற தமிழ் கவிதை புத்தகமாகும். அது ஒரு காதலன் காதலியை நினைத்து எழுதும் கவிதைகளாக அந்த கவிதைகள் காணப்படுகின்றன. எட்டாவதாக “ஆர். பிரேமதாச” என்ற தலைப்பில் ஓர் மும்மொழி கவிதை புத்தகத்தை எழுதினேன். அது எமது நாட்டின் காலம் சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களை பாராட்டி எழுதிய புத்தகமாகும். ஒன்பதாவது புத்தகம் “த யுனிடி ஈஸ் ஸ்ரென்த்” அதாவது ஒற்றுமையே பலம் என்ற தலைப்பில் எழுதிய ஓர் ஆங்கில கவிதை புத்தகமாகும். பத்தாவதாக எழுதிய புத்தகம் “ஹம்பாந்தோட்டையின் சிங்கம்” என்ற மும்மொழிக் கவிதை புத்தகமாகும். அது எமது முன்னால் நகர பிதாவான எராஜ் ரவீந்ர பர்னான்டோவின் பத்து வருட சேவையை பாராட்டும் முகமாக எழுதிய மும்மொழி கவிதை புத்தகமாகும். அதன்பின் “தமிழ் கடினமில்லை” என்ற புத்தகத்தை எழுதினேன். “ஹம்பாந்தோட்டையின் விஷேட இடங்கள்” என்ற புத்தகத்தை அடுத்து எழுதினேன். இப்பொழுது பதிமூன்றாவது புத்தகமாக “மகே நொவன மகேம ஆதரய” என்ற சிங்கள மொழியிலான சிறுகதை புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளேன். இதுவே சிங்கள மொழியில் எழுதிய எனது முதலாவது புத்தகம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.





கேள்வி: நீங்கள் ஒரு புத்தகம் எழுதத் துவங்கும் பொழுது எவ்வாறு அதனை தெரிவு செய்கிறீர்கள்?

பதில்: எனக்கு ஒரே வகையான புத்தகங்களை எழுத விருப்பமில்லை. வெவ்வேறு வகையான புத்தகங்களை எழுதுவதில் நான் ஆர்வமாக உள்ளேன். என்னுடைய முதல் இரண்டு புத்தகங்களும் ஆங்கில கவிதை நூற்களாக காணப்படுகின்றன. மூன்றாவது நூல் ஓர் ஆங்கில சிறுகதை தொகுப்பாக காணப்படுகிறது. என்னுடைய நாளாவது புத்தகம் பாடசாலை வரலாறு என்பதால் அது ஒரு ஆவணப்புத்தகமாக காணப்படுகிறது. ஏழாவது புத்தகம் “வானவில்” ஓர் தமிழ் கவிதை நூலாக காணப்படுகிறது. என்னுடைய பதினோராவது புத்தகம் தமிழ் மொழி கற்கை நெறி நூலாக காணப்படுகிறது. என்னுடைய பன்னிரண்டாம் நூல் ஓர் சுற்றுலா வழி காட்டி நூலாக காணப்படுகிறது. இப்பொழுது நான் இறுதியாக எழுதியுள்ள நூல் ஓர் சிங்கள மொழியிலாலான சிறுகதை நூலாக காணப்படுகிறது. என்னுடைய இலட்சியம் பன்முக திறன் கொண்ட எழுத்தாளனாக நான் ஆகவேண்டும் என்பதே.

கேள்வி: மொத்தம் நீங்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் புத்தகங்கள் எழுதியுள்ளீர்கள் அல்லவா?

கேள்வி: தமிழ் மொழியில் கல்வி கற்ற நீங்கள் ஏன் அநேகமான புத்தகங்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளீர்கள்?.

பதில்: தமிழ் மொழியில் கல்வி கற்ற நான் ஆங்கில மொழியில் அதிக புத்தகங்களை எழுதக் காரணம் என்னவென்றால் எமது ஹம்பாந்தோட்டையில் வாழும் பெரும்பான்மை மக்கள் சிங்கள மொழி பேசக்கூடியவர்களாக உள்ளனர். தமிழ் மொழி வாசிப்பாளர்கள் இங்கு குறிப்பிடத்தக்க அளவுதான் காணப்படுகின்றனர். ஆகவே தமிழில் எழுதினால் சிங்களவர்களுக்கு புரியாது. சிங்களத்தில் எழுதினால் தமிழ் வாசிப்பாளர்களுக்கு புரியாது. எனவேதான் அனைவருக்கும் பொதுவான மொழியான ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினேன்.

**எம்.இர்பான் ஸகரியா**
ஹம்பாந்தோட்டை குறுப் நிருபர்

தொடர்புகளுக்கு :
றொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181



# நாடகக்கலை கற்பித்தல்

நாடகக்கலை மரபு நிலையிலிருந்து நவீன பாங்கிற்று மாறிவிட்டது. கூத்துக்கலை வடிவங்கள் ஒரு காலத்தில் கோலோச்சின. இசைமரபு நாடகங்கள் ஆடப்பட்டன. அரச கதைகள் நாடகங்கள் ஆக்கப்பட்டன. காப்பியங்களும் புராணங்களும் மேடை வடிவங் கொண்டன. வட்டக்களரிகள், தியேட்டர் பாங்கு நடிப்பிடங்கள் இயங்கின.

காலமாற்றம் கலை இலக்கிய வடிவங்களிலும், அவற்றின் வெளிப்பாட்டு முறைகளிலும் படிமுறையாகவும், மரபு மீறியும் மாற்றங்கொண்ட சூழலில் நவீன அளிக்கை முறைகளில் புத்தாக்க நாடக முறையொன்று மேற்கிளம்பியது.

தமிழில் கவிதைநாடகம் அல்லது பாநாடகம் அறுபது, எழுபதுகளில் முகங்காட்டியது. கவிதையும் நடிப்பும் இணைந்த முற்றுருவத்தின் முழு வடிவம் தோற்றம் காட்டியது. கோடை இக்கால வாழ்வியலின் வெட்டு முகமாக செறிந்த பாநாடகமாக இனங்காணத்தக்கது.

நவீன நாடகத் தோற்றுவாயில் பல்கலைக்கழகங்களில்; முனைப்புடன் நாடகப்பட்டறைகள் பல இயக்கம் கொண்டன. நெறியாளர் பலர் தோன்றினர். நவீன நாடகங்களின் நுண்ணுயிர்ப்பு காட்சி நிலை அல்லது கருத்துப்படிம நடிப்பு கவிதைப் பாணியிலான வெளிப்படு நிலை மேலெழுந்தது.

ஈழத்தில் தமிழ் நாடகம் கிளர்ந்து ஆரோக்கியமாகத்தான் இருக்கிறது. ஆனால் பாடசாலைகளில் நவீன நாடக நுட்ப வெளிப்பாட்டு முறைகளைக் கட்டமைத்து மாணவர்களிடையே நடிப்பு விளிப்புநிலை ஏற்படுத்துதலில் காத்திரமான முன்னெடுப்புகள் எழவில்லையென்றே தோன்றுகிறது.

ஒருபுறம் மேடைக் கட்டமைப்புடைய நவீன நாடக வெளிப்படுத்துகை. மறுபுறம் வானொலி, தொலைக் காட்சி, சமூக ஊடக வழியென இலத்திரனியல் நாடக இயக்கம் காணப்படுகிறது.

மாணவரிடையே நாடகக் கற்பித்தல் பாடசாலையை மையப்படுத்தி காத்திரமாக இல்லை.

மொழிப்பாடப் பனுவல்களில் உள்ளடங்கும் நாடகங்களை வாசிப்புப் பாடமாக ஒப்புவிக்கும் சடங்கே பெரும்பாலானவை.

நாடகமும் அரங்கியலும் கூட எந்தளவு பயில் தன்மையில் உள்ளதென்பது கேள்வியே.

பாடசாலைக் களங்கள் நாடகப்பட்டறைகளாக ஒழுங்கமைக்கப்படுமாயின் ஆற்றலுள்ள மாணவர்களை, எதிர்கால நாடகக்காரர்களாக உருவாக்க முடியும்.

இன்று யூரியூப்புகளாக மாணவப் பருவத்தில் ஊடக அல்லது இலத்திரனியல் கவர்ச்சியில் முகங்காட்டுகின்றனர். இவர்களிடையே காத்திரமான பொருள்கோளைக் கட்டியெழுப்பவும் வேண்டும்.

நாடகங் கற்பித்தலை அழகியற் கலையாக உயிர்ப்பிப்போமா.

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா

# முயலாடு முன்றில் 08

குழந்தைகளை முயல்களாக்கி துள்ளிக்குதித்து விளையாடும் அழகு காணுதல் அற்புதமானது. குழந்தை முயல்கள் இலக்கியத்திலும் துள்ளி விளையாடுகின்றன.

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் குழந்தைகளை உள்ளடக்கிய பல வெளிப்பாடுகளைக் காணலாம். அவற்றுள் பிள்ளைத்தமிழ் தலையாயது.

பாட்டுடைத் தலைவரை பிள்ளைப் பருவத்தில் படைத்தியக்கும் பாங்கை பிள்ளைத்தமிழில் காணலாம். பிள்ளைத்தமிழ் பிரபந்தம் பால்மையக் கட்டமைப்புடையது. பருவங்களின் குணாம்சங்களால் பாடப்படுவது. ஆண்பால் பிள்ளைத்தமிழ் ஆண்பிள்ளைகளின் இயல்பூக்கப் பத்துப்பருவங்களில் அமையும்.

காப்பு, செங்கீரை, தால், முத்தம், வருகை, அம்புலி, சப்பாணி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பருவ ஊக்கிகளாகும். இவற்றுள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் நீங்கலாக நீராடல் அல்லது கழங்கு, அம்மானை, ஊஞ்சல் இணைந்ததாக பெண்பால் பிள்ளைத்தமிழ் அமையும். இவற்றுள் காப்பு முதல் அம்புலி வரையான எழு பருவங்கள் பொதுவானவை.

பாட்டுடைத் தலைவரை மேலுள்ளபடி சிறுவராய்; இயல்புக்குட்படுத்திப் பாடுவதனூடாக சிறுவர் மைய இலக்கிய கட்டமைப்பொன்றை பிள்ளைத்தமிழ் பெறுவதை தமிழ் இலக்கியப் பண்பாட்டில் காணலாம்.

பேரிலக்கியங்களிலும்,



சிற்றிலக்கியங்களிலும் பிள்ளைத்தமிழ் கூறு உட்பொதிந்து பாட்டுடைத் தலைவனின் குணவியல்பு வெளிப்படு நிலையை மையப்படுத்துகிறது.

தமிழில் அரசியல், பண்பாடு, ஆன்மீகம், உளவியல் சார்ந்தெல்லாம் பிள்ளைத்தமிழ் வடிவம் வாழ்ந்திருக்கிறது.

''பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேள் அளவும்
ஆற்ற திங்களில் அறைகுவர் நிலையே'' என்கிறது பன்னிரு பாட்டியல்.

மூன்று முதலான இருபத்தொரு வரையான மாதங்கொண்ட குழந்தைப் பருவத்தைப் பாடுகிற பிள்ளைத்தமிழ் பருவங்களில் முயலாடு முன்றிலைக் காண்கிறோம். குழந்தைகளின் அசைவுகள், பிஞ்சு மொழிதல்கள், உணர்வுகள் உள்ளடங்கிய செயல்களினாலானது பிள்ளைத்தமிழ் எனும் இன்மொழி குழந்தைத் தமிழ்ச்சுவை.

ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கையூன்றி தலை நிமிர்த்தி முகம் அசைத்தாடும்; இன்மொழி பேசும் செங்கீரைப்பருவத்தை முன்னிறுத்தி ஆண், பெண் குழந்தைகளின் இயங்குநிலையை பாடும் பிள்ளைத்தமிழில் முயலாடும் முன்றிலைக் காணுகிறோம்.

இவ்வண்ணமே பொதுப் பருவமான காப்பு முதல் அம்புலி வரையாக பிள்ளைத் தமிழின் உணர்மொழியைத் தரிசிக்கலாம். இவற்றுள் பிரார்த்தனையும், தாலாட்டுப்பாடுதலும், கைகொட்டி மகிழலும், முத்தம் கேட்டதும், நடத்தவும், நிலாவோடு ஒப்பிடலுமாக குழந்தை உயிர்ப்புடன் வாழ்கிறது.

ஆண் பிள்ளைகளை மையப்படுத்திய சிற்றில் சிதைத்து; பெண் பிள்ளைகள் கட்டிய மணல் வீட்டை ஆண் பிள்ளை சிதைத்துக் சினங்கொள்வதையொட்டியது.

குழந்தைகள் விளையாட்டில் காணத்தக்க பாலின முரணாக இது பிள்ளைத்தமிழிலும் படர்கிறது. சிறுபறை அடித்து ஒலி இன்பம் காண்பதும், சிறு தேரிழுத்து டயர் உறுட்டி கமுகு மட்டை இழுத்து காரோட்டி விளையாடும் ஆண்குழந்தைகள் பண்பாட்டை பிள்ளைத்தமிழ் உள்ளடக்கியிருக்கிறது.

அதேபோல பெண் பிள்ளைகளின் குணவியல்பு பாடுவதும் ஊஞ்சலாடுவதும் நீராடி அல்லது கழங்கு விளையாடி இன்புறுவது தமிழில் பிள்ளைத்தமிழ் இன்பம் அல்லது குழந்தை இலக்கிய இன்பம் இலக்கிய முயலாடு முன்றிலாகி உயிர்ப்பதைக் காணலாம்.

# கொடூர முகத்தை அணிகிறவன்



கொடூர முகத்தை அணிகிறவன்
இப்போது கொடூர முகத்தை
அணிந்து கொள்கிறான்
சற்றைக்கு முன்தான் இந்த மாற்றம்
இதற்கு முன்
மெல்லிய மௌனத்தை அணிந்திருந்தான்
அதற்கு முன் புன்முறுவலைச் சூடியிருந்தான்
அப்போதில் குறுக்கிட்ட
குரூர வார்த்தைகளில் முறுவல்
சிதைந்திற்று
மௌனத்தின் முகமும் கிழிந்திற்று
ஒவ்வொரு தடவையும்
முகம் மாறுகிற காலமிது
முன்னம்
பாட்டனின் பாட்டனின்
பாட்டனின் காலத்திலிருந்து
ஒரே முகமிருந்தது
ஒரே சாயலிருந்தது
ஓரே மனமிருந்தது
இன்று மட்டும் பதினாறாவது
முகத்தை அணிந்ததாக
அவனது செல்ஃபி சேகரித்திற்று
எப்போதும்
அவன் சிரித்த முகத்தை அணிந்து
கொண்டே
வாசல் கடப்பான்
திரும்பும்போது அது தேய்ந்தழிந்திருக்கும்
அவனது மனப்பையை அவள் சோதிப்பாள்
முகங்கள் நிறைந்த பையில்
அவளது ஒரு முகமும் இரா
சற்றைக்கு முன்தான்
சினத்த முகத்தை அணிந்திருக்க வேண்டும்
வாசலில்
வார்த்தைகள் கொதித்தன

# மௌனத்தின் மாயை

கடந்த வார தொடர்...

பிறகு அந்த முதல் கேள்வியைக் கேட்டு முடித்தாள். இவ்வளவு நேரமும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு நல்லதென்று திரை முன்னால் இருப்பவர் ஆசைப்பட்டிருக்கலாம்.

நான் கதைக்கத் தொடங்கினேன்.

என் மௌனத்திலிருந்து எனது கவிதைக்கான சொற்களை எடுக்கிறேன். இதுதான் சொல்ல வந்தது. ஆனால் இப்படிச் சொல்லவில்லை. தேன்மொழி என்ற பெயர்க்காரி விளங்காத மாதிரிக் கேட்ட மாதிரியே அவளுக்கு விளங்காதபடி நீட்டிக் கூறினேன். பிரதான கொன்றோல்; ரூமில் புரோடியுஷர் மயக்கம் போட்டு விழுந்திருக்க வேண்டும்.

கேள்வியைச் சொல்லிக் கொடுத்தவனுக்குப் பதில் புரியக் கஷ்டமா என்ன. எனது பதிலை நனவிலி மனதிலிருந்து எடுக்க முன்னெடுத்த எடுப்புகளின் குறிப்புகள்,

சொல்லென்பது திண்மம்ஃ திரவம்
சொல்லின் வேர்ஃ கிளை
சொல் எங்கிருந்து ஊற்றெடுப்பது
மூதாதையரில் இருந்த சொல்லின் வீரியம்
பழைய பரணில் தொங்கிய ஓலைச்சுவடிகள்

சொல்லை எங்கிருந்தெல்லாம் எடுக்கலாம் என்பதற்கான மூன்று உதாரணம்

கனவிலிருந்து எடுப்பதெவ்வாறு
காலடி மண்ணிலிருந்து அள்ளியெடுக்கும் முறை
பழைய பெட்டகத்திலிருந்து தூசு தட்டிப் புதுப் பொலிசடிக்கும் நுட்பம்

இதன் பிறகுதான் பதிலுக்கு வந்தேன். நான் என் கவிதைக்கான சொற்களை................. (இடைவெளி விட்டுச்) சொன்னேன். அதிலிருந்துதான் எடுப்பேன். தேன்மொழியின் உடல் மொழிக்கு வேர்த்தது. திரை முன்னால் இருப்பவர்களுக்கு அந்த வேர்வைத்துளி தெறித்திருக்க வேண்டும். நான் மௌனமானேன். சப்தமற்றுப்போனது இடைவெளி.

பொன்மீரா...

# பாலு மகேந்திரா

## 20 மே 1939 – 13 பெப்ரவரி 2014)

இந்தியத் திரைப்பட இயக்குனரும் ஒளிப் பதிவாளரும் ஆவார். சமகாலத் தமிழ் வாழ்க்கையை சித்தரிக்கும் பல படைப்புகளை உருவாக்கியவர். தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள, ஹிந்தி மொழித் திரைப்படங்களில் பணியாற்றியவர்.

1939 மே 20 ஆம் திகதி இலங்கையில் மட்டக்களப்பு அருகே அமிர்தகழி என்ற சிற்றூரில் பிறந்தவர் பாலநாதன் மகேந்திரன் என்ற பாலு மகேந்திரா. இயற்பெயர், மகேந்திரா. அவரது தந்தை பாலநாதன் ஒரு சிறந்த கணித ஆசிரியர், கல்லூரி அதிபர்.தனது ஆரம்ப கல்வியை புனித மிக்கேல் கல்லூரியில் பயின்றார்.

லண்டனில் தன்னுடைய இளநிலைக் கல்வி படிப்பினை முடித்தார். பூனா திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவுக்கலை பயின்ற பாலு மகேந்திரா 1969 ல் தங்கப்பதக்கம் பெற்றார்.

தான் பாடசாலையில் படித்த போது பார்த்த பதேர் பாஞ்சாலி திரைப்படம் தனக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக கூறுகின்றார். பின்னர் ப்ரிட்ஜ் ஒப் ரிவெர் க்வாய்( Bridge of river kwai ) திரைப்படத்தின் ஒரு பகுதி இலங்கையில் படமாக்கப்படும் போது பாலகன் பாலு மகேந்திரா அதனை காண நேர்கின்றது. அந்த தாக்கமே அவரை திரைப்படத்துறையில் ஈடுபாடுடையவராக்குகின்றது.



### திரைப்பட நுழைவு

அவரது பட்டயப்படிப்பு திரைப்படத்தைக் கண்டு அவரை 'செம்மீன்' படப்புகழ் ராமு காரியத் அவரது 'நெல்லு' படத்துக்கு ஒளிப்பதிவு செய்ய அழைத்தார். அப்படத்துக்கு 1972ல் சிறந்த ஒளிப்பதிவுகளை கேரள மாநில விருது பெற்றார். அதைத் தொடர்ந்து பல மலையாள திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார். கெ. எஸ். சேதுமாதவனின் 'சுக்கு',' ஜீவிக்கான் மறந்நு போய ஸ்தீரி' 'சட்டக்காரி' பி என் மேனோனின் 'பணிமுடக்கு' போன்றவை முக்கியமான படங்கள். தெலுங்கில் பிரபலமான சங்கராபரணம் படத்தை ஒளிப்பதிவு செய்தார். ஒளிப்பதிவில் தனக்கு என்று ஒரு புதிய பாணியினை அமைத்துக் கொண்டார். இயற்கை ஒளியினை அதிகமாக பயன்படுத்துவது இவருடைய தனித்துவம். முதலில் ஒளிப்பதிவாளராக இருந்து பின்னர் இயக்குனராக மாறியவர். 1977ல் பாலு மகேந்திரா அவரது முதல் படமான 'கோகிலா'வை கன்னட மொழியில் இயக்கினார். பாலுமகேந்திரா ஒளிப்பதிவுசெய்த முதல் தமிழ்படம் முள்ளும் மலரும் 1977ல் வெளியாயிற்று. 1978ல் தமிழில் அவரது முதல் படமான 'அழியாத கோலங்கள்' வெளியாயிற்று. பாலு மகேந்திரா மணிரத்தினம் போன்ற பல முக்கியமான இயக்குநர்களின் முதல் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

### சின்னத்திரையில் பாலு மகேந்திரா

கதை நேரம் எனும் தொலைக்காட்சி தொடரினை சன் தொலைக்காட்சிக்காக பாலு மகேந்திரா இயக்கினார். இத்தொடர்கள் 52 கதைகளை கொண்டிருந்தன. அவற்றில் 10 கதைகள் எழுத்தாளர் சுஜாதாவினுடையதாகும்.

பாலு மகேந்திரா தனது பேச்சுக்களின் போது படைப்பாற்றல், நுண்ணுணர்வு பற்றி பின்வருமாறு கூறுவார் "ஒரு படைப்பாளிக்கு அடிப்படைத்தேவை நுண்ணுணர்வு. அந்த நுண்ணுணர்வு இல்லையென்றால் அவன் படைப்பாளியே அல்ல. மற்றவர்களால் பார்க்க முடியாத விடயங்களை உன்னால் பார்க்க முடிகிறதே எதனால்? உன்னிடம் நுண்ணுணர்வு உள்ளது. எந்த நுண்ணுணர்வு உனது படைப்பை உன்னதப்படுத்துகின்றதோ அதே நுண்ணுணர்வு உனது தனிப்பட்ட வாழ்வை நாறடித்துக்கொண்டிருக்கும். ஏனெனில் நீ அதிகம் எதிர்வினை புரிபவனாய் இருப்பாய். உலகில் உள்ள படைப்பாளிகளுக்கு இருக்கக்கூடிய சாபக்கேடுதான் இது."



எஸ்.கனேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை



# ஜெய்கணேஷ்

ஜெய்கணேஷ் ஒரு தமிழ்த்திரைப்பட நடிகர். முதன்மை, துணை, எதிர்மறை எனப் பலவாறான பாத்திரங்களில் திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் மேடை நாடகங்களிலும் நடித்தவர். பொறியாளரான அவர் அவள் ஒரு தொடர்கதை, ஆட்டுக்கார அலமேலு, தாயில்லாமல் நானில்லை, அதிசயப் பிறவி முதலிய திரைப்படங்களில் நடித்ததன் மூலம் அறியப்படுகின்றார்.

இயக்குனர் பாலசந்தரின் அவள் ஒரு தொடர்கதை படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானார். சிவாஜிகணேசன், கே.ஆர். விஜயா, ஜெய்சங்கர், சிவகுமார், முத்துராமன், சுமித்ரா, ஸ்ரீவித்யா, ரஜினிகாந்த், கமல் ஹாசன், படாபட் ஜெயலக்சுமி, சத்யபிரியா, ஜெயமாலினி, அனுராதா, விஜயகாந்த், சத்யராஜ், கார்த்திக், ராதிகா, ரேவதி, விஜய், அஜீத் குமார் போன்ற நடிகர்களுடன் நடித்துள்ளார்.

அங்கம் 20



## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா


# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

அண்ணா தன் குடும்பத்தையும் தமிழக மக்களையும் ஒன்றாகவே கருதியவர். எனவே அவர் தன் சொந்த குடும்பதிற்காக உழைத்ததை விட தமிழக மக்களுக்காக உழைத்தது தான் அதிகம். அண்ணா பொதுவாழ்க்கையில் நுழைந்த பின்னர் ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மேடைகளில் உரையாற்றி பற்பல போராட்டங்களில் ஈடுபட்டு, பலமுறை சிறையில் அடைபட்டு ஓய்வின்றி செயல்பட்டவர் அண்ணா. ஆனால் அண்ணாவின் உடல் நோயுற்றிருப்பது அவர் முதலமைச்சராக பொறுப்பு ஏற்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே அவருக்கு தெரிந்திருந்தது.

அவர் மருத்துவரை பார்த்துவிட்டு வந்ததும் தனது நோய் குறித்து தான் ஆசிரியராக இருந்த "திராவிட நாடு" இதழில் கட்டுரைகள் எழுதினார். அண்ணா தனது உடல் நிலையால், கட்சிப்பணிகளை அதிகளவு செய்ய இயலவில்லை என்பதை அவர் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார்.

அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் பொதுக்கூட்டங்களில் பேசும் போது அவரது தொண்டையில் தாங்கமுடியாத வலி ஏற்படுவதை தெரிந்து கொண்டார். அவர் உணவை விழுங்க இயலாமல் சிறிது சிறிதாகத்தான் உண்டு வந்தார். பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போது தொண்டையை தடவிக் கொண்டே உரையாற்றி வந்தார். நாளுக்கு நாள் அவரது தொண்டையிலும் வயிற்றிலும் தாங்க முடியாத வலி உண்டாயிற்று அண்ணாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவரது உணவுக் குழாயில் புற்று நோய் இருப்பதை கண்டறிந்தார்கள்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற சிறிது காலத்திலேயே அவரது உடல் நிலை வெகுவாக பாதிக்கப்பட்டது. மருத்துவர்கள் அவரை குளிர்பதன வசதி செய்த அறைகளில் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அப்பொழுது அண்ணா அமைச்சரவையில் வேளாண்மை அமைச்சராக இருந்த கோவிந்தசாமி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட "மல்லிகை இல்லம்" நல்ல வசதியான வீடாகத் திகழ்ந்தது. அந்த வீடு முழுவதும் குளிர்பதன வசதி செய்யப்பட்டிருந்தது. ஒரு நாள் அந்த இல்லத்தை பார்வையிட அண்ணாவும், கருணாநிதியும், அரங்கண்ணலும் கே.வெங்கடசுப்ரமணியமும் வந்தனர். அந்த இல்லத்தின் முதற்கட்ட பகுதி மிகப் பெரிய இடமாக இருந்தது. முழுவதும் குளிர்பதன வசதி செய்யப்பட்டிருந்தது. அங்கு நுழைந்த அண்ணா "என்ன இப்படி மாளிகை முழுவதும் ஏ.சி செய்யப்பட்டிருக்கிறதே! என்றபடி அடுத்த அறைக்குச் சென்றார். அந்த அறையும் குளிர்பதன வசதி செய்யப்பட்டிருந்தது. உடனே அண்ணா "இந்த இடமும் ஏ.சி.யா? " என்றார். உடனே அரங்கண்ணல் அண்ணாவை பார்த்து, "நீங்கள் எங்களுடைய ராஜா, உங்களுக்கு இல்லாத ஏ.சியா? இந்த இடம் பூராகவும் ஏ.சி. செய்யப்பட்டுள்ளது. குற்றாலத்தில் குளித்த சுகம், கைலாயமலையில் இருப்பது போல குளு குளு பரவசம்" என்றார். அப்பொழுது அருகில் இருந்த அரசு அலுவலர் ஒருவர் "தமிழகத்து சக்கரவர்த்திதாங்கள்" என்று ஆரம்பித்தார். உடனே அண்ணா அருகிலிருந்த கே.வெங்கட சுப்பிரமணியத்தை பார்த்து "முதலில் ராஜாவானேன். இப்போது சக்கரவர்த்தியாகிவிட்டேன். தமிழகத்தில் இருக்க இடமின்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கும் பொழுது நான் ஒருவன் மட்டும் இவ்வளவு பெரிய குளு குளு மாளிகையில் எப்படி இருக்க முடியும்? பார்த்தது போதும், வாருங்கள் திரும்பிப் போய் விடலாம்!" என்று கூறினார். அருகிலிருந்தவர்கள் "பரவாயில்லை ,ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் "என்று சொல்லியும் அண்ணா பிடிவாதமாக திரும்பிவிட்டார். சாதாரண தொண்டராக வாழ்ந்த போதும்; எளிமையின் சிகரமாக வாழ்ந்த அண்ணா, முதலமைச்சராக பதவி வகித்தபோதும் அதே எளிமையைப் பின்பற்றினார். ஆரம்பத்தில் அவருக்கு சென்னையிலுள்ள அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் நோய் தீவிரமாகவே, அமெரிக்கா சென்று புற்று நோய்க்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்படி மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.



அதன்படி 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அண்ணா அமெரிக்கா புறப்பட்டு சென்றார். அண்ணாவின் உடல் நிலையை அறிந்த தமிழகமக்கள் அனைவரும் பெரும் கவலை கொண்டனர். அண்ணா எப்படியேனும் நல்ல வண்ணம் அறுவை சிகிச்சை பெற்று முழுமையாக குணமாகி தமிழகம் திரும்ப வேண்டும் என்று அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# புதிய அலை கலை வட்ட கலா மித்ரா விருது வழங்கல்



## காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக சுதந்திர தின கவியரங்கு



இலங்கையின் 75வது சுதந்திர தினத்தையொட்டி காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடு செய்த மாதாந்த பௌர்ணமி கவியரங்கின் ஆறாவது கவியரங்கு ஷுஹதா வித்தியாலய மண்டபத்தில் கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்றது. ஷாஹிர் ஹுசைன், இக்பால்கான், இல்மி அஹமட்லெப்பை, முபீதா ஹமீஸ், மருதூர் ஜாமால்தீன், சமீஹா ஹூசைன், பதியதளாவ பாவரசு பாறூக், அஜீராஹலீல்தீன், காத்தான்குடி பாத்திமா, காத்தான்குடி பௌஸ், அப்துர் ரஹீம், இக்பால் பலாஹி, முகைதீன் சாலி, ஏஎச்எம்.ஜிஹார், உஸனார் ஜாபீர், ஏ.ரீ.எம்.றியாஸ் கலைமதி, எம்.ஏ.சீ.றபாய்தீன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் சுதந்திர கீதம் பாடினர். ஷுஹதா வித்தியாலய அதிபர் எம்.சீ.எம். முனீர் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

( படங்கள் ரீ.எல்.ஜவ்பர்கான், மட்டக்களப்பு குறூப் நிருபர்)



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.